# ஆணல்ட் சதாசிவம்பிள்ளை

## நூல்கள்



வெல்லை அந்தாதி, இல்லற நொண்டி,
கீர்த்தனா சங்கிரகம், பஞ்சரத்தினம்,
சுகமரணா பீஷ்டம், ஞானவெண்பா

அடங்கிய

## ஆறு நூல்களின் தொகுப்பு

# ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை

நூல்கள்



## வெல்லை அந்தாதி, இல்லற நொண்டி,
## கீர்த்தனா சங்கிரகம், பஞ்சரத்தினம்,
## சுகமரணா பீஷ்டம், ஞானவெண்பா

அடங்கிய

# ஆறு நூல்களின் தொகுப்பு

Copy right: J.R. Arnold book Trust
பதிப்புரிமை: J.R. ஆர்ணல்ட் புத்தக நிதியம்

# INTRODUCTION

ARUNASALAM SATHASIVAMPILLAI was born in 1820 in a very orthodox hindu family at Navaly, Manipay. Like his contemporary Arumuga Navalar he studied Tamil from the well known scholar Senathiraya Mudaliyar of Irupalai. His zest for Higher Education made him join Batticotta Seminary the Collegiate Institution established by the American Missionaries in 1823.

While being a student at the Seminary he accepted Jesus Christ as his personal savior and was baptized with the name Joel Russel Arnold. After becoming a graduate of the Seminary he taught at the American Mission Schools at Manipay, Uduvil and Chavakachcheri.

In 1881 he became the Head of the Department of Tamil at Jaffna College. He edited the Tamil pages of the Morning Star (Uthaya Tharagai) for 38 years. (1857 - 1895)

He was a prolific writer and wrote poems and short stories for the Morning Star. His books were on Astronomy, History, Geography and Literature. He died in the year 1895. Arnold Sathasivampillai can be considered the most distinguished old boy of Batticotta Seminary.

He remained faithful to his religion and fulfilled the dreams and vision of the American Missionaries. In their plan for the Collegiate Institution, Vaddukoddai, they wrote

> "Original native composition, on account of the superior felicity of its style and idiom, will be read when the production of a foreigner, or a translation, will be thrown aside. To raise up therefore, and qualify a class of native authors, whose minds being enriched by science may be capable not only of embodying European ideas, but of putting them into a handsome native dress, must be rendering most important aid to the interests of learning and Christianity."

It is unfortunate that the Tamil scholars both in Sri Lanka and South India have not so far made a systematic study of his contribution to the development Tamil.

In 1981 Prof. K. Kailasapathy wrote .........

"He was an exemplary Tamil scholar and teacher, prolific writer, editor, author of poems and stories, and an accomplished public speaker and above all a noble person. His contribution to 19th century Ceylon Tamil Literature and to the modern movement in general is significant. The Colombo Tamil Sangam has brought out recently a new edition of the "**Galaxy of Tamil Poets**" (1975) with the copious notes contributed by Dr. P. Poologasingam. It is to be hoped that this will create renewed interest in the works of Sathasivampillai and a systematic evaluation of the man and his contributions will become possible"

I felt the need to reprint the books of Arnold Sathasivampillai and Rev. S.C. Arnold a great grandson of Arnold Sathasivampillai and a member of the clergy of the JDCSI volunteered to raise the necessary funds from his brothers, sisters and cousins for this project.

I wish to thank him most sincerely for his support. The following members of the family have contributed for these publications. Mr. S.S. Arnold (Ananthan) Dr. R.K. Arnold, Mr. J. Lyman, Mr. J.J. Lyman, Mr. S.J. Arnold, Mrs. Shanthi Silva, Mrs. S. Arnold, Mrs. Sarojini Joseph, Mrs. Rosamalar Mather, Mr. & Mrs. Sam Balan Arnold, Mr. & Mrs. Vijit Arnold, Mr. & Mrs. G.J. Duraisamy, Mr. Chelvam Mather, Mr. Chandrapal Arnold, Miss Sherina Arnold.

"Pavalar Charithira Theepagam" his magnum opus was printed by Asian Educational Services, New Delhi. Other books are printed by the American Ceylon Mission Press, Jaffna. Some more books which are now found only in the British Library, U.K. will be printed in Jaffna and will come out as the 3rd volume.

May the Blessing of God almighty crown this work.

RT. REV. DR. S. JEBANESAN
BISHOP C.S.I.
Jaffna.

Vaddukoddai.
24-03-2005

# முன்னுரை

அருணாசலம் சதாசிவம்பிள்ளை 1820ம் ஆண்டு மானிப்பாய், நவாலியிலுள்ள ஒரு வைதீக, சைவக் குடும்பத்திலே பிறந்தார். தமது காலத்தில் வாழ்ந்த ஆறுமுகநாவலரைப் போலவே சிறந்த தமிழ் அறிஞரான இருபாலை சேனாதிராய முதலியாரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். உயர்கல்வி மீது கொண்ட நாட்டத்தினால் வட்டுக்கோட்டை செமினரியிற் சேர்ந்து தமது கல்வி யைக் கற்கலானார்.

இந்தப் பல்கலைக்கழகக் கல்லூரி 1823ம் ஆண்டு அமெரிக்க மிஷனரிமாரால் நிறுவப்பட்டது.

செமினரி மாணவனாக இருந்தபோது இயேசுகிறிஸ்துவைத் தமது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு யோவேல் ரசல் ஆர்ணல்ட் என்னும் பெயரைப் பெற்றுத் திருமுழுக்குப் பெற்றார். செமினரிப் பட்டதாரியான பின்னர், மானிப்பாய், உடுவில், சாவகச் சேரி ஆகிய இடங்களிலிருந்த அமெரிக்கன் மிஷன் பாடசாலைகளிற் கற்பித்தார். 1881ம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரியின் தமிழ்த் துறைத் தலைவராக நியமிக்கப்பட்டார். உதயதாரகைப் பத்திரிகை யின் ஆசிரியராக 38 வருடகாலம் பணியாற்றினார். (1857 - 1895)

அவர் ஒரு தலைசிறந்த எழுத்தாளர். உதயதாரகைப் பத்திரி கையிலே பல கவிதைகளையும், சிறு கதைகளையும் எழுதினார். வானசாஸ்திரம், வரலாறு, புவியியல், இலக்கியம் ஆகிய துறைக ளிலே நூல்களை இயற்றினார். 1895ம் ஆண்டு இவ்வுலக வாழ் வினை நீத்தார். ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை அவர்களை வட்டுக் கோட்டைச் செமினரியின் தவப்புதல்வன் எனலாம். ஏனெனில் அவர் இறுதிவரை கிறிஸ்தவ சமயத்திற் பற்று உறுதி கொண்டவராகவும், அமெரிக்க மிஷனரிமாருடைய இலட்சியங்களையும் கனவுகளையும், நிறைவேற்றுபவராகவும் இருந்தார். வட்டுக்கோட்டைச் செமினரியை ஆரம்பிக்கு முன்னர் மிஷனரிமார் தாம் வெளியிட்ட "**கல்லூரித் திட்டத்தில்**" பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்கள்.

> ''சுதேச அறிஞர்களினால் எழுதப்படும் முதல் நூல்களின் நடையும் உருவகத்தொடர்களும் சிறப்பாக அமையும். பிறநாட்டாரின் நூல்களும், மொழிபெயர்ப்பு நூல்களுந் தள்ளிவிடப்படும் பொழுது விரும்பி வாசிக்கப்படும். எனவே விஞ்ஞானத்தினால் வளம்பெற்று ஐரோப்பிய சிந்தனைகளில் ஊறியவர்களைக் கொண்டு அச்சிந்தனைகளை அழகிய சுதேச மொழிகளில் வடித்தெடுக்கக்கூடிய ஓர் எழுத்தாளர் பரம்பரையை உருவாக்கி வளர்ப்பது கல்விக்குங் கிறிஸ்தவத்திற்கும் பெருந்தொண்டாக அமையும்.''

துரதிர்ஷ்டவசமாகத் தென் இந்தியாவிலும், இலங்கையிலும், தமிழ் அறிஞர்கள் இதுவரையும் ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை தமிழ் மொழிக்காற்றிய தொண்டினைப் பற்றி விரிவான ஆய்வினை மேற்கொள்ளவில்லை.

1981ம் ஆண்டு பேராசிரியர் க. கைலாசபதி பின்வருமாறு எழுதினார்.

> ''ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை முன்னுதாரணமான தமிழ் அறிஞர், ஆசிரியர், வளம் மிக்க எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர், கவிதை, சிறுகவிதை என்பவற்றை உருவாக்கியவர், பண்பட்ட சொற்பொழிவாளர்; இவை எல்லாவற்றுக்கும் மேலாக அவர் நற்குணங்களையுடைய கனவானாகவும் இருந்தார்.''
>
> 19ம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ் இலக்கியத்திற்கும், நவீன மயமாக்கலுக்கும் அவர் ஆற்றிய தொண்டு மகத்தானது. கொழும்புத் தமிழ் சங்கம் சமீபத்தில் (1975) பேராசிரியர் பொன் பூலோகசிங்கம் அவர்களுடைய அரிய குறிப்புக்களுடன் ஆணல்ட் சதாசிவம்பிள்ளை எழுதிய பாவலர் சரித்திர தீபகத்தை மறுபிரசுரம் செய்துள்ளது. இப்பிரசுரம் சதாசிவம்பிள்ளை அவர்களைப் பற்றியும், அவருடைய பங்களிப்பைப் பற்றியும், விரிவான ஆய்வினை மேற்கொள்ள வழிவகுக்கும்.

ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை அவர்களுடைய நூல்களை மறு பிரசுரம் செய்யவேண்டும் என்று நான் உணர்ந்தேன். அவருடைய பூட்டனும் தென் இந்தியத் திருச்சபை மதகுருவுமாகிய வண. S.C. ஆணல்ட் இதற்கு வேண்டிய நிதியைத் தமது சகோதர, சகோதரிகள், உறவினர்களிடமிருந்து திரட்டித்தர முன்வந்தார். இந்தப் பிரசுரங் களுக்குப் பின்வருவோர் துணை புரிந்தனர்.

1. திரு. S.S. ஆர்ணல்ட் (ஆனந்தன்)
2. வைத்திய கலாநிதி R.K. ஆர்ணல்ட்
3. திரு. J. லைமன்
4. திரு. J.J. லைமன்
5. திரு. S.J. ஆர்ணல்ட்
6. திருமதி சாந்தி சில்வா
7. திருமதி S. ஆர்ணல்ட்
8. திருமதி சறோஜினி யோசேப்
9. திருமதி றோசாமலர் மேதர்
10. திரு. திருமதி சாம் பாலன் ஆர்ணல்ட்
11. திரு. திருமதி வீஜித் ஆர்ணல்ட்
12. திரு. திருமதி G.J. துரைசாமி
13. திரு. செல்வம் மேதர்
14. திரு. சந்திரபால் ஆர்ணல்ட்
15. செல்வி ஷெரினா ஆர்ணல்ட்

ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளையின் அதிமுக்கிய நூலாகிய "பாவலர் சரித்திர தீபகம்" புதுடில்லியில் உள்ள ஆசிய கல்விச் சேவைகள் (AES) என்ற அமைப்பினால் அச்சிடப்பட்டது. இரண்டாவது தொகுதியாகப் பின்வரும் நூல்கள் அமெரிக்க இலங்கை மிஷன் அச்சகத்தினால் அச்சிடப்பட்டுள்ளது.

1. பஞ்சரத்தினம்
2. கீர்த்தனா சங்கிரகம்
3. சுகமரணா பீஷ்டம்
4. வெல்லை அந்தாதி
5. இல்லற நொண்டி
6. ஞானவெண்பா

மூன்றாவது தொகுதியாக அவர் எழுதிய ஏனைய நூல்கள் அமெரிக்க இலங்கை மிஷன் அச்சகத்தினால் அச்சிடப்பட்டு வெளியிடப்படவுள்ளன.

இலங்கையிற் கிடைக்காத இந்த நூல்களை இங்கிலாந்தில் உள்ள பிரிட்டிஷ் நூலகத்தில் இருந்து நகல் எடுத்து அனுப்பிய Dr. R.K. ஆர்ணல்ட் அவர்களுக்கு எனது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறைவன் அருளால் இந்தப் பிரசுரங்கள் திருச்சபை மக்களுக்கும், தமிழ் அறிஞர்களுக்கும் மிகுந்த பயன் அளிக்கும் என்று நம்புகிறேன்.

**எஸ். ஜெபநேசன்**
**பேராயர்**
**தென்னிந்தியத் திருச்சபை.**

**24-03-2005**
**வட்டுக்கோட்டை**
**இலங்கை.**

# வெல்லை அந்தாதி

இஃது

**உதயதாரகைப் பத்திராதிபரும்**

**யாழ்ப்பாணக் கல்லூரித்**

**தமிழ் ஆசிரியருமாகிய**

**அ. சதாசிவம்பிள்ளையால்**

இயற்றப்பட்டு

இராசாங்கலிகிதர்சாலையிலே

பதிவுபெற்று

மானிப்பாய்
ஸ்திறோங் அஸ்பரி என்பவர்களின்
இயந்திரசாலையில்
அச்சடிக்கப்பட்டது.
கஅஅஎ.

விலை சதம் க0.

# பாயிரம்

இரட்சாபெருமான் மேற்கொண்ட அன்பும் சிறுவரில் வைத்த கரிசனமுமே இந்நூலை இயற்ற எம்மைத் தூண்டிவிட்டன. தெய்வங்கள் பேரிற் பாடிய கவிகளைப் பிள்ளைகள் பாடம்பண்ணவேண்டுமெனல் தமிழ்ப் பெற்றார் வாஞ்சை. இது பற்றியே உபாத்திமார் பிள்ளைகளுக் குக் கவியெழுதிக் கொடுத்துப் பாடங்கேட்கும் வழக்கம் ஆரம்பித்தது. நாம் சிறு பிள்ளையாய்த் தமிழ் உபாத்திமாரிடம் கற்ற கவிகள் இன்னும் எம் மனசைவிட்டகன்றில.

இங்கிலிஷ் கல்வி மேலாட்டமான பின்பு இதொருவாறு அசட்டை பண்ணப்பட்டும் வழக்கம் வழக்கமே. அரசாட்சிச் சகாயப் பணத்துக் கேற்ற பாடங்கள் கற்பிக்கப்படல் அவசியமாயினும் பெற்றார் விருப்பத் தின் நிமித்தம் இவ் வழக்கத்தை உபாத்திமார் இன்னுங் கைவிட்டிலர். கவிகள் பாடம் பண்ணல் உத்தமந்தான். ஐரோப்பிய அமெரிக்கருந் தம் சிறுவரைக் கொண்டு கவிகள் பாடம்பண்ணுவிக்கின்றார்.

கிறிஸ்தவ பிள்ளைகளுக்கு உபயோகமான கவிகள் பூச்சியமா தலால் இவ்வழக்கமும் அவர்க்குட் பூச்சியம். ஆகவே இதனை இயற்றினம். யேசுநாயகர் திருச்சதகம் உயர்தரத்துக்கு உதவுமென்ப ரேல் இது எத்தரத்துக்கும் உதவும். கடைப்பத்துக் கலித்துறையின் முதற் பதங்கள் மாத்திரம் ஞாபகம்.

இரட்சகரின் பிறப்பிடமாய்த் தற்காலக் கிறிஸ்தவராற் பெத்ல கேமின் மரூஉமொழியாய் வந்த வெல்லை என்பதனை அந்தாதிக்கு நாமகரணமாக்கினம். இரட்சாமூர்த்தியின் சீவிய விருத்தாந்தங்கள் பல வெளிப்படை குறிப்பில் அவ்வக்கலித்துறைத் துறைகளாம்.

பெற்றார், உபாத்திமார், மிஷனாரிமார்க்கே இதனையொப் படைக்கின்றோம்.

எம் அபிப்பிராயஞ் சித்திபெறக் கருணைக்கடலாகிய திரியேக தேவன் இப் பாடலை ஆசீர்வதிப்பாராக.

**ஆக்கியோன்.**

# PREFACE

The respect and love to wards our saviour, and the interest we feel in our christian children, were the two motives which induced us to compose the small poem we now lay before the public.

Heathen parents manifest a great desire that their children should commit to memory verses composed in the names of their deities. Although the grant-in-aid system of education has thrown into shade all our peculiar educational customs, yet the influence of parents is so great that our vernacular schoolmasters have not entirely given up the practice of taxing their children to commit to memory verses of the kind referred to. Civilized nations themselves do the same.

The Christian teacher of the village school, however, has had nothing hitherto to supply the place of the heathen *kavy*, or stanza, and in consequence has not unfequently met with great reluctance on the part of parents to send their children to his school. Not so much, however, to come to his succor as to benefit Christian children themselves, has been our aim in the preparation of this poem of 100 stanzas, every one of which teems with several allusions and incidents in our Redeemer's life.

The hero of the poem is Christ himself, as born in the blessed city of Bethlehem, or *Vellai*, a euphonic contraction of the same name as used by Christian Tamil poets of the day. The metre is a common and easy one, and the whole work is called an *Anthathy*, i.e. a poem wherein each stanza commences with the closing letter, syllable, or word of the one immediatly preceding it. With the exception of the last 10 stanzas where the beginning words of the lines of each verse are homonymous, the work is plain enough to an average student. May the Redeemer himself bless this poem, and may our Christian parents, teachers, and Missionaries use all in their power to make it useful, popular, and successful.

**THE AUTHOR**

# வெல்லை அந்தாதி.

## காப்பு.

பொன்னாரு மேனியர் விண்ணாட் டவர்வந்து போற்றுவெல்லை
நன்மான்மியப்பதி வந்த ரட்சண்ணிய நாயகன்மேற்
சொன்மாலை சேர்தரும் அந்தாதியொன்று துணிந்துசொல்ல
நின்னாமனாந் திரியேகன் பதாம்புயம் நீள்துணையே.

## நூல்

1. பூவாருலகம் படைத்தவனே யும்பர் போற்றிநிதம்
தேவா எனத்துதி செய்பரவெல்லைத் திருநகரில்
ஆவாழும் கோட்டத்து அவதரித்திந்த அவனிதனக்கு
ஈவாக ரட்சண்ணியம் தந்தவா எனக்கு ஈஅருளே.

2. அருளே குழந்தைகட்கு அன்பினனே மறை ஆகமத்தின்
பொருளே குழைந்தவர் தம் இதயஆசனம் போந்தவனே
மருளே உம்மாந்தர் வதிந்திடு வெல்லை வளநகர்சூழ்
இருளே அகலச்செய் ஆதித்தனே எனக்கு இன்புதவே.

3. உதவியென்றோர் தமது உட்கறை போக்கிஅன்புற்றுமுத்திப்
புதவு திறந்திடு புண்ணியனே வெல்லைப் பொற்பதி வாழ்ந்து
இதவுபதேசம் பகர்ந்திட வெங்ஙனும் ஏகினவா
எதுவிதமாயினுந் தந்தருள் நின்பதம் ஏத்தினனே.

4. ஏத்திடுவார் பவம் தீர்ப்பவனே வெல்லை என்னுநகர்ப்
பாத்திபனே பரமாநந்தனே யெசி பங்கமற்ற
கோத்திரனே இந்தக் கோத்திரத்தார்தங் குலமுதலே
காத்திரத்தோடுயிர் ஈந்தனன் என்றனைக் காத்தருளே.

5. காத்தவனே இந்தக் காசினி தன்னை முன்காதலொடு
பூத்தவனே அருள் பூப்பவனே வெல்லைப் பொற்புரியிற்
சாத்திரி மார்வந்து சாட்டாங்க தண்டன்செய் தற்பரனே
போத்துறைவார் உளம் போகாய் அடியனைப் போற்றுவையே.

6. வையாளிவீதி சிறந்திடு வெல்லைநன் மாநகர்வாழ்
துய்யாபன்னீர் திருத் தொண்டர்கள் சூழ்தரத் தோடமிலா.
செய்யானபங்கய பாதம்வலித்திடச் சேணடந்த
ஐயாவென் நெஞ்சம் அதில் நடந்தென்றனை ஆண்டருளே.

7. ஆண்டவனே உயர் அம்பரம்விட்டிவ் அகிலமுள்ளார்ப்
பூண்டவன் பாழ்நரனாகி வெல்லைப்பதி போந்தவர்க்காய்
ஆண்டொரு முப்பத்து மூன்றரையிற் றெவ்வரார்த்தொறுக்க
மாண்டவனே எனைத்தேற்றிடவா வெகு வெல்லையிலே.

8. வல்லையில்வா மலர்க்கையா அடியவர் வான்றிருக்கைக்கு
அல்லல்செய்தாருயிர் காப்பவனே பெரும் கண்டகர்வாழ்
வெல்லைப் பதிவந்த விஞ்சையனே என்விஷ உளத்திற்
கல்லிடை நாருரித்தால் எனஅன்பளிக் காட்சிசெய்யே.

9. செய்யிடை யேருழும் வெல்லைப் பதியுதி சிற்பரனே
பையுடைப் பாம்பின் சிரநசுக்கும் திறல் பண்ணவனே
துய்யநற் தொண்டர்க்கு அமுதமதுஈயத் தொடர்ந்துநிற்பாய்
கையறற் பட்டழும் காதடியேற்கு அருள் கற்பியின்னே.

10. கற்புக்கரசி மரி நாயகந்தரு காதலனே
சற்புத்திரர்கள் சிகாமணியே வெல்லைத் தன்மணியே
அற்புக்கு இருப்பிடம் ஆனவனே மனவாசனனே
செற்புக்க தொக்கும் உரைசெப்பிடாய் சொல்வை தேன் எனவே.

11. தேன்சொரி நீண்மலர்ச் சோலைவிண்ணாட்டைச் செறிந்தளக்கும்
கான்படர் வெல்லை உதித்தவனே அருட்காரணனே
ஆன்வளர் கோட்டத்து அளியவர்போல் வந்து அவதரித்தாய்
ஏன்வரத் தாமதித்தாய் ஒல்லைவாவென்முன் எம்பரனே.

12. பரனே பணிந்தவர் பாவியரேனும் பரிந்தவர்மேல்
அரநேரும் அன்பது தேய்த்தவர்பாவம் அறத்தொடைக்கும்
வரனே திருவெல்லை வந்தவனே அளிவாழ் கிருபைக்கு
அரனே சமயம் இதில்வந்து அடியற் கடைக்கணியே.

13. கடையவன் ஆயினும் நின்னடியார்க்குக் கடமைசெய்யும்
படியெனை முற்றும் நிவேதித்திட்டேநற் பழையவெல்லை
உடையவனே என்னுடல் பொருள் ஆவி உனக்களித்தேன்
கொடியவன் என்றெனை நீக்காய் உயர்பரன் கோமகனே.

14. கோவலர் கைதொழுங் கொற்றவனே குணக்குன்றினனே
பாவலர் பாப்பொருளே வெல்லையென்னும் பதிவளர்ந்த
காவலனே இருகண்ணிமைபோல் எனைக் காப்பவனே
ஆவலுடன் வந்தெனை அடிமைகொள் என்னாதரவே.

15. ஆதரவே வெல்லை யம்பதி தோன்றிய அற்புதமே
சோதரமாய் அடியார் துயர் தீர்த்திடுஞ் சுந்தரமே
கோதிலிராசன் றவிதிந்திரன் குலக் குஞ்சரமே
ஏதினியென்தடை ஏனாளவில்லை எனைப்பரிந்தே.

16. பரிந்தே நினைப்பவர்பால் அருளோடு படர்பவனே
விருந்தாக விண்ணவர் உண்பொருளே வெல்லை மேவியமர்ந்து
இருந்தாய் நசரைப்பதி வளர்ந்தாயிறை யேசிறியேன்
கருந்தா அதையொக்கும் மனன்உறைவாய் நல்ல காட்சிதந்தே.

17. தந்தன தானவென வண்டுபாடுநல் தண்டலைசூழ்
சுந்தரமான வளவெல்லை என்றுரை தொல்பதியில்
இந்தினை நேர்முகத்தாள் மரியன்னை இருஞ்சுதனாய்
வந்தவனே அருட்கண்ணா கிருபை வழங்குவையே.

18. வழங்குங் கருணைக் கடலே பலப்பல வாச்சியங்கள்
முழங்கிடு வெல்லைப் பதி யரசே தினம் முந்திமுந்தித்
தொழுங்கரம் கொண்டுனைத் தோத்திரிப்பார் பவத்தூரறுக்குங்
களங்கமில்லாப் பெருங் கோடரியே யெற்கடைக்கனியே.

19. கனியேவு வெல்லைப்பதி பிறந்தாய் நினைக்கண்குளிர
அணியோடு நோக்கினர்கு அன்றி அல்லாருக்கு அரும்பொருளாம்
மணிபோல் அரியவனே தனிமாதவம் மற்றியற்றேன்
துணிவாய் இரந்தனன் வந்தெனை ஆளுக தூயவனே.

20. தூயவனே வளவெல்லைப்பதி யிடைத்துய்ய மரி
தாயென வந்தவனே பலதாசர்கள் ஆம்தொடரக்
காயெரிபோல் வெயிலூடே நடந்து களைத்திளைத்தும்
ஏயுபதேசம் இசைத்தவனே என்னை ஏற்றருளே.

21. ஏற்றிடத் தோஷங்கள் இல்லாத போதினும் ஈனமிகும்
மாற்றரால் உயிர் மாய்ந்தவனே உள்மகிழ்ச்சியுற
ஆற்றுஞ் சிறகுடைப் பட்சிகள் வாழ்மரம் ஆடுவெல்லைப்
போற்றும் பதிவந்த பூபதியே அன்பு பூண்டருளே.

22. பூண்ட விலங்கறப் போற்றி நின்றோர் பயம் போந்து உதறி
மாண்டவர் போல்விழ நின்னடியாரை மகிழுவித்தாய்
ஈண்டெனை ஆற்றிட வார்அலையோ வெல்லையோர் பதிவாழ்
ஆண்டகையே அருள் செய்கலையோவெற் கருந்துணையே.

23. துணையார் சதாகதி ஆதிய பூதங்கள் தோற்றுவித்துப்
பணைமேவு வெல்லைப் பதிஉதித்தோய் பவப் பௌவமுற்றார்
புணையே தனித்தனி பூங்கழல் போற்றும் புனிதருக்கு
அணையே அணைநிகர் அன்பினையே யென்னை ஆதரியே.

24. ஆதரிப்பாய் உளத் தார்வஞ்சவதரித்து ஆத்தன்என்பேர்
நீதரிப்பாய் நிதியாகரமாம் வெல்லை நீள்நகரத்
தேதரித்தாய் குன்றுசஞ்சரித்தாய் என்இருதயத்தில்
வரதரிப்பாய்ஜய னேபுரப்பாய் நின்மனம் உவந்தே.

25. உவப்பவனே பத்தர் சங்கம் மலிந்துள் உறைந்தவெல்லை
தவப்பயனாற் பெற்ற தற்பரனே மலர்த்தாள் இரண்டுஞ்
சிவப்புற யூதய தேசங்கள் தோறுந் தினந்திரிந்து
நவப்பிரசங்கங்கள் செய்தவனேயெனின் அன்புகொள்ளே.

26. கொள்ளேன் நினையன்றி வேறேயொருவர்க் குரவரென
உள்ளேன் திருவெல்லை யம்பதி தன்னில் உதித்தபெரு
வள்ளன் நிரந்தரனே நித்தனேயென வானவர்தம்
வெள்ளம் பரவு விஞ்ஞானத்தவென் சிறைமீட்டு ஒழியே.

27. ஒழியாப் பவக்கல் உற்றழிந்தேனுக்கு ஒருதுணையென்
வழியாருள் கண்டிலன் வெல்லைப் பதிதனில் வந்திடுதண்
அளியாய் அருட்கொடியாய் தனித்தோனென வாருமெனைப்
பழியாது வந்தடிமை கொண்டிடநல்ல பக்குவமே.

28. பக்குவஞ் செய்து நற்றொண்டரை ஏற்றிப் பரகதியில்
வைக்குங் கருணைப் பிரானே வெல்லைப்பதி வந்துசிறுக்
கைக்குழந்தையென வான்தொழுமேஇக் கருதலர்தம்
உக்கிரஞ் சித்தி கொள்ளாதவ தாவெனக்கு ஒப்புரவே.

29. ஒப்புக்கொள் என்றனை ஓர்ந்துகொள் நீயெங்கும்ஒன்றி நல்ல
அப்பும் உப்பும்எனச் சேர்ந்திடுவாய் வெல்லையம் பதியிற்
செப்புமெய்ச் சாத்திரிமார் தொழவேந்தன் சினந்து எழுந்தும்
தப்பிஉய்ந்தோய் எனைத் தப்புவித்து ஆள்க சமயம் இதே.

30. சமயம் கடந்த சதாநந்தனே தனித் தற்பரனே
இமயவர் சூழ்ந்து செயசெய எம்பர என்றிசைக்கச்
சிமயநன் மாமலை வெல்லைப்பதியில் திகழ்ந்து உறைந்தாய்
அமயமிதில் வந்தெனை உன்றன் சேவைக்கு அணைத்துவையே.

31. வையாருங் கட்கத் தவிதரன்றன் மரபினனாய்ச்
செய்யாரும் வெல்லைப் பதிசெனித்தோய் செக தேசிகனே
மையாரும் மாந்தருக்கு ஈடாய்ச் சிலுவை மரித்தெழுந்த
ஐயாதுய்யா எனை இன்றே அடியவன் ஆக்குவையே.
32. குவையாய் நிதியைப் படைத்துவைத்தால் என்ன கொற்றவர்தம்
சவையூடு வாழ்ந்திருந்தால் என்ன வெல்லைத் தலத்தடைந்து
நவைதீரி ரட்சண்ணியந் தந்தநின் தன்னை நான்மறந்தால்
அவையாற் பெறுபயன் உண்டோ அநாதி அதிகுணனே.
33. அதிகுணனே அகண்டா கண்டனே வெல்லை யாம்சிறந்த
பதியில் வந்தோய் பசியாயினர் ஆயிரர் பண்டுணற்காய்த்
துதிசெய் தனந்தரு தூயவனே என்துயரகல
அதிசயமாய் எனை ஆண்டருள் யானுன் அடைக்கலமே.
34. கலமேறிநீள் கலிலைக்கு ஏகியாங்குக் கடலருகே
மலையேறி நின்றவண் வந்தவர்நோயை மருந்ததின்றிச்
சொலுமோர் உரைதனின் மாற்றிடு வெல்லையம் தொல்பதியோய்
நலமாக வென்துயர் நீக்கிடவா இது நற்றினமே.
35. தினநாதனோடு வெண்சந்திரன் தாரகை சேர்ந்துநிதம்
நினதார் மகிமை நிகழ்த்திடநீ வெல்லை நீள்பதியிற்
சனவீனர் தம்மத்தி வந்ததென்னோ தர்ம தாரகனே
அனகா அடியர்க்கு அடியவனே நித்த அச்சயனே.
36. அச்சயனே எண்ணில் அண்டர் அண்டங்கட்கு அதிசயனே
நிச்சயனே வெல்லை நீள்நகர் தோற்றும் நிரந்தரனே
வச்சிர யாக்கை அடியருக்கு ஈந்துஅப வர்க்கமெனும்
உச்சித வீடு கொடுத்தாய் எனக்கும் உவந்துகொடே.
37. கொடுப்பாய் உளமது கோணாமல் முத்தி கொடுத்திடுவாய்
எடுப்பாய் துயர்வெல்லை என்றுசொல் இன்பதிஇன் பொடுற்றாய்
அடுப்பாய் அடுத்துனைத் தேடினர் பாலருள் ஆவிமழை
விடுப்பாய் அடியன் உளநிறைப்பாய்மண் விதித்தவனே.
38. விதித்தவனே பகிரண்டங்கள் வேந்துறை வெல்லைவந்து
உதித்தவனே கப்பர் நாகூமில் மச்ச உதரமதிற்
பதித்தோர் வெள்ளிப் பணம் வேந்தனுக்காகப் பணித்தவனே
சதித்தெனைத் தள்ளிவையாய் மனங்கூர்ந்து தயைபுரியே.
39. புரியென்ற வெல்லைப் பதிதெரிந்தே வந்த புங்கவனே
நரிபட்சிகட்குக் குழிகூண்டதுண்டு நரன்சுதற்கோர்
சிரமுய்க்கவோ இடம் இல்லையென்றாயிச் செகம் அதெல்லாம்
உரிமைப்படி நினதல்லான் மற்றாரது உரைத்திடெற்கே.

40. எற்கார் துணைஎன் இறையவனே நின்னை ஏற்றபடி
கற்காதவர் உளங் கோவில் கொள்ளாத கடம் உடையாய்
விற்காவல் கொண்டகை மீளிகள் வாழ்ந்திட்ட வெல்லைநகர்
முற்காலம் உற்றிடு மூர்த்தீ உலக முழுமுதலே.
41. முதலே பரப்பொருளே திரிலோகத்தின் முன்னவனே
அதலாதியாமிடம் வாழும் சராசரம் அத்துணையும்
பதறாது காக்கும் பரனே வெல்லைப்பதி பண்டுதித்தாய்
பதிலாக வென்றன் உளம்பிறப்பாய் இன்று பண்புறவே.
42. உறவேது சுற்றிடு மித்திரரேது விண்ணாடு இழிந்து
புறவாக வாவி சிரமமர்ந்தோய் வெல்லைப்பும் பதிவாழ்
அறவாழியே விறற் கூளியின் கொற்றம் அடக்கிடுவெந்
திறவாளியே நின் திருவடித் தாமரை சேர்த்தருளே.
43. சேர்க்கும் தசமொழி தந்தவனேபொற் சிலம்பில் இன்று
ஆர்க்கும் பயங்கரம் உண்டாக மேகத் தறைந்தவனே
ஏர்க்கும் சிறந்திடு வெல்லைப்பதியில் இருந்தவனே
பார்க்கும் பிரீதிகொண்டே வருவாய் என்றன் பாங்கரிலே.
44. பாங்கர்சென்றே அடியார் அஞர்போக்கும் பழம்பொருளே
ஞாங்கர்கையாண்டிடு வீரோதயர் உறை நல்லவெல்லை
ஓங்கரும் கீர்த்திப் பதியுதித்தாய் என் உளத்து உதித்து
நீங்கரிதாய்உறை யாயோஅநாதி நிருமலனே.
45. நிருமல நின்மல வேதாந்தனே அன்று நீள்கடல்வாய்
ஒருவன் அடக்கப் பணித்தனையால் இந்த லோகமதிற்
பருவரல்கொண்டு பரிந்தாழ்ந்திடஅது பார்த்திருத்தல்
தருமமது ஆகுமோ வெல்லைப் பதியுதி தற்பரனே.
46. தற்பரமே சுயம்பே அருமாமறை தாம்உணரா
அற்புதமே அன்றி யாவீரின் வேண்டுதற் காய்அவன்றன்
நற்புதல்விக்குயிர் மீண்டிடச் செய்தனை நல்லவெல்லைப்
பொற்பதியோய்எனை நீயுயிர்ப் பித்திடல் புண்ணியமே.
47. புண்ணியனே புண்ணியத்தின் சுரூபம் பொலிந்தவனே
எண்ணிய வெண்ணிய வெல்லாம் அடியருக்கு ஈபவனே
நண்ணிய வெல்லைப் பதியிற் பிறந்த நரேந்திரனே
அண்ணினன் என்இனித் தாமதம் வாவிவ் அவதியிலே.
48. அவதிப்படும் தொண்டர் ஆநந்தம் கொண்டுறவு ஆங்கவர்க்குச்
சுவலிக்கும் அக்கினித் தம்பம் அளித்தனை தொல்லைவெல்லை
நவரத்தினப்பதி வந்துதித்தாய் கொன்று நன்றிதின்னும்
பவமிக்குள் என்மனப் பற்றிருள் போக்கும் படியருளே.

49. படியோர்புகழும் கற்பாறை பிளந்து பரந்து சலம்
நெடிதோட அன்று நின்தாசர்க்கு அருள்செய்தை நீணிலம் ஆள்
முடிசேர் அரசருறை வெல்லையம்பதி முன்செனித்தோய்
அடியொன்றில் என்மனக் கல்மலை கீழ்ந்தருள் ஆற்றுவையே.

50. ஆற்றாப் பசிகொண்ட வாறு இலட்சத்தருக் கண்டநின்றும்
காற்றாலும் முண்டி கற்பித்தனையே மரக் காவளர்ந்து
மேற்றாவு வெல்லைப் பதிசம்பவஞ்செய்த விண்ணவனே
போற்று அவிவாடமுன் தந்தருள்ஞானப் புசிப்பனவே.

51. புசியாத ஞானஅமுதே வெல்லைப்பதி போந்தவனே
சசியாது அவன்பணி தற்பரனேதந்த சக்கிரியைக்
கசியாது வென்ற திரியின்வித்தே உளக்காமருடன்
சுசியாது மின்றிய தோஷிக்கு அருள்புரி தோத்திரமே.

52. திரமாக நின்றுனைத் தோத்தரியாத சிறியருக்கும்
உரமாகநில் சச்சிதானந்தனே முந்துஊரகித்தந்
திரமார் பிசாசின் சிரத்தை அரைத்துத் திரிக்கவெல்லைப்
புரமேவு சுந்தர பாதாநீ யெற்குப் புகலிடமே.

53. புகலிடம் நீயன்றி வேறார் எனக்கிப் புவனமதன்
அகலிடம் எங்கணும் ஆராய்ந்திடில் அகிலாண்டமுதற்
சகலவிடந்தொறுஞ் சர்வவியாபக தாரகமாய்ப்
புகலவிடம் இருந்தும் வெல்லை தோற்றும் புராதனனே.

54. புராதனனே அன்று போற்றலர் வாழ்ந்த புரம்தகித்தும்
சராசரம் யாவிற்கும் தண்ணளிகாட்டும் நற்றத்துவனே
பராதினம் ஆக்கிப் பசாசு அதிகாரத்தைப் பாடுசெய்த
நிராதர வெல்லைப் பதியவ தாவரு ணித்தமெற்கே.

55. நித்தந் தியானஞ் செய்வார்க்கு அருளியு நிருமலனே
தத்துங் கிளிமல்கு வெல்லைப் பதியிற் சனித்தவனே
உத்துங்க ராசன் தவீது குலத்துக் கொருவிளக்கே
எத்தேச காலமும் கைவிட்டிடாய் என்னை இன்றுதொட்டே.

56. இன்றுதொட்டேநின் கயிங்கரியம்தனை இன்பமுடன்
நன்றுகொண்டேன் அடிமைமுறி நிற்றர நாடிவந்தேன்
தொன்றொருநாற்பது நாளுபவாசஞ்செய் தொல்பரனே
சென்றுவெல்லைப்பதி வாழ்திருஞானத் தினகரனே.

57. தினகரனேர்அருட் செங்கரநீட்டுந் திரித்துவனே
அனகபராபர ஆச்சரியா வெல்லை யம்பதியிற்
சினகரம் போந்து சுவிசேஷ வாக்குரை சீரியனே
மனகம மாம்படி என்கல் இதயம் வதிந்தருளே.

58. வதிவாய் வதிந்தருள் மாமழை பெய்துன் மனமகிழ்ந்து
துதிவாயில் வைப்பவர் துன்பம் தொடைக்கின்ற துல்லிபனே
பதியாரு வெல்லைப் பதியுதித்தே படு பாதகர்செய்
சதியால் இறந்தெழு நீயே எனக்குத் தனித் துணையே.

59. தனியான வெல்லையில் உற்பவனே சற்சனர்உவக்கும்
கனியே கனியின் ரசவொழுக்கே உட்கலுழ்ந்து கண்கள்
பனிநீர் ததும்ப அழைப்பவர் முன்னர்ப் பரிந்துசெல்வாய்
நனியான் நினைஅழைத்தேன் ஓடிவா இந்த நாளதிலே.

60. நாளொடு வாரம் மதிவற்சரங்கட்கு நாயகனே
கோளொடு தாரகை நின்கண் அருளின் குறிப்பறிந்து
ஆளடிமைசெய்ய நீவெல்லை மாபதி யானெனவோர்?
ஏழையைப்போலப் பிறந்ததென் சொல்வை இதுஎன் மனுவே.

61. மனுவாக வெல்லைப் பதிவந்தவா நின்மருவலர்கள்
தனுமீது அடிக்கவுந் தூஷிக்குவும் சஞ்சலம்அதின்றி
அனைபோற் சமித்தனை ஐயனே யானும் அடிக்கடியத்
தனையாக நின்னை வருத்தினன் ஏனுந் தயவுசெய்யே.

62. தயவுக்கு உறைவிடம் ஆகியஅத்தன் தனிப்பரமன்
செயவுக்ர வீரர் வதிந்திடும் வெல்லைத் திருப்பதியில்
நயம் மிக்குறவந்து நானிலத்தார் பவ நாரறுத்துச்
சயசக்ரமோச்சு பவஎன்னை ஆள்க சபதியிலே.

63. சபதியில் வந்தெனைத் தாங்கிடுவாய்நின் சததளமாம்
உபயபதங்கள் என் உச்சிவைப்பாய் உம்பரோடுஇசைந்து
தபசிகள் வாழ்தரு வெல்லையில் வந்து தனந்தனியே
செபதபத்தோடுற்ற செம்மால் அருட்கொரு சீர்க்கடலே.

64. கடல்சூழ் தரைதந்த காரணனே அன்று கானாவினில்
அடல்சேர் மணப்பந்தர் சென்று தண்ணீர் ரசம் ஆக்கிவைத்தாய்
உடல்கேசம் ஆதி அடிஅந்தமாய்ப் பவரோகமுற்ற
மடலோபியேன் உரு மாற்றலையோ வெல்லை வந்தவனே.

65. வந்துடன் நீள்கடல் கூடியொன்றாகி மதர்த்தெழுந்து
கொந்தளிப்புக்கொண்ட காலையில் ஓருரை கொண்டவற்றின்
மைந்தை அடக்கினை மற்றடி என்றன் மனச்செருக்கார்
சிந்தையடக்கல் அரிதோ வெல்லைப் பதித் தேசிகனே.

66. தேசிகனே முனம் பத்தேழு தொண்டர்த் தெரிந்தெடுத்து
ஆசிகள் சொல்லிநல் அற்புதஞ்செய்வரம் அன்றளித்தாய்
நீசனையோ நினைக் கின்றாயிலை வெல்லை நீள்பதியில்
வாசஞ்செய்ராச குலத்துங்கனே நின்மரபு இதுவே.

67. மரபால் உயர்ந்தநல் ஈசாய்வழிச மகத்துவனே
பரபாசுக்காக நினைப்பகை யூதர்ப் பரிந்தவனே
கரவாத நெஞ்சினனே வெல்லையம்பதிக் கண்செனித்த
பரமா அடியவன் உள்ளத் துறைந்திடல் பங்கமன்றே.

68. பங்கஞ் செறிந்திடு பண்ணை நன்மேன்மை படைத்துறுசற்
சங்கஞ் செறிந்திடு வெல்லை அதாம்பதி சார்ந்தவனே
துங்கஞ் செறிந்திடு தூரத் தரிசிகள் சொற்குறிப்பின்
அங்கஞ் செறிந்திடு தேவே எனைவந்து அடிமைகொள்ளே.

69. அடிமைகொள்வாய்முறி ஆக்கிடுவாய் எனை ஆண்டலைக்கும்
மிடிமைகொல்வாய் விண்ணவர் தோத்திரஞ் செய வெல்லைநகர்க்
குடிமைகொள்வார்உயக் கோலமனுவுருக் கொண்டவனே
நெடுமையிற்காலஞ் செலாதுடன் வாஇந் நிமிடமதே.

70. நிமிடத்தினில் உளம் நீஇரங்காவிடில் நிச்சயமாய்
அமுதமெற்குத்தர ஆருளர் வெல்லை அரும்பதியில்
திமிர அஞ்ஞானம் ஒழிந்தோடிடமுன் செனித்தவனே
உமிநிகர்வேன் என்று உபேட்சை செய்யாய் குறை ஓர்ந்தறியே.

71. அறிவேஅறிவின் அரும்பொருளே பலஅம்பலங்கள்
செறிவெல்லை ஊர்வந்த தேசிகனே தெருச் செல்சிறுவர்
உறவேமகிழ்ந்தனர் ஓசியன்னாவென்று உரைத்துதித்தார்
திறையாகவென்றுதிச் சொல்லையும் ஏற்பை திகில் தணித்தே.

72. திகில்கொண்ட தாசன் கடல்ஆழ்ந்திடாது திடமளித்தாய்
முகில்வென்ற சோலை நிறைவெல்லை யம்பதி முந்திவந்தாய்
அகிலம் பிழைத்திட ரட்சகனாய் உயிர் அன்றளித்தாய்
இனல்வென்று பேயின் பகைமுடித்தாய் முடி என்குறையே.

73. முடிப்பாய் குறையை முடித்தபின் நீயுறை முத்தியதின்
பிடிப்பானது தருவாய் பிறைசூடும் பெருந்தருக்கள்
அடிப்பாதலஞ்செலும் வெல்லைப் பதியில் அமர்ந்தவனே
இடிப்பார்இடிப்பினும் நோக்காத என்னெஞ்சு இறங்குவையே.

74. இறங்கிடு கொண்டல்கள் கூடங்கள் மாடங்கள் எய்தியென்றும்
உறங்கிடு வெல்லைப் பதிவந்தவாபல் உகஞ்செலினும்
மறங்கிடந்தார்மனங் கொள்ளாய் அடியன்முன் வந்திகலி
முறங்கொண் டியான்பறக்கத் தூற்றிடாய் செகமுன்னவனே.

75. முன்னவனேசருவ அண்டங் கள்தங்கட்கு மூத்தவனே
பின்னவனாய்உல கெல்லாம் அழிப்பை பிறங்குவெல்லை
நன்னகர்மேவிய நாயகமே மண் ணரமுதலே
என்இனி யோசனையேன் முத்திவீட்டுக் கிழுக்கலையே.

76. கலையே புவனக் கலைஞானம் காணரும் காட்சியனே
மலைமேற் பிரசங்கம் செய்தவனே சபை மங்கையின்நற்
தலையாம் மணாளநல் வெல்லையின் மேவிய சாமிநிதம்
அலைவாய்த் துரும்பென என்னைவிடாய் இவ் அவனியிலே.

77. அவனியின் ஆதி பதியே அடுத்தை யச்செனவே
புவனியிற் காட்டும் பளிங்கது போல என் புன்மைதனைக்
கவனிப்பதில் தெரி விப்பவனே வேலைக் காநகர்வாழ்
நவநித்திலப் பொதியே வருவாய் வந்து நன்றுஅருளே.

78. நன்றேஅருளும் பிரானே பிதாவொடு நன்கமைந்த
ஒன்றான புத்திரனேஅடி யார்பிழைத்து உய்ந்திட நிள்
மன்றார்ந்த வெல்லைப் பதிவந்தவா மெய்மை மாறுமனக்
குன்றேறிடாப்பெரு மானே என்முன்வரக் கூவினனே.

79. கூவிடக்கோழி தொடங்குமுன் நின்னுள் குலைகுலைந்து
ஆ! விதேயா எனை மும்முறைநீ மறுப்பாய் எனவன்று
ஓவொரு தாசற்கு உரைத்தனை யானும் உனைமறுக்காது
ஆவியுய்யும்படி காத்திடுவாய் வெல்லை ஆள்அரசே.

80. சேயே மரியம்மை தந்திடுசெல்வத் திருக்கொழுந்தே
தாயா உலகங்கள் தந்தவனே தனைத் தான்தடிந்த
தீயோனைச் சீஷன் எனக்கொண்டவா எனைச் சேர்த்திடுங்கால்
ஏயாதகுற்றஞ் சொலுவாரியார் வெல்லை ஏந்தலின்னே.

81. ஏந்தோர் தொழும்பன் நின்மேல் அன்புகொண்டுஉள் இரக்கமுற்றுச்
சாந்தருணங் கண்டுகொண்டேன் என்றுஆசிகளால் மொழிந்தால்
ஆந்தவறு ஒன்றுமில்லாதாய் என்னாட்டமுன் அந்தவண்ணம்
போந்துவந்து ஆள்கிலையோ ஐயனே வெல்லைப் புங்கவனே.

82. கவனத்திலே அடி யாரைவைப்பாய் அன்று கப்பநகூந்
தவமற்ற ஊமையன் வாய்திறந்தாய் பெதுசாயிதவில்
அவமுற்ற அந்தகன் கண்திறந்தாய் எனை ஆதரியா
விவிதத் துயரத்தில் வீழ்த்துவையோ வெல்லை வித்தகனே.

83. வித்தகனே கப்பர் நாகூந் தலைவன் அழைந்தசிறுப்
புத்திரனுக்குச் சுகம் கொடுத்தாய் புழுப்போன்றும்எனை
இத்துணைக் காறுநினையாதிருத்தல் இதுமுறையோ
வத்துவெல்லாந்தந்து வெல்லைப் பதிவந்த மன்னவனே.

84. மன்னவனே கலிலேதன்னில் ஈராறு அற்சரமாய்த்
துன்னுமோர் நோய்கொண்டு இருந்தவட்காயுள் துடிதுடித்துப்
பன்னரும் ஆரோக்கியம் கொடுத்தாயெற் பரிவுண்ணாய்
கன்னல் கற்கண்டு நிகர்வாய் வெல்லைப் பதிக் காவலனே.

85. வலமேவு மன்னவ பெத்தானியாவில் மரித்தவனை
நலநான்கு நாட்பின் உயிர்க்கச்செய்தாய் நறுநாற்றம் இன்றிப்
புலவே உளத்தில் மணத்திடும் புல்லனைப் போந்தெழுப்பிக்
கலவாத தென்ன முறையோ வெல்லைப்பதி கண்டவனே.

86. கண்டருள் கொண்டனை கானான் அரிவையின் காதலிக்குப்
பண்டொரு வாக்கிற் சுபம்கொடுத்தாய் வெல்லைப் பாலுதிக்க
விண்டலம் விட்டுத் தரைவந்த நாத மிகவிருப்பம்
கொண்டுனைத் தோத்திரித்தேன் வருவாய்என் குறிப்புணர்ந்தே.

87. குறிப்பறிந்து ஈதல் கொடையெனவே இக்குவலயத்தார்
நெறிப்படுத்திச் சொற்றனர் நாயினென்னும் நிகழ்பதியில்
அறப்பரிந்தோர் கைமை தன்மகனார் உயிர்அன்றழைத்தாய்
சிறப்புள்ள வெல்லைப் பதிஉதித்தோய் எனைச் சேர்ந்தெழுப்பே.

88. எழுப்பிடுவாய் இறக் கும்பருவத்தில் இருக்கும் என்னைத்
தழைத்திடும் அத்தித் தருச்சபித்தாய் தண்தரளமது
திளைத்திட்ட வெல்லைப் பதிவந்தவா சது சேயருடன்
வழைத்திட்ட துர்ப்பரி சேயர்தம்மால் உயிர்விட்டவனே.

89. விட்டுவிடீர் கொலை செய்திடுவீர் என்றும் ஏவலர்கள்
தட்டிச்சொல எதிர் கூறாது இராசனும் தானிசைந்து
இட்டமதாய் விட ஆங்கவர்கொல்ல எழுந்தவனே
பட்டஞ்செறி வெல்லை நற்பதியாய் முத்தி பார்த்தருளே.

90. பார்த்துநற்சித்தி எனக்களிப்பாய் என்பராபரமே
நேத்திரமில்லவர் நேத்திரமே மிக்க நீள்தளிவாழ்
பாத்திரமே வெல்லை யாய் எருசாலேம் பதிச்சிறுவர்
வாத்தியம் போற்றுதி கேட்டாய்என்னிற்பதி வாரமதே.

91. வாரஞ் செறிகடற் பூவினர்க்காய்விண் வழிதிறந்தாய்
வாரஞ் செறிமலை வெல்லை எனும்பதி வந்துதித்தாய்
வாரஞ் செறிமங் கொண்டடியார்தம் மனத்துயரீர்
வாரஞ் செறிதருநீ எனைக்காக்கின்ற வாரணமே.

92. வாரணமோடி உலாவுநெடும்பண்ணை வாய்த்தபல
வாரணமல்கும் பதிவெல்லைவந்த வரதன் எங்கள்
வாரணநீ எமக்கென்று முன்னோதி வணங்கடியார்
வாரணமானவனே எனதாவணம் வாங்குவையே.

93. ஆவணவோலை யுனக்குத்தந்தே அடியானுமலை
ஆவணமென்றனை ஆண்டுகொள்வாய்இங்கும் அங்கும்ஒன்றி
ஆவணமல்கிடு வெல்லைப்பதியில் அணியணியாய்
ஆவணவும்கொட்டில் உற்பவனே என்னை ஆள்பவனே.

94. பவனத்திலுற்ற புரங்களுள்ளேநற் பதித்தலைமைப்
பவனம்பிறங்கிடு வெல்லைப்புரி யுற்பவமடைந்தோய்
பவனங்கதித்துடன் வீசிடஓதப்பட அமர்ந்தாய்
பவநந்திடவென் உளமாட்சி செய்குவை பத்திரமே.
95. பத்திர நீள்தரு சோலையம் வெல்லைப் பதியிலுற்ற
பத்திர ரட்சகனே அடியார்தம் பவப்பிணியா
பத்திரியும்படி மாய்ந்தவனே பத்தர் பன்னுசெபப்
பத்திரங் கண்டெழுவாய் வருவாய் எனிற் பாசமுற்றே.
96. பாசமுற்றேன் நின்னில் நாயடியேன் பிரபஞ்சமதா
பாசமென்றேநன்று கண்டுகொண்டேன் நற்பசுபதிசேர்
பாசமிம்மூன்றும் அநாதியென்பார் சொற்பயின்றுழல்வேன்
பாசமதீருவை வெல்லையதாந் தண் பதியினனே.
97. தண்டலைத் தாருவிற் கொண்டல்கள்வந்து தவித்துறங்கும்
தண்டலை வெல்லைப் பதியரசே நடுச் சாமமதில்
தண்டலை மோதிய தெண்டிரைமீது தனிநடந்தாய்
தண்டலை என்சொலைத் தந்தருள் நின்திருச் சங்கமதே.
98. சங்கம் முழங்கிடு பண்ணைவெல்லைப் பதிச் சம்பவனே
சங்க மழைத்தநல் லாசாரிமார்பிறர் தாமடையா
சங்கையை நீக்கத் தகுமுத்தரஞ் சொன்ன தற்பரநே
சங்கையளித் துட னெற்கருண்முத்தித் தலத்துஇணையே.
99. தலத்தால் உயர்ந்திட்ட சாருப மூர்த்தியைச் சார்ந்திடச்செய்
தலத்தால் நினக்கொ ரபூருவமோ வித் தரைகெடவ
தலத்தே உதித்தவனே எனக்கானந்தந் தந்தருளே.
100. ஆநந்தந் தந்திடு வெல்லைப் பதியிடை ஆயருடன்
ஆ! நந்தனன்எனச் சாத்திரிமார்தொழ வாங்குசிறு
ஆநந்திடாக் கொட்டகம் வாழ்ந்திருந்திட்ட வம்பரமன்
ஆநந்தனார் திருமைந்தா வந்தாள்என் அகமலரே.

## வாழி

வெல்லைப் பதிவந்த வித்தகன் வாழிஅவ் வித்தகன்மேற்
சொல்லுந் திருவெல்லை அந்தாதி சுருதியது
எல்லில்திவாகரன் போல்வாழி ஈங்கிதை ஏற்றெடுத்து
அல்லும்பகலும் படிப்பவர்வாழி அனுதினமே.

# இல்லறநெறி

இஃது

உதயதாரகைப் பத்திராதிபரும்

**யாழ்ப்பாணக் கல்லூரித்**

*தமிழ் ஆசிரியருமாகிய*

**அ. சதாசிவம்பிள்ளையால்**

இயற்றப்பட்டு

*இராசாங்கலிகிதர்சாலையிலே*

பதிவுபெற்று

மானிப்பாய்
ஸ்திறோங் அஸ்பரி என்பவர்களின்
இயந்திரசாலையில்
அச்சடிக்கப்பட்டது.
கஅஅஎ.

விலை சதம் ௩0.

## மேற்படி ஆசிரியர் செய்த வேறுநூல்கள்

### *பத்திய ரூபம்.*

**மெய் வேதசாரம்** | **நன்னெறிக்கொத்து**
**அச்சதகம்** | **சற்போதசரணம்**
**நன்னெறிமாலை**

### *கத்தியரூபம்.*

**நன்னெறிக் கதாசங்கிரகம்** | **வானசாஸ்திரம்**
**சாதாரண இதிகாசம்** | **பாவலர்சரித்திர தீபகம்**

### *விளம்பரம்.*

**பாவலர் சரித்திர தீபகம்,** **விலை ரூபா க.ருo**

**தபாற்செலவு: சதம் யஉ.**

ILLARA NONDY,

# The Hushband and Wife.

A Poem

ON

## DOMESTIC LIFE,

BY

**J. R. ARNOLD,**

Ed. M. Star and Vernacular Professor
Jaffna College.

*COPYRIGHT REGISTERED.*

JAFFNA.

Strong & Asbury Printers, Manipay.

1887.

Price 30 cents.

## By the same Author.

## Poetical Works.

Mey vethasaram.
Teruchchathagam.
Nunnery Malai.
Nunnery Koththu.
Satpothacharanam.

### PROSE WORKS

Nunnery Kathachankrakam
Universal History.
Compend of Astronomy.
Pavalar Chariththra Theepakam.


FOR SALE.

PAVALAR CHARITHTHRA THEEPAKAM

| | |
|---|---|
| Price | Rs. 1.50 |
| Postage | " .12 |

# நூன் முகம்.

பிரமசரியம், இல்லாச்சிரமம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்று முன்னோர் விதித்த நான்கு ஆச்சிரமங்களுள், இரண்டாவதான இல்லாச் சிரமம் தேவசித்தப்படி உலகம் பலுகிப் பெருகுவதற்கு இலக்கான உத்தம ஆச்சிரமமாம். இதுபற்றியன்றோ விதூஷியாகிய ஔவையார், "இல்லறமல்லது நல்லறமன்று" என்றும், வித்துவசிரோமணியாகும் அவர் தம்பி திருவள்ளுவநாயனார், "இயல்பினானில்வாழ்க்கை வாழ்பவ னென்பான் - முயல்வாருளெல்லாந்தலை" என்றும் சொல்லியிருக்கின்றார்.

இப்பெயர்ப்பட்ட தலைமைபெற்ற இல்லாச்சிரமமானது, அதனை அனுஷ்டியாநின்ற ஆடவர் ஸ்திரீகளின் தெய்வ வழிபாடின்றிய நடையினாலும், இருதலைப் பிராணிகள் தத்தமக்கு இஷ்டப்பட்ட இடத்திற்கு ஒன்றையொன்று இழுத்து விகாதப்பட்டாற்போல, ஒருவரோ டொருவர் ஒற்றுமையின்றிய நடையினாலும், பெரும்பான்மை, குரங்கின் கையில் அகப்பட்ட நறுமலர் மாலையெனப் பங்கமும் மானவீனமும் அடைவதை அறியாதாரியார்? ஸ்திரீ புருஷர்கள் காந்தமும் உருக்கும் போல ஒற்றுமைப்பட்டு இல்வாழ்க்கையை நடாத்தாமையாற், பூவுலகத் தின் எந்தெந்தக் கோணங்களிலும் "வீட்டுக்கொருவாசல்" என்றாற்போல வீட்டுக்கொரு தொல்லையும் அல்லலுமாய்ச் சமுசாரஞ் சிறப்பீனமுற்றுச் சிரிப்பிற்கிடமாவது, எவரும் உணராக் காரியமன்றாம்.

இந்த நிருவாகஞ் சாதாரணமாய் "எங்குஞ்சலார்" என்று சொல்லுதற்கு இலக்காயிருந்தும், நாகரிகம் இன்னும் பூரணமாகாது பாலியத்திலிருக்கும் எமது தேசத்திலோ அதி தாராளமென்று நினைக்க ஏவப்பட்டோமாதலால், இக்குறைவை அகற்றுதற்பொருட்டு இப்பாடலிற் பின்னுள இரு பாகங்களை மாத்திரம் பல வருஷங்களின் முன்னர் "உதயதாரகை"ப் பத்திரத்தில் அச்சிட்டோம். அவற்றைக் கரிசனையாய் வாசித்துப் பார்த்தோர் சிலர், அ! ஆ! இவற்றையோர் புத்தகமாய்த் திரட்டினாலோ என்றும், புத்தகமாக்கினோம் என்று நினைந்தோர் சிலர், "நமக்குள் ஒவ்வொரு பிரதி தந்தாலோ" என்றும் முன் சொன்னதாலும் இப்போது கேட்டதாலும் அவற்றை அச்சுக்கு ஆயத்தப்படுத்தும்போது: ஆடவன் ஆடவள் என்னும் இரு பிரிவினராய் மனுஷரிருக்க ஸ்திரீ களின் நயகட்டங்களை மாத்திரம் பாராட்டிப் புருஷர்கள் விஷயத்தில்

நீர் மௌனஞ் சாதிப்பது நீதமாகுமா? என்று எமக்கு அரியாரொருவர் கூறவே மேலும் இரு விஷயங்களை இருபாகங்களாக இயற்றி அவற் றுடன் சேர்த்தனம்.

கைப்புள்ள அவுடதங்களை உண்பித்தற்குத் துணையாகச் சர்க்கரையை உடன் சேர்ப்பார்போல எடுத்த விஷயங்கள் பிரீதியாதற்கு நொண்டித்தருவே தக்க வாகனமாம் என்று கருதி, அதனைத் தெரிவு செய்தோம். எல்லாரும் புலமைப் பிரியல்லராகவே, பாப்பகுதிகள் நான்கிற்கும் நான்கு வசனநடைப் பகுதிகளையும் நவமாய் இயற்றிப், பலாவாதிய பல தருக்களிருப்பினும் மிகுதிபற்றியதாற் தெங்கந்தோப்பு என்றாதற்போல, இல்லறநொண்டி என்னும் பழைய நாமத்தையே சூட்டலுற்றோம்.

வேப்பநெய் கசந்தும் மருந்துக்கு நல்லனுபானமாகி உண் பார்க்கு உபயோகப்பட்டாற்போல, இந்நூலிலே வெம்பதங்கள், சுடு பதங்கள் பலவிருப்பினும் இனிய பதங்களோடு கூடி நன்மை பாலிக்கு மாதலிற், தனது வதனக் குற்றத்தை நினையாது, அதனைக் காட்டிய தருப்பணத்தை உடைத்தெறிந்த முழுமகனைப்போல, இதனைப் படித் துப்பார்க்குந் தையலராவது காளையராவது யோசனையும் பொறுமையு மின்றி இதில்வெருண்டு இதனை எள்ளாமலும் தள்ளாமலும் அங்கி கரித்துப் பாராட்டவேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம். சந்தவின்பப் பொருட்டு வேண்டும்போது சில அட்சரங்களைக் குறுக்கியும் சிலவற்றை நீட்டியுங்கொள்க. நமது நற்கருத்து அனுகூலிக்கக் கிருபாசமுத்திரரும் சர்வசீவதயாபரருமாகிய எம்பெருமான் கடாட்சிப்பாராக.

# PREFACE

Some nine or ten years ago, we composed a small poem, in two parts, on the character of good and bad women, and published it by portions, in several numbers of the "M.Star," in order to test its merits and usefulness. Some of the readers. who admired and appreciated it, desired that it should be published in a book form; some, who supposed that we had already printed it, kindly applied to be furnished with copies. So years passed on with occasional requests for the work, until recently we have been unexpectedly asked by a friend in Madras to be furnished with a copy.

Being roused by his request to consider if the publication of the poem was not a duty, we decided to print it, and at once began to prepare a manuscript for the press. Fortunately, one dear to us suggested that the work was one sided, and, to make. Seeing that this was true, we wrote two parts on the male sex also, and complemented the work by adding four more parts in prose, as an exposition of the poem. We entitled the whole, as formerly, Illara Nondy, and added the English title "The Husband and Wife."

It is not our purpose to slander either sex, but to promote mutual happiness among husbands and wives, to produce harmony in households, and to impress on the hearts of young men and women that true education and piety, not dowry and beauty, are the best assurance of domestic happiness.

To engage the attention of our readers, we have tried to select, for the most part, common but choice words, with strong expressions and maxims interspersed here and there. To interest singers, we chose the peculiar and pleasing metre called Nondy, which is used in comic poems. To satisfy readers who are novices in poetry, we had recourse to the prose, which is, by nomeans, a mere paraphrase of the poetry.

Philanthropists and friends of Tamil, are invited to lend their aid to secure a wide circulation of the work. While we do not profess to enjoy or invite criticisms of a captious and fault-finding sort, all kindly and valuable suggestions or corrections will be thankfully received.

That God will bless this work is the humble prayer of the author.

# இல்லற நொண்டி

## தெய்வ ஸ்துதி

தந்தன தன தனனா - தனந்தன
    தானானே தன தானானே.

சீர்வளர் செக முதலே - பரப்பிரமத்
    திருமுதலே தனிப் பரமுதலே
கார்வளர் வெளிமுதலே - பஃறலைக்
    கலைமுதலே மறைக் கடன்முதலே
பூரண வாரணனே - சகந்தனைப்
    பூத்தவனே அதைக் காத்தவனே
காரண அறுகுணனே - பவக்கடல்
    கடந்தவனே என்முன் நடந்தவனே
புங்கவ நாயகனே - அகிலாண்டம்
    புரந்தவனே நித நிரந்தரனே
எங்கனும் நிறைந்தவனே அடியவர்
    இருதயக் கமலத்தில் இருந்தவனே
இறையவனே சுயம்பே - சதானந்த
    எண்குணனே அன்பர்க்கு இன்பினனே
மறையவனே விளம்பும் - வேதாந்தத்தின்
    மன்னவனே எண்ணில் பண்ணவனே
நிருமல நிரஞ்சனனே - நிராலம்ப
    நித்தனே முத்தொழில் உத்தமனே
பரமனே திரிலோகம் - படைத்தருள்
    பார்த்திபனே கிர்பை நேத்திரனே

## 2 இல்லற நொண்டி

தேடும் மெய்ஞ்ஞானம் இலேன் - இப்பூமிசை
சிறந்த இல்லறம்புரிந்து அறந்திறம்பா
ஆடவர் பேரிலிந்த - நொண்டிதனை
ஆவலுடன் பாட - ஏவலுற்றேன்
புல்லறி வுடையேன் இல் - அறம்புரி
பூவையர் மேலிந்தப் பாஅதனைச்
சொல்லவே துணிந்துகொண்டேன் - அதற்குன்றன்
துணைகேட்டேன் அருள் தனைவேட்டேன்
பண்டிதர் நகையாமற் - பலகலை
பார்த்தவர் சிரிக்கநான் திகையாமற்
கண்டவர் இகழாமற் - சீச்சியென்று
காறியுமிழ்ந்து இதைக் கிறாமல்
குற்றங்கள் பிடியாமல் - தாளமிட்டுக்
கூத்தாடி எனைவைது - இதிலேயான்
அற்றங்களால் பிழைகள் - இதிலேயான்
ஆற்றா மனவைவந்து தோற்றாமல்
பாடிட வரந்தருவாய் - அறிஞரிப்
பாட்டினில் ஏசக்கொண் டாட்டஞ்செய்து
நாடிட அருள்புரிவாய் - அதையென்றன்
நாட்டவர் மிகவும் சீராட்டமுடன்
அங்கீ கரித்தருள - எனக்கிதில்
அருள்செய் என்றேன் நினைப் பரவிநின்றேன்.
செங்கரம் தலையில் வைத்தேன் - கோடாகோடி
தெண்டனிட்டேன் நின்னை அண்டிவிட்டேன்
உத்தம ஆடவர்தம் - இலக்கணம்
ஓர்ந்துசொல்வேன் உடன் தேர்ந்துசொல்வேன்
அத்தகையல்லார்தம் - இலக்கணம்
அடைவிற்சொல்வேன் அதை வடிவிற்சொல்வேன்.

நற்குணப் பெண்டீரின் - இலக்கணம்
நாடிச் சொல்வேன் நன்று தேடிச்சொல்வேன்
துற்குணப் பெண்டீரின் - இலக்கணம்
துலங்கச்சொல்வேன் ஆரும் விளங்கச்சொல்வேன்
சந்த நொண்டித் தருவால் - அவற்றினைச்
சாற்றிடுவேன் இசை போற்றிடுவேன்
எந்தையே பரனேநின் - இருபதம்
என்றனக்கு என்றென்றுங் காப்பாமே - தந்தன.

# 1

# இல்லறம் புரிதற்கேற்ற உத்தம ஆடவர் இலக்கணம்

தந்தன தன தனனா - தனந்தன
தானானே தன தானானே.

ஆதி எம்பரமன் தொன்னாள் - சிருட்டிசெய்
அசரமுடன் செறி சரமதனுள்
ஓதிய சரப்பொருளே - உலகத்தில்
உயர்ந்தது என்பார்இதை ஓர்ந்திடுங்கால்
சத்திய மாங்கு அவற்றுள் - மனுடர்கள்
தலைமைபெற்றார் உயர் நிலைமையுற்றார்
பத்திசேர் ஆண்பெண் என்றே - அவரிரு
பகுப்பில் நின்றார் இல்லத் தொகுப்பில் நின்றார்
நின்றிடும் இருவோரும் - கரும்பிடை
நிறைந்திடு சாறுடன் உறைந்திடல்போல்
துன்றிய பூமணம்போற் - பொருளொடு
சொல்லதுபோல் எள்நெய் உள்ளதுபோல்

## 4 இல்லற நொண்டி

ஈருடல் ஓருயிர்போல் - நகத்துடன்
இசைந்திடு தசையது பொருந்திடல்போல்
ஒருகணம் தணந்தாலும் - உயிர்துறந்து
ஓடிடும் அன்றிலம் சோடதுபோல்
அன்பொடு வாழ்வாரேல் - அவர்க்கிணை
ஆரறைவார் இந்தப் பார்மிசையே
இன்பொடு வாழ்வாரேல் - அவர்க்கியார்
ஈடு ஊர் ஆர்நெடும் பூமிசையே
ஆதியை அனுதினமும் - அகத்திடை
அழுத்திடுவான் அருள் வளர்த்திடுவான்
சோதியைத் துதித்திடுவான் - தெய்வபத்தி
சுடரெனக் கொழுந்துவிட்டு எழுந்திடுவான்
உய்வழி ஒழுகிடுவான் - செபதப
ஒழுக்கத்தை ஒருநாளும் மழுக்கிவிடான்
கைதவ வழிகுறுகான் - பவச்செயல்
கனவினும் கருத்தினுள் இருத்தியிரான்
தந்தைசொல் மேலுளதாம் - திருமந்த்ரம்
தாரணியில் இதென ஆரணம்போல்
அந்தியும் சந்தியுமாய் - அதைநிதம்
அனுசரிப்பான் மிக உபசரிப்பான்
தாயினும் சிறந்த அழகார் - கோயிலொன்று
தாலத்தில் இலதெனும் ஞாலத்துளார்
வாயுரை கடவாதே - அவள்தனை
வணங்கிடுவான் உரைக்கு இணங்கிடுவான்
மன்பதை புகழ்ந்தேத்தப் - பரிவுறு
மனத்தின் அடுத்தவர் இனத்தவர்மேல்
அன்புறும் நெஞ்சுடையான் - சகோதர
அளியுடையான் பதவிய நடையான்

# உத்தம ஆடவர் 5

சுயபுத்திதனிற் சாயான் - பெரியவர்
சொற்புத்தி தனைச்செவி சோரவிடான்
பயபத்தி நிலைஅசையான் - எதொன்றையும்
பதற்றமாய் விறுவிறுப் பொடுபகரான்
யோசனையாய் அயர்வான் - விவேகமாய்
யூகித்தும் கிரகித்தும் ஒளிபெறுவான்
வாசினை கல்விவிடான் - மூவாண்டு ஓடு
மைஏடு கையாலே வழுவவிடான்
வீறுகொண்டு இறுமாப்பாய்க் - குரோதித்து
மேலவர் குருநிந்தை விளைத்தறியான்
தாறுமாறுகள் புரியான் - துணிவொடு
சன்மார்க்க நெறிதனைத் தள்ளிவிடான்
வேதியர் பெரியோர்சொல் - விதிகளை
வெறுத்துத் தள்ளான்கடு கடுத்துத் துள்ளான்
ஞாதியர்தமை எள்ளான் - எந்நாளுமெய்ஞ்
ஞானத்தை அடிப்பாரம் ஆகக்கொள்வான்
இருபுறம் கூர்மைதிகழ் - எதியென
ஈர்ந்துளம் அரிந்திடும் இழிப்புரையால்
ஒருவர்தம்மையும் கருக்கான் - எலும்புசேர்
ஊனென நேசரொடு ஒன்றிடுவான்
தான்பிடித்திடும் முயற்கு மூன்றேகால்கள்
சத்தியம் ஈதென்று சாதிப்பார்போல்
ஆன்ற தக்கோர் தம்முன்னே - வாதஞ்செய்ய
ஆக்குரோசம் கொண்டுள் அகங்கரியான்
உத்தியோகம் புருடர்க்கு - எக்காலமும்
உள்ளதோர் இலட்சணம் எனவோர்ந்தே
பத்தியாய்த் தேடிடுவான் - அதன்வரும்
படியிலோர் பாகத்தான் மிடிதீர்ப்பான்

தானத்திற்கு ஒருபாகம் - பிரீதியாய்த்
தந்திடுவான் மீந்த பாகந்தன்னை
மானத்தொடு அனுபவிப்பான் - ஙப்போல்வளை
மாந்தர்க்கும் பிறருக்கும் மகிழ்ந்து ஈவான்
தொழுதுண்டு வாழ்வதிலும் - தொல்லோர்சொன்ன
சொற்படி உழுதுண்டு வாழ்ந்திடலிற்
பழுதொன்றும் இலையென்றே - அதைப்பரி
பாலித்துப் பழனத்திற் பயிரிடுவான்
கிருஷிகம் அனுகூலம் - தராவிடிற்கு
ஏதமில்லாத் தொழில் வணிகமென்றே
பெருமையாய்க் கையிடுவான் - ஏதோர்தொழில்
பிடியாமல் நடைப்பிணம் எனப்பெயரான்
கற்பெனும் அரண்வளைந்தே - தர்மநிலைக்
காவலிட்டே சேமத் தாழதிட்டே
அற்பமும் நிலைபிசகான் - அகந்தனில்
அறமெனும் பயிரினை நிறுவிடுவான்
மைவிழியார் மனையைக் - கனவினும்
மருந்தினுக்கு ஆயினும் விரும்பியிரான்
கைவளம் கொடுத்து அழியான் - அவர்கள்மேற்
கருத்துஅழியான் பெலம் விடுத்துஇழியான்
சந்தியிற் பதிவிருக்கும் - கணிகையர்
தங்கள்தம் கண்வரை தடக்கிவிழான்
அந்தியில் அவர்வாழும் - தெருவிடை
அடிகள்வையான் பொருள் மடியில்வையான்
துட்டர்தம் சகவாசம் - கடுவழிக்
கட்டை ஊடாடிய கான்நிகராய்
நட்டந் தருமதனால் - கெட்டார்சங்கம்
நாடிச்செலான் பிரிந்தோடிச்செல்வான்

சீயென்றார் வீட்டின்முன்னே - பேயும்வந்து
　　சேராதென்பார் இந்தச் செகத்தில்உள்ளோர்
நாயொன்றுபோல் நடத்தும் - அயல்மனை
　　நாடிச்சாரான் ஓடிச் சேரப்பாரான்
கஞ்சாலேகியம் உண்ணான் - பிராண்டிவெண்
　　கள்ளுச்சாராயங்கள் உள்ளிக்கொள்ளான்
அஞ்சாதபின் உண்ணான் - குடிவகை
　　அருந்தித் தெருவிருந்து அடியுண்ணான்
போக்கிரி நடைநடவான் - சைசையென்று
　　புண்ணியர் ஆசியஞ் செயப்புளுகான்
ஆக்கிரமித்து ஒழுகான் - அவசியம்
　　அவசியமாய்ஒரு கருமஞ்செயான்
சூதுசற் பனைபுரியான் - ஒருநாளும்
　　துணிவுடன் கொலைசோரஞ் சூழ்ந்தறியான்
மாதர்மேல் ஆசைவையான் - அவர்தரு
　　மையலால் மோகித்து மதனங்கொளான்
குஞ்சின் அழகு எண்ணான் - உடுத்திடு
　　கோசிகக் கோட்டழகு அதைக்குறியான்
மஞ்சலின் அழகு உன்னான் - கல்விப்பெரு
　　மாட்சியைக் காட்சியாய் மதித்திடுவான்
சீதனம் அதன்மருளான் - கல்வியினும்
　　சிங்காரம் பெரிதென்று தேற்றங்கொளான்
ஆதனம் கல்வியினும் - மாட்சியென
　　ஆட்சேபித்து அவசியம் அதிசயிக்கான்
செல்வத்தைப் பாராட்டான் - குணந்தனிற்
　　சிறந்தது குலமென்று சீராட்டான்
நல்வித்தை பாராட்டான் - குணந்தனில்
　　நயந்தது கிளையென நாடிநில்லான்

தோற்றத்தைப் பாராட்டான் - குணந்தனிற்
துதிபெறும் கனமெனத் தோத்திரியான்
ஆற்றலைப் பாராட்டான் - சுகுணத்தில்
அரிய சம்பாத்தியம் ஆசித்திடான்
அளசம் அது இல்லாளை - நல்லகூந்தல்
அழகியென்று ஆற்றிடும் அறிவிலிபோல்
விழல் அழகியை அழகி - எனமெய்ச்சி
வியந்துகொள்ளான் மனம் வேண்டிக்கொள்ளான்
உத்தியோகம் பாராட்டான் - குணந்தனில்
உறவினர் சலுகையை உணர்ந்துழையான்
தத்திமி தெய்யென்றே - சிறந்தவோர்
தையலை நினைந்து சன் னதம்ஆடான்
பிஞ்சினிலே பழுக்கான் - பெற்றார்மனம்
பேதிக்கக் கலியாணம் பேசச்செலான்
அஞ்சுநால் ஆண்டின்பின்னே - சமுசார
அருஞ்சுமை எடுத்துவைத்து ஆற்றிடவே
தக்கநல் வயசின்கண்ணே - தந்தைதாயர்
தமரொடு மித்திரர் தமைஆய்ந்தே
மிக்கநற் குணஅழகும் - புகழ்மணம்
வீசிடுங் கல்வியின் மிகுஅழகும்
ஆசிக்கும் மரியாதை - சுகுணங்கள்
அமைந்திடும் நடைபொறை தயைஅளியும்
பூசிக்கும் நிறைநெறியும் - தெய்வபத்தி
புனுகென நாறிடும் அறமுறையும்
நிறைந்தபெண் தனைநாடித் - திருமணம்
நேர்ந்துமித்திரர் தமருடன்கூடி
அறைந்திடும் மறைமுறையே - குரவர்கள்
ஆரணபூரண ஆசிசொற்றே

# உத்தம ஆடவர் 9

சிறந்திடு சடங்கியற்றத் - தேவதயை
திருவருள் நிழல்செயச் சேர்புசென்றே
உறைந்தவள் உடன்பயில்வான் - உயிருடன்
உடம்புபோல் ஒன்றியே கலந்துறுவான்
விதக்கும் நல்சோட்டுப்பட்சி - போலே அன்பை
விருத்திசெய்வான் மனத் திருத்திசெய்வான்
பதிக்கொளிர் விளக்கெனவே - தெய்வவழி
பாட்டினைக் குடும்பத்திற் பதித்திடுவான்
தன்பதி பிரிந்தோடி - அடிக்கடி
தாய்பதி அன்னியர் தலம்தேடி
நண்புறு தன்மனையாள் - தனிமையாய்
நாடொறும் தெருவழி நமுவவிடான்
அறந்தனைக் குலைத்து எறியான் - கட்டிமனை
யாட்டியைப் பிடித்துவைத்து அடித்தெறியான்
பிறந்திடு குழந்தைகளை - நிலமிசைப்
பெயர்த்திழுத்து உருட்டியே மிதித்துஎறியான்
பண்டாரம் குறையவிடான் - இல்லமது
பழுதடையப் பார்வை வழுவவிடான்
பெண்டுளம் சீறவிடான் - அவள்பெற்ற
பிள்ளைகள் மீறியே துள்ளவிடான்
ஆர்பசித்திருந்தாலும் - தனதுஅக
டதுநிறைந்தாற் சரி யென அறையான்
பேர்புகழ் கெடநடவான் - இன்மைவரிற்
பிச்சையெடுத்தும் வந்திச்சையுடன்
பிள்ளைகள் கூட்டிடுவான் - தனைப்பசி
பெரிதுவருத்தினும் பிரியைதனக்கு
அள்ளிஅருத்திடுவான் - ஆடையணி
அவசியம்அறிந்துடன் அளித்திடுவான்

## 10 இல்லற நொண்டி

கள்ளமதாய் ஒழுகான் - கவலையாம்
கடலிடை வீழினும் தடதடவான்
உள்ளதற்கு இசைவாகப் - பொறைதனக்கு
ஒருமலை இவனென உலவிடுவான்
சேண்பறந்து ஓடுகினும் - மரத்துறு
சேக்கையை நோக்கிச்செல் சேவல்எனக்
கான்படர்ந்து இளைத்தாலும் - ஐயோஎன்றன்
காதலி யெனமிகு ஆதரவாய்க்
கிரகத்தைச் சார்ந்திடுவான் - தினந்தினம்
கிழக்கு வெளுக்குமுன் கிளர்ந்திடுவான்
பரசொத்துக்கு ஆசைப்படான் - எவருக்கும்
பழிக்குப் பழியென்று பழிவாங்கான்
அயலவர் உடைமைகட்குப் - பிறவியில்
அந்தகன்போலவே அமைந்திருப்பான்
மயல்தரு பிறர்கதைக்குக் - கேள்வியில்லா
மந்தன்ஒப்பான் தூர வழியில்நிற்பான்
சுடுகெண்டைக்காக ஏரி - உடைத்திடும்
தோஷிஒப்பாய்ச் சொற்ப லாபநட்பாய்
வடுவந்து புகுதவிடான் - கிரகத்துள்
வாரிபோல் ஆக்கங்கள் வளரச்செய்வான்
நன்மைக்குத் தீமைசெய்யான் - நல்லாரினை
நாடிச்சோதரம்போல நயந்திடுவான்
வன்மத்தை விருத்திசெய்யான் - உலகினில்
வழக்கத்திற்கு எதிராக மலைவுசெயான்
இருதய வாகனமேற் - பெண்டுபிள்ளை
ஏறச்செய்வான் நாவில் ஆறச்செய்வான்
ஒருவருக்கு அவத்தையென்றால் - தனக்கது
உற்றதுபோல் உண்டி உறக்கமின்றிப்

பைத்தியர் போல்இருப்பான் - அவருடை
பக்கத்தில் அன்புடன் படுத்திருப்பான்
வைத்தியர் வீடுஅலைவான் - வகைவகை
மருந்துகள் கொடுப்பித்து மாற்றுவிப்பான்
சயித்திய போசனமும் - சிகிச்சைக்குத்
தக்கபத்தியங்களும் தான்தருவான்
தயித்தியன் எனஒழுகான் - பொறுமையிற்
தருமன்ஒப்பான் அன்பிற் தாயைஒப்பான்
சருகினை அரித்திடவே - நேரமல்லாற்
தான்குளிர் காய்ந்திடச் சமயமின்றென்
இருமுது மொழிப்படியே - எந்நாளும்தன்
இல்லற்காய்ப் பிரயாசம் - எடுத்திடுவான்
ஏதுங்கெட்டான் தனக்கு - இருபெண்டிர்
ஏதுக்கென்றான் முன்னரிறந்து ஒழியும்
மாதுக்காய் மனமாழ்கிக் - கண்ணீர்வீட்டு
மார்படித்து அழவென்று மாநிலத்தோர்
பழிப்பொடு பகர்ந்துவரும் - வடுவுரை
பாங்காகத் தன்மீது பலித்திடவே
களிப்பொடு மறுமனையாள் - தனைக்கொண்டு
காலிலே இருதளை காவிக்கொளான்
அந்து ஊது நெல்லாகான் - அஞ்ஞானத்தை
அகத்திற்கொள்ளான் அறிவு அடக்கிக்கொள்வான்
கொந்தூரும் குழலாட்குத் - தானேயொரு
கோவில்ஒப்பான் நாளுங் கோவையொப்பான்
உன்மத்தன் போல இரான் - ஊராண்மையோடு
ஊக்கமாய்ப் பொருள்வரவு ஆக்கிக்கொள்வான்
கண்ணுக்கு இமைபோலத் - தற்சேர்ந்தவர்க்கு
காத்துத்தன் கடமைகள் கழித்திடுவான்

மாமிக்கு வேம்பாகான் - தன்மாமன்றன்
    மனசுக்குக் கரும்பாகி மைத்துனமார்
தாம்மெய்க்க வாழ்ந்திடுவான் - அவரொடு
    சள்ளுக்கொள்ளான் தொல்லை கிள்ளிக்கொள்ளான்
சகலன்தன் உறவுதனில் - ஒருவற்குச்
    சாண்கொடியது பஞ்சந் தானோ என்று
அகிலத்துள்ளார் உரைக்கும் - முதுமொழி
    அதுபொய்க்க அவனுக்குஅன் பாய்நடப்பான்
விருந்தரை உபசரிப்பான் - அவர்கட்கு
    வேண்டிய அருந்தொண்டு பூண்டுசெய்வான்
மருந்திலும் ஒருபாகம் - உண்பார்கட்கு
    மறுத்தறியான் யாதும் ஒறுத்தறியான்
காரணம் இருந்தாலும் - பிராதினிற்
    கையதிடான்பெரும் பொய்கள்தொடான்
ஆருக்கும் பிணையாகான் - புரட்டுருட்டு
    அவைகளே அலுவலாய்த் தெருவலையான்
பழிசெய்து பழிவாங்கான் பவக்கடல்
    பாய்ந்திடும் புணையெனப் பரனருளை
வழிவழியாகக் கொள்வான் - கனவினும்
    மறவாதே விட்டுப் பறவாதே
குடும்பத்தைக் காத்திடுவான் - கண்டாரெலாம்
    குறைசொல்லப் பெரும்புகழ் குன்றிடவே
இடம்பமா நடைகோலான் - இல்லாச்சிரம
    இந்திரன் இவன்இலக் கணம் இவையே
இவ்இலக்கணமுறையே - ஓராடவன்
    இல்லறம் இருந்தியற் றிடுவானேல்
பௌவமார் புவிமிசையே - அவன்மனப்
    பாக்கியசாலிநீர் பாரீரே----- தந்தனதன.

# அகோ! வாரும்பிள்ளாய் நொண்டி!

இல்லறத்துக்குரிய உத்தம ஆடவரின் இலக்கணத்தையும் அவர் கடமைகளையும் கற்றறிந்த வல்லவர் மாத்திரமல்லக் கல்லாதாரும் எளிதில் உணர வசன நடையிற் கூறும் பிள்ளாய்!

ஆ! ஆ! சுவாமி! அவ்வாறு சொல்லுகின்றேன், கேளும். ஐயா!

தெய்வ சிருட்டிப்புகள் யாவற்றிலும் மானுட சிருட்டியே முக்கியம் பெற்றது. அறிவிற்சிறந்த அம்மானுட சென்மத்துள் ஆடவன் முந்திச் சிருட்டிக்கப்பட, ஆடவர் அவனுக்கு வாழ்க்கைத் துணைவியாய்ப் பிந்திச் சிருட்டிக்கப்பட்டமையால் ஆடவனே அவ்விருவருள்ளும் சிரேட்டம் பெற்றவன். மனுஷன் அடைய வேண்டிய புருஷார்த்தங்கள், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்குமாம். இந்த நான்கையும் பெறுவான் அவன் அனுஷ்டிக்கும்படியான எவ்வகை ஆச்சிரமங்களினும் இல்லாச் சிரமமே விசேஷமுற்றது. விசேஷமுற்ற இவ் இல்லாச்சிரமம் சிறப்படைதற்கு உத்தம இல்லாளே முக்கியமான கருவியும் இலக்கு மாவாள். வீட்டுக்கழகு தீபம் என்றாற்போல இல்லாச் சிரமத்திற்கு உத்தம இல்லாளே முதற் கருவியும் துணைக் கருவியும் ஆதல் வேண்டும். அப்படி யில்லாக்கால் அவ் இல்லாச் சிரமமும் அது அனுஷ்டிக்கப்படும் இல்லமும் சிறப்படையா. ஆதலின் ஆடவன் ஓர் உத்தம சுகுண இலக்குமியைப் பெற்றுக் கொள்வதற்குச் சாவதானமும் பொறுமையும் பிரயாசையுமாய் அவளைத் தேடி யெடுத்தல் வேண்டும்.

**"இல்லதெனில்லவள் மாண்பானா லுள்ளதென்
இல்லவள் மாணாக்கடை"**

என்று சான்றோர் கூறியது இல்லாளின் அருமையைத் தெரிவித்தற் கல்லவா? இரத்தின வியாபரி விலையுயர்ந்த வைரம், மாணிக்கம், வைடூரியம், கோமேதகம் ஆகிய நவரத்தினங்களைத் தேடித்திரிந்து பெறுதல்போல ஆடவன் தன்னில்லத்திற் கேற்ற இல்லாளை அருமையாய்த் தேடிப்பெறுதல் வேண்டும். "உத்தம ஸ்திரியைக் கண்டுபிடிப்பவன் யாவன்?" என்றார் ஆன்றோர். இலங்குவதெல்லாம் தங்கமும் பளீரிடுவதெல்லாம் பசும்பொன்னுமாகா ஆனாற்போலக், கண்டவரெல்லாம் பெண் களும் கொண்டவரெல்லாம் இல்வாழ்க்கைக்குப் பக்குவமான பெண்டிருமாகார். முருக்கம் புட்பம் அலங்காரமுற்றுச் சிவந்திருப்பினும் சுகந்த வாசனைவீசி யாவரும் சூடப்பெறும் உசிதமலராகாது. ரூபத்திற் சிறந்த பெண் எப்போதும் உள்ளத்திற் சிறந்தவளல்லள். "அழகு வீண், சவுந்தரியம் வஞ்சனை" என்றார் மகாஞானியார் மேம்பாடுள்ள பெண்ணைத் தன்னில்லத்தில் வைக்க அபேட்சிக்கும் ஆடவன் முந்தித்தானே கனமும் மேம்பாடு முள்ளவனாய் இருத்தல் வேண்டும். சோடுகொண்ட எந்தப் பொருள்களும் சிறந்தவையே. அவனுக்கவளே சோடு; அவளுக்கவனே சோடு எனச் சிறந்திருந்தாலன்றோ இல்லம் சிறக்கும்.

ஆதலினால் இல்லாச்சிரமம் அனுட்டிக்கும் ஆடவன் தெய்வ பயமும், தெய்வ சிந்தனையும், தெய்வ வழிபாடும் நித்தமும் குடிகொண்ட நெஞ்சனும், "துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும் பாவிகளுடைய வழியில் நில்லாமலும் பரியாசக்காரர் உட்காருமிடத்தில் உட்காராமலும்" இருக்குந் தூயனும், தன்னைப் பெற்றுவளர்த்த பிதா மாதாவைக் கனம்பண்ணி அவர்க்குச் செய்ய வேண்டிய கடமைகளைத் தவறாது காலாகாலங்களிற் புரியும் அன்பனும், சகோதர சகோதரிகள்மேல் நேசமுடையனாய்ச் சார்ந்தொழுகிக் குரவர் பெரியோர்க்கு ஆசார உபசாரஞ்செய்யும் கனவானும், எவ்வகைப் பெருமையுற்றும் கல்லாதவன் மண

மில்லாப்பொற்பூ ஒப்பான், ஆதலின் அறிவு பரிமளித்தற் பொருட்டுக் கல்வி சாத்திரங்களைக் கசடறக்கற்ற கல்விமானும், "கற்றபின்நிற்க அதற்குத்தக" எனப் பெற்ற அறிவின்படி நிற்குந் தீரனும், உத்தியோகம் புருடலக்கணமாதலின் முயற்சித்து நல்லவரும்படிகொண்ட ஒரு வேலையிலமருந் திறவானும், உத்தியோகம் பிரதி கூலப்படுங்கால் உழவு, வாணிகம் ஆதிய ஆதாயத்தொழில்களில் அமையும் இரம்மியனும், உழைப்பிலும் ஒறுப்பு உத்தமமாதல் தன் உழைப்பை அழியாது "பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால்" எனப் பிறர்க்குந் தனக்கும் பயன்படப் பாகஞ் செய்து, ஒரு கூற்றைத் தேவ தானங்கள், கிருத்தியங்களுக்கும் ஒரு கூற்றைத் தன் பிற்கால இலம்பை தாபரங்கட்கும், ஒரு கூற்றை, "விருந்தோம்பி வேளாண்மை செய்தற்"கும், மீந்தவற்றை ஒழிந்த சற்கருமங்கள், சுற்றமித்திரர் உபயோகங்கட்கும் செலவு செய்யும் போசனும், செய்ந்நன்றியை மதித்துத்;

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார்"

எனப் பிறர் செய்த நன்றியைக் கொல்லாச் சுகுணனும், அடக்கத்தைப் பொருளாகக் கொண்டு நடுவுநிலைமையில் விலகாது "ஒழுக்கத்தின் ஓல்கார் உரவோர்" என எவ்வகை ஒழுக்கங்களையும் பரிபாலிக்கும் பக்குவவானும், "புறங்கூறிப் பொய்த் துயிர் வாழ்தல்" சிறியோரிலட்சணம் ஆதலிற் புறங்கூறுதலை வெறுத்துப், பொய் யாமை, வெஃகாமை, கள்ளாமையாதிய நல்வழிகளிற் பயின்று, தற்காத்து நடக்கும் ஞானியும், "அகழ்வாரைத் தாங்குநிலம் போலத்" தன்னை இகழ்வார்ப் பொறுத்தலிற் றலைமை யுற்று "ஈன்றாள் முகத்தேயும் இன்னாது" ஆதலிற் பஞ்சமாபாதகங்களுள் ஒன்றாகிய கள்ளுணவு செய்யாமலும், "அகடாரார் அல்லல் உழப்பார் சூதென்னு முகடியான் மூடப்பட்டார்" ஆதலிற் பொருளுக்கு நாசகாரணமாகிய சூதாடாமலும், யாவராலும் மெய்ச்சிச் சிரமிசை சூடப்படும் நறுமலர் போன்று, எவரும் அங்கீகாரம் பண்ணுமாறு பிரமசரியம் அனுட்டித்து வந்த சற்புருடனுமாயிருத்தல் வேண்டும்.

பிரமசரியத்தை நிறுத்தி இல்வாழ்க்கையில் ஏற்பட விரும்புங்கால், "துழாவிக் காய்ச்சாதது கஞ்சியுமல்ல; வினாவிக் கட்டாதது கல்யாணமுமல்ல" என்பராதலிற் தாய் தந்தையர் சுற்ற மித்திரரோடு அளவளாவிக் கலந்து உசாவுந் திடசித்தனும், தன்மனசிற்கிசையா மணம்பேசி நற்குலம் வேண்டுமென்று வமிசத்த வரும் தந்தைதாயாரும் நெருங்குங்கால்,"சாதியிரண்டொழிய வேறில்லைச் சாற்றுங் கால்" என்றும், சாதியிலும் மரசாதியே மான்மியம் என்றும் பெரியோர் சொல்வதை ஸ்தாபித்துக் "கல்வியும் செல்வமும் சாதியும் வடிவும்" உள்ள கன்னிகை அகப்படல் அருமையென்பதை நம்பிச், சீதனத்தாலும் வெளித் தோற்றத்தாலும் பகட்டப்பட்டு எடுபடாது. ஞானத்தையும் விவேகத்தையும் ஞானமாக்கும் சூரனும், நல்லமாம் பழத்திலும் புழுவிருத்தல் உண்மையாதலில் நெல்லைக் கொடுத்துச் சப்பி வாங்கும் மதியிலிபோலப் புத்தியையும் கல்வியையும் விட்டு அழகைமாத்திரம் வாங்கா விற்பனனுமாய் இருத்தல் வேண்டும்.

பெண்ணை வரித்தபின்பு முறைமை தவறாது பாணிக்கிரகணம் புரிந்து "பாலொடு நீர் கலந்தற்றே" என மருவி, உடலிரண்டாயினும் உயிரொன்றெனத் தன் மனையாளுடன் வாழும் புனிதனும், தான்மேயும் புல்லுடன் சுளிக்கும் சசமென அற்பகாரியத்திற் "கால் பட்டாற் குற்றம் கைபட்டாற் குற்றம்" எனச் சினந்து பிணங்காத் திண்ணியனும், கொண்டாளை நேசித்துத் தான் பசியிருந்தும் அவள் பசியாற்றும் பரிவினனும், உதரக்கனிகளைப் பற்றொடு செப்பமாய் வளர்த்து ஏற்றகாலத் திற் பள்ளியில் வைத்து, அவரவர்க்கேற்ற பாதைகளில் விட்டுக் குடும்பந் தள்ளாடாது சம்ரட்சணை செய்யுஞ் சமர்த்தனும், வேலியடைத்துப் பயிரைப் பாதுகாப்பவர் போலத் தன் குடும்பத்தை அகோராத்திரம் காத்து, தரித்திரமெனும் வெயிலால் வருந்தாமல் ஆதரவென்னும் ஆதபத்திரம் ஏந்தி, மரணம் பிரிக்குமளவும் சமுசார சகிதனாயிருக்கும் சாகசனுமாய் இருத்தல் வேண்டும்.

வரவு குறையுங்கால் மாதர்மனம் வெருளுமாதலானும், "இல்லானை இல்லாளும் தேடாள்" ஆதலானும், இல்வாழ்வான் திரைகடலோடியேனும் நியாய மானபடி பொருளீட்டித், தன் கிரகத்துள் வறுமைப்புலி நுழையவிடாமல் எந்நாளும் ஆவலாய்ப் பார்த்திருக்கும் காவலாளனுமாயிருத்தல் வேண்டும். மேலும் இல்லறத்திற் கேற்ற ஆடவன் இன்னா செய்யாதவனாய்ச், சினமென்னும் மதயானையை அறிவென்னுந் தறியிற் கட்டி அடக்கவல்லவனும், வரைவின் மகளிரைக் கனவினும் நினையாதவனும், கற்பென்னும் மதிலேறிக் குதியாதவனும், பெண்ணேவல் செய் தொழுகாப் பெருமையுடையவனும், "காதன்மனையாளும் இல்லாள" எதிலான் மனை செல்லாதவனும், அகனமர்ந்து ஈய வாயாதபோது முகனமர்ந்து இன் சொல்லாயினுஞ் சொல்பவனும், நெருப்பிலும் அகோரமுற்ற தென்னுங் காமத்தை அடக்கி விசயம் பெற்றவனும், "பகை பாவம் அச்சம் பழியெனும் நான்கும்" தனக்குப் பாத்தியப்படாத பவித்திர நெஞ்சனுமாயிருத்தல் வேண்டும். விசேஷமாய்ப் பொறையெனும் ஆபர ணத்தைப் பூண்டு, பெரியகாரியத்திலும் உக்கிராவேசங்கொள்ளாதவனும், "எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்" என்னும் முதுமொழிப்படி தான் கொண்ட இல்லாளின் பெலவீனங்களைச் சகித்துச் சற்றுப் பிழைகளைச் சமித்து ஒத்திணங்கி வாழும் புரு ஷோத்தமனும், கற்பிளவோடொத்த நெஞ்சத்தனாகாது பொற்பிளவோடொத்த நெஞ்சனுமாயிருத்தல் வேண்டும்.

இவ்வாறாகப் புகழோடு இல்லாச்சிரமம் அனுட்டிப்பவனே இல்லறத்திற்கு இந்திரனென விளங்குவான்.

## 2

## இல்லறத்திற்காகாத அதம ஆடவர் இலக்கணம்.

தந்தன தனதனனா - தனந்தன
தானானே தன தானானே

தேவனைத் துதித்துஇறைஞ்சான் - தெய்வத்தொண்டிற்
சிரத்தைவையான் பவ விருத்தி செய்வான்
நாவலர் தமையணுகான் - சண்டாளரை
நாடிச்செல்வான் கோள்கள் தேடிச்சொல்வான்
வித்தை உத்தியை விரும்பான் - விதாலயம்
வேண்டிச்சாயான் தீமை தாண்டிப்பாயான்
முத்தியின் வழி சாரான் - தேவாலயம்
முன்னிச்செலான் நன்மை எண்ணிச்சொலான்.

# அதம ஆடவர் 19

வைதிக விடயமென்றால் - உபேட்சித்து
 மனதினைப் பேதித்து வருந்திடுவான்
மைதவிர் தைவீகம் - இராசீகம்
 மனுஷீகந் தமையெண்ணி மதியாதான்
உலகமே தெய்வமென்பான் - பணந்தனக்கு
 உச்சித தேவனென்று இச்சைவைப்பான்
கலகம்என் நேசமென்பான் - கலைகல்லாக்
 கசடரே எனக்கு அரும் சேடர் என்பான்
சிற்றின்பம் இன்பம் என்பான் - அதுவும் மற்றென்
 செல்வமென்பான் நேய வெல்லம் என்பான்
மற்றின்பம் ஏதுக்கு என்பான் - அதைக்கண்ட
 வல்லவர் யார்கற்றே சொல்லும் என்பான்
பெற்றவர் தமைப்பேணான் - அவர்க்கொரு
 பிடியரிசி ஆயினும் மடியிலிடான்
கற்றவர்தமை வினவான் - கற்றோர்சபை
 காஞ்சிரங்காய்என்று வஞ்சைகொள்ளான்
அரைக்கணம் என்றாலும் - நல்லோர்சபை
 அகந்தங்கல் எனக்கு அரு நரகமென்பான்
குரைக்கும் நாய்போல் வீட்டை - வீட்டுநாளும்
 கூடாத கூட்டங்கள் கூடிக்கொள்வான்
குடிப்பது கூழ்எனினும் - வாயில்வீட்டுக்
 கொப்பளிப்பது பனி நீர்எனல்போல்
மிடிக்குழி தாழ்ந்து உழந்தும் - எனக்கொரு
 மின்அனையாள் இன்னே வேண்டுமென்பான்
அழகினுக்கு ஈடழிவான் - அவாவெனும்
 ஆழி மத்தியில்விழுந்து அழுங்கிடுவான்

## 20 இல்லற நொண்டி

குழகது நிலைக்கும்என்பான் - கருமுகில்
குழலுக்குத் தோற்கும்என்று அழலின் முன்னோர்
மெழுகென உருகிடுவான் - இடையது
மின்னலோ துடியோ எனவியப்பான்
கிளிமொழி இவள்மொழிக்கு - நிகரெனக்
கிளத்திடல் பேதமை எனத்தொகுப்பான்
மதியது வதனம் என்பான் - புருவத்தின்
மாட்சிக்கு மதனன்வில் வாய்க்கும் என்பான்
துதிபெறு நகை நிரைக்கு முத்தங்களும்
தோற்கும் என்பான் அன்றி ஏற்கும் என்பான்
கண்ணடி கன்னம்என்பான் - பதங்கள்செங்
கமலத்தை வென்றிடும் காண்டிரு என்பான்.
பண்ணுறு செங்காந்தள் - கரங்கட்குப்
பறக்கும் என்பான் பயந்து இறக்கும் என்பான்
அரம்பைதான் இவள் என்பான் - இவள் தாடைக்கு
அரம்பையும் தோற்கும் என்று இரங்கிடுவான்.
கரும்புகொல்லையில்வளர - எட்டித்தேடிக்
காட்டகம் ஓடிடு மௌட்டிகன்போல்
விரும்புபெண் அருகிருக்க - எனக்கந்த
மெல்லியல் மாணிக்கம் வேண்டும்என்பான்.
கரும்புகள் மலர்நாடிப் - பறத்தல்போற்
சுந்தர மாதரைத் துருவிடுவான்
உறிமிசை தயிரிருக்க - வெண்ணெய்தேடி
ஊருக்கு ஊரோடிடும் உணர்விலிபோல்
அறிவுஅழகினள் இருக்க - அறிவிலா
அழகிக்காய் அறுகாதம் அலைந்திடுவான்

அறிவது குடிகொள்ளா - அழகது
ஆருயிர் குடிகொள்ளா வாகமெனல்
இறைஅளவதும் அறியான் - கற்றாளுக்கும்
இருங்கலை கல்லாத விழையாட்கும்
இடையுள தாரதம்மியம் - இதுவென
எடுத்தறியான்றுலை நிறுத்தறியான்
வடிவது பொருட்டாக - வரிப்புலி
வாங்கி வளர்த்திடும் மட்டியைப்போற்
சிங்காரி அலங்காரி - எனப்பிறர்
செப்பிய மாற்றத்தாற் சேணிலொரு
மங்கையை மனதில்வைப்பான் - அவளெழில்
வலைதனில் மருண்டுடன் புரண்டிடுவான்
நூலைப்போல் சீலையென்றும் - பெற்றபிள்ளை
நுவன்றிடும் தாய்தனைப் போல்வதென்றும்
மேலவர் பழமொழியின் - பொருள்தனை
விளங்கிக்கொள்ளான் வழி விலங்கிக்கொள்வான்
நெருங்கிய உதிரமதின் - கலப்பது
நேர்ந்த சந்தானத்தின் விருத்திதனக்கு
அருந்தடை எனப்பிடகர் - அறைந்திடும்
அந்தரங் கம்தனை ஆய்ந்தறியான்
அளவுக்கு மேலதடா - காணிபூமி
ஆங்கொரு மடந்தைக்கென்று ஆரேனும்
உளவுசொல்லிடுவாரேல் - அவர்மொழி
உறுதியென்று ஒருவரொடு ஓராதே
அப்பனை வெறுத்திடுவான் - தனைப்பெற்ற
அன்னையுடன் சோதரந் தமைவெறுப்பான்
செப்புதன் கிளைவெறுப்பான் - எனக்கந்தச்
சிங்கார நாய்ச்சியார் சேர்ந்துவிட்டாற்

## 22 இல்லற நொண்டி

போதுமப்பாபோதும் - என்றுமனம்
பொருந்தி மணம்புரிந்து இருந்திடுவான்
ஆதரவுறுமாமி - மனையிது
ஆமகாபாக்கியமென அதிர்வான்
வாரங்கள் சிலசெல்ல - வயிறது
வாடியே கரிந்துதன் மனம் எரிவான்
ஈரமதுகுறைவான் - பொன்னிஅக்கை
ஈயமெடி மோசம் போனெனடி
நாசமாயி னெனேடி - எனச்சொல்லி
நாட்டவர் சிரித்திடப் பாட்டமதாய்
நேசர் நையாண்டிபண்ணத் - தெருவிடை
நின்றலைவான் ஐயோ என்றுலைவான்
கண்டவர்க்கு உளறிடுவான் - ஐயோஎன்னைக்
காட்டவர்போல் மாட்டிப் போட்டார் என்பான்
பெண்டுகள் நகைப்பர் என்பான் - எனைத்தந்த
பெற்றவர் உடன்பிறர் சிரிப்பர் என்பான்
தாபத்தோடு இருந்திடுவான் - சிலபகல்
சாய்ந்தபின் அதைமறந்து தோய்ந்துமனச்
சோபத்தோடு எழுந்திடுவான் - இன்னேபினோர்
சுந்தரி தனைக்கொளத் துணிந்திடுவான்
கங்கையிற் போய்ப்படிந்தும் - பேயின்சுரைக்
காய் அது கறிச்சுரைக் காய் ஆகா
தங்கது நிகராகப் - பன்னூற்றுறை
அறிந்தாலும் அதர்மனாம் அஞ்ஞையனாய்
எல்லார்க்கும் துரும்பானால் - இவனுக்கோ
எருமைபோல் பெருஞ்சனி எனஉவமை
சொல்லுதற்கு இலக்காவான் - ஆழியிட்ட
துரும்பெனவே மனம் சுழன்றிடுவான்

அங்கேயோர் மங்கையென்றால் - அவளார்
　　அவள்குணம் எதெென ஆராயான்
இங்கேயோர் தங்கமென்றால் - இவளார்
　　இவள்குணம் எதுவகை எனவோரான்
பால்பார்த்துப் பசுக்கொளல்போல் - மகள்தனைப்
　　பயந்தவள் தனைமுன்னம் பார்த்துக்கொள்ளென்று
ஏலவே உலகர்சொன்னார் - இதைத்தேரான்
　　எடுத்தடி மடக்காய்ப் பெண்டு எடுத்திடுவான்
வந்தது வரட்டுமென்றே - அவள்தனை
　　மனையாட்டி ஆகவே மாட்டிக்கொள்வான்
சிந்தையில் அறிவதிலான் - அவளொடு
　　சீருறும் ஊசியும் சரடுமெனச்
சேர்ந்துடன் வாழ்ந்திடுவான் - இவள்தனைத்
　　தெய்வமல்லோ எற்குச் சேர்த்தது என்பான்
போந்தமுற் சனனமதில் - யான்செய்த
　　புண்ணியம் தானிங்கே பொருந்திற்று என்பான்
பாக்கியம் இதுவென்பான் - சின்னாளையாற்
　　பவமது பிடரியைப் பற்றியந்த
வாக்குவாதங்கள் செய்வான் - வீட்டாருடன்
　　வழக்குரைப்பான் பெருஞ் சழக்குரைப்பான்
மல்லது தொடங்கிடுவான் - அற்பபிழை
　　மனசிற்கண்டாற் பெரு மழகரிபோல்
வல்லடி வழக்கினைநீ - வாடிமாமி
　　சொல்லடி எனஅடி மடிபிடிப்பான்
சன்னதம் ஆடிடுவான் - நீதித்தலம்
　　சார்ந்து கல்யாணத்தைத் தீர்த்திடு என்பான்
பன்னியை வாடியென்பான் - அவள்தலை
　　பற்றியே மயிரது பறித்து இழுப்பான்

சீதனம் வாங்கென்பான் - பெற்றாரிற்குச்
சிறுவரொடு இதுகணம் செல்தியென்பான்
சாதனம் எழுது என்பான் - அதன்பின்பு
சடுதியில் வந்துன்னைச் சார்வலென்பான்
தனிமனை இருத்திடுவான் - தலைவியைத்
தான் அயலூருக்குத் தணந்திடுவான்
குனிசிலை வேடனென - அவளுக்குக்
கோட்டாலை பலவுடன் கொடுமைசெய்வான்
ஊருக்குஊர் பெண்டுகொள்வான் - கூறைதாலி
உடுக்கச்செய்வான் கள மடுக்கச்செய்வான்
சார்வுறு மதன்எனவே - சிலகாலம்
சம்பிரமமாகவே தழைத்திருப்பான்
பிள்ளைகள் தமைப்பெறுவான் - முத்தந்தந்து
பிரியமாய்க் கரத்தேந்திப் பேணிடுவான்
கள்ளமாய் ஒழுகிடுவான் - சடுதியிற்
காதலியுடன் மக்கள் - கரைந்தழவே
கைவிட்டுப் பறந்திடுவான் - தன்னூர்வந்து
கண்டதார் கேட்டதார் எனக்கரவாய்
பொய்வித்தை ஆடிடுவான் - உருத்திராட்சப்
பூனையின் வேடத்தைப் போட்டுக்கொள்வான்
ஒப்புரவு ஒழுகிடுவான் - பார்த்தார் இவன்
உத்தமன் எனவெடுத்து ஓதிடவே
செப்புமுன் மனைவிதனைச் - சேர்ந்துவாழ்ந்து
தேனும் பாலும் எனத் திளைத்திடுவன்
தப்பிதம் அறநடப்பான் - சுயகுணம்
தனைவந்து பிடித்துலைத்து ஆட்டிடவே
உப்பினில் வழக்கிடுவான் - தாம்பூலத்தில்
ஓதிடும் பிரமபத் திரமதனில்

தொடுவழக்கு எடுத்திடுவான் -நாளுக்குநாள்
தொலையாத கலிபிலி தொடங்கிடுவான்
வடுவம்பு வசையிசைப்பான் - வீட்டிலுள்ள
வளங்களைக் கைகளில் வாரிக்கொள்வான்
வழிதெருப் போவார்க்கு - வீட்டாள்குற்றம்
மறித்துப் பிரசங்கம் படித்திடுவான்
பொழிபொழி எனப்பொழிவான் - இலாதன
பொருந்த மெய்யதுபோலப் பொருத்திடுவான்
அம்பலம் தன்னில்வைத்தே - பொதிதனை
அவிழ்ப்பவர் போல்வீட்டின் அந்தரங்கம்
செம்பாகமாய் எவரும் - நன்றாகவே
தேறவைப்பான் இன்று தெரியவைப்பான்
ஒன்றிரண்டு ஆக்கிடுவான் - தன்தோஷத்தை
ஒளித்துப் பன்னியின்தோஷம் உரத்திடுவான்
நின்றவர் நகைக்க வைப்பான் - அபவாதம்
நீணிலம் தனில் என்றும் நிலைக்கவைப்பான்
ஒரொரு கணந்தோறும் - பச்சோந்தில்போல்
உள்ளத்தின் நிறம்மாறி உலம்பிடுவான்
ஆரெவர்க்கு ஆயினுந்தன் - குடும்பத்தின்
அந்தரங்கம்தனைச் சிந்திடுவான்
வாழ்ந்த அம்மங்கைதனை - அழவைத்து
மறுமனை நாடியே மாறிடுவான்
தாழ்ந்து அயற்கடையில் நிற்பான் - இவன்பெரும்
சண்டியென்று உலகினர் கொண்டிடவே
உழைத்திடு பணமதனை - அரையிடை
ஒளித்துச் சொருகிவைத்து ஒருகுடுவை
அழைத்ததில் ஆக்கி உண்பான் - மனைவியை
அங்கேயே இருவென்று பொங்கவரைப்
படிஅரிசியை அளப்பான் - கொதியெண்ணிப்
பார்த்ததிற் பங்குக்கு வளம்பார்ப்பான்

குடிஅழகினைக் கெடுப்பான் - தினமொரு
குடும்பத்தை விடுதியாய்க் கொண்டிடுவான்
தையலார் சொற்கேளேல் - எனமுன்னோர்
சாற்றிய மொழிதனைப் போற்றாதே
மையலால் அவர்மொழிகேட்டு - அநியாய
வழக்கிலும் சழக்கிலும் இழுக்குக்கொள்வான்
தூற்றிடும் துணைவிஎன்றால் - அவள்தனைக்
கூற்றென மனசிடைக் குறிக்காதே
போற்றிய ரகசியத்தை - அவள்செவிப்
பொறித்துப் பெரும்பழி வருத்திக்கொள்வான்
குன்றைமுட்டி வருந்தும் - குரீஇனக்
கோடிசீமான்கள்என் றாலும்விடேன்
என்றுபல் வழக்கெடுப்பான் - முன்னோர்தனம்
எல்லாம் அழிய நீதித்தலம் இறைப்பான்
அடங்காத பெண்டென்றால் - அவள் நாவில்
அன்பெனும் கடிவாளம் பூட்டிஇன்பால்
மடங்கிடச் செய அறியான் - பழிதவிர்
மார்க்கம் தொடான் தீய மார்க்கம்விடான்
குடிவெறி நழுவவிடான் - குடியுடன்
கோள்பெரும் அடிபிடி குறையவிடான்
தடியடி மிண்டனென - எடுத்திடும்
தடிஎவர் தலையினும் இடியெனவே
போட்டிடும் இயல்புடையான் - குரவர்சொல்
போதகம் தனையிகழ் புகழுடையான்
ஈட்டிடு பொருள் அழிப்பான் - இரவலர்க்கு
இம்மியது ஆயினும் செம்மையிடான்
அன்னிய மாதர்தம்மைச் - சகோதரம்
ஆகக்கொள்ளான் தாரம் ஆகக்கொள்வான்

துன்னிய கள்ளுஞ்சுள்ளும் - இராப்பகல்
துணையாக உடன்வைத்துத் தொலைத்திடுவான்
பரத்தைக்குப் பொருள் ஈவான் - அவளிடம்
பண்டமாற்றாகவே பாயொடுநோய்
இரப்பினை வாங்கிடுவான் - யாசகம்
எடுக்கவோர் ஓட்டினை இடுக்கிக்கொள்வான்
சூதுகள் ஆடிடுவான் - ஓயாமலே
தோதகஞ் செய்திடு தோழருடன்
பாதகம் இழைத்திடுவான் - பொல்லாங்கெனிற்
பால்தயிர் நெய்யிடு பாளிதம்போல்
விருப்பொடு நடத்திடுவான் - மேலேவரும்
விளைவை எண்ணான் வரும் அழிவை உன்னான்
பருப்புநெய் சமிக்கமுன்னே - ஒருகையான்
பார்ப்பென் என்பான் பழி தீர்ப்பென் என்பான்
வீட்டாளுக்கு அஞ்சிடலும் - மதங்கொண்டு
விருட்சத்தை வேரோடே வீழ்த்திவிடும்
காட்டானை கட்டிடலும் - ஆற்றாதவன்
கடைத்தொழில் என்பதன் கருத்து உணரான்
இல்லாளுக்கு அஞ்சிவாழ் - எருதெனும்
இத்தரைப் பழிமொழிப் பொருள் உணரான்
மெல்லியட்கு அஞ்சிடுவான் - நீதானென்ன
வேண்டினும் உடன்செய்து மீள்வன் என்பான்
அல்லல்கள் தேடிடுவான் - பொறுமையற்று
ஆரையும் பெரும்பகை ஆக்கிக்கொள்வான்
தொல்லைகட்கு எல்லையிலான் - முடிவற்ற
சோலியெல்லாம் தலை தூக்கிக்கொள்வான்
சொன்னநன் மதிகேளான் - தாளாண்மையாய்ச்
சோற்றுக்கும் சீலைக்கும் வளம்பாரான்

## 28 இல்லற நொண்டி

பன்னமாயினும் இளைத்தே - அன்றன்றுஒரு
பணம் அது வரும்வழி பாராதான்
பிச்சைக்குக் கச்சவடம் - மூத்ததென்னும்
பிழையுற்ற பேச்சினைப் பெலக்கச்செய்வான்
அச்சைக்குப் போனாலும் - அகப்பைக்கு
அரைக் காசல்லால் விலை அதிராதென்பான்
வர்த்தகம் வீணென்பான் - உழுதுண்டு
வாழ்ந்திடும் வாழ்க்கைதான் விழலென்பான்
கர்த்தன் தலையெழுத்தை - உலகிடைக்
கடந்தவர் ஆரென்று கவிபாடிச்
சோம்புக்குப் பாயங்கொள்வான் - மடம்திண்ணை
சொகுசுடன் கால் நீட்டித் தூங்கிடுவான்
ஆம்புத்தி சொல்லிடுவார்ச் - சீறிவைது
ஆகடியம் சொல்லி அகற்றிடுவான்
தன்னரும் மனையாளைத் - தாய்வீட்டிலே
தவிர்த்தவன் தலைமீதுஓர் தட்டெனவே
இந்நிலம் உரைக்குமொழி - கொள்ளாமலே
ஈன்றவள் மனையில்விட்டு ஏகிடுவான்
இத்தகை ஆடவனால் - இல்லறமிக
ஈனம்பெறும் மிக இழிவுபெறும்
உத்தமன் இவனலனென்று - உலகம்
உரைத்திடும்இவன் இலக்கணம்இவையே
ஆடவன் இவன்வாழும் - இல்லமது
அருநரகதை யொக்கும் எனயாண்டும்
தேடியான் சொலவேண்டுமோ - பாரீரேநீர்
தேரீரோ இதை ஓரீரோ - தந்தனதனதனனா.

## அகோ! வாரும்பிள்ளாய் நொண்டி!

**உத்தம ஆடவல்லாதார் இலக்கணத்தைப் பாவல்லார் மாத்திரமல்ல, அல்லாதரும் காது தெவிட்டக்கேட்க வசன நடையிற் கூறும் பிள்ளாய்!**

**ஆ! மகாபாக்கியம் அப்படிச்செய்கிறேன். கேளும் ஐயா!**

தெய்வ சிந்தனையைத் தன் இருதயத்தில் உறுதியாய்க் குடிகொள்ள வையாத அவபத்தனும், பாவ புண்ணியங்களைத் தேர்ந்துணராத சுமடனும், இகபர சலாக்கியங்களுக்குக் காரணமாகிய வித்தையை விரும்பிக் கல்லா முழுமகனும், "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" எனச் சிறுமையிற் கற்றறிந்த பாடத்தை முற்றும் மறந்து தாய் தந்தையரை வருந்தவிட்டுத் "தன்னைப்பெற்ற ஆத்தாள் கிண்ணிப்பிச்சை எடுக்கத் தம்பி கும்பகோணத்திற் கோதானம் வழங்குகிறான்" என்னும் முதுமொழிபோலத் தான் கோலாகாலம் பண்ணிவாழும் மாதுர் பிதுர்த் துரோகியும், "பூதவுடம்பழியும் புகழுடம்பழியாது" என்பதுதெரிந்து சற்பாத்திரங்களில் இட்டுப் புண்ணிய கிருத்தியம்கையிடாத புல்லனும், நிரட்சரகுச்சனாய் அறிவென்னும் நறுமணம் சற்றேனும் வீசாத் துட்டரோடு "காக்கை உவக்கும் பிணம்" போலச் சகவாசம் பண்ணும் முட்டனும், வேலையில்லாத போதும் அவசரமாய் ஓட்டமெடுத்து வீட்டைவிட்டுத் தெருவீதி தோறும் திரியும் சுணங்கனென யாதொரு முயற்சியிலும் ஏற்படாது சும்மா ஓட்டமும் நடையுமாய்க் காலம்போக்கும் வீணனும், தன்பலத்தைப் பரத்தையர்க்குக் கொடுத்து நோயும் பாயும் வறுமையும் வாங்கும் தூர்த்தனும், கற்றைப் பொருள்பண்ணாது மானத்தை விற்று வயிறு வளர்க்கும், வேசியர் மனைக் கேகும்

வியபிசாரியும், ஒளியின் அழகால் மருண்டு விளக்கை மலரென மயங்கி வீழ்ந்திறக்கும் விட்டில்போல் பிஞ்சிலே பழுத்து; வஞ்சநெஞ்சியரின் மேனியழகை மெய்யழகென எண்ணிப், பத்துஞ் சுமந்து வருந்திப்பெற்றுக் கரிசனையாய்ப் பாலூட்டிவளர்த்த தாய்தந்தையரோடு யோசியாது "பண்டமும் வேண்டாம், பாடியும் வேண்டாம், அந்தச் சிங்காரநாச்சியார் வந்தாலே போதும்" என்று கண்ட பெண்பின்னே ஓடி, நஷ்டமும் கஷ்டமுமடையும் காமியும், அறிவு குடிகொள்ளா அழகு, உயிர் குடிகொள்ளா உடல் என்பதறியாது மோசம்போகும் ஆதனும், "ஆட்டுவாணிபன் ஆலிங்கனத்தினும் புழுக்கூட்டு வாணிபன் கைக்குட்டு நன்று" என்று மேதவியர் கூறியது விளங்காது, கற்றமங்கையர்க்கும் கல்லாத மங்கையர்க்குமுள்ள பேத தாரதம்மியங்களை அறியாது மோசம்போகும் ஏழையும், சமுசாரத்தைத் தாங்கிச் சம்ரட்சணைசெய்யும் திறமையும் இயல்புமில்லாதபோதும் அவ்வாறு செய்வேன் என்று துணிந்து தொல்லைப்படும் மட்டியும், சின்னட்டங்குருவியின் தலைமேற் பெரும் பனங்காயை வைத்தாலெனப் பாரிய சமுசாரபாரத்தைத் தன்தலைமேல் தூக்கிவைத்து நசிகிற முகடனும், வளையிலே முட்டிக் கபாலம்பிளந்தபின் குனியநினைக்கும் அறிவிலியெனச் சமுசாரபாசத்துட் புகுந்து அல்லலடையும்போது மறுபடி சிக்கெடுக்க நினைக்கும் பேயனும், படிவின் நிமித்தம் வரிப்புலியை வாங்கி வளர்த்தவன் ஒப்பச் சிங்காரி யென்றும் அலங்காரியென்னும் பிறர் சொலக்கேட்டுப் பிடாரியைப் பிடித்துப் பெண்டாளப் பார்க்கும் அவிவேகனும், அந்தசந்தமே காரணமாய்க் குத்துமாடு கொண்ட சுமடன்போலச் சீதனமே காரணமாய்க் கண்டு சுகுணம் அல்லாளை இல்லாளாய்க் கொண்டு அல்லலிழுக்கும் அகக் குருடனும், "பொன்னை யுந்து கிலையும் பிரித்திடின்" மீந்திருப்பன யாவையென்று உத்தேசியாது "வெறும் புழு மலக்கூட்டிற்" பிராந்திகொண்டு, தேனே! பாலே! கண்டே! என்று பிதற்றும் பித்தனும் "நூலைப் போற் சீலை தாயைப் போற்பிள்ளை" என்பதன் பொருள் உணராது உட்டுறை தெரியாது விசாரணையின்றிப் பெண்கொள்ளும் கடையனும், நெருங்கிய

இரத்தக்கலப்பு அதமமென்றும் சந்தான விருத்திக்குக் கேடென்றும் தேர்ந்த வைத்தியர் கூறியிருப்பதை ஓராமலும் உன்னாமலும் கண்டபடி பெண் கொள்ளும் அசேதனனும்,

"மாண்டகுணத்தொடு மக்கட்பேறுஇல்லெனினும்
பூண்டான் கழித்தற்கு அருமையால்"

என்ற உலகர் பாட, அற்பபேதங்கண்டவுடன் "மணியகாரன் வீட்டே வாடி கலியாணந் தீரடி மாமி" என்று பாடி நிருத்தம் பண்ணும் மௌட்டிகனும், வரும்படி குன்றியதால் மனைவி அன்பு குறையக்கண்டு அவளையும் பிள்ளைகளையும் நட்டாற்றில் விட்டோடும் அதர்மனும், யாதும் வேண்டாம், அந்தக்கட்டழகி வந்தாலே போதும் என்று கையேற்றுப் பிள்ளைகள் சென்மித்தவுடன் வாங்கிவா சீதனம் என்று மாமன் மாமி வீட்டுக்கு மனைவியையோட்டி மல்லுக்கட்டும் பிணக்கனும், முன்னர்ப் பொருள்தேடிச் சேமித்துவையாது பெண்ணைத் தேடியபின் பொருள்தேடித் தட்டழிந்து தலைவிரிகோலப்படும் அஞ்ஞையும், பசுமுதலிய மிருகசீவன்களைத் தறியிற் கட்டிப் புல்லாதிய தீபனங்கொடாது தறியை முறித்துக் கொடியை அறுத்தோடவைக்கும் இடையனை நிகர்த்து, ஏதுங்கொடாது மனையாளை இல்லத்திருத்தி அயலான்கை பார்க்க இடம் வைக்கும் மடையனும், இல்லத்திற்கேற்றன தேடிவையாது இல்லாள் கறகறக்கவும் முறுமுறுக்கவும் இடங்கோலும் விழலனும், தந்தை தாயர் சகோதரர் ஆதரவின்றிப் பெண்ணைத் தனியிருத்திப் பிறவிடஞ் சென்றிரா நின்ற பேதையும், அவிவேகியான பிரியைக்குத் தன் இரகசியத்தைச் சொல்லியிடர்ப்படும் ஏழையும் கட்டிய பெண்ணைக் குட்டிச் சுவராக்கி அவளிருந்து நெட்டுயிர்ப்பெறியக் கண்பார்வையால் வெட்டி மயக்கிய

அயலாள் இல்லிற்போய் அடுகிடைபடுகிடை கிடக்கும் வெள்ளறிவனும், அன்னிய மாதரைச் சகோதரமாய்க் கொள்ளாது பரதாரகமனஞ் செய்யும் படுபாவியும், “பசுவின்றன் பாலைப் பனையடியிற் குடித்தாலும் தீது சொல்வார்” என்பது உலக வதந்தியாயிருக்கத் தன் பெண்ணை ஆடவர் மத்தியிலும் அயலார் ஆதீனத்திலும் விட்டிருக்கும் சீர்கேடனும், பிள்ளைகளைப் பாடசாலையில் வையாது தெருத்திரிய வைக்கும் சண்டாளனும், மனையாளை நம்பாது படியளந்து கொடுத்துக் கொதியெண்ணிக் காத்திருக்கும் மானமில்லானும் உள்ள நெற்பொத்திவைத்து ஒடியலைப் பொடிசெய்து ஊறவைத்துக் கூழ் சமைத்தருந்தும் உலோபியும், வஞ்சியும் பிள்ளைகளும் கஞ்சிக்கிடமற்றுக் கெஞ்சித்திரியத் தான் தனிக்குடுவை வைத்து ஆக்கி உண்ணும் போக்கிரியும், வீட்டாளை நம்பாது மடியோடு பணங்கட்டித்திரியும் நிர்ப்பாக்கியனும், கூடைநிறைய இருப்பினும் கண்டது ஆரென்று தன்வயிற்றிற்கே வஞ்சகம் பண்ணி வன்சாவடையும் பஞ்சையும், கூழுக்கிடமின்றெனினும் கள்ளும் சுள்ளும்வேண்டுமென்று குடியிலே பொழுதுவிடும் குட்டுணியும், வாங்கியகடன் இறாத வல்லாளகண்டனும், தான்பெண்கொண்ட குலத்தையும் அவளது தாய் தந்தையரையும் இழித்துப்பேசும் ஈனனும், இல்லறத்தைக் கிரமமாய் நடாத்தும் இயல்பின்றிய அதம ஆடவரென்க. இத்தகையார் நடாத்தும் இல்லம் அபாக்கியத்தால் நிறைந்து மூதேவிக்கு இருப்பிடம்.

## 3
## நற்குணப் பெண்டீர் இலக்கணம்.

தந்தனதனதனனா - தனந்தன
தானானே தன தானானே.

பதுமினி சித்தினியாம் - இவளுடன்
பகர்ந்திடு சங்கினி அத்தினியாம்
சதுவித சாதியராம் - பெண்கள்அவர்
தங்களுள்பதுமினி தலைமையளாம்
செண்பக மலரதுபோல் - அவள் தேகம்
செந்நிறமாம் அவள் செப்புவதோ
பண்புறு நன்மொழியாம் - அவளுடல்
பரிமள வாசனை பரவுவதாம்
மெல்லிய கூந்தலியாம் - அவள்நாசி
விளங்கும் எட்பூப் போல் துலங்குவதாம்
சொல்லுறும் மாநோக்காம் - குருவொடு
தெய்வத்திற்குத் தெண்டன் செய்பவளாம்
அன்ன மென்நடையினளாம் - வெண்சேலையில்
அருண மாமலர்களில் ஆசையளாம்
மன்னு செவ்வரிக்கண்ணாம் - சொற்ப உண்டி
மாந்துவளாம் மாம் ஏந்துவளாம்
அடுத்தவள் சித்தினியாம் - அவள்கழுத்து
அழகிய வலம்புரி அதுசரியாம்
எடுத்திடு நடைபிடியாம் - சங்கீதமோடு
இயம்பிடு நடனமங்கு இவள்பிடிப்பாம்

## 34 இல்லற நொண்டி

கொடியெனத் துவளுவதாம் - இவள்மேனி
குறித்திடு விசித்திரக் கூறையிலே
முடிவறு வேட்கையளாம் - கெடுமையும்
மொழிதரு குறுமையும் உந்தாத
தோற்றம்இவட்கு உளதாம் - சகோரம்போற்
சொற்குரலால் நல்ல சுவைப்பொருள்மேல்
ஆற்றரும் காதலியாம் - இவள்தனக்கு
அடுத்தவள் சங்கினி யங்கனையாம்
பருமமும் மெலிவுமில்லா - ரூபிஇவள்
பாதத்தின் படமது நீண்டதுவாம்
அரியசெம்மலராடை - இவற்றிடை
ஆசையளாம் கரவோசையளாம்
அச்சமின் மனத்தினளாம் - குறளைபொய்க்கு
அஞ்சியிடாக் கோப வஞ்சகியாம்
நச்சியஅத்தினியைப் - புலவர்கள்
நான்காம் சாதியாய் நவின்றனராம்
குறுங்கழுத்தினள் இவளாம் - கற்றாளையின்
குறுமணமும் உடலிடை குறுகிடுமாம்
நிறுவுசெம் படைமயிராம் - பாதந்தனில்
நீண்டுவளர்ந்திடு பருவிரலாம்
தீவினை புரிவளாம் - அதிகமாய்த்
தின்பவளாம் நாணம் என்பதுதான்
ஓ! அணுவளவும் இன்றாம் - அதரங்கள்
உயர்ந்தவையாம் நடை உதறியதாம்
என்றுமங்கையர் தமையிவ் - உலகினர்
எடுத்தவர் இலக்கணம் இசைத்தனரால்
நன்றவர் தமையிரண்டு - பிரிவதாய்
நாடிவைத்து இலக்கணம் நவின்றிடுவேன்.

## நற்குணப் பெண்டீர் 35

சற்குண ஆடவனின் - இலக்கணம்
தனைமுதல் எடுத்துஇவண் சாற்றிடுவேன்
அற்பமும் முகம்பாரேன் - தொகுத்திங்ஙன்
அறைந்திடுவேன் நன்று பறைந்திடுவேன்
தேவனைத் தொழுநாவாள் - தேவாலயம்
தேடியே நடந்திடு தாள் உடையாள்.
சீவனி நிகரானாள் - எவர்களும்
தேடிடும்பூடு போல் ஈடுடையாள்
பத்திக்கு வரம்பாவாள் - பராபரப்
பழம்பொருள் தன்னில் அன்பு பழுத்திடுவாள்.
முத்திக்கு வித்தாவாள் - சுயம்புவாம்
முதற்பொருள் மேல் நேசம் முதிர்ந்திடுவாள்
தன்பெருநாயகனைத் - தொழுந்தெய்வம்
தனக்கு இரண்டாவதாய்த் தாழ்ந்திடுவாள்
அன்பருள் நிறைமனசாள் - அவன்தனக்கு
அமிர்தசஞ்சீவினி தனைஅனையாள்
காலமோடு இடம்தேர்ந்தே - அவன்மனம்
களிக்கச்செய்வாள் உளஞ் சுழிக்கச்செய்யாள்
சாலைசோலைகள் தேடி - ஆங்காங்கு நற்
சயனஞ்செய்வாள் நல வசனஞ்செய்வாள்
கன்னலின் சுவைபோலும் - அன்னத்துடன்
கருணைகுய்யொடு வறை புளிங்கறிகள்
என்னென்ன வகைவேண்டுமோ - அவைதமை
இமைக்குமுன் ஆக்கித்தன் ஏந்தல்உணச்
சொன்னமுறை படைப்பாள் - நெய்பால்தயிர்
சொரிந்து முப்பழங்களும் பரிந்திடுவாள்
வன்னநற் பாயசங்கள் - அடையொடு
வடையுடன் தோசை கச்சாயம்ரசம்

இவைதமை அருத்திடுவாள் - சிறுவருக்கு
ஏற்றிடும்பல பண்டம் இயற்றிக்கொள்வாள்
நவில் நவ உணவுகளும் - காலாகாலம்
நாடிவைப்பாள் - ஓடித் தேடிவைப்பாள்
அடிமையர் பலர்இருந்தால் - அவர்செயும்
அடிசில் ஒடருங் கறி ஆதிகளைத்
திடமுடன் பரீட்சைசெய்வாள் - தனக்கவை
திருத்தியென்று ஆனதற்கு அருத்திடுவாள்
கோபமுற்று எழும்பியிடும் - தருணத்தைக்
குறிப்பாகப் பார்த்து இத மொழிகூறிச்
சோபமாய் முகம்சிறந்தே - அதிகசந்
தோஷங்கள் பிறந்திடத் தொகுத்திடுவாள்
அந்தந்த வேளைக்குநல் - உடுப்பினை
அன்புடன் தெரிந்தெடுத்து அளித்திடுவாள்
சொந்தவேலைகள் எனவே - கணவன்தன்
சோலியெலாந் தானே சுமந்திடுவாள்
அன்னைபோல் கரிசனையாய் - அவன்தனை
அன்புடன் சீராட்டி அனுசரிப்பாள்
மின்னிடை வேசியர்போல் - அன்பாதரம்
வேண்டிடுவாள் பற்றுப் பூண்டிடுவாள்
நீதஞ்சொல் அரசரைப்போற் - கணவற்கு
நித்தமும் நீதிகள் நிகழ்த்திடுவாள்
ஏதமில் காதலர்போல் - அவன்தனோடு
இஷ்டசம்பாஷணை இசைத்திடுவாள்
உத்திசேர் மந்திரிபோல் - கணவற்கு
உய்தரு போதகம் ஓதிடுவாள்
எத்துணைப் பொருட்காரி - எனினும்தன்
இல்லத்தைத் தன்கையால் இலங்கச்செய்வாள்.

உண்டியைச் சுருக்கியுணல் - பெண்டீர்தமக்கு
ஓத அழகாமென உலகின்முனாள்
வண்டமிழோர் உரைத்த - வார்த்தைதனை
மறைமொழியாம் என வாழ்த்திடுவாள்
விருந்தவர் வந்தாரென்றால் - வாரீரென்று
வேண்டியபடி உபசரித்து மென்மேல்
அருந்திடும் அருந்திடுமென்று - அண்டந்தமது
அமுதெனவமுதொடு வறைகருணை
படைத்திடுவாள்கணவன் - உலகத்தில்
பாரியவள்ளலென்று ஆரியரும்
திடத்துடன் புகல வைப்பாள் - துணைவன்தன்
சிந்தையாம் ஆசன முந்திடுவாள்
கொழுநனைப் பாராட்டி - அவன்மனக்
குறிப்பில் நிற்பாள் மனைச் சிறப்பில் நிற்பாள்
எளிஞரைச் சீராட்டி - அவர்க்கு அன்னம்
ஈந்திடுவாள் மிடி காய்ந்திடுவாள்
அச்சமுடன் மடம்நாண் - பயிர்ப்பென
அறைந்திடு நாற்குணம் நிறைந்திடுவாள்
கச்சபம் எனமனசை - அனுதினம்
காத்திடுவாள் அன்பு பூத்திடுவாள்
மாதயை நிறைந்திடுவாள் - இடைக்கிடை
வறுமைவந்தால் மனப் பொறுமைகொள்வாள்
தாதியர்போல் எவர்க்கும் - தணியாத
தயையுடையாள் அருள் இயைபுடையாள்
தாய்க்குப்பின் தாரமென்றே - அறிஞர்கள்
சாற்றிடு பழமொழி போற்றிடுவாள்
வாய்க்கு வந்தனபேசாள் - எவர்களும்
வணங்கி அஞ்சலி செய்யும் அணங்கனையாள்.

ஆணிக்கு இணங்குபொன்போல் - அணைந்திடும்
அன்புள்ள மாமியோடு இன்புறுவாள்
நாணிக் கற்பெனுங்காவல் - விடாள்மிக
நகைபுரியாள் வீணிற் பகைபுரியாள்
அபரஞ்சி நிகராவாள் - அரிவையர்
ஆருமிங்கு இவட்கு மிஞ் சிலர்எனவே
சுபரஞ்சிதமொழியுடையாள் - பொய்யாதநற்
தூயமொழியாள் கிரு பாமொழியாள்
மனைக்கொரு மணிவிளக்காய் - அயலவர்
மதித்திடுகின்றதோர் நிதிக்குவையாய்
அன்னைக்கும் அன்னையாவாள் - கணவனுக்கு
அணிகலனாய் நவ மணியாவாள்
மெல்லிய உரையுடையாள் - அம்மாவென்று
வீட்டில்வந்தார்க்கு ஐயம் போட்டிடுவாள்
மல்லிகை முல்லைமலர் - தொடுத்திடு
மாலையுடன் பட்டுச் சேலையிலே
தூங்கிய தாலியிலே - இரத்தினத்
தூமணிவடத்தில் கல் வாளியிலே
தாங்கு காதோலையிலே - தலைதனிற்
தரித்திடு நீண்ட சங்கிலிதனிலே
சிமிக்கியிலே அளகம் - சிறந்திடச்
செய்திடு செழுங்கொண்டைப் பூக்களிலே
அமுக்கும் அட்டியல்களிலே - பொன்னின்விரல்
ஆழியிலே மோறா மாலையிலே
கைக் கடகங்களிலே - சிங்கமுகக்
காப்பதிலே கர வளைகளிலே
தொக்கிடு கொலுசதிலே - சிலம்பிலே
தூயபொற் சரப்பணிச் சோடதிலே

ஆடும்மூக்குத்தியிலே - அன்னமென
அடிமிசை அரற்றுகிண் கிணியதிலே
போடுபொன் ரவிக்கையிலே - சொல்லாதொழி
பொன்னொடு கல்மணிப் பூஷணத்தே
ஆசைவைத்து உரியோனைத் - தாதாவென
அலைத்தெறியாள் மிக உலைத்தறியாள்
தோசைகள் பாயசங்கள் - சமைத்துணத்
துனுக்கெனவே பெரும் பணக்குவைகள்
கொண்டுவாடாவென்னாள் - கணவனைக்
கோட்டில்வைத்தே இழுத்து ஆட்டிவிடாள்
சட்டையில் வேட்கையுறாள் - தலைவனைச்
சடைசெய்வாள் மல்லுக் கட்டிவையாள்
துணைவனுக்கு அருநிழலாய் - இராப்பகல்
தோற்றிடுவாள் போற்றி ஆற்றிடுவாள்
இணையறு நாயகன்தன் - மனநிலைக்கு
ஏறச்சொல்லாள் அறம் பாறச்சொல்லாள்
சோம்பலில் ஆகாரம் - புசியாது
துணைக்கரம் தமைக்கொண்டு சுறுசுறுப்பாய்
ஆம்வினை பயின்றிடுவாள் - பகல்தனில்
அனந்தல்செய்யாள் வேலை அனந்தம்செய்வாள்
சித்திரத் தையல்செய்வாள் - சிறுவர்க்குச்
சிங்கார ரவிக்கை நல் அங்கிசெய்வாள்
வத்திரம் திருத்திடுவாள் - கணவற்கு
வகைவகைக் கவசங்கள் வகுத்திடுவாள்
எந்திரம் இயக்கிடுவாள் - அதிற்செய
இயன்றிடும் பணிவிடை இயற்றிடுவாள்
மைந்தர் பந்தனைகளுக்குக் - கல்விவளம்
வாய்க்கச் செய்வாள் பாடம் வகுத்துச்சொல்வாள்.

பண்டம்பாடி ஒழுங்காய் - அவைக்கேற்ற
　　பாங்கில்வைப்பாள் வேண்டில் வாங்கிவைப்பாள்
கண்டவர் இவள்அல்லவோ - மனைக்கேற்ற
　　காரிகையாள்என்று களித்தேத்த
அறந்தனை வளர்த்திடுவாள் - அநாதரை
　　ஆதரிப்பாள் புகழே தரிப்பாள்
சிறந்திடுமனைவாழ்க்கைக்கு - ஒருபெரும்
　　தேவையொப்பாள் சித்ரப் பாவையொப்பாள்
செல்வத்திற்கு அழகதுதான் - தற்சூழ்தரு
　　செழுங்கிளை தாங்குதல் - எனச்செகத்தோர்
சொல்லுநன் மொழிதலைமேல் - எக்காலமும்
　　சுமந்திடுவாள் நிதம் துணிந்துசெய்வாள்
ஒருமயிர் ஒடிந்தாலும் தரையில் வீழ்ந்து
　　உயிர்விடும் மானமாம் மிருகம்ஒப்பாய்
மருவுநன் மானமது - போகவரில்
　　மரிப்பதின்மிக மன விருப்புடையாள்
வாழ்வது வரும்போது - அதின்மிகு
　　மனதுவையாள் மனக் கொறுவம் எய்தாள்
தாழ்வது வரும்போது - இதுதெய்வ
　　தயவதுஎன்பாள் அதில் தளர்வுகொள்ளாள்
வெண்ணிறவாயத்தை - உலகத்தில்
　　வேடிக்கையாகவே நாடிக்கண்டும்
பெண்ணுளம் கண்டிடுதல் - அரிதெனும்
　　பேச்சது பொய்த்திடப் பெருமிதமாம்
வாக்கொடு மனசொன்றாய் - அசத்தியம்
　　வழுத்தாதாள் துயர் விழுத்தாதாள்
பாக்கியவதி ஆவாள் - புவிக்கொரு
　　பதிவிரதா பத்தினி ஆவாள்
எழின்மிகும் ஆடவர்மேற் - பெண்கள்மனம்
　　ஏகுமென்பார் இதனால் அவர்தம்

விழிதமக்கு இலக்காகாள் - மீது ஊண்மிசை
வேட்கைகொளாள் மேனி மினுக்குக்கொளாள்
வீண்பொழுது அதுபோக்காள் - வேடிக்கையில்
வேட்புக்கொள்ளாள் இறு மாப்புக்கொள்ளாள்
காண்பது வேண்டுமெனாள் - கோலமது
காலத்திற்கு ஏற்றது காணும் என்பாள்
பரிதிமுன் கமலமென - முகமலர்
பரிமளித்து அலர்ந்திடும் பான்மையுளாள்
கருதிசொல் நாவுடையாள் - எவர்மீதும்
தோஷம்பேசாத் தாலந் துலங்கிடுவாள்
எட்டிக்குப் பூட்டிசெய்யாள் - பூமாதுஎன
எப்பிழைகளும் சமித்து இணங்கிடுவாள்
பாட்டிக்கு மகளாவாள் - பெற்றார்கட்குப்
பரிந்துபெற்று எடுத்திடும் தாயாவாள்
வீடில்லா வெறுவிலிக்கு - மெய்யாய்ஒரு
வீடாவாள் வித்தின் விளைவாவாள்
பாடுற்ற பேர்களுக்குப் - பெரியதோர்
பண்டசாலையுறும் பதியாவாள்
பணிவிடைக்காரர்தமைப் - பெற்றாரினும்
பதின்மடங்காய் அன்பு பரிந்துஇருகண்
மணியென ஆதரிப்பாள் - அநாதரை
மதலையராய் எண்ணி வளர்த்திடுவாள்
தன்மானம் காப்பதுபோல் - தனைவந்து
சார்ந்தவர் மானத்தைத் தான்காப்பாள்
கன்மானும் நெஞ்சமிலாள் - பிறர்துயர்க்
கடலதிலே மனங் கரைந்திடுவாள்
புவியாளும் அரசைநம்பிப் - புருஷனைப்
புறக்கணித்திடும் பொல்லாப் பூவையைப்போற்

## 42 இல்லற நொண்டி

சவியிழந்தான் எனினும் - கணவனைத்
தனிக்கவிடாள் விட்டு அந் தரிக்கவிடாள்
அவன்காலால் கீறுவதை - தன்நாவினால்
அழித்திடுவாள் மிக மதித்திடுவாள்
கவனமாய் அவன்பணிக்கு - நனவிலும்
கனவிலும் கருத்துடன் காத்திருப்பாள்
நாயகன் தனைநம்புவாள் - ஐயங்கொண்டு
நானோநீயோ என நசிந்துரையாள்
வாயொன்று கிரிகையொன்றாய் - முன்பின் ஒன்றாய்
மறைவில் ஒன்றாய் வழி நடையில் ஒன்றாய்
நூறைமீன்போல் பதுங்காள் - பெண்கள்தம்முள்
நூறுநூறாயிரர் திலகம்ஒப்பாள்
வேறுகூறாய் நடவாள் - தன்னூர்க்குஒரு
விளக்குத் தம்பமென விளங்கிடுவாள்
வீட்டுக்கு வீடுசென்று - கதைசொல்லி
வீணாகக் குடுமிகள் முடித்துவிடாள்
பாட்டுக்குச் சந்தமென - இல்ல ஆச்சிரப்
பத்ததிமுறைப்படி படிந்து அமைவாள்
சந்தைசெல் மங்கையர்போல் - அரங்கத்திற்
தன்மனைக் காரியந் தனைத் தூற்றாள்
சொந்தநல் தோழியர்க்கும் - தன்காதலன்
துறவுசொல்லாள்ஒரு குறைவுசொல்லாள்
நாகணவாய் மொழிபோற் - குயிலென
நவின்றிடு நாயக ரசமொழியாள்
ஆகன்னமுற வெளியோர் - சொல்வார்த்தையை
அங்கீகரித்தஅபி மானஞ்செய்வாள்

பொறுத்தவர் அரசாள்வார் - அனல்எனப்
பொங்கினார் காடது போவர்எனும்
மறுத்தவிர் பழமொழியை - எந்தநாளும்
மனசிடைப் பொன்னென மதித்திடுவாள்
அன்பற்ற மாமிதனைக் - கும்பிட்டாலும்
அபசாரம் ஆமென்றிவ் அவனியுள்ளோர்
முன்புற்று மொழிந்தாலும் - அவளுக்கு
முறைப்படிஒழுகியே முறைமைசெய்வாள்
இத்தகை இலக்கணம்சேர் - பெண்டிருடன்
இல்லறம் இயற்றிடும் ஆடவர்க்கு
முத்தியிங்கேயும் என்றால் - இல்வாழ்க்கையின்
முதன்மைக்கு ஒப்பேது இந்தச் செகமதிலே.

தந்தன தனதனனா.

## அகோ! வாரும்பிள்ளாய் நொண்டீ!

நம் இல்லத்துக்கடுத்த மாதர் சிறப்பையும் அவர் செய்யவேண்டிய கடமைகளையும் சாதாரண சனங்களும் தேற வசனநடையிற் கூறும்பிள்ளாய்!

மகா நன்று! அவ்வாறு சிறுகக் கூறுகிறேன் கேளும் ஐயா!

ஆதியில் எம் பெருமானானவர் "மண்ணுலகிலுள்ளவரம்பில் பெரும் பவத்தைப் - பெண்ணுருவமாகப்" படைத்தார் என்றார் ஒருபாலார். இ∴து அபத்தமும் வியர்த்தமுமான பேய்ப்பேச்சு. "பெண்ணிற் பெருந்தக்க யாவுள?" என்பது

யதார்த்த வார்த்தை. "தற்காத்துத் தற்கொண்டாற்" பேணுகின்றவளும், "குலமகட் குத் தெய்வம்கொழுநன்" என்றார். ஆதலின், தன்கொழுநனைத் தான் தொழும் தெய்வத்திற்கிரண்டாவதாய்ப் பாவனை பண்ணுபவளும், "நிறைகாக்கும் காப்பே" தலைமையாய்க் கொண்டவளும், "தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்னும் இலக்கணத்திற்கு உதாரணமானவளுமே இல்லறத்துக்கேற்ற பெண்ணா வாள். கேளும்! துரையே! கேளும்! பண்டைக்காலத்திலே தன்னைக் கொண்ட காதலனுக்குத் திருப்தி கொடுத்து நடக்க இயலாதவளாகிய இராசகுமாரி ஒருத்தி, தனக்குப் பந்துவாகிய இராணி ஒருத்தியைநேக்கி, "என் நேச அம்மணி! நான் என் நாயகனது மனோபீஷ்டப்படி நடந்து திருப்திகொடுத்துக் கொள்வது வருத்த மாயிருக்கின்றது. யான் எவ்வாறு நடந்தாலும், அவர் என்னைத் தூற்றுகின்றார். என்பேரிற் கடுமொழி கூறுகின்றார். நீரோ உமக்குரிய நாயகர் உம்மை உபேட்சி யாமலும் உம்மேற் கோபியாமலும் இதமாய் நடக்கும்படி அவரை வசியஞ் செய்து கொண்டீர். இதற்கு உபாயமும் சூட்சமும் யாவை? உமதுவசம் யாதேனும் வசியமருந்துண்டா? மூலிகை உண்டா? குளிகை உண்டா? மந்திரதந்திரங்கள் உண்டா? அடியேன் செப்பமாய் நடத்தற்கு என்மீது கருணைகூர்ந்து ஒப்பமான வழி சொல்லும், அண்ணீ!" என்று வேண்ட, அரசி சொல்கின்றாள்:-

"கேளும் பெண்கள் நாயகமே! இப் பூவுலக செனனங்களுளெல்லாம் ஸ்திரீ செனனம் பாவச் செனனமென்றார் முழுமூடர். அது அபத்தமான பழிமொழி. ஸ்திரீ செனனத்திற்கு மேலான செனனம் இப்பூவுலகம் எங்ஙனாகிலும் இலதென்றறிதி. ஒரு பெண் தன் பத்தாவின் சித்தத்தைக் களிப்பித்து அவனோடு நேயம்பூண்டு வாழ்வதற்கு அவுடதமாவது, மூலிகையாவது, மாந்தரிகமாவது வேண்டாம். ஸ்திரீக்கு அவள் விவாகம் பண்ணிக்கொண்ட புருஷனே பூலோகதெய்வமும், அரசனும், நோன்பும், தானமும், தவமும், புண்ணியமுமானவன். அவள் தக்க காலமறிந்து, இடமறிந்து, வரவுக்கிசையச் செலவு செய்து, அவன் நாவுக்கும், பற்கும், மனசுக்கும், இதமாய்ச் சுவை செறிந்த உண்டி தின்றிகளை ஆயத்தப்

படுத்தி, நீங்காக் கரிசனையோடு குறித்த வேளைதவறாது அருத்தல் வேண்டும். அவன் விருப்பத்திற்குக் குறுக்கிட்டு நில்லாமல் அவனுடைய மனோவாஞ்சைப்படி யொழுகல் வேண்டும். கேளும் என் தங்கையரே! நான் என் நாயகரை எக்காலமும் எனக்கெல்லாமாய் எண்ணித் திரிகரண சுத்தி பத்தியோடு பாராட்டுகின்றேன். கோடை, மாரி, முன்பனி, பின்பனி, என்னுங் காலநிலைகளை நாடி அவற்றில் அவர்க்கு வேண்டிய போசனம், வஸ்திரம், படுக்கை, கிடக்கை, சோலை, சாலை களை அமைத்துவைக்கின்றேன். இன்னின்ன தமக்கு வேண்டும் என்று அவர் வாயாற்கேளாமுன் நானே அவற்றைக் குறிப்பாலுணர்ந்து தேடியமைத்துக் கொள்ளு கிறேன். எத்தனை சுயம்பாகிகள், வேலைக்காரர்கள் இருந்தாலும் போசனாதிகளை நானே என் கண்ணாற் பார்த்துக் கையாலெடுத்து உபசரித்துத் திருப்திசெய்கிறேன். அவர் கோபங்கொள்ளும் குறிப்பையும் சந்தோஷம் கொள்ளும் தருணத்தையும் அறிந்து அதததற்கேற்பப் பேசி ஆற்றிப் போற்றிக் கூடிக்களித்து நடந்து கொள்ளு கிறேன். கொலுமண்டபத்திற்கு எழுந்தருளும் போதும், வேட்டையாடப் புறப்படும் போதும், உல்லாச உலாவிற்குச் செல்லும் போதும், பவனி வரும்போதும், பரராச கண்டனத்துக்குப் புறப்படும்போதும், அதததற்கேற்ற ஆடையாபரணங்கள் ஆயுத வாகனங்களை நானே தெரிந்தெடுத்துக் கொடுக்கிறேன். பசுநிரைகள், யானைப் பந்திகள், குதிரைப்பந்திகள், இரதங்களை நானே விசாரணைசெய்து என்கண்ணாற் பார்வையிடுகிறேன். இவைகளைக்காத்து விசாரணை செய்யும் தலைவர்கட்கு வேதனங்கள், வெகுமதிகள், தண்டனைகள், கண்டனைகளை நானே நடாத்து கிறேன். தேவாலயம், தானதருமம், அன்னசத்திரம் யாவும் என் பார்வையிலிருக் கின்றன. ஆயுதங்களிலே துருப்பிடியாது தைலம் போடுவதும் என் அலுவலே. பட்டணத்துள்ளார் எல்லோரும் நித்தமங்கலமாய் இருக்கச்செய்வதும் அல்லாமற் குடைகள், கொடிகள், பேரிகைகள், தோரணங்கள் யாவும் சீர் சிறப்பாயிருக்கச் செய்வதும் என் கடமையே. மயிற்சாலை, சித்திரசாலை, குயிற்கூடம், அன்னக் கூடங்களை விசாரிப்பதும் என் பொறுப்பே.

இன்னுங் கேளீர் என் தங்கையரே! வேலைக்காரரைப் போலக் கடின வூழியங்களையும் நான் செய்கிறேன். நீதிராசனை நிகர்த்து மனுநீதி வாக்கியங்களை விளம்புகின்றேன். என்காதலர் முன்னன்றி ஆடையாபரண அலங்கிருதியாயிரேன். பிறர்க்கு என் கணவர் உபகாரங்கொடுக்க விரும்புங்கால் நானே அவரும் இவரும் களிக்க ஏராளமாய்த் தாராளமாய்க் கொடுக்கிறேன். என் கணவற்கு ஏதொரு குறைவும் வராது நானே யாவற்றையும் தேடிச் சோடித்து வைக்கிறேன். என் துணைவரோடு எத்துணைப்பேர் விருந்துக்கு வரினும் அத்துணைப்பேர்க்கும் பத்தியோடும், யுத்தியோடும், அன்போடும், இன்போடும், திருத்திசெய்து வைக் கின்றேன். என் மாமியையும் பிறரையும் இஷ்ட தெய்வங்கள்போற் பூசித்து மரியாதை குன்றாமல் அவர்க்குப் பணிவிடையும் செய்கின்றேன். சுற்றமித்திரர் ஆனந்தம் கொள்ளுமாறு உலோபக் குணமில்லாது வேண்டியன ஈந்து ஆசார உபசாரமாய் நடத்துகின்றேன். இவ்வாறான என் ஒழுக்க நடைகளைக் கண்டு என் நாயகர் என்மீது வசமாகின்றார். இதுவே என் சூட்சம். இவையே என் மூலிகையும் ஔடதமுமாம், என் தங்காள்'' என்றாள்.

ஓ! துரையே! கேளும். பூர்வீக அறிவாளிகள் சிலர் ஸ்திரிகளைப் பதுமினி, சித்தினி, சங்கினி, அத்தினி, எனும் நால்வகைச் சாதிகளாய்ப் பகுத்தனர். இவர்களுட் பதுமினி செண்பக மலர்போற் சிவந்த தேகியாய்ப், பொய்புகலாது பண்பான மொழிவழங்கித், தேகத்தில் நறுமணம் வீசப்பெற்று, மானோக்கமும் மெல்லிய கூந்தலும் உடையளாய்த், தெய்வத்தையுங் குருவையுந் தொழுது வழிபடுபவளாய், எள்பூ வொத்த நாசியும் அன்னநடையும் செவ்வரிக் கண்ணும் பொருந்தியவளாய், நாணமானங்களாற் சிறந்து, சொற்பஊண் உண்டு, வெண்வத்திரம் வெண்பூக்களிற் பிரீதியுள்ளவளாய் இருப்பாள் என்றும், சித்தினி போலும் நடையும், கொடிபோற்று வளும் இடையும், வலம் புரிபோலுங் கழுத்தும், சகோரக்குரல் போலும் ஓசையும் உடையளாய், நடன சங்கீதங்கள், இனிய பதார்த்தங்கள், விசித்திர வத்திரங்களிற்

பிரீதியுற்று, நெடுமையும் குறுமையுமல்லா நடுத்தரத் தோற்றக்காரியாயிருப்பாள் என்றும், சங்கினி காற்படம் நீண்டு, வெதும்பிய சரீரியாய், மெலிவும் பருமமுமல்லா ரூபியாய்ச், செம்மலர் செவ்வாடைகளில் ஆசை கொண்டு கோபியாய்ப், பொய்மை குறளைபேசி வஞ்சக மனத்தியாய்ப், பித்தக்காரியாய்க், கழுதைபோல் வெடித்த குரற்காரியாய், அஞ்சா நெஞ்சியாய், அறஞ்செய்யா மனசியாய்ச், சமமாயுண்பவளாய் இருப்பாள் என்றும் அத்தினி உதறிய நடையாளும், வளைந்து பருத்து நீண்ட கால்விரற்காரியுமாய்க், குதறிய சொல்லினளாய்க் குறுங்கழுத்துஞ் செம்படை மயிருமுடையளாய்த், தீவினை புரிபவளாய்க், கற்றாளை மணத்தியாய், உயர்ந்த அதரியாய், நாணமில்லாளாய், நிரம்பப் புசிப்பவளாய் இருப்பாள் என்றும், தம் நூலிற் சொற்றனர்.

முன்னோர் எவ்வாறு கூறியிருப்பினும் இருக்க, இல்லாள் நல்லாளாயி ருத்தல் வேண்டுமென்பது எப்பாலார்க்கும் ஒப்பதாகிய சத்தியமே. 'வீட்டுக்கு நல்ல வளை வை' என்றார் ஆன்றோர். "கல்லெல்லாம் மாணிக்கக்கல்லாமோ?" என்றார் போலப் பெண்களெல்லாரும் பெண்கள் அல்லர். "பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாதி ருத்தல்" என்னும் முதுமொழியைத் தலைமேற்சுமந்து, வார்த்தைக்கு வார்த்தை கூறி நமன்போல் நில்லாது, பத்தாவின் சொல்லுக்கமைந்து, உடம்பிரண்டெனினும் உயிரொன்றென இணைந்து, கணவன்காலில் தைத்தது தன் நாவில் தைத்ததுபோற் கருதி, எழும்புங்காலையெழுந்து, துயிலுங்காலை துயின்று, வீடுவாசல்களைத் தக்ககாலத்திற் பெருக்கிச் சிங்காரித்து, உள்ளத்தில் நஞ்சைநிகர்த்த வஞ்சனையைப் பொதித்து வையாது, கேட்பார் கன்னங்குளிர அமிர்தவசனம் நவின்று, கொடுஞ் சொற்குறளை தவிர்ந்து, ஓவியம்போன்று பாவச்சார்பில்லாளாகி, அடிக்கடி தாய்வீடும் நினைத்தவுடன் அண்டைவீடும் ஓடாது, மனசுக்கு விலங்கு பூட்டினவளாகி, நவரத்தினமணிகளினும் விலைபெற்றமணியாகி, விசுவாசத்துரோகம் புரியாளாகி, "இருட்டோடு எழுந்து தன் வீட்டாருக்கு ஆகாரங்கொடுத்து வேலையாட்களுக்குப்

படியளந்து,'' "சிறுமையானவர்களுக்குக் கையைத்திறந்து, ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டி,'' "தன்வாயை ஞானம்விளங்கத் திறந்து,'' "சோம்பலின் அப்பத்தைப் புசியாமல்,'' "சௌந்தரியம் வஞ்சனை அழகு வீண்'' என்பதை மெய்ப்பித்து,'' "ஆடவர் தமக்குப் பின்னுமொரு கூற்றுமுளதோ பிணியுமுண்டோ'' என்பதைப் பொய்ப்பித்துப், பெற்ற மாதாவைப்போல் கருணை கூர்ந்து, சந்தனசீதம்போலும் இங்கித வார்த்தை பேசுபவளாகிப், பரத்தையைப்போல் நாயகனைப் பாராட்டி, மந்திரியைப் போல யுத்திபுத்தி தெரிந்துரைத்துக், கறவை நிகராய்ப் பிள்ளைகள் மேல் உருகி, அவர்க்குக் கல்விச்செல்வம் வரும்வழிகாட்டி, அன்றில் என நாயகனைப் பிரியாது குலாவித், தாங்கொணா வறுமையிலும் நீங்கொணா அன்பை விடாளாகித், தரித்திரனாயிலும் குபேரனெனப் பாராட்டிப், புல்லென்றாலும் புருஷன் கல்லென்றாலும் கணவன் எனமதித்து, நோயாளன் பேயாளனானபோதும் மதனெனநினைத்து, ஆதிஅன்பில் அருகாதவளாகிச், "செல்விருந்தோம்பி வருவிருந்திற்குக்'' காத்திருந்து, ஈயென்றாக்கு இல்லையென்னாது ஈந்து, ஆணிக்கிணங்கிய பொன் போல, மாமிக்கிணங்கிய பெண்ணாகி, மைத்துனிகளுடன் மண்பிடி மயிர்பிடியென நில்லாதவளாகி, மூத்த மைத்துனரை உடன்பிறந்த தமயமாரெனவும், இளையமைத்துனரைத் தம்பியரெனவும், மாமனைப் பிதாவெனவும் எண்ணி, அயலாருக்கு அபகாரியாகிக், கடுஞ்சொற்களை மருந்தெனப்பாவித்து, ஒருமொழியை அன்னையாக்கி, ஞானத்தைத் தந்தையாக்கித், தருமத்தைச் சகோதரமாக்கிக், கருணையைத் தோழியாக்கிச், சாந்தத்தைக் காந்தனெனப் பேணிப், பொறுமையைப் புத்திரபுத்திரியாய்ப் பெற்றுக், கற்பை ஆடையாயுடுத்து, அன்பை நறுமலராய்ச் சூடி, நாணத்தை நானமும் சாந்து சவாதுமாய்ப்பூசிச், சுகுண கிர்த்தியங்களை ஆபரணங்களாய்ப்பூண்டு, மக்கட்பேறாகிய செல்வத்தைச் சேகரித்துப் "பெண்டுகளிருப்பிடம் பெருஞ்சண்டை'' என்பதைப் பொய்ப்பித்து வாழும்பெண்கள் நாயகமே சற்குணமும் தூய இலக்கணமும் தாங்கிய இல்லத்துக்கேற்ற எங்கள் நாயகம் என்றறிதிர். இத்தகைய இல்லாள் வசிக்கும் இல் இடம் தாமரைநிறைந்த தடாகமும், புலவரிருக்கும் சபையும், சந்திரன் இலங்கும் அந்தரமும்போல என்றும் இலங்கிச் சிறப்படையும் என்றுணர்க.

## 4
## நற்குணப் பெண்டீர் இலக்கணம்.

தந்தன தன தனனா - தனந்தன - தானானேதன தானானே.

அன்னை தந்தையர் இல்லாள் - சகோதர
அணையது இல்லாள் கிளைத் துணையது இல்லாள்
மன்னுநற் குடிப்பிறவாள் - பிறன்மனை
மருவிடுவாள் மைந்தர் தமைக்காணக்
கடைத்தலை காத்திடுவாள் - கணிகையர்
கண்ணென விழித்திடு காட்சியினாள்
உடைத்தனில் வேட்கையுனாள் - எதிர்பங்கு
ஊமையதாக உற் பவித்திடுவாள்
சிறுகிய ரூபக்கண்ணி - குருதிபோல்
சிவத்திடு பெருங்கண்ணி பூனைக்கண்ணி
குறுகிய ரூபிஉயர் - தோற்றமது
கொண்டவள் கோணுறு கண்டம் உள்ளாள்
பருத்தவள் மெலிந்தவள்நோய் - அங்கந்தனிற்
படிந்தவள் நோயர்தம் இடம்பிறந்தாள்
உருத்திடும் இடியுரையாள் - ஓயாமலே
உண்டு உறங்கிடுபவள் ஒளிர் பொன்போல்
இலங்கிடும் உடலுடையாள் - வெளுப்பினள்
இரும்பலம் உடையவள் பெருஞ்சினத்தள்
விலங்குபோல் நெடுந்தொனியாள் - குறுஞ்செவி
மேலிடுவாள் மேல தாயுயர்ந்த
தந்தங்களுறு வாயாள் - அனமெனத்
தானடவாள் மானந் தனை யடையாள்
சுந்தரப் பெரும் இடையாள் - கனநித்திரைச்
சொகுசினள் கருமையாந் தோற்றத்தினாள்

## நற்குணப் பெண்டீர் 50

விரல்நிலம் பாவாதாள் - வதனத்தின்
மேவிய மறுவது தாவுறுவாள்
நரைமயிர் தலையுடையாள் - அடிக்கடி
நகைப்பவள் ஆயுசு கதித்திடுவாள்
நிலம்படர் கேசத்தினாள் - நடனத்தில்
நிரம்பிய ஆசையள் நெடுமூக்காள்
நலஞ்செயும் குரவர்தமை - மதியாது
நளினம் செய்வாள் ஏளனமும்செய்வாள்
ஈசனை மதியாதாள் - இழிகுண
இயல்பினள்மடம் பயிர்ப்பு இல்லாதாள்
கூசியே சாய்ந்தகண்ணாள் - பெற்றார்சொற்குக்
குறுக்கில்நிற்பாள் மதன் பணிப்பில் நிற்பாள்
தந்தைதாய் வரிக்குமுன்னே - ஒருவனைத்
தான்வரித்தே ஆசை தனைப்பரிப்பாள்
எந்தையின் னோர்தமையான் - வேண்டேனென
இசைத்தனன் பூர்வத்தொர் ஏந்தலன்றே
ஆயினான் சொலக்கேளும் - துரையேஇவ்
அகிலத்தில் அவரவர் அகமுகப்பான்
தூயமங்கையர்க் காண்டல் - அரிதரிது
ஓவது மிகவரிது ஓரிடத்தே
மங்கலம் பேசிடுங்கால் - இளைஞர்கள்
மரபொடு குலமது மகிமையென்பார்
செங்கரம் பிடித்திடுவார் - கண்காட்சிக்குச்
சிறந்திடும் ஆண்பெண்ணைத் தேடுமென்பார்
மாமமார் வித்தையென்பார் - மாமிமார்கள்
வளர்ந்திடு பெருந்திரு வாய்ப்பதென்பார்
பூமிசை இவைகள் எல்லாம் - ஒருவரிற்
பொலிந்திடுமோவிற்குப் பொருந்தாத்துன்

## இல்லற நொண்டி

51

மங்கையர் இலக்கணத்தை - அற்பமேனும்
மாறாமல் ஏதொன்றும் மறையாமல்
அங்கையில் நல்லியெனச் - சற்றேயிங்ஙன்
அறைந்திடுவேன் ஆறி இருந்துணர்வீர்
இல்லற முறைஒழுகாள் - வரவினுக்கு
ஏற்றமதாய்ப் பொருள் தூற்றிடுவாள்
புல்லிய குணக்காரி - தனைக்கொண்ட
புருடனில் தான்மிகு பொருட்காரி
என்றுசொல் மனச்செருக்கி - அடுத்தவர்
எவர்முகமாயினும் உடன்கருக்கிக்
கொன்றன உரைபகர்வாள் - கொழுநன்முன்
கொடுத்திடு பணிகளைத் தடுத்திடுவாள்
துடித்திடு நடைக்காரி - திடீரென்று
சுளித்துமுன் எடுத்திடு படைக்காரி
குடித்திடும் ஊதாரி - அயலுறு
குடிகளைக் கெடுத்திடும் காந்தாரி
வஞ்சகி வாய்க்காரி - அடுத்தவர்
மனசினை வருத்திடு கோட்காரி
குஞ்சரத் தொனிக்காரி - நெளிப்பொடு
கொலுக்காரி மன அழுக்காறி
வேடிக்கைப் பிரியக்காரி - கோலாகல
வேஷக்காரி அகம் தோஷக்காரி
சோடிக்கும் தாமக்காரி - மலர்மிகச்
சொருகு கொண்டைக்காரி தோற்பாடி
ஐயமிட்டு உண்ணாதாள் - சரணென
அடைந்தவர் துயின்றெழ அகத்தில்விடாள்

## 52 துற்குணப் பெண்டீர்

வையக நடைஅறியாள் - பசியொடு
வந்தவர் இருக்கத் தன் தொந்திதனை
நிரப்பிடும் பெருவயிறி - கிருபையில்
நிட்டூரக்காரி மட்டறக்குளறி
உரப்பிடும் பேழ்வாய்ச்சி - ஐயோவென
ஊளைசெய்வாள் அழுவாள் சீச்சீ!
உள்ளொன்று புறம்பொன்றாய் - உதாசினம்
உரைத்திடுவாள் பேய்போல் இரைத்திடுவாள்
துள்ளிய குதிப்புடையாள் - குருநிந்தை
துணிந்து செய்வாள் வேளை அறிந்துசெய்யாள்
காந்தனை வைதிடுவாள் - குழந்தைகள்
கத்திடவே கையாள் மொத்திடுவாள்
பாந்தள்போல் சீறிடுவாள் - அடியடா
பார்ப்பம் என்றே மிக ஆர்ப்பரிப்பாள்
ஏற்றமுற்றிடும் கணவன் - குரூபியென்று
இகழ்ந்திடுவாள் பழி புகழ்ந்திடுவாள்
நாற்றமுற்றிடும் பிணியன் - இவனென
நகைத்திடுவாள் நிதம் பகைத்திடுவாள்
பொற்புடை யாரைக்கண்டால் - அவர்பின்னே
போவென் என்பாள் உடன் சாவென் என்பாள்
கற்பெனும் வேலிதனைக் - குதித்தெட்டிக்
கடந்திடுவாள் அதை இடந்திடுவாள்
பகைத்தடா படுபாவி - யான்நின்றன்
பாரியாய் வந்திடு காரியத்தால்
திகைத்தழிந்தேன் என்பாள் - அவன்தனைத்
திட்டி வைவாள் கண்ணை வெட்டி வைவாள்
கிட்டியே திறுதிறுப்பாள் - அடபேயே!
கிழட்டுச் சவமேஎன்று அதட்டிடுவாள்

குட்டிச்சுவரானேன் - உன்னாலென்று
கோடிசொல்வாள் வெகு மோடிசொல்வாள்
பொற்சரி தாவென்பாள் - நுதற்பணி
பூட்டிடென்பாள் ஊஞ்சல் ஆட்டிடென்பாள்
கைச்சரி தாவென்பாள் - கலீரிடும்
காழ்வடம் தாஅல்லால் வீவலென்பாள்
சூடகம் தாவென்பாள் - பளீரிடும்
தோட்டுடனே மயிர் மாட்டிபொன்னின்
தாடங்கம் தாவென்பாள் - சந்திராதபச்
சங்கிலிக் கோவைகள் தந்திடென்பாள்
மூக்குத்தி தாவென்பாள் - கிணிரென்று
முழங்கிடு சிலம்புகள் வழங்கிடுஎன்பாள்
பார்க்கும் கண்மழுங்கிடவே - பளிச்சிடும்
பங்கமில் கங்கணந் தொங்கணியும்
ஆயிரம் பொன்னொரிழை - விலைபெறும்
அந்த இந்திரவர்ண அம்பரமும்
ஓயிங்கே தாவென்பாள் - கும்பகோணம்
உடன்தஞ்சை காசிமீரம்சீனம்
சீமையில் வழங்கிவரும் - பலபட்டுச்
சீலையெல்லாமொரு நாழிகையில்
மாமி மைத்துனிகளுடன் - அயல்வாழும்
மங்கையரும் வெட்கச் சங்கைமிக
அழைப்பித்துத் தாவென்பாள் - சவாதுடன்
அரும்பனி நீரிங்கே சொரிந்திடுஎன்பாள்
குழைத்த சந்தனம்புழுகு - கமழ்ந்திடு
குங்குமம் கஸ்தூரி இங்குஇடு என்பாள்
ஆசறு தாம்பூலம் - அருந்திட
அரைக்கனம் தரிக்காமற் கடைக்குஅகன்று

காசுக்கட்டி ஏலம் - தக்கோலம் நற்
கராம்புடனே களிப்பாக்குகளும்
வகைவகை வையிங்கு என்பாள் - வையாவிடில்
மாய்ப்பென்என்பாள் உயிர் சாய்ப்பென் என்பாள்
தொகைவகை இவைகள் எல்லாம் - தராவிடிற்
தூங்கிடுவேன் ஆக்கை வாங்கிடுவேன்
பச்சிலை நாவியுண்பேன் பார்த்துச் சிரிக்கவைப்பேன்
பழிக்கவைப்பேன் பார்த்துச் சிரிக்கவைப்பேன்
உச்சித பொருட்கள் எல்லாம் - தராவிடில்
ஒறுத்திடுவேன் தாலி அறுத்திடுவேன்
எனவழக்கு எடுத்திடுவாள் - கணவனை
ஏசிப்பேசி நெருப்பு எடுத்திடுவாள்
கனசழக்கு அழைத்திடுவாள் - அவன்தனைக்
காய்ந்திடுவாள் எட்டிப் பாய்ந்திடுவாள்
அவனுக்கொர்ஆபத்து என்றால் - ஐயோவென
அழுங்காதாள் மனம் இரங்காதாள்
கவலையாம் கடலதனுள் - விழுந்துளம்
கரையாதாள் தேற உரையாதாள்
தன்னுயிர் ஈந்தேனும் - கழுத்துறு
தாலியைக் கழற்றியே தந்தேனும்
பின்னெவை நேர்ந்தேனும் - கணவன்தன்
பேர் இடர் நீக்கிடப் பிரியமுறாள்
காற்றுள்ள போதலவோ - தூற்றுமென்று
காசினியோர்மனங் கனிந்தாய்ந்தே
சாற்றினர் ஆதலினால் - என்சீதன
சம்பத்தைக் காத்தல் என் சமர்த்தது என்பாள்
போனவன்போனாலும் - எனக்குள்ள
பொருளிருந்தால் இன்னோர் புருடனைநான்

ஆனநன்முறைநாளைக் - கல்யாணஞ்செய்து
அன்புடன்வாழ்ந்திடல் ஆமென்பாள்
பொருளலோ புருஷன் என்பாள் - போனால் உவன்
புருஷர் ஒன்பதுபேர்கள் வருவர் என்பாள்
வரும்அறுபதுநாளைக்கு - எழுபது
வாய்ப்பான கந்தைகள் சேர்ப்பென் என்பாள்
ஆபத்துக்கு அசையாதாள் - நாதற்குற்ற
அருந்துயர்க் கடல்கண்டு மழுங்காதாள்
கோபத்தைத் தவிராதாள் - பெருந்தர்மக்
கொழுந்தெனவே வளர்ந்து இலங்காதாள்
தந்தைதுன் மொழிகேட்பாள் - தனைப்பெற்ற
தாயின்துற் போதனை தனைவேட்பாள்
புந்தியின் அறிவழிவாள் - மணஞ்செய்த
புருஷனைப் போவென்று புறக்கணிப்பாள்
பங்கிட்டுத் தாவென்பாள் - உழைப்பதிற்
பாதியைக் கொடுவென்று பழிதொடுப்பாள்
அங்கிட்டுப் போதியென்பாள் - முதுசொத்தில்
அரைப்பாகம் தாஅல்லால் அனுகென் என்பாள்
முன்தாரப் பிள்ளைகளை - என்னால் தாங்க
முடியாது போமென முழங்கிடுவாள்
வன்புற்றுக் குறும்பெடுப்பாள் - கணவன்தன்
மரியாதை தனைமுற்றாய் வாங்கிடுவாள்
போனகம் சமையாதாள் - சமைத்ததைப்
பூரணமாகவே பாரணஞ்செய்து
ஆனதன் பசிதீரக் - கணவனுக்கு
அருந்தக்கொடாள் வந்த விருந்தார்க்கிடாள்
தான்முதல் உண்டிடுவாள் - தனுசர்க்கும்
தலைவர்க்கும் மீந்தவை தானிடுவாள்

சேனமும் புயங்கமும்போல் - எவரொடும்
தெம்முனை நாடியே செறுத்திடுவாள்
வைகறை துயில் உணராள் - உணர்ந்துதன்
மனைபெருக்காள் முற்றம் தனைவிளக்காள்
செய்கடன் கழியாதாள் - குழலினைச்
சேர்த்துக்கட்டாள் உடை பார்த்துக்கட்டாள்
பாத்திரம் புனிதம்செய்யாள் - நீராடியே
பவித்திரமாய்த் தள பாடமெல்லாம்
நேர்த்திய தாகச்செய்யாள் - குடும்பத்தை
நிலவச்செய்யாள் புகழ் உலவச்செய்யாள்
நோய்க்கிடம் கொடுக்காதே - என்றே ஔவை
நுவன்றிடு விதிதனை நோக்காதே
தாக்கும் அற்பபிணிக்காய்க் - கோணமொன்றிற்
சார்ந்தொரு போர்வையால் தலைமூடி
ஆவூவென்றே அனுங்கி - வீட்டுவேலை
அதனிலோர் அனுவள வதும்புரியாள்
சாவதுபோற் கிடப்பாள் - மக்களுடன்
தலைவனைக் கடைக்கண்ணும் சாரவிடாள்
போக்குகள் பலபுகல்வாள் - ஆத்தேஐயோ!
போகுது சீவனென்றே பொருமிக்
கூக்குரல் எடுத்திடுவாள் - கொண்டோன் உயிர்
குடித்திடும்காளிபோல் குமுறிடுவாள்
கைந்நன்றி மறந்திடுவாள் - பெரியரைக்
கண்டபின் ஆசனம் கொண்டும்உறைவாள்
செய்ந்நன்றி கொன்றிடுவாள் - இதழினைத்
தின்றிடுவாள் செற்றந்துன்றிடுவாள்
செய்வன செய்யாதாள் - செயாதன
செய்திடுவாள் எரி பெய்திடுவாள்

உய்வகை தெரியாதாள் - இதுசெயின்
உறும்பழியென மனம் கிறுங்காதாள்
யாசகர் தமைப்போல - வீடுவீடாய்
ஏகியே புளிஉப்பிங்கு ஈயுமென்பாள்
ஆசகல்அரிசியென்பாள் - அம்மியிட்டு
அரைத்திடப்பலசரக்கு அளியும்என்பாள்
கொச்சிக்காய் தாருமென்பாள் - கூசாமலே
கொஞ்சமஞ்சல்இஞ்சி கொடுப்பீர்என்பாள்
பச்சைப்பாக்கு ஈதிர்என்பாள் - சுண்ணத்தோடு
பாங்காகத் தாம்பூலம் பணிப்பிரென்பாள்
வாங்கிடும் தொழிலுடையாள் - கேட்டார்க்கொன்று
வழங்கிடவோஉளந் - தியங்கிடுவாள்
தேங்கிய செல்வத்திலோ - தேனீபோலச்
சேர்த்துவையாள் முன்பின்பார்த்துவையாள்
வெடுவெடுத்திடுமொழியாள் - அறிஞரை
விழையாதாள்உடன் குழையாதாள்
கடுகடுத்திடும் உரையாள் - அயல்மனைக்கு
கன்னஞ்செய்வாள் வெகு சின்னஞ்செய்வாள்
கறுத்திடுமுகமுடையாள் - அதிர்ந்திடு
காலெறிந்து உதறிய கடுநடையாள்
வெறுத்திடு குணமுடையாள் - மிகுந்திடு
வேடிக்கையாள் வெகு சோடிக்கையாள்
பெண்டிர்கள் பயந்தோடும் - வெருவந்தப்
பிடாரிஒப்பாள் குத்துக் கடாரிஒப்பாள்
கொண்டியம்அறைந்திடுவாள் - கொச்சைநடைக்
குரங்கைஅன்னாள் காஞ்சிரங்காய்அன்னாள்
குணுங்கினை நிகர்த்திடுவாள் - வீணாய்வெகு
கோலங்கொள்வாள் மாயச் சாலங்கொள்வாள்

கினுங்கிய குணமுடையாள் - சிறப்பறு
சேட்டையுள்ளால் தோ லாட்டமுள்ளாள்
தோழனோடு ஆயினுநின் - ஏழைமையைத்
தோன்றப்பேசேல்எனும் ஆன்றவர்சொற்
கோளது படத்தனது - சிறுமையைக்
கூவியே யாவர்க்கும் குரைத்துச்சொல்வாள்
குடும்பத்தின் வறுமைதனைத் - தனதுஅலங்
கோலத்தைக் கணவன்தன் குறைமுறையை
இடும்புடன் எடுத்தெடுத்தே - எவர்கட்கும்
இரும்பெரும் பாரதம் ஆயிசைப்பாள்
தாய்முனம் தூற்றுவளேல் - அயலவர்
தமருடன்உலகினர் தூற்றுவரென்று
ஏயுறு மொழியறியாள் - வசைசொலி
ஈன்றபிள்ளைகடமை ஏசிடுவாள்
உண்டதும்மொழித்திடுவாள் - கணவன்றற்கு
ஓதிய ரகசியம் உடைத்திடுவாள்
கண்டபடி கதைப்பாள் - தெருச்சந்தி
காவல்நிற்பாள் கதை காவநிற்பாள்
ஊரவர்ப் பகைத்திடுவாள் - குழந்தையை
உதைத்திடுவாள் தள்ளி மிதித்திடுவாள்
பாரிலுள்ளோர் பழிக்கப் - பெரும்புகழ்
பறிகொடுப்பாள் பண வெறிபிடிப்பாள்
நன்மொழி தனைக்கேளாள் - கடைத்தலை
நாடிடுவாள் நடம் ஆடிடுவாள்
தன்மொழி சரியென்பாள் - அடிக்கடி
சன்னைசெய்வாள் மிகு நொன்னைசெய்வாள்
மோடிகள் செய்திடுவாள் - தன்மாமியை
முனிந்திடுவாள் மனம் துணிந்திடுவாள்

போடியென்றே துரத்தி - அவள்மயிர்ப்
புல்லிடுவாள் பல் சொல்லிடுவாள்
சொல்லு மைத்துனிகளுடன் - அடிக்கடி
சோலிகொள்வாள் வெகு கேலிசொல்வாள்
வல்லடி வழக்காடி - அவர்தலை
மயிர்பிடிப்பாள் கன்னத் திடிஇடிப்பாள்
மாமனை உறுக்கிடுவாள் - எளியவர்
மடிபிடிப்பாள் அடி பிடியெடுப்பாள்
வீமனொத்தவர் எனினும் - அவரையும்
வெருட்டிடுவாள் விழி புரட்டிடுவாள்
ஆடவர் அவைக்கஞ்சாள் - பொருள்வர
அளவுக்கு மேற்பட்ட செலவுக்குஅஞ்சாள்
தூடண மொழிஅஞ்சாள் - மகார்தமைத்
தூக்கிக் கொஞ்சாள்உயிர் போக்கற்குஅஞ்சாள்
இராவணன் தங்கைஒப்பாள் - மவுனமாய்
இருப்பவர் தமைப்போருக்கு இழுத்திடுவாள்
அராவென விஷம்பொழிவாள் - தெய்தாவென
ஆலாலம் போலவே ஆர்த்திடுவாள்
தன்மூச்சுக் கொண்டுஎழுவாள் - தலைவன்தன்
தகும்பேச்சை வெயின்மஞ்சட் பூச்சாக்குவாள்
சென்மத்துப் பகையெனவே - பிள்ளைகளைத்
திரும்பிப்பாராள் சற்றும் விரும்பிப்பாராள்
வழக்குரை ஆடிடுவாள் - இதுசெய
மாட்டெனென்பாள் இதென் நாட்டம்என்பாள்
உழக்குஅரிசியிலுமொரு - பெருஞ்சண்டை
ஓட்டிடுவாள் வாதம் தொட்டிடுவாள்
கத்தரிக்காயினும்ஓர் - பெருஞ்சண்டை
காவிக்கொள்வாள் வாது தாவிக்கொள்வாள்

பித்தினர்போல்நடப்பாள் - பயனில்சொற்
பிதற்றிடுவாள் வாளா மிழற்றிடுவாள்
வாயிடை அடித்திடுவாள் - அறுப்பென
வயிறொடிப்பாள் பிறர் எயிறுஒடிப்பாள்
நாயெனக் குரைத்திடுவாள் - குடிக்கொரு
நமனைஒப்பாள் பெரும் அமலைவைப்பாள்
கற்புஅகம் காவாதாள் - மனமெனும்
காவல்விட்டாள் பொருள் ஆவல்தொட்டாள்
கற்பனை நினைந்திடுவாள் - எவரொடும்
கடுத்தஞ்சொல்வாள் - பகை தொடுத்துஅஞ்சிடாள்
தரித்திரம் பொறுக்காதாள் - அதுவரிற்
தாங்கிக்கொள்ளாள் புகழ் வாங்கிக்கொள்ளாள்
பொரிக்கறி தனிற்கீரை - அன்பாயிடிற்
பொன்கறி யாமென நன்கறியாள்
முப்பழம் ஆனாலும் - புழுங்கியே
முனிவுடன் படைப்பதின் முகமலர்ந்தே
உப்பில்கூழ்வார்த்தாலும் - சதமடங்கு
உத்தமமென நெஞ்சத்து உணராதாள்
பாசாங்கு பண்ணிடுவாள் - பத்தாவினிற்
பரிந்தவள் போனிலம் விழுந்தழுவாள்
ஆசாகிறென் என்பாள் - வெளிவேட
ஆசாரம் செய்திடக் கூசாதாள்
அன்றில்போற் பிரியேனென்பாள் - பொருள்வர
வற்றதுஎன்றால் என்ன பற்றதுஎன்பாள்
தன்தலைவனுக்கோர்தலை - அயலவன்
தனக்கொரு தலைதந்தும் அலங்கைவெல்வாள்
பச்சிலை காவியொப்பாள் - வரும்பழி
பாராதாள் அறஞ் சாராதாள்

கச்சணிவேசியர்போற் - பொருள்மிசை
கணவனைப் பார்க்கினும் மனதுவைப்பாள்
பொருளிருக்கும் வரைக்கும் - உடன்கட்டை
போவனெென்பாள் அது போனபின்போ
அருள்அகம் அணுவும் இல்லாள் - புருஷனை
அகத்தினின்றே புறத்து அகற்றிடுவாள்
நெய்யறு விளக்கதுபோற் - பொருள்வளம்
நீங்கிவிட்டால் உனக்கு ஈங்கெனுடன்
கவ்வையேது என்றுரைப்பாள் - கடைக்கோடி
காத்திடுஎன்பாள் கஞ்சி ஊற்றஎன்பாள்
மதனனில் அலங்கார - வடிவுடை
மாப்பிள்ளை ஆயினும் வாழ்க்கையற்றாற்
கதவுக்கப்பால் நில்என்பாள் - கரந்தனிற்
காணங்கண்டால் வாரும்காணும்என்பாள்
அழுதிடும் பெருங்கள்ளி - வெளிக்குநல்
ஆசாரஞ்செய்திடு மாயக்கள்ளி
தொழுதிடும் கள்ளியென - உலகர்கள்
சொலுங்கள்ளிகளை வெலும் பெருங்கள்ளி
இவளெனப் பெயரெடுத்தாள் - கணவனுக்கு
இவளைவிட்டேன் வேறு ஏமனெனவே
அவனியுற்றோர் சிரித்தற்கு - இடம்வைக்கும்
அபசாரிபெரும் அகங்காரி
அரைக்காசுக்கு அழிந்தகற்பு - திரும்பப்பல்
ஆயிரம்பொற்காசை அளித்தாலும்
தரைக்கணே மீளாதென்றே - உலகினர்
சாற்றிய மூதுரை தனைப்பேணாள்
சினத்தறுத்து எறிமூக்கை - மகிழ்வொடு
சிரித்தெடுத்து இசைப்பினும் சேராதாம்

எனச்சகத்தவர்வழுத்தும் - மொழிசெவி
ஏறாமல் உணராமல் இழிசனர்போல்
வெற்றிலைக் கீற்றினுக்கும் - அதனுடன்
மென்றிடு துவர்க்காய்க் கூற்றினுக்கும்
விற்றுஅருமானம் உண்பாள் - அந்தோவந்தோ
மீளாதவசைக்கடல் வீழ்ந்துஉழல்வாள்
செல்வம்வந்துறும்காலைத் - தெய்வந்தனைத்
தேடாதாள் துதி பாடாதாள்
சொல்வன அறிந்துரையாள் - நிரப்புறு
சுற்றமித்திரர்கட்குத் துணைபுரியாள்
பாலூட்டிவளர்த்தாலும் - பழங்குணப்
பான்மைவிடாப் பவ னாசனம்போல்
ஆலமதே சொரிவாள் - அடியெடுத்து
அடுத்தவர் நடுங்கிட மிதித்திடுவாள்
அற்றிடும் குளத்தைவிட்டே - பறந்திடும்
ஆசுகம்போல் தனது அன்பன்தனை
உற்றிடு பிணிவறுமை - பிடிக்கில்விட்டு
ஓடிடுவாள் அன்பு மாறிடுவாள்
ஐயையோ வின்னனபல் - குணஞ்செறி
அரிவையந்தமைத் தமக் கருந்துணையாய்
வையக மதிற்கொண்டோர் - நிலைமையை
வகுத்திட ஆயிரந் தாரமன்னும்
சேடனால் முடியாது - கவீச்சுர
சேகரர் தம்மாலும் தீராது
பாடிட என்னாலே - முடியுமோ
பாரோரே நீவிர் பகர்வீரே
அந்நிலை அரிவையினைப் - பெண்ணாய்க்கொண்ட
ஆடவன் இடிக்குமோர் - மாடோடே

துன்னிடுவடமொன்றிலே - அநுதினம்
 துவக்கப்பட்டான் கட்டி இறுக்கப்பட்டான்
பாம்புடன் ஓருவளையில் - அநுதினம்
 பதுங்கியுற்றான் விழி பிதுங்கி யுற்றான்
தாம்பது கழுத்திலிட்டான் - புலியுடன்
 தங்கியற்றான் பெருஞ் சங்கையற்றான்
பிடாரியைப் பெண்டுகொண்டான் - நெருப்பினைப்
 பெருமடி அதனிடை பெய்துகொண்டான்
எடாச்சுமை எடுத்துக்கொண்டான் - நரகத்தை
 இம்மையில் இதயத்தில் ஏற்றுக்கொண்டான்
அழுந்திய நோய்கொண்டான் - ஆறாத்துயர்
 ஆழியலே விழுந்து அமிழ்ந்திக்கொண்டான்
கொழுந்துளரி இடைவீழ்ந்தும் - இறந்திடாக்
 குற்றுயிரோடுஉடற் கோதுகொண்டான்
தலைசொறிந்திடவேண்டித் - தழற்கொள்ளி
 தன்னைக்கொண்டான் வாயில் மண்ணைக்கொண்டான்
இலகிய பணிகாரப் - பெட்டியென்றே
 இரைந்தகட்செவிப்பெட்டி எடுத்துக்கொண்டான்
கம்பளி மூட்டையென்றே - கரடியைக்
 கட்டிக்கொண்டான் முத்தம் இட்டுக்கொண்டான்
அம்புலிமானென்றே - விளக்கெடுத்து
 அறியாமற் கூரையில் அடக்கிக்கொண்டான்
அட்டமத்துச் சனியை - வட்டிக்குக்கொண்டு
 அருமுடிச்சாய்க்கட்டி அரையில்இட்டான்
வெட்டுங்கோடரிதன்னை - எதத்துடன்
 வீணாகப் பதந்தனில் வீழ்த்திக்கொண்டான்
என்றவன் தனக்குவமை - சொன்னாலுமிங்கு
 இசையாதாம் அது வசையாமே.

துன்றுமிப் புவிதனிலே - அன்னோன்படும்
துயரங்கண்டேன் பெரும் அருருங்கண்டேன்
கண்டுளம் பதைபதைத்தேன் - தலைதனிற்
கையைவைத்தேன் அந்தோ ஐயோஎன்றேன்
பண்டுள பழம்பொருளே! - அவற்கருள்
பாலியென்றேன் அருள் ஈதியென்றேன்
இவைமுறையோஎன்றேன் - உலகத்தில்
இல்லற நெறிமுறை இவையோஎன்றேன்
நவைதமைத் தீர்ப்பிரென்றேன் - கற்றாய்ந்திடு
நல்லவரேயிதை வெல்விரென்றேன்
அரசரே கேளிரென்றேன் - செங்கோல்கொண்டு
அகற்றி ரென்றேன் பறக் கடிப்பிரென்றேன்
குரவரே தேரிரென்றேன் - இல்லாச்ரமக்
கொடுமையை அடியோடே முடியுமென்றேன்
பரமன்தன்பொறுப்பிலெல்லாம் - விட்டேன்விட்டேன்
பாசம்விட்டேன் பவ நேசம்விட்டேன்
கரசரணாதியுடல் - உயிர்பொருள்
காக்கவிட்டேன் நொண்டி யேற்கவிட்டேன்.
தந்தன தனதனனா.

# அகோ! வாரும்பிள்ளாய் நொண்டீ!

**நொண்டீ! இல்லறத்திற்கு ஆகாத மாதரின் இலக்கணத்தைச் சிறுவரும் எளிதிலுணர வசன நடையிற் கூறும் பிள்ளாய்!**

**ஆம்! ஆம்!**
**அப்படிச் செய்கின்றேன் கேளும் ஐயா!**

பூர்வகாலத்தில் விவாகஞ்செய்யமாட்டேன் என்று மறுதலித்த ஓர் வாலிபன் தன் தந்தையை நோக்கி: “என் பிதாவே! அன்னை தந்தையரில்லாதாள், கிளை யில்லாதாள், திருவில்லாதாள், குடிப்பிறவாதாள், நோயுற்ற பெற்றாரிடம் பிறந்தவள், நோய்க்காரி, ஊமை, செவிடி, முடத்தி, பிறவீடுசெல்பவள், கணிகையர் போற் பார்ப்பவள், ஆடவரைக்காணும் ஆசையாற் கடைத்தலைசெல்பவள், அலங்காரத் திற் பிரீதியுள்ளவள், சிறுகண்காரி, வயதிற்குமூத்தவள், நெடுமி, குறளி, அதிகம் பருத்தவள், மிக மெலிந்தவள், பொன்போலுங்காயத்தாள், கருநிறத்தாள், பசப்பினள், வெளுப்பினள், நாணம், மடம், பயிர்ப்பில்லாதாள், நரைமயிரி, மிகுந்தபலசாலி, பெற்றோர் ஆணைகடப்பவள், சினத்தி, அன்னநடையில்லாள், விரனிலத்திற்படாதாள், கூத்துப்பிரியை, தேவன்பில்லாள், குருவையிகழ்பவள், உயிர்நேசமில்லாள், மனக் காவலற்றவள், இடிபோல விலங்குபோல உரத்துப் பேசுபவள், பெற்றவர் குறிக்கமுன் ஒருவரில் மனப் பற்றுவைப்பவள், மறுவுற்ற முகத்தினள், கூசுகண்ணினள், சாய்ந்த பார்வைக்காரி, பூனைக்கண்ணள், செங்கண்ணள், செம்மயிரி, நிலம்படுகேசத்தினள், குறுஞ்செவியினள், உயர்ந்த பல்லினள், வாய், நகம், கை, உள்ளடி சிவவாதவள், இடை சிறிதாயிராதவள், இப்பெயர்ப்பட்டார் இல்வாழ்க்கைக்குத் தகாதாராதலின் இவரை யான்வேண்டேன்” என்று கூறினன். அவ்வாலிபன் குறித்த இலக்கண

விதிகள் அதி திட்பநுட்பமாகவே, தற்காலக் கிரமப்படி இல்லத்துக்கு உபயோகப் படா ஸ்திரீகளின் தன்மைகளைச் சுருங்கச் சொல்கிறேன் கேளும் ஐயா!

தெய்வபயமும் தெய்வ சிந்தனையும் தெய்வவழிபாடுமின்றிய சீர்கேடியும், "சீறுபீறான" குணக்காரியும், "சொற்கழகு இரண்டாகுதல் மூன்றாகுதல்" என்றதற்கு மாறாக ஒழுக்குவீடுபோல ஓயாமாரியாய் வார்த்தைகள் மல்க அலட்டிக்கொண்டி ருக்கும் வாய்க்காரியும், தன் வீடுவிட்டு அடிக்கடி தாய்வீடும் அயல்வீடும் நோக்கித் திரியுந் தொழிற்காரியும், நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் மகடூஉக்குணங்கள் மருந்துக்குமில்லாது அநாவசியமாய் ஆடவர் மத்தியிற்செல்லும் அவாக்காரியும், தக்க காலத்திற் தன் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் அன்னஞ் சமைத்துப் பரிவாயீயாத சுமடியும், "சாப்பாட்டிராமன்" எனப் புருஷனை வைது தான் ஆக்கி யதை ஒளித்துவைத்துத் தனிமறைவிலிருந்து விலாப்புடைக்க உண்டு ஏப்பமிடும் பேருண்டிக்காரியும், முதியோரைக்கண்டு ஆசனமும் படுக்கையும் விட்டெழுந்து ஆசார உபசாரஞ் செய்யா அகங்காரியும், "பிள்ளைப்பெறா மலடி" என்று பிறர் நிந்திக்கத் தன் பிள்ளைகளை நின்றாலுதை கிடந்தால் மிதியெனத் தண்டித்து வருத்தும் நிட்டூரியும், பொருள்வரவுக்குமேற்பட அழிமதியாய்ச் செலவுசெய்யும் அழிப்பாளியும், 'பணமென்ன பாஷாணம்! உமது பட்சம் எனக்கொரு லட்சம் பொன்னல்லோ" என்று முன்னாப் பாராட்டியும், பொருள் சமைந்தவுடன் "போடா அப்பாலே, பெண்ணை விட்டுப் போடா அப்பாலே" என்று கலைக்குந் தாசிபோல உழைப்புக் குன்றியவழி" வெளிக்கிடு படலையால்" என்றுரப்பித் துரத்தும் துராசாரியும், விருந்தர் வந்தபோது "ஈருரீஇப் பேன்பார்த்து" இங்கிதமான வார்த்தை கூறி நம்மன்பர்க்குச் சாதம் படை அம்மா என்று நாயகன் வேண்டப் "பாடினாள் பேய்ப்பாட்டைப் பாரச்சுளகெடுத்துச் சாடினா ளோடோடத்தான்" என்ற சீலம் விருந்தர் வரக்கண்டு தன் நாயகனைப் பிடரியிற் பிடித்து வெளியில் விட்டுச் சாடித்துரத்தும்

சழக்கியும், தன்பத்தா இலவணமென்றாற் புளியும், நெருப்பென்றால் நீரும், உரலென்றால் உலக்கையும், சட்டியென்றாற் பெட்டியுமாய் முட்டுயுத்தத்திற் கிளம்பும் சண்டைக்காரியும், தன் வீடு வாழ்படவிட்டுப் போய்ப் புற வீட்டுக்கோடி தூங்கும் தப்பிலியும், வேற்றாடவரைக் காணுங் காதலாய்க் கடைத்தலைபோய்க் காத்துத் தூங்கும் ஆசாரக் கள்ளியும், ஊரென்றும்பாராது உறவென்றும்பாராது வல்லியம் போலெழுந்து சல்லியத்துக்கு யத்தனமாய் நிற்கும் தறுகண்ணியும், “சிரித்தையே சீரைக்குலைத்தையே” என்னும் உலகவசனார்த்தம் உணராது அளவிற்கு விஞ்சிய சிரிப்புக்காரியும், “ஒருபெண் பேசினாற் பூமி அதிரும். இருபெண் பேசினால் வான மதிரும், மூன்று பெண் பேசினாற் கடல் சுவறும், நாலு பெண் பேசினால் உலகம் யாதாகுமோ?” என்னும் உலகப்பேச்சை மறந்து மலைமேல் இடியெனக் கேட்போர் காது துண்ணென உரத்துப் பேசும் உழறுவாய்ச்சியும், வேளைக்கு முன்னும் வேளைக் குப் பின்னும் பெருந்துயில் கொள்ளும் வேதாளியும், நோய்கொண்ட காதலனைக் காதலாய்ப் பார்த்துக் கடமை புரியாத கர்மியும், சுற்ற மித்திரரை எட்டியும் பார்க்க விடாது தன் இல்லத்தைப் புலிகிடந்த தூறாக்கும் பேய்ச்சியும், தன் நிறையைக் காப்பாதே தலைமை எனக்கொள்ளாது கற்பென்னும் வேலிகடந்தோடும் உதறு காலியும், பாலே, தேனே, கண்ணே, கற்கண்டே என்று முகமுன்னிலையிற் கூறி ஏதிலன்மேற் கண்ணெறியும் இரண்டகவாதியும், தான் இச்சித்த வஸ்திரா பரணாதிகளைச் சம்பாதித்து ஈயாக்கால் கிழமே, பிணமே, தோஷியே, மூதேவியே, என இலக்கை கெட வம்புதும்பு பேசி நாயகனை, ஏளனஞ்செய்யும் அசங்கியக் காரியும், கைப்பிடிநாயகனைத் தூங்கவைத்து அப்பால்அயலிற் பரபுருஷனை நாடிப் போகும் அவசாரியும், சினங்கொண்டு மங்கலசூத்திரத்தை அறுத்தெறிந்து வெறுங் கழுத்தோடிருக்கும் காளியும், பீளைசாறி, ஈளைமீறி, வாய் நீர் மலிந்து, வடிவு கொலைந்து, கண்ணும்புகைந்து, காதுமத்தித்து, சொல்லுத்தளர்ந்து, விற்போல் முதுகுகூனிச், சுரைவித்துப்போலும் பல்லுக்கழன்று நீண்டு, கால்தடுமாறிக் கோலெடுத்

தூன்றி, முக்காலினடக்கும் வயோதிகமடுக்கும்போது, இவனாரடா சனி, எனக் கேனடாவினி என்று காந்தனைக் காய்ந்து கடுகடுக்குங் காந்தாரியும், இன்பத்திலுந் துன்பத்திலும் வாழ்விலுந் தாழ்விலும் மறவேன் துறவேன் என்று கைகொடுத்துத் துன்பமுந் தாழ்வும் வரும்போது, நீயாரோ நானாரோ என விட்டுப்பிரியும் நீலியும், ஐயா துய்யாவென்று அன்புபாராட்டி, இமைக்கொரு சொட்டாய்க் கண்ணீருகுத்து மாய்மாலஞ்செய்தும், கை வளங்குறைந்தபோது 'என்றுதான் இவ்வறுப்பான் என்னை விட்டுப் பறப்பான்' என்று திட்டிச் சபிக்கும் சாலக்காரியும். செல்வப்பெருக்கில் அடிக் கொரு நடிப்பும் நிரப்பில் மடிப்பிடித்திழுப்புஞ் செய்யும் ஆண்மாரியும், "ஓதலுமொன்றா யுளமொன்றாய்ச் செய்கையொன்றாய்" நடிக்கும் படுகள்ளியும், சத்தியத்தை மறைத்து அசத்தியம் பகரும் அநியாயக்காரியும்,"உண்டிக்கழகு விருந்தோடுண்டல்" என்பதை மறந்து வந்தவன் பசியிருக்கத் தன்தொந்தி நிறைக்குங் குண்டோதரியும், "கல்வியழகே யழகு" எனத் தக்க காலத்திற் கல்லாத முகடியும், குஞ்சியழகும் மஞ்சலழகுஞ் செய்தும் நெஞ்சை அலங்கரியாத வஞ்சியும் அடக்க ஒடுக்கங்களோடு கிரகத்த மைந்து தன் அலுவல் பாராது திரியும் பிசாசியும், தாம்பூலம் பெரிதென மகிழ்ந்து ஆங்காரியத்தை அசட்டைசெய்யும் அசதியும், சமாதானத்தைப் பங்கப்படுத்தி வீட்டாருட் பகைவிதைத்துக் கோண்முடியும் குட்டுணியும், குடும்ப சம்ரட் சணைக் கவலையொழித்து இடம்பக்கவலை வளர்க்கும் இடும்பியும், நாளையை நினைந்து ஒறுத்துவையாது அன்றன்று வயிறுகழுவும் ஊதாரியும், பள்ளியறையை விட்டுக் கிளம்பாது இன்னுமொருகண் நித்திரை பின்னுமொருகண் நித்திரை என்று மூலையிற் குணுகிக்குணுகி உறங்கும் குணுங்கியும், கட்டியது பிற்றல் பூட்டியது கொந்தல் தா, தா, வேறேயென்று தத்திமிதெய்யெனத் தாளம்போட்டு நடனமாடுங் கிறுக்கியும், மானே தேனே, நாயே, போடா, வாடா, பித்தா, மத்தா என்று குளறி வெறுக்கும் உளறுபடிக்காரியும், தான் கொணர்ந்த சீதனவஸ்திராபரணங் களையிட்டுப் பாராட்டும் வீம்பியும், ஐயோ! இப்பாவியையிட்டுக் குட்டிச் சுவரா னேன்; இவன் சாகலாகாதா?

தீப்பற்றி வேகலாகாதா? எனப் பத்தாவையிட்டு மனநோகும் சண்டாளியும், தான் அன்னமும் பாலும் உண்டு தன்குழந்தைகளுக்குத் தவிடும் நீருமூட்டும் இராட்சதியும், தான் கிருதகுளபாளிதமாய் உண்டு கணவனுக் குக் கஞ்சியுங் கூழுங்காய்ச்சி ஊற்றும் துண்டரிக்கக்காரியும், கள்ளுவாங்கிக் குடித்துச் சள்ளுவாங்கித்திரியும் சடுத்தக்காரியும், புருஷனைப் பத்துத்தலைப் பூச்சிபோற் கட்டியாண்டு இல்லாத பொய்மெய்யெலாஞ் சொல்லி மூட்டித் துரோகஞ் செய்விக்கும் புலைச்சியும், மாமியோடும் மைத்துனிகளோடும் கடாச் சங்காத்தஞ் செய்யும் அதர்மியும் இல்லத்துக்குரிய மாதரல்லர். இப்பெயர்ப்பட்ட பெண்கள் வாழப் பெற்ற இல்லம், பேய்வாழ் இல்லம், நாய்வாழ் இல்லம், புலிவாழ் இல்லம் என்று கூறப்படத்தக்கதன்றி மற்றும்படி யன்றெனக் கண்டுகொள்க.

71

## வாழி.

**தந்தன தன தனனா - தனந்தன - தானானே தன தானானே.**

**மாபரனாமம் வாழி - அவர்தந்த**
**மறை வாழி அருள்மழை வாழி**
**பூபர்கள் குலம் வாழி - அவரணி**
**புரையறு மகுடம் பொற் கொடி வாழி**
**தேவ தானங்கள் வாழி - திருத்தொண்டர்**
**திறம்வாழி அவர்செயம்வாழி**
**பாவலர் குலம் வாழி - அவர்புகல்**
**பண்புறு பாடல்கள் பல வாழி**
**செந்தமிழது வாழி - பிறர்குற்றம்**
**தேடாத மேலவர் செயல் வாழி**
**தந்திடுபிழைகளெல்லாம் - பொறுத்தருள்**
**தாவின்மேதாவியர் தாம் வாழி**
**நாவலரவை வாழி - நல்லோருடை**
**நாட்டங்கள் கூட்டங்கள் நனி வாழி**
**பூவையர் நெறி வாழி - அவர்புரி**
**புனிதஇல்லறஞ் சிறப் பொடுவாழி**
**சங்கங் கணிதம் வாழி - தானஞ்செயும்**
**தனுசர்கள் சிறுமியர் சதம் வாழி**
**துங்க பண்டிதர் வாழி - கல்லூரிகள்**
**பாடசாலைகள் படிப்பவர் வாழி**
**கொண்டலின் கணம் வாழி - குண்டுகுளம்**
**கூபங்கள் நிறைத்திடு குயின் வாழி**
**செந்நெலின் வகை வாழி - தாலமெனும்**
**சீர்பெற விருக்கத்தின் திரள் வாழி.**

# இல்லற நொண்டி 72

தென்னையந்தரு வாழி - உயர்ந்தபற்

சேகரகுலிகஞ் சிந் துரகம் வாழி

அரம்பைகள் மிக வாழி - பலாவொடு

அரும் ரசவாம்பிரம் அவை வாழி

திரம்பயிலிதை வாழி - வணிகமும்

சீரேறும் ஏரதும் தினம் வாழி

ஆனினங் குலம் வாழி - அருணத்தோடு

அருங்கரு மேதியி னான் வாழி

தேனும் பாலும் பெருகித் - தேசமெங்கும்

தேசுடன் செழிப்புற்றிச் செகம் வாழி

விக்தோர் யாராணி வாழி - அவருடை

வெற்றிப் பிரதாப வீரர் வாழி

யுக்தி சேரெண்ணர் வாழி - அவராளும்

உலகம் வாழி இந்தி யூர் வாழி

இலங்கை மாபுரி வாழி - அதன் சிரமென

இலங்கெழில் யாழ்ப்பாணமும் வாழி

துலங்குமில்லறம்புரிந்தே தர்மஞ்செயும்

தூயவாடுஉமக ளுஉ வாழி

நொண்டியிது வாழி - என்நொண்டியில்

நொண்டாதார் அன்பு குன்றாதே

கொண்டவர் தாம் வாழி - சதானந்தக்

குணநிதியாமதி குணன் வாழி

தந்தன தன தனனா.

# கீர்த்தனா சங்கிரகம்

இஃது

உதயதாரகைத் தமிழ்ப் பத்திராதிபரும், யாழ்ப்பாணக்

கல்லூரித் தமிழ் ஆசிரியருமாகிய

அ. சதாசிவம்பிள்ளை

இயற்றியது.

# KEERTTANA SANGRAHAM

A COLLECTION OF SONGS

COMPOSED BY

J.R. ARNOLD

*Tamil Editor, "M.Star," and Vernacular Professor.*

Jaffna College.

**[COPY RIGHT REGISTERED.]**

MANIPAY
Strong and Asbury, Printers
1890.

# பாயிரம்

தெய்வ ஸ்துதி தோத்திரங்களைக் கனிவுஞ் சந்தமுமான பாக்களில் இயற்றி ஆராதனை, பிரார்த்தனை, மனோ தியானங்களுக் குரிய தருணங்களில் ஆலயங்களிலும் குடும்பங்களிலும் மன அன் போடும் ஆனந்தத்தோடும் அத்தியந்த பயபக்தியாய்ப் பாடல் எம் சாதியார் வழக்கம்.

இவ்வழக்கம் விருத்திபெறுவதற்கு உபயோகமான பாடல்கள் யாழ்ப்பாணக் கிறிஸ்த சாகியத்தாருக்குள் இல்லாமைகண்டு விசன மடைந்து இற்றைக்கு நாற்பது வருடங்களின் முன் பல கீர்த்தன ஸ்தோத்திரங்கள் பாடி அச்சிடுவித்தோம். காலாந்தரத்தில் அவைகள் இல்லாதருமைப்பட அவற்றை இரண்டாம் பதிப்பிற் பிறப்பிக்க வேண்டு மென்னும் வாஞ்சை பலமுறை எம்மை அருட்டியும் சாவகாசப்படாமை யால் அக்கருத்தை விட்டுவிட்டோம்.

அது அவ்வாறாக, முன் யாழ்ப்பாணத்திருந்தவரும், தற்போது அலுவல்முகாந்தரம் இங்கிலாந்து சென்றிருப்பவரும், பரோபகாரம் இயல்பிற் குடிகொள்ளப்பெற்றவருமாகிய லீற்சு அம்மாமார் அங்கிருந்து எமக்கனுப்பிய ஒரு கடிதத்தில், நீர் சில கீர்த்தனங்கள் பாடினாலோ என்று எழுதிய அன்புரைகள் நவமாய்ச் சில பாட நம்மை அருட்டி விட்டன. அவ்வாறு உற்பத்தி பெற்றவைகளோடு முன் இரண்டாம் பதிப்புக்கென்று பின்போட்டு வைத்தவைகளுட் சில சேர்த்தனம்.

இவ்விருதிறக் கீர்த்தனங்களோடு சிநேகிதர் சிலரது வேண்டு கோளின்படி விவாகம், பிரதிஷ்டையாதிய சமயங்களுக்காக நாம் பாடிக் கொடுத்தவைகளுள் எம் கைவசம் மீந்திருந்த சிலவற்றையும் அச்சிடுவித்து மதுவிலக்குப் பதங்களையும் ஒரு விண்ணப்பத்தையுஞ் சேர்த்தோம்.

வர்ண சந்த பேதங்களுக்காக ஆனந்தக்களிப்பு, எச்சரிக்கை, பராக்கு, இலாலி என்னுஞ் சில பாவினங்களை இவற்றோடு சேர்த்தன மாயினும் பெரும்பான்மைப் பொருள்பற்றிக் கீர்த்தன சங்கிரகம் என்னும் நாமகரணத்தை இவற்றிற்கிட்டோம். விபரீத மெட்டுகள், தாளங்கள் போட்டுப் பாடவேண்டினோர் அசைகள் அட்சரங்களை நீட்டிக் குறுக்கிப் பாடுவாராக.

மற்றைய எம் பாடல்கள் புத்தகங்களை அனுமானித்துப் பாராட்டினாற்போல எம் நேசர் இதனையும் பாவிப்பாரென்ற நம்பி அரங்கத்தில் விடுகின்றோம். எனது அபிப்பிராயஞ் சித்திபெறத் திரியேக தேவன் அனுக்கிரகிப்பாராக.

**ஆக்கியோன்.**

# இவ்வாசிரியர் செய்த வேறு நூல்கள்

## பத்திய ரூபம்

| | |
|---|---|
| மெய்வேதசாரம் | நன்னெறிமாலை |
| திருச்சதகம் | இல்லறநொண்டி |
| நன்னெறிக்கொத்து | வெல்லையந்தாதி |

## கத்தியரூபம்

| | |
|---|---|
| நன்னெறிக்கதாசங்கிரகம் | வானசாத்திரம் |
| சாதாரண இதிகாசம் | பாவலர் சரித்திர தீபகம் |

# PREFACE

The little work, which we present to the public, was attempted at the kind wish and earnest request of our esteemed and worthy friends, the Misses Leitch, while in England.

In addition to a number of lyrics on various subjects and to different tunes, we have, for the sake of variety and diversion, made some special songs, such as *Anandakalippu, Parakku, Echcharikky,* and *Ekkalakkanny.* These later are a species of poetry, much liked and prized by the Tamil people in general, for devotional purposes.

To the set of songs, thus newly composed, we have added a number of old lyrics, composed and published by us some forty years ago, in one of the appendices to another work of ours, entitled *Meyvathasaram* besides some temperance, marriage, and dedication songs prepared by us occasionally at the request of several friends. To these we append one other old poem of ours *Gnanavinnappam* or Spirtual appeal.

With this brief introduction, we launch our little craft before the public, and expect to receive the same leniency that we experienced in all our previous undertakings. We do not pretend to say that we publish a novel or rare work, attempted by no one else, although we were the first in the Tamil Christian community of the Province who had the boldnes to print and publish religious songs and poems. With other works now extant, we have every hope that this little book will help to atone the scarcity of Christian Tamil literature in our land, and promote ture Christian piety in all native households and religious gatherings.

At the sacred feet of the sufferer at Calvary, therefore, we lay this as an humble tribute.

**J.R. ARNOLD.**

# Works by the same Author.

## POERTY

MEYVATHASARAM
TIRUCHCHATHAKAM
NANNERIKOTTU
NANNERI MALAI
ILLARA NONDY
VELLAI ANTHATHY

## PROSE

MORAL TALES
UNIVERSAL HISTORY
COMPEND OF ASTRONOMY
GALAXY OF TAMIL POETS

# கீர்த்தன அந்தாதி.



| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| அபயம் அபயம் | - 43 | குடியே நின்னாற் | - 72 |
| அபிஷேகம் | - 66 | கோட்டையைப் | - 71 |
| அரியநின் | - 24 | சரணபங்கயம் | - 39 |
| ஆ! எனக்காக | - 33 | சாகும்பாவிகாள் | - 12 |
| ஆசின்மறைக் | - 10 | சிங்காரமான | - 36 |
| ஆசீர்பதிக்க | - 56 | சுந்தரஞ்சேர் | - 21 |
| ஆதிபரமனை | - 1 | சொல்லிவந்து | - 35 |
| ஆபத்துத் | - 30 | தற்பரனாமொரு | - 49 |
| ஆளவாராய் | - 44 | தற்பரனேசீயோன் | - 49 |
| இந்தக்காயத்தை | - 38 | தாருங்கிருபை | - 64 |
| இந்தத் தேவாலயத்தை | - 61 | திருவளரும் | - 7 |
| இந்நாள்வரை | - 26 | தேடித்தேடித் | - 42 |
| இனியொருபோதும் | - 69 | தேவசுதன்றனை | - 11 |
| எண்ணித்துணிந்து | - 37 | நரகமென்ற | - 51 |
| எது வேண்டும் | - 68 | நாளைக்கிருப் | - 29 |
| எல்லாநினக்கே | - 19 | பட்டபாடு | - 73 |
| எனையாட்கொள | - 40 | பதியே என்மேற் | - 51 |
| என் சிலுவை | - 15 | பரமண்டலம் | - 18 |
| என் மேலிரக்க | - 47 | பாவத்தைச் | - 28 |
| என்ன முகாந்தரம் | - 45 | பூவார்உலக | - 9 |
| என்னாத்துமாவே | - 22 | மங்கலியம் | - 58 |
| என்னுடை | - 55 | மதுவைக்குடியாதே | - 67 |
| என்னெஞ்சே | - 34 | மனமேயுனக் | - 23 |
| என்னையாதரி | - 48 | மேசியா யேசையா | - 31 |
| ஏதந்தீர்த்தெனை | - 16 | மோட்சமண்டல | - 53 |
| ஐயாவென்யேசு | - 20 | வதுவை செய்தோர் | - 59 |
| கண்டேன் கண்டேனே | - 17 | வந்தருள்வாய் | - 25 |
| கருணைக்கடைக்கண் | - 32 | வாரும் வாரும் | - 63 |
| காலமிதிலே வந்திவ் | - 62 | வாழி வாழி | - 60 |
| கிடைதனைப் பாரும் | - 41 | வானம்புவி | - 14 |

ஞானவிண்ணப்பம் - 75

# கீர்த்தனா சங்கிரகம்

## காப்பு

### வெண்பா

மூவுலகம் தந்தளிக்கும் முன்னோன் சுதன் மீது
பாவிலித கீர்த்தனங்கள் சாற்றவே - காவளரும்
வானசனமாய வதிந்தருளும் ஏகபரன்
கானார் கமலபதம் காப்பு.

## 1. மனுஷ சீவியம் - Human Life

### நேரிசை வெண்பா

அகிலாண்ட கோடியெலாம் ஆரோர் மொழியில்
நிகழும் படிபணித்த நீதன் - அகமகிழ்ந்து
தந்தவுயிர் மெய்த்தோற்றம் சாலும்ஒடுக்கம்தருவன்
சந்தானந்த அக்களிப்பிற் றான்.

### ஆனந்தக் களிப்பு

1. ஆதிபரமனை வாழ்த்தி - அவன்
அன்பாரும் புத்திரன் தன்பாதம்ஏத்திக்
கோதில் சுத்தாவியைப் போற்றி - ஒன்றாய்க்
கூடும் திரியேக நாதன்பேர் சாற்றி.

2. உலகத்தின் சிருட்டிப்பைச் சொல்வேன் - அதன்
ஓடுயிர் சடத் தோற்றம் ஒடுக்கங்கள் விள்வேன்
சலமத்தி விளங்குமிப்பூமிப் பூவை - வானம்
தன்னுடன் ஆதியிற் பண்ணவன் தந்தான்.

3. முதல்நாள்ஒளி வரச்செய்தான் - ரண்டாய்
முந்துநாள் வானவிரிவது தந்தான்
இதமாக மூன்றாம் நாள்வாரி - தரை
எங்ஙனும் நில்லாமல் ஏகாந்தமாகி.

4. ஓடி ஒதுங்கிடச் சொன்னான் - கிளை
உற்றிடுந் தாவரம் - பற்றிடுங் கீரை
ஓடு பல்லாதிய யாவும் - நிலம்
நேராய் தரும்படி நீதன் விதித்தான்.

5. மூன்றுநாள் இப்படிப்போக - நான்காய்
முந்திடுநாள்தனிற் சந்திரன் பானு
ஆன்றிடும் தாரகை கால - ஐயன்
ஆக்கியாபித்தபின் ஐந்தாநாட் பட்சி.

6. வகையொடு மச்சமும் தந்தான் - ஆறாய்
மன்னும் தினந்தனில் வல்விலங்கோடே
புகல்நரர் தம்மையும் தந்தான் - அன்பார்
புருடனும் பன்னியுமாக்கி உவந்தான்.

7. மண்ணால்நரனுடல் தந்தான் - அதில்
வாழ்ந்திடச் சீவசுவாசத்தை வைத்தான்
பெண்ணைஅவன் விலாஎன்பாற் - தேவன்
பெட்பாகச் சிருட்டித்துள் அற்பாகக் கண்டான்.

8. ஆதாம்ஏவாள் அவர் நாமம் - அவர்
அந்நாளில் ஆனந்த நன்னிலை உற்றார்
பேதைமையாற் பழந் தின்றார் - பேயின்
பித்துரை நம்பி அபத்தத்தில் வீழ்ந்தார்.

9. பாலும் தேனும்போல் கலந்தார் - மக்கள்
பற்பலர் தம்மையுள் அற்புடன் ஈன்றார்
காலம்வரஅவர் வீந்தார் - வீந்து
காலாதீதன் பதங் கண்டு மகிழ்ந்தார்.

10. தாதுஏழு கொண்டது உடம்பு - அதிற்
சாற்று நவத் துவாரங்களும் உண்டு
சாதுக்கம் ஆங்கதற்கு உண்டு - சோரர்
தாமும்ஓர்ஐவர்க்கு வாழ்வதில் உண்டு.

11. அன்னம் பொதியும் உருத்தி - அதில்
ஐயைம்பதோடு இரண்டு என்பு பொருத்தி
துன்னு நரம்பு நாளங்கள் - பேசி
துன்றிய கோள இரத்தாசயங்கள்.

12. தங்கும் சுவாசக் கிரகம் - மூளை
சாலும் பெருமறையாகும் கபாலம்
மங்காக் குடர்சேரும் மாடம் - அதில்
மற்றும் தளபாடம் முற்றும் பொதிந்தே.

13. எல்லாம் மறைந்திடத் தோலால் - நன்றாய்
இட்டம்அது ஆக இறுக்கமாய் வேய்ந்து

சொல்லும்பத கம்பத்து ஏற்றித் - தேவன்
சூழ்ச்சம் அதுஆக வீடொன்றைத் தொடுத்து.

14. ஆத்துமராசா என்பானுக்கு - என்றும்
ஆதிக்கமாகவே அன்பால் அளித்தான்;
காத்தவன் வாழுமிவ் வீட்டை - மேலோர்
காயக்கோட்டைஎன்று காதற் பேர்இட்டார்.

15. அந்த ராசன் தனக்கு ஒன்னார் - நிறம்
அந்தக் கோட்டைதனில் துன்னுவர் எண்ணார்
தொந்த யுத்தங்களும் செய்வார் - சூரம்
துன்றி அக் கோட்டையைக் கன்றி வளைப்பார்.

16. கோபன் பேருண்டியன் காமன் - மதம்
கொண்ட கொலையன் புலையன் செருக்கன்
மாபலம் கொண்ட ஒன்னார்க்கு - நாளும்
மாறாத நாமமென்றார் இவர்மண்டித்

17. துள்ளுவர் எள்ளுவர் யுத்தம் - தினம்
துன்றிப் புரிகுவர் நின்று சிரிப்பர்
அள்ளி ஆத்துமராசன் தன்னை - வாயில்
ஆருவம் என்றே அனுமையில் சார்வர்.

18. ஆதிசருப்பன் அலகை - இவர்க்கு
ஆதிபன் அண்டபகிரண்ட வீரன்
சோதியார் தேவசமூகம் - வெகு
சூரத்துடன் செல்லும் சூரருள் சூரன்

19. இங்கிவன் மற்றோரைக் கூட்டி - ஆத்ம
ராசனுடன் வலு பூசலைமூட்டிச்
சங்கிலியால் கட்டப் பார்ப்பான் - சிற்சில்
தருணத்தில் தோற்றுடன் தானே பறப்பன்.

20. சிற்சில போதுடன் வெல்வன் - வெல்லிற்
சிக்கிப்பிடித்துத் தோள் மூட்டினைச் சேர்த்துப்
பற்றிக் கொய்யோ சொல்லிப்பாடி - இருள்
பாதாள லோகத்துஅரும் சிறை வைப்பான்.

21. சேதனராசனுக்கு என்றும் - ஆதி
தேவன் துணைப்படை சேர்த்திங்கு அனுப்ப
ஓதனம்தனில் அந்த ராசன் - கோபித்து
உள்ளபடி அந்தக் கள்வரைச் சாடி.

22. வெற்றிவாகை புனைவதும் உண்டு - அந்த
மாற்றார் தமைச் சிறை வைப்பதும் உண்டு
ஓகைகொண்டாடலும் உண்டு - துக்கம்
ஓங்கிச் சந்தோஷம் ஒழிவதும் உண்டு.

23. இப்படித் தேகஆன்மாக்கட்கு - என்றும்
இவ்வுலகத்திற் பெரும் சண்டை உண்டு
தப்பாமல் தோற்பார் நிரயம் - என்றும்
தள்ளப்படுவர் கெலிப்பார்க்குத் தேவன்,

24. வீடொன்று மேல்வீடது ஈவன் - நரன்
வெகுகாலம் பட்சமாய் வாழ்ந்த கீழ்வீடு
பாடாய் மண்ணோடு மண்ணாகும் - அவன்
பாவித்த செல்வங்கள் பாழில் வீணாகும்.

25. ஆதலின் இக்காயம் பொய்யே - அதன்
அழகு சௌந்தரியங்களும் பொய்யே
பேதையர் மெய்யென்று சொன்னார் - அதைப்
பேறாகக் கண்டவர் பொய்என்றார் முன்னாள்.

26. ஏனிந்தக் காயத்தை வீணில் - நம்பி
எல்லாரும் மோசமாய்ச் செல்கின்றீர் கேளும்
வானம் மடமடவென்றே - இந்த
வையகத்தோடே எரிந்திடும் அன்றே.

27. சாவென்பது இயாவர்க்கும் ஒன்றே - ஏழை
சாவது போலத் தனவந்தன் சாவான்
கோவென்றும் குடியென்றும் உண்டோ - ஒரு
கோடி பேரோர் நாள் குறைவதும் உண்டே.

28. தனித்தனி சாவதும் உண்டாம் - காலன்
தான்வரும் காலத்தில்நான் வரமாட்டேன்
எனச்சொல்லி ஆட்சேபிப்பார் யார் - ஐயா
இன்றல்ல நாளை என்று ஈடு உரைப்பார் யார்?

29. தந்தவன் வாங்குதல் போலத் - தேவன்
தான்தந்த ஆவியை வான்கொண்டு போவான்
சொந்த படுகட்டை போலப் - பொல்லா
நோய்கண்ட சடக்கட்டை உடன் வீழக்கண்டோர்.

30. அப்பா அம்மா மகவென்றும் - உற
வாரே சகோதரர் ஆதியர் என்றும்
ஒப்பாரி சொல்லிப் புலம்பி - நிலத்
தோடே உரைஞ்சி விழுந்து கலங்கி.

31. ஆ! ஐயோ! என்று மார் மோதி - அழுது
அல்லகண்டம்பட நள்ளுநர்ஆய்ந்து
சாவோலை அங்கங்கு அனுப்ப - இனிச்
சாவார்கள் சட்டமாய்க் கட்டைகள் வெட்டி.

32. கட்டியெடுத்துடன் போவர் - கையிற்
காசுக்கு வளமுள்ளார் கனத்தபல்லாக்கோடு
ஒட்டுஞ் சிவிகையில் செல்வர் - பரி
ஊரும் ரதமதின் மீதினும் செல்வர்.

33. கொட்டுமுழக்கொடும் போவர் - பெரும்
கோலாகலத்தொடு கோலமாய்ப் போவர்
தட்டும் தாளத்துடன் போவர் - கட்டும்
தண்டிகைஏறிச் சமாதிக்குப் போவர்.

34. எப்படிப் போனாலும் என்ன - இதில்
ஏலும் பலாபலம் யாதொன்றும் இன்றாம்
செப்படி வித்தை ஒப்பாக - நரர்
சீவியம் மாறிடும் செல்வமும் மாறும்.

35. நங்கையர் வீட்டுடன் நிற்பர் - அயல்
நாடிய பேர்கள் நடுவழி நிற்பர்
அங்கைஅடித்தழும் மக்கள் - சுற்றத்
தாருடன் வந்து மயானம்தரிப்பர்.

36. சாம்பர் மண்ணாகும் இத் தேகம் - அதில்
சார்ந்த இயமானன் தன் எசமான் முன்
ஏம்பலுடன் சென்று நிற்கும் - ஐயன்
இன்பொடு நோக்கி மோட்ச ஆனந்த இன்பம்

37. தந்திடல் ஒன்றரும் கும்பி - அதில்
சார்ந்திடுவீர் எனன் மற்றொன்று நம்பி
முந்தும் இவற்றினில் ஏதை - வேண்டி
முந்துவீர் முந்திய தரமெனின் முந்தித்

38. தேவனுக்குப் பணி செய்வீர் - அவன்
சேர்த்த பத்துப் பணி சேமமாய் நிற்பீர்
ஆ! என்று அநியாயம் செய்யீர் - பரன்
ஆக்கினை வாங்கி அரும்பழி கொள்ளீர்.

39. தாமதமாய் வழி நில்லீர் - அந்தச்
சாலோக பாக்கியம் சார்பாதை செல்வீர்
தீமதம் ஏதொன்றும் நாடீர் - தேவன்
சீவகிரீடம் தருகுவர் வாடீர்.

40. ஏரைப் பிடித்துப் பின்பாரீர் - ஞான
யாத்திரை ஆரம்பித்து ஈரெட்டில்நில்லீர்
வீரப்பிரதாபம் கொள்வீர் - அந்த
வேதாளம் வந்தால் அடித்ததைக் கொல்வீர்

41. மோட்சத்தை லக்காக்கி நிற்பீர் - பர
முத்திவழி பிசகாமல் முன் செல்வீர்
சூட்சத்தில் சூட்சமாய்ச் சொன்னோம் - எங்கள்
சுந்தர வீரன் சுதன் குருநாதன்,

42. பாத தியானத்தைச் செய்வீர் - வானம்
பார்த்துப் பிரார்த்தனை பண்ணித் துதிப்பீர்
சாதல் தூரம் என முன்னீர் - அது
சாண் தூரத்தோடு சணத்தூரமுன்னீர்.

43. நினையாத நேரத்தில்நேரும் - நல்ல
நித்திரை செய்யும் நிமிஷத்தில் சாரும்
கனவதை வாள்நாளும் மானும் - முகில்
கான்றிடும் இன்னும் புகையும் கடுக்கும்

44. நாளைக்கு இருப்பது பொய்யே - இற்றை
நாளைக்கு இருப்பதும் பொய்யின் மேற் பொய்யே
ஓலையும் தூதும் வராமுன் - நாதன்
உச்சிதமான பதம்மறவாமல்,

45. தானாதனாவென ஆடி - ஓகோ!
தாந்தனா எனச் சங்கீதம் பாடி
ஆனந்தக்களிப்பது கொள்வீர் - தேவன்
அன்போடு அளிக்கும் அருங்கதி சேர்வீர்.

தானாதனாதந்தனானா - தன
தாந்தனா தந்தனா தந்தனானா.

## 2. பிதாச் சுதனுக்குத் துதி - Praise to God & Christ.

### விருத்தம்

தூயநன்மறைச் சொல்லில் அடங்கிடான்
தேயும்நின்று திகழ்ந்திடும் அம்பரம்
ஏயம்ஆர் சனங்கொண்டவன் என்பர
நாயன் மீது பராக்கு நவில்வனே.

### பராக்கு

1. திருவளரும் செகமளித்த தேவா பராக்கு
தேவாதி தேவ திரியேகா பராக்கு
உருவளரும் அடியர் உள்ளத் துறைவாய் பராக்கு
உம்பர்செறி அம்பரம்ஆண்டு ஒளிர்வாய் பராக்கு.

2. தந்தையென ஆண்டருள்செய் சாமி பராக்கு
தாரணியோர்க்கு இரட்சணியம் தந்தாய் பராக்கு
எந்தைபரனே மேசியாவே பராக்கு
எனைஆண்டிங்கு அடிமைகொள் இம்மானுவேல் பராக்கு.

3. ஆவிதனை மழைபோல அருள்வாய் பராக்கு
அகிலாண்ட பதியாம் இயேசையா பராக்கு
காவதனிலே வைபவம் கடிந்தாய் பராக்கு
கடியலகைக் கருவம்அதைக் கடிந்தாய் பராக்கு.

4. வானவர் பூவோர் வணங்கும் வரதா பராக்கு
மகிமைப் பிரதாபம் உறும் மன்னா பராக்கு
சேனைபணியும் கமல பாதா பராக்கு
தேவர்மேல் இராத பெரும் செல்வா பராக்கு.

5. மங்கையருக்கு அரசி மரிமைந்தா பராக்கு
மாசனுகா நீதிசெறி வரதா பராக்கு
திங்கள்அருக்கன் உடுக்கு அடந்தாய் பராக்கு
தேசம் புகழ் எருசலையைச் சேர்ந்தோய் பராக்கு

6. சுத்தமறை ஆகமங்கள் சுத்தா பராக்கு
சருதிதனக் கெட்டாத வஸ்தே பராக்கு
நித்தபரிசுத்தஅருள் நிமலா பராக்கு
நியாகாம நிரந்தரனாய் நின்றாய் பராக்கு.

7. புங்கவர் தொழும் புனித போதா பராக்கு
போற்றலரை ஆசீர்பதி புகழோய் பராக்கு
எங்குநெய்யும் தயிருமென இருந்தாய் பராக்கு
இடையருடன் முனிவர் தொழும் ஏந்தால் பராக்கு.

8. ஆதியுடன் மந்திஅந்த ரகிதா பராக்கு
அன்றுயூதர் வாரடிவாங்கு அமலா பராக்கு
தோதுஅணுகிடாத குணக்குன்றே பராக்கு
குருநாத னாகிவந்த கோவே பராக்கு.

9. சாவதுஇலதாய் அமரும் சாமீ பராக்கு
சர்வ வல்லபம்செறி தற்பரனே பராக்கு
கோவில் அதொன்றுஇல்லாத குமரா பராக்கு
குற்றவாளிபோற் சிலுவை கொண்டோய் பராக்கு.

10. முத்திவழி திறந்துவிட்ட முதல்வா பராக்கு
மூதண்ட கோளமதன் முன்னோய் பராக்கு
வித்தக மெய்ஞ்ஞானமதின் விளக்கே பராக்கு
வேண்டினரை ஆண்டருளும் மேலாய் பராக்கு.

11. பெத்துலக நகரமதிற் பிறந்தாய் பராக்கு
பேதநரர்க்காக மரத்துஇறந்தாய் பராக்கு
சத்துடன் சித்தானந்தமாம் கர்த்தா பராக்கு
சர்வஞ்ஞானாய் விளங்கும் தாதா பராக்கு.

12. செந்தவருக்கு உயிர்கொடுத்த தியாகா பராக்கு
திருவாவி மழை பொழியும் தேவா பராக்கு
பத்தரை ஆபத்தில் தரிசித்தாய் பராக்கு
பதி நசரைதனில் வளர்ந்த பாலா பராக்கு.

13. ஐம்புலத்துக்கு அடங்காத அண்ணால் பராக்கு
அந்தாதியாய் அமைந்த மைந்தா பராக்கு
உம்பர் பரவெனப் போற்றும் ஒருவா பராக்கு
உள்ளமதை ஆசனமாய்க் கொள்வாய் பராக்கு

14. அபிஷேக நாதா என்னப்பா பராக்கு
அதஞ்செய் சென்மப் பவந்தீர்என் ஐயா பராக்கு
சுவிசேஷ முதல்வர் வென்தூயா பராக்கு
சோபனம் சோபனம் தேவ சுதனே பராக்கு.

## 3. பிதா சுதனுக்குத் துதி - Praise to God & Christ

### விருத்தம்

கோளில் ஐம்பொறியிற் குணம் கொண்டுளேன்
வீழில் ஓடிடுவீண் மனசு உற்றுளேன்
ஏழை பங்குறும் எம்பரா வேற்றுவன்
தாழ்விலாது நின்மேல் எச்சரிக்கையே.

### எச்சரிக்கை

1. பூவார் உலகது தந்தருள் - புனிதா எச்சரிக்கை
புவிவாழுநர் பணிந்தேத்திடு - போதா எச்சரிக்கை

2. தேவா சோதிநாதா ஒளி - திகழ்வாய் எச்சரிக்கை
செறிவானவர் துதிசெய்தரு - தேசா எச்சரிக்கை

3. அருவாய் அருவுருவாகிய - அமலா எச்சரிக்கை
அருவாழ்வு தந்தெனை ஆண்டருள் - அடிகாள் எச்சரிக்கை

4. அமலாதிரு அநகாநித அத்தா - எச்சரிக்கை
அன்பார் குணநிதியாகிய - ஆதீ எச்சரிக்கை

5. இறைவா வீறில் முதல்வா மரி - ஏந்தால் எச்சரிக்கை
இன்பாய் மனு அவதாரம் செய் - ஈசா எச்சரிக்கை

6. நாதா வானோர் பாடித்தொழு - நல்லோய் எச்சரிக்கை
நவிலும் பரவெளியாய் முத்தி - நாடா எச்சரிக்கை

7. ஒப்பேதுமிலாதாய் உள்ளத்து - உறைவாய் எச்சரிக்கை
ஓர்போதினும் மாறாமலே - உறைவாய் எச்சரிக்கை

8. அத்தா பரிசுத்தா அருள் - ஆழி எச்சரிக்கை
அகண்டா கண்டனாகும் எங்கள் - ஐயா எச்சரிக்கை

9. சோதிமதி யாதி தரு - சுகுணா எச்சரிக்கை
தூய மறைக்கு அடங்காதமர் - தோன்றால் எச்சரிக்கை

10. அநந்தா முழுதுணர்ந்தார் அன்பர்க்கு - அன்பா எச்சரிக்கை
அகம்தாவுதற்கு அரிதாயமர் - அரூபி எச்சரிக்கை

11. சிந்தாகுலம் அழிப்பாய் பவந் - தீர்ப்பாய் எச்சரிக்கை
சிறியேன் நெஞ்சம் மலர்மீதுறை - திருவே எச்சரிக்கை

12. தாழ்மையுடன் நேசந்தரு - தாதா எச்சரிக்கை
தகையில் நரர்க்கு இரட்சண்ணியம் - தந்தாய் எச்சரிக்கை

13. அன்பாதமக்கு ஆராவமுது - ஆனாய் எச்சரிக்கை
அருளாம் பெருக்காகி உள்ளம் - அளந்தாய் எச்சரிக்கை

14. வாசா மகோசரம் ஆகிய - வள்ளால் எச்சரிக்கை
வன்பர் உள்ளத்து அன்போடுறா - மகிபா எச்சரிக்கை

15. அரிதாம் மறைப் பொருளாகிய - அநந்தா எச்சரிக்கை
அளிப்பாய் வரமெனக் கேட்பவர்க்கு - அருள்வாய் எச்சரிக்கை

16. தொழுவார்பவந் தொடைத்தாள்பரி - சுத்தா எச்சரிக்கை
துன்றும்பவ மருந்தாய் வந்த - துய்யா எச்சரிக்கை

17. பவச் சாகரம் கடந்தேறிய - பரமா எச்சரிக்கை
தவச்சார்பறும் அடியேற்கருள் - தந்தாய் எச்சரிக்கை

18. பிறப்போடுஇறப் பறும்எண்குணப் - பெம்மான் எச்சரிக்கை
பேதாபேத சமயாதீதப் - பிரானே எச்சரிக்கை

19. சித்தாய்க் குணநிதியாய் எங்கும் - செறிந்தாய் எச்சரிக்கை
செகநாதனாய்ச் சுயம்பாய்அமர் - செல்வா எச்சரிக்கை

20. என்றும்எனைத் தடுத்துஆண்டருள் - இறையே எச்சரிக்கை
இன்றும் அன்றும் ஒன்றாய்அமர்ந்து - இருந்தாய் எச்சரிக்கை.

## 4. கிறிஸ்துவின் இலட்சணம் - Christ's Attributes

### *விருத்தம்*

அன்றும் இன்றும் என்றும் ஒன்றாய் அமர்ந்தோன் மாந்தர்
அருநரகில் மாளாது ரட்சாமூர்த்தி
என்று உலகில் அவதாரம் எடுத்தேன் தூயோர்
யார்க்கும் எளியோன் எண்ணார்க்கு அரியோன் ஈன்ற
கன்றெனவே கசிந்துஅழைப்பார் தமக்குத் தாய்போற்
கதறி விரைவினில் வருவான் காலாதீதன்
குன்றில் அருமறை தந்தோன் இலட்சணங்கள்
கூறுவேன்இலாலியதில் குணமாய்த்தானே.

### *இலாலி*

1. ஆசின் மறைக்கு அடங்காத - ஆத்தும தாரகனே
காசினியில் வந்த கிர்பைக் - கண்ணா பண்ணவனே - இலா.

2. பெத்தலகேம் நகர்ப்பிறந்த - பெரும திரியேக
வத்துவி லொன்றாய்ச் சிறந்த - மகிபா சர்வேச - இலா.

3. காசரைஅம்பதி வளர்ந்த - நாதா சற்போதா
பாசமது தொடராத - பரனார் குமாரா - இலா.

4. எருசலேம் தேவாலயத்தில் - இன்பொடு போநதன்பால்
வருசனர்க்குப் போதகங்கள் - வழங்கியிடு நண்பா - இலா.

5. தேசமெங்கும் நடந்து சுவி - சேஷமறை சீலா
ஈசனே யெகோவாவின் - நேச மனுவேலா - இலா.

6. தந்தையொடு ஒரு ஆசனத்தில் - தங்கிஅண்டர்அரண்டம்
தந்திருந்தும் தமியருக்காய்த் தரணிவந்தாய் கண்டம் - இலா.

7. ஆதி வடிவாம்அமல - அசல பவ ரகித
ஓது சில்வை மீதில்அறை - யுண்டுஇறந்த வேத - இலா.

8. இரட்சண்ணிய மூர்த்தம்எடுத்து - எங்குநடந்து எவர்க்கும்
அரைக்கணமும் தவிராது - அறிவுரைத்த குரவோய் - இலா.

9. குருடர் இறந்தோர் செவிடர் - கூனர்தமக்கு அன்று
அருள்புரிந்தாய் அடியேற்குன் - அன்பதிற்பங்கின்றோ - இலா.

10. மனாதிதமக் கெட்டாத - மறையோய் நின்அடியேன்
எனாதியான் என்னுஞ் செருக்கை - ஈர்ந்தடிமை கொள்ளே - இலா.

## 5. யேசுவிடம் வாருங்கள் - Come unto Jesus

### விருத்தம்

கானலைக் குமிழியைக் கடுக்கும் இவ்வுலகு
ஆனது சதமென அலைந்து மாழ்கலீர்
வானவன் சுதன் தனை வாழ்த்திப் போற்றுவம்
மான தேகத்தரே வாரீர் வாரீரே.

### கீர்த்தனம்

இராகம்,... செஞ்சுருட்டி. தாளம்,... தீசுரம்.

### பல்லவி

தேவ சுதன்தனை அஞ்சலி செய்குவம் தேசத்தாரே வந்துசேர்வீர்

### அநுபல்லவி

பூவும் மணமும்போல் எங்கும் பொலிந்தருள்
பூபதி வேதபுராதன புங்கவ - தேவ.

### சரணங்கள்

1. வாடாக் கிரீடந் தரும்படி நிற்கிறார்
வாஞ்சை கொள்வார்க்குஅதை ஈவார்

காடு செடிகள் கடந்தேன் உலைகிறிர்
கையில்நெல்லிப்பழம் போலதை வாங்குவீர் - தேவ.

2. மோட்சத்தின் மாட்சிமை யார்க்குக் கிடைத்திடும்
மோசம் போகீர் அதை நாடீர்
ஆட்சிசெயப்பாரீர் அஞ்ஞானப் பேய்மதம்
ஆகாதெனத் தள்ளி ஆனந்தமாய்த் துள்ளி - தேவ.

3. தாரகை மத்தியிற் சந்திரன் போலவே
சம்மனசுக்களின் நடுவே
ஆரொளிவீச இருந்தரசு ஆண்டிடும்
அந்த மகிமையில் ஆர்த்தி அடைகுவீர் - தேவ.

4. வல்ல சருப்பத்தின் பொல்லாத வீரத்தை
வாங்க வந்தார் பயம்ஏதோ
கல்லுடன் செம்பினைத் தெய்வமென நம்பிக்
கைகூப்பித் தாழ்ந்திட வேண்டாம் கெம்பீரமாய்த் - தேவ.

5. சங்கீதம் பாடுங்கள் ஆடுங்கள் தேவனின்
சந்நிதி வந்து கூப்பிடுங்கள்
பங்கில்லா நெஞ்சொடு பாபத்தைத் தள்ளுங்கள்
பார்த்திபர் போந்து தடுத்தாலும் துள்ளுங்கள் - தேவ.

## 6. பாவிகளை அழைத்தல் - Call to Sinners

### *நேரிசை வெண்பா*

பத்தருக்குத் தொண்டனாய்ப் பாவிகட்கு நேசனுமாய்
இத்தரையோர் தங்கட்கு இறையவனாய் - அத்தனது
சாம்பூனத ஆசனத் திருப்பான் தன்சிலுவை
சாம் பரவிகட்குச் சரண்.

### *கீர்த்தனம்*

இராகம்,... உசேனி. தாளம்,... தீசுரம்.

### *பல்லவி*

சாகும் பாவிகாள் சிலுவையைச்
சார்ந்து வாழ்வீர்காள்

### *அநுபல்லவி*

ஆகுங்காரியம் ஏது தாமதித்து - ஆவலிப்பதில் லாபமென்னவோ
சோகின்மாயமாம் சாலநம்பிநீர் - சுவப்பிரத்திற்கு விறகதுஆகாதீர் - சா

*சரணங்கள்*

1. கெட்டுப்போவானேன் நல்லவழி - கிடைத்தும் சாவானேன்
தட்டழிவானேன் உலகத்தைச் - சார்ந்து செல்வானேன்
வட்டவார்கலி சுற்றுமிப்புவி
அட்டதிக்கெலாம்எட்டிமுட்டினும்
எட்டுமோகதி கிட்டுமோநீவிர்
ஏனுலைகிறீர் வீணின்மாய்கிறீர். - சாகும்.

2. ஆழிவீழ்ந்தார்க்குத் தெப்பமென - ஐயன் போந்தானே
பாழிற்சாவார்க்குத் தம்பமெனப் - பரமன்வந்தானே
காழில்லாமரம் போல வீழ்ந்துநும்
வாழுநாளையேன் வீணதாக்கிறீர்
சூழும்பேய்களைத்தாழ வேண்டாநீர்
சுளுவில் மோட்சத்தைப் பெறுவீர் நிச்சயம் - சாகும்.

3. பித்தர் போலவே அடிக்கடி - பிதற்றிக்கொள்ளாதீர்
கத்தி மாயாதீர் கண்டவெலாம் - கடவுளென்று தொழீர்
பத்தருக்கு நல்ல தொண்டன் ஆகிய
வித்தகன் மேசியா அழைக்கிறார்
புத்தியற்றுநீர் கெட்டுஅலையாதுஇப்
போதுவாரீர் மற்றேது தாமதம் - சாகும்.

4. இச்சைதொட்டிழுக்கஅடிக்கடி - ஈனர்விட்டடிக்க
இச்சையாசைமுட்ட உலகத்தின் - வேஷங்கொண்டுஅலையீர்
பச்சையாம்மரத்து அடித்த ஆணிபோற்
பற்றுவீர்எஞ்சொற்பதர் அதாகாது
அச்சமின்றியே பட்சம் வைகுவீர்
அலைந்து போகாமல் விழைந்துவந்திடீர் - சாகும்.

## 7. கிறிஸ்துவின் அவதாரம் - Advent of Christ

*விருத்தம்*

ஈனமின் மாமறை இன்னும் கண்டிடா
ஞானநாயக வடிவாகி நாதனாய்
வானமும் பூமியும் வகுத்தும் மானுடன்
ஆனதிங்குஅடியரை அடிமைகொள்ளவே.

## கீர்த்தனம்

இராகம், ... காம்போதி. தாளம், ... அடதாளம்.

### பல்லவி

வானம் புவிபாதாளம் மல்குஞ்சரமசரம்
வகுத்தும் நரனாய் வந்தீர்.

### அனுபல்லவி

தேனார்ந்திடுதண்சோலை - திகழுஞ்சீயோனின்தொல்லைக்
கோனாந்தவிதுகுலக் - கொழுந்தே பவமருந்தே - வானம்.

### சரணங்கள்

1. ஆதிக்கநாதியாகி - அகண்டாகண்டனுமாகிச்
சோதிமயமுமாகிச் - சொரூபானந்தமுமாகி
வேதவேதாந்தனான - விமலாளம்பவந்தீரென்று
ஓதியுலகோரிட்ட - ஓலங்காதினிற் கேட்டோ - வானம்

2. சந்திரசூரியர்நிதம் - வந்துன்புகழ் கொண்டாடச்
சந்ததங்கோடிதூதர் சிந்துசங்கீதம் பாடத்
தந்தையுடனோர்பத்ரா - சனத்திலேகொலுவிராது
இந்தப்புவிஈடேற்றச் - சிந்தையுட் காதலுற்றோ - வானம்.

3. பூவும்மணமுமென - யாவும் வியாபியான
தேன்அல்லேலூயாயே - கோவாஇம்மானுவேலென்று
ஆவலுடன் பேரின்ப - சீவனியம் நிரம்ப
ஓவாதமுமடியார்க்கு - ஏவல்புரிவதற்கோ - வானம்.

## 8. யேசு என் சிலுவை சுமந்தார் - Jesus my cross has taken

### தேவாரம்

மேவுதற்குஅரிய ஞான வித்தக ஒளியாய் மேலாய்
ஆவியாய் அளியாயென்றும் அழிவுறாப் பொருளாய் அன்பர்
பாவினும் அடங்கர் வேதப் பழமறைக் கிழவனாகித்
தேவனாய் இருந்த யேசென் சிலுவையைச் சுமந்தாரென்னே.

இராகம், ... துசாவந்தி. தாளம், ... அடதாளம்.

### பல்லவி

என்சிலுவை தாம்சுமந்தாரே - ரட்சாபெருமான்
என்றனக்காய் அங்கம்நொந்தாரே.

### அனுபல்லவி

வன்பைசாசமாயம் வீரம் - வையகத்தார் சென்மபாவம்
விண்பிறைபோல் தேய்ந்துமாய - வீறெலாம் ஒடுங்கிச்சாய - என்

### சரணங்கள்

1. நிந்தனை வருத்தமுற்றாரே - நிட்டூரஞ்செய்யும்
நீசர்போன் மதிக்கப்பட்டாரே
சுந்தரமோட்சம் துறந்தாரே - தூதாதிதூதர்
சூழ்சலாக்கியம் தணந்தாரே
பந்தினர் கடம்முளிந்தப் - பாரிலே பிறர்சுமையைத்
தம்தலை சுமந்தாருண்டோ - தயவிது மறப்பதொன்றோ - என்

2. உலகமென்னை வைதுதூறிலென் - பகைவர் கூட்டி
ஒட்டிநட்டஞ் செய்து மீறிலென்
கலகர்மிகத் துள்ளிக்காறிலென் - காலால்உதைந்து
கண்டவர் சினந்துவீறிலென்
அலகைநாதக்கூட்டங் கூடி - ஆக்கிரமித்து ஓடியாடிப்
பலகைபார்ப்போம் என்றுவந்தும் - பாவியேன் மாறேன் பயந்தும் - என்

3. தொல்லை வெள்ளம் போலச் சூழிலென் - அயலார்என்மேற்
தோஷங்கள் சொரிந்துவீழிலென்
அல்லல் சூறைக்காற்றில் வீசிலென் - அன்னைதந்தையர்
ஆகடியம் சொல்லிமேவிலென்
வல்லயேசையான் மறுக்கேன் - மாயப்பெரும் பாவப்பாரம்
கொல்லமுன் விரைந்துநின்று - கூவிஅஞ்சல்அஞ்சலென்று - என்.

## 9. அடிமையாக்க வேண்டல் - Christ's help asked

### நேரிசை வெண்பா

வேதாசாலோகபதம் மெய்விசு வாசர்க்கீயும்
போதா யெகோவாவின் புத்திரா - மாதயவாய்
அன்பர்க்கு வந்தருள்தந்து அஞ்சலிர்என்றாயதுபோல்
இன்புற்றே வந்தெற்கு இரங்கு.

## கீர்த்தனம்

**இராகம், ... மத்தியமாவதி.** **தாளம், ... அடதாளம்.**

### பல்லவி

ஏதந்தீர்த்துஎனை ஆளவாராயோ - சாலோகபதம்
என்றனக்குத் தந்தருளாயோ.

### அனுபல்லவி

ஆதமுடனேவை ஆதியுகமதில்
ஏதனெறுங்காவிற் கோதுசெயவரு
காதலொழிதரத் தரையில் உதித்திடு
நாதனேயின்று நயந்துபோந்தென்றன் - ஏதந்.

### சரணங்கள்

1. தூயமொழிகள் ஈரைந்து தந்தனையே - பெத்லேகமென்னும்
ஏயநகர ஆதாரமுற்றனையே.
மாயவலகையின் வீறுமாய்ந்திடத்
தாயுந்தமர்களும் தளர்ந்துசோர்ந்திட
ஆயசுவிசேஷ இரசஉரைதனைத்
தேயந்தொறும்பகர் தேவநீயென்றன் - ஏதந்.

2. வேதபாரகர் வாதில்ஓடினரே - பரிசேயர்நின்னாற்
போதவே மன வாதை நீடினரே
மோதஉளமிகு காதலாய்வரு
யூதராகிய சாதியார்தரு
பேதயோசனையே வாலிறந்து
ஆதிமாபரனோடுமேவுநீ - ஏதந்.

3. அரிய மறைமொழி உணர வரமதுதா - எந்நாளும்பட்சம்
பெருக உரிமைகொடுஇதய மலர்மிசைவா
குருடர் முடவர் பல்பிணியர் செவிடர்கள்
குணமதடையநீள் அருளையுதவிய
பரம வடியவன் இடரில்உறுமுனம்
விரைவில் அனுகிநின் வனச பதந்தந்து - ஏதந்.

## 10. கிறிஸ்துவின் பாடு - Sufferings of Christ

### குறள் வெண்பா

**அண்டர்பரவும்என்றன் அத்தன் திருப்பாதம்
கண்டேன் கண்டேவின்றே காண்.**

### கீர்த்தனம்

**இராகம், ... காபி.** **தாளம், ... தீசுரம்.**

### பல்லவி

**கண்டேன் கண்டேனே - திரிலோக
காரண பூரண ஆரணன் பேரருள் - கொண்டேன் கொண்டேனே.**

### சரணங்கள்

1. **அண்டர் பணியும் பரமன் - ஆயர் புகழும் பெருமன்
தொண்டர்பவந் தீர்த்தருளும் - தூயன் யேசின்கோலம் - கண்.**

2. **அந்தோ! மாபாதகர்கள் - சிந்தைஇரக்கமின்றி
வந்து வலித்திழுத்து - வாரினால் மோதியதைக் - கண்.**

3. **சிரசின்ன முண்முடிவைத்துச் - செங்கரம் கோல்கொடுத்து
அரசன் நீயென்றுபரி -யாசங்கள் பண்ணியதைக் - கண்.**

4. **சிவப்பாம் மேலங்கியொன்றைச் - சிங்காரமாயுடுத்தி
அலட்சியஞ்செய்து துப்ப - ஐயாநீர் பட்டவாதை - கண்.**

5. **கல்வாரி மலைதனிலே - கால்கள் தள்ளாடிடவே
புல்லர்போலே சிலுவை - பொறுத்து நடந்தநடை - கண்.**

6. **ஆணிகளைஎடுத்து - அங்கந்தனில்நுழைத்து
வீணார் அடித்துறுத்தி - மெலியச் செய்ததையின்று - கண்.**

7. **பாரச் சிலுவையிலே - பாவிகள் மத்தியிலே
கோரப் பதகர்போலக் - கோவே நீர் தொங்கியதைக் - கண்.**

8. **ஈட்டி அலகுகொண்டு - மாட்டமலையிலிருந்து
ஓட்டமாய் நீர்பாய்ந்தென்ன - உதிரம்வழிந்துபாயக் - கண்.**

## 11. கிறிஸ்துபரமண்டலத்துக்கேறல் - Christ's Ascension

### கட்டளைக் கலித்துறை

விண்தலம் நீங்கி மரிவயிற்றுக் தோற்றி விரும்பிஅன்பு
கொண்டிசைசேர் சுவிசேடம் பகர்ந்து குழுமியுற்ற
அண்டர்கையா லொரு முப்பத்துமூன்றரை ஆண்டிலிறந்து
எண்தகு சீர்பர மண்டலம்போயினர் எம்பரனே.

### கீர்த்தனம்

இராகம், ... ஆனந்தபைரவி. தாளம், ... அடதாளம்.

### பல்லவி

பரமண்டலஞ் சென்றாரே - இம்மானுவேலர்
பத்திராசனங் கொண்டாரே.

### அநுபல்லவி

சுரமண்டலம்முழங்கத் - தரையெங்கனுந்துளங்கப் - பரமண்.

### சரணங்கள்

1. தேசங்கள்தோறும் ஏகியே
மொழிகுவீர், மொழிகுவீர், நீர்சுவி
சேஷந் தெரிந்தென்றுஓதியே
பரபர, பரபர, பரபர எனவே
சேர்ந்து சுத்தோர்கள் பேணவே - பரமண்.

2. அண்டர் குழாம் துதிக்கவே
அதிசயம், அதிசயம், அதிசயம் இதுவெனக்
கண்டு தாசர் மதிக்கவே
கொண்டல் எடுத்துக்கொள்ளவே
வருகுவர், வருகுவர், வருகுவர் இனியென
ரண்டு தூதர்கள் விள்ளவே - பரமண்.

3. மருவு தந்தையை நோக்கியே
அருள்புரி, அருள்புரி, அருள்புரி எனவே
மாந்தர் அஞ்ஞானம் நீக்கியே
தரணி பவத்தை வீட்டியே
அழிகுதி, அழிகுதி, அழிகுதி, நீயெனச்
சாத்தான் வலிமை வாட்டியே - பரமண்.

## 12. எல்லாம் யேசுவுக்கே - All for Jesus

### நேரிசைவெண்பா

மண்ணோடு பொன்ஆதியவாம் மற்றுமுள எப்பொருளும்
எண்ணிற் சிறந்த எனதுடலும் - சின்மயமார்
நல்லஎன்றன் ஆன்மாவு நான்வேண்டேன் யேசுபரா
எல்லா நினக் கீந்தே னேல்.

### கண்ணிகள்

இராகம், ... இந்துஸ்தான். தாளம், ... அடதாளம்.

1. எல்லா நினக்கே - ஈந்தேன் யான் யேசே
வல்லையில் வந்துநீ - வாங்கிக்கொளையா.

2. என்பொருளாவி - ஏர்பொள் மூன்றும்
அன்பாய் நிற்கீந்தனன் - ஆண்டுகொளையா.

3. சீவியம் நிற்காச் - செய்தேன் பிரதிஷ்டை
ஆக வென்ன தாமதம் - ஐயா யேசையா.

4. மன மொழி ஆதி - மாண்புள்ள யாவும்
உனதாகத் தந்தேன் வந்து - ஒப்புக்கொள்ஐயா.

5. மக்களுனக்கே - வாரமாத் தந்தேன்
கைக்கொள்வை நீ அந்திக் - காலத்தில்ஐயா.

6. காணி பூமிகளென் - கையுள தந்தேன்.
ஆணிப்பொன் தங்கமும் - அன்னவென்ஐயா.

## 13. எல்லாம் யேசுவுக்கே - All for Jesus.

### நேரிசை வெண்பா

உன்னுமனமும் உசாவும் விவேகமுடன்
பன்னும் வாயாதி பலவுறுப்பும் - நின்னவென
வானந்தவிர்ந்து இந்த மண்ணுதித்த யேசுபரா
ஆநந்த மாய்அளித்தேன் ஆள்.

## கீர்த்தனம்

இராகம், ... எதுகுலகாம்போதி. தாளம், ... அடதாளம்.

### பல்லவி

ஐயாஎன் யேசுபரா! என்னை நினக்கு
ஆனந்தமாய் அளித்தேன்.

### அநுபல்லவி

மையொன்று மாலென்றும் - மாறாமனங்கொண்டு
வையகமீதாசை - மருந்திற்கும் வையாது - ஐயா,

### சரணங்கள்

1. என்வாள்நாள்உன்னதுவே - மனம் வாக்கு இரண்டுமுனக்குஈடே
சொன்னாசொற்சோர்வுறேன் - சொந்தம் உனக்கியான்
மன்னவனே மாசில் - மாமணியேதேவ - ஐயா.

2. நயனம் நினைக்கானும் - என் கன்னங்கள் - ஞானந்தனில் வாழும்
சுயநன்மை நாடாது - தோஷங்கள்தீண்டாது
வசனம் வயணமாயென் - வாயுன்றன் புகழ்பேசும் - ஐயா

3. கண்மணியே கரும்பே - இரட்சண்ய - காரணபூரணமே
மண்ணான இப்புவி - வாழ்க்கையை வேண்டிடேன்.
விண்ணாம் பெருமோட்ச - வீட்டாசை தொட்டுற்றேன் - ஐயா

4. சிரநிற்குத் தெண்டனிடும் - முழந்தாள்கள் - சித்திரமாய்முடங்கும்
உரமுன்னை மறவாமல் - ஓயாமல்நினைந்திடும்
வரமேற்குத் தந்தாள - மனமென்றும் கூம்பாத - ஐயா.

5. வித்தைநிற்கே தந்தேன் - அதால்வரும் - மேன்மைசெல்வம் ஈந்தேன்
அத்தனே கர்த்தனே - அம்புவி மேலெனக்கு
உற்றபொருளெல்லாம் - ஒன்றாகக் கூட்டிய - ஐயா.

## 14. யேசுவுக்கொப்படை - Giving up to Jesus

### கட்டளைக் கலித்துறை

ஆதரவாகஉன் பாதாரவிந்தம் அடைந்த வெற்குன்
மாதயைஈந்து வந்தாண்டருள் பூவினர்வாழ்த்தெடுக்கக்
கோதிற வீதுகுலத்தினன் மாமரி கோமகனாய்
யூதய தேசத்தில் உற்பவஞ் செய்த நல்உத்தமனே.

## கீர்த்தனம்

இராகம், ... தன்னியாசி. தாளம், ... அடதாளம்

### பல்லவி

சுந்தரஞ்சேர் எந்தாய்யேசு
சுவாமியாட்கொண்டு என்னையாளாய்

### அநுபல்லவி

சந்ததம் என்புந்திசோர்ந்து தாழுகின்றது அஞ்ஞானம் சார்ந்து - சந்த

### சரணங்கள்

1. பாபநாசராய்ப்பிறந்து - பாதகர்போலே இறந்து
மாபரன்வலத்திற் சாய்ந்து - மாந்தர்க்காய் மன்றாட்டமீந்து - சுந்த.

2. கல்வியின் பெருமைநோக்கிக் - காலமெல்லாம் வீணாய்ப்போக்கித்
தொல்லையான கன்மந்தேக்கித் - துயரஞ்சோர்ந்து சோர்வேனைநோக்கி
- சுந்த.

3. என்னையும்உணர்ந்துபாரேன் - இம்மனுவேல் நீயென்றுஓரேன்
கன்னைபண்ணி உண்மைதேரேன் - காலஞ்செய்வேன் அன்புகூரேன்.

4. உலகபாசந் தன்னைவீட்டி - உற்றமாமிசப் பகையோட்டி
அலகை அரசாட்சிவாட்டி - அன்பதாநின் செங்கைநீட்டி - சுந்த.

5. எள்ளளவும் பத்தியில்லேன் - யானெனும் செருக்கைக் கொல்லேன்
பிள்ளவொரு நன்மையில்லேன் - விம்பும்வம்பும் வேண்டிச்சொல்வேன்
- சுந்தரஞ்.

## 15. ஆத்துமசோடிப்பு - Decorating soul

### விருத்தம்

வெள்ளிசெம்பு விளங்குபொன் ஆதியாய்
உள்ள லோகங்களாலல உண்மை அன்பு
எள்ளல் இன்றிய பத்தி இவற்றினால்
உள்ளமே உனைச் சோடித்து ஒளிசெயே.

## கீர்த்தனம்

இராகம், காபி. தாளம், ... ஆதி.

### பல்லவி

என்னாத்துமாவே நின்னைநீசோடி
இன்பமணாளன் யேசு
வருவார்இங்கோடி

### சரணங்கள்

1. மின்னுபொன்னாலே - வெள்ளிகல்லாலே
வேடிக்கைசெய்யாதே - மேவும்இன்பாலே - என்.

2. அன்பது பரப்பி - எத்தளம் பெருக்கி
ஆசனஞ் செம்மைசெய்து - அலங்காரமாக்கி - என்.

3. கன்மபாவத்தைக் - கசடறப்போக்கிக்
கருணையாம் நீராலுட் - களிம்பெல்லாநீக்கி - என்.

4. கோபங் குரோதமங் - குற்றங்கள்தறித்துக்
குணமென்னுங்குன்றது - குலவிடநிறுத்தி - என்.

5. பத்தியாம்சிங்கா - சனஞ் செய்துபண்பாற்
பாராட்டிஉபசரித்து - அழைத்தேற்றிப்பரிவால் - என்.

6. நேசமாங் கம்பளம் - நிலவிடவிரித்து
நிமிஷந்தோறும் நேசர் - நேர்வதைக் குறித்து - என்

7. அத்தனின் கந்தன் - அருட்பிரதாபன்
ஆநந்தன் ரட்சண்ய - அதிபன் வந்தாள - என்

8. மெய்ஞ்ஞான மேய்ப்பன் - விசுவாசமீட்பன்
மேசியா வந்திட - ஆசையோடு இசைந்து நீ - என்

## 16. மனசோடு பேசல் - Address to the mind

### தேவாரம்

நில்லென்றால் தரித்துநில்லாய் நினையென்றானேடிப்பாராய்
சொல்லொன்றுங்கொள்ளாய் லோக சோலியேற் பழம்பால்போல
அல்லொடு பகலும்சோராது ஆசைகொண்டாடும்என்றன்
கல்லொன்று மனமே யேசுகர்த்தனைத் துதிசெய்வாயே.

## கீர்த்தனம்

இராகம்,... முகாரி. தாளம், ... ஆதி.

### பல்லவி

மனமே உனக்கேன் லோக தொல்லை - சரதமென்று
கனிவாய் மகிழ்ந்து கேளென்சொல்லை.

### அனுபல்லவி

தினம்உலகுடல்உறு - பொருள்நிலையெனவுனி
நனிமடவடிமையில் - அமைதரும்எனதொரு - மன.

### சரணங்கள்

1. கோலாகங்களெல்லாந் தள்ளு - பரன்வகுத்த
மேலாங் கற்பனைபத்துங் கொள்ளு - அவைகள் மோட்ச
மூலாதாரங்களெனவிள்ளு - பைசாசஞ்செய்யும்
சாலமாலங்கள்எல்லாஞ் சள்ளு - சர்வேசுபரன்
பாலனை எளியஅவர் தோழனை யெருசலேம்
ஊரனை அனவரத காலனை மதியாத - மன.

2. அஞ்சுபுலிகள் மேயுங்காடு - உடலம்பெரு
வஞ்சங் குரோதமமர் கூடு - பூலோகமதிற்
கொஞ்சமாமோ அதன்தன்கேடு - சகமென்றெண்ணித்
துஞ்சாது இம்மான்வேல் பதந்தேடு - நிரந்தரமும்
விஞ்சியாயையில் முஞ்சாதேபிர
பஞ்சமுசமுயங்கி மயங்காதேயென் - மன.

3. பெண்டிர் பிள்ளைகள் சுற்றம் பொய்யே - மேலோரறிந்து
கண்டு சொன்னர் அதுநன் மெய்யே - பவங்கள் போகத்
தொண்டு யேசுநாதர்க்குச் செய்யே - புகழ்ந்து பட்சம்
கொண்டவர்மீதிலன்புவையே - விண்மீதின்னிறு
அண்டர்பணிந்திடு கழனடறசுதன் பர
மண்டலபுங்கவன் என்று வணங்கா - மனமே.

## 17. உதவிக்காசித்தல் - Longing for Christ's help

### விருத்தம்

அருள்சிறிதும் மில்லாருக்கு அருள்பாலித்தாய்
ஆகடியஞ் செய்தாருக்கு ஆசியீந்தாய்
குருடர்செவிடருக்குக் கட்பார்வையோடு
கூறுசெவிப்புலன் கொடுத்தாய் சூம்புகையற்கு
அரியகரப் பாவனைதந்தாய் - சீடர்க்கும்
அணங்கினர்க்குந் தரிசனநேர்ந்து அடிமைகொண்டாய்
தெரிதரநின் திருக்காட்சி யெற்குத்தாராய்
திருத்தொண்டர் தொகைசேராய் சீர்யேசையா.

### கீர்த்தனம்

இராகம், மோகனம். தாளம், ... அடதாளசாப்பு.

### பல்லவி

அரியநின் காட்சிதாராய் - ஐயாவெனை
அடியார் தொகையுட் சேராய்.

### அநுபல்லவி

பரிசனர் தொடர்தர - யெருஷலை நகரதில்
கரிசனமொடு போதம் - உரைசெயும் அரசே - அரி

### சரணங்கள்

1. பாவச் சுமைசுமந்தேன் - ஐயாமிகப் - பதைத்துவருந்தி நொந்தேன்
யாவர்க்குச் சொல்வேன்குறை - யார்துணை செய்வார்முறை
ஆவிக்குள் ஆவியாமென் - ஐயா அன்பார்யேசையா - அரி.

2. திக்குவேறில்லை மெய்யாய்ப் - பதுங்கிப்பேய்தான் - தீண்டிப் பிடிக்குதையா
உக்கிராவேசங்கொண்டு - ஓடிவந்துன்னுபய
பத்மபதங்களாலே - பதைக்கவுதைந்துதள்ளி - அரி.

3. ஐம்புலவேடர் சூழ்ந்தார் - கண்ணிவலைகள் - அடிக்கடியேற்றிப் போந்தார்
வம்பவர் செய்யாமுன்னே - வந்தவர்தம்மை வதைத்து
உம்பர் செயசெயவென்று - ஓவாது புகழ்ந்தேத்த - அரி.

## 18. உதவிவேண்டல் - Seeking for help

### விருத்தம்

கொந்துகூடுங் கொடியொன்று தான்தனி
உயர்ந்திடும் கொழுகொம்பது ஒடிந்ததால்
நொந்ததேஎன நோவுறும்ஏழைமுன்
வந்து தேவநின் மாஅருள் தந்திடே.

### கீர்த்தனம்

இராகம், ... கும்பகாம்போதி. தாளம், ... மிசுரம்.

### பல்லவி

வந்தருள்வாய் - பரிசுத்தஆவியெனும் மழை
தந்தருள்வாய் - தயவாகிய ஏழைமுன் - வந்தருள்வாய்.

### அநுபல்லவி

சந்ததம் பவஞ் செய்து வருந்திடு தமியன் துயருடனே பறந்து
அடியேன்றும் இலாதேஅற - வந்த.

### சரணங்கள்

1. தேவசுதனாகிய புங்கவசீலன் - பாவிகளுக் - காகவேவந்திடு பாலன்
தாவார்அலகையைக் காலால்மிதித்திடு - தாதாவே நாதாவே கொடி
[போலவே
பேதைஇழி நாயேனுய - வந்த.

2. தாவிப் படர்ந்திட ஒரு கொம்பது - மேவிக் கொளாத் - துவள்கிற
ஆவிஅயர்கின்றஏழையேன்உய்ந்திட - ஆனந்தா ஞானந்தா மன்னித்
[திடுவது
ஈனந் தாவாது முனம் - வந்த.

3. சின்னஞ்சிறியார் செய் பெரும்பிழை - உன்னிக்கொளாது உடனே
என்றும்பெரியர்க்குஇலக்கணமென்றனர் - என்னாயக என்மாபிழை
எல்லாஞ்சமித்து எனையாட்கொள - வந்த.

4. திக்குவேறில்லாமல்உலைந்திடு - பக்குவம் வந் - தழிதரும் இழிநாயேனை
அக்கிரமந்தொடைத் தாளநீவாராயேல் - ஐயாவே துய்யாவே
மெய்யாய் வேறார்தானுளர் - வந்த.

## 19. பாவஅறிக்கை - Confession of Sins

### *விருத்தம்*

அஞ்சேன் மனனே சூதுகளவு ஆகாமியம் எவ்வளவெனினும்
செஞ்சீறடி மாமரியையச்சுதன் திருநோக்கெதியேஇரவிமுனம்
மஞ்சேயென்னநிலையாது வழியே துருவிவெளியோடும்
முஞ்சாய்நீயும் அவர்நாமம் மொழிவாய் மோசம்தெளிவாயே.

### *கீர்த்தனம்*

இராகம், ... மோகனம், ஆசாவேரி. தாளம், ... ஆதி.

### *பல்லவி*

இந்நாள்வரையும் புரிந்து இளைத்தது போதும் போதும்
இனிப்புரியாதே நெஞ்சே.

### *அநுபல்லவி*

மன்னுநரரை மீட்க - எண்ணித்தரையுதித்த
மகிபன் யேசுபதம் - மறந்து மயனிறைந்து - இந்நாள்.

### *சரணங்கள்*

1. தொந்தம் மருவியுறு தந்திரநாச யோசனையும் - அவ்வியம் பேசிப்
புந்திநேர்மையறு சிந்தையாளர் கரிசனையும் - சுரூபம் வைத்துச்
சந்திஅந்திகளிசைந்துசெய்த பூசனையும் - தருமந்தன்னைச்
சிந்தியாது செயிர்முந்திமீறுவஞ்சனையும் - அநாதராகி

வந்துளோரை வைதுஅடிப்பதும் மிக
நொந்துளோர் பொருள்எடுப்பதுங் கொடை
தந்தபோது கைதடுப்பதும் இச்சை
உந்தவே களவெடுப்பதும்

வெந்துசீறு நரகந்தகு கோலமும்
அந்தமோடுகள வானமாமாலமும்
பந்தமின்று பகைமுந்திடுசீலமும்
நந்துமோசவினைதந்திடுசாலமும் - இந்நாள்.

2. வேசிமார்க்கம் வியபிசாரமீது சிந்தனையும் - பொறாமைகொலை
ஆசைவீம்பு பரிதானம் வாங்கு நிபந்தனையும் - மோசேமுதலோர்
பேசுமான்மிய இதிகாசவேத நிந்தனையும் - தீர்த்தங்களாடிக்
காசிநீர்மறைசை யாதிகோவில்வந்தனையும் - தெய்வங்களென்று

பாசம்ஆதியை மதித்ததும் அளவில்
பூசைபொங்கல்கள் விதித்ததும் ஒளிவிர்
ஓசனன்றனை நமஸ்கரித்தவன் எம்
ஈசன்என்றுளம் பதித்ததும்

நீசர்என்றுபர தேசர்விரோதமும்
மாசுகுன்றுநரர் மேலேகுரோதமும்
ராசர்நீதிகளை மீறுபராதமும்
ஆசுமாமயல்கள் பூண்அவர்ஏதமும் - இந்நாள்.

3. வாதுகூறி வழக்குஓரஞ்சொன்ன பேதகமும் - தமயன்தம்பி
மாதரார்தம் அநுராகபோக பாதகமும் - நன்றிமறந்து
தாதைதாயர்குரு மார்கள்ஆதிகாதகமும் - கொள்ளைவிரும்பித்
தேதமேவு பலவாறதான தோதகமும் - மன்றுபறித்துத்

தீதிலாரை நிதங் கெடுப்பதும் கள்ளை
மீதியாகவைத்துக் குடிப்பதும் பிறர்
கோதைமாரைப் பற்றிப் பிடிப்பதும் அறி
யாதுஉண்போர்க்குநஞ்சு கொடுப்பதும்

சூதிலே மனசோடு சுபாபமும்
பேதைநீர்மையதால் வருசாபமும்
நீதியோடு இகலாய் வருகோபமும்
ஆதியாகிய வேறெதுபாபமும் - இந்நாள்.

## 20. பாப மனஸ்தாபம் - Repentance

### *விருத்தம்*

இந்நாளீறாகஉனைக் காத்திட்டோனை
இரந்தவரம்நினக்குமகிழ்ந்து ஈந்திட்டோனைத்
தொன்னாளில் விதிபலவும் பணித்திட்டோனைத்
துன்றுபவக்கடல் கடந்த தூயோன்தன்னை

மின்னாரம்பொன்னாதியான் மறந்து
மிக்கஇன்பக்கடல் வீழ்ந்து மேலுமேலும்
பன்னாளும் பவம்புரிந்து மோசம்போமென்
பாழ்மனமே சந்தாபப்படுவாய்தானே.

### கீர்த்தனம்

இராகம், ... தோடி. தாளம், ... தீசுரம்.

### பல்லவி

பாவத்தைச் செய்தாயே - மனமே சந்
தாபத்தைக் கொள்வாயே.

### அநுபல்லவி

தேவன்திரியேக நாதன் பதங்களைத் - தெரிந்தே - பரிந்தே - புரிந்தே
தெளிவுமுளக்கனிவுமுற - விழுவாய்பணிந்தெழுவாய் பெரும் - பாவ

### சரணங்கள்

1. வைதபேர்க்குஎதிர்வைது வன்பழி - வாங்கஒண்ணாதே - சினம்
வளர்த்தரும்பகைதொடுத்துஎவர்க்கெனும் - வருத்தம்உன்னாதே
கைதவத்திறம் யாதுமிலாஅருட்கரனே - பரனே - வரனே
கதிதந்திடு கருணாலயன் - எனவே நிதங்கருதாய்பெரும் - பாவ

2. எப்படிப் புவிவாழ்ந்திருப்பினும் - இறத்தல்மெய்யாமே - நரர்
எவராயினும் நாளைஉய்வமென்று - இசைத்தல் பொய்யாமே
அப்படிப் பிரபஞ்சவாழ்வில் - அலையேல் - மலையேல் - உலையேல்
அருவுந் திருவுருவுஞ்செறி - பரன்உன்னருகு உறுவார்பெரும் - பாவ.

3. உன்றனை இதுநாட்பரியந்தம் - உவந்தளித்தோனை - நிதம்
உள்ளுடன் புறம்பு எங்குமாகி - உனைப்புரந்தவனைத்
துன்றிடும்பவத் துறைகடந்துஅதத் - துவனே - தவனே - நவனே
தொழுவார்வினை அறவேசெயு - முதலேதுணைவரும் நீபெரும் -
பாவ

## 2. சீவன் அநித்தியம் - Uncertainty of Life

### அளவடிவிருத்தம்

காளைஅன்னவர் சாய்ந்தனர் காதலார்
ஏழைமங்கையர் பாலர்இறந்தனர்
வாழியென்றுஎவர்மற்றுஉயவல்லவர்
நாளைவாழ்ந்திட நம்புதல்வீணதே.

## கண்ணிகள்

இராகம், ... இலாவணி. தாளம், ... ஆதி.

1. நாளைக்குஇருப்போம்என்பது பொய்யே - நம்பிக்கொள்வீர் மெய்யே
வேளைக்குத் தேவன்தன் பாதத்தில் வீழ்ந்திடல் - வீணாகாதுஅறிவீர்.

2. இந்தச் சரீரம்இருந்திடும்போதே - ஏகபரன் சுதன்தாள்
வந்திப்பீர் இங்கிதன் மேற்பட்டபாக்கியம் - மற்றுமுண்டோஅறிவீர்.

3. கானலைநீரென ஓடிடுமானெனக் - கருத்தழித்துஉழன்றேயிவ்
ஈனவுலகத்தை மெய்யெனநம்பினால் - இடர்அடைவீர் அறிவீர்

4. பிள்ளைமைக்காலந் தொட்டிது பரியந்தம் - பேயாட்டமாடினது
உள்ளமைசொல்கின்றேன் போதும் போதும் உலகுஉறவு உதவாதறிவீர்.

5. அத்தமும் வாழ்வும் அகத்துமட்டேஎன்றார் - ஆரிதைஉணராதார்
சித்தமலங்கித் திகைத்திடீர் தேவன்தன் - செய்பதந்துணைஅறிவீர்.

6. பள்ளத்திற்கு வெள்ளம்பாய்ந்திடல் போற்புவிப் பாசம் வேண்டாம் யேசே
கள்ளமில்லாமலே பவமெனுஞ் சமுத்திரக் கரையேறும் புணையறிவீர்.

7. செக்கச்செவேரெனும் பாவங்களாயினுந் - தெவசுதன்அருளால்
அக்கோ! வெண்பஞ்சுபோல் வெண்மையதாம்எனும் - அந்தரங்கம் அறிவீர்.

8. எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் இருப்பவன் - யேசுரட்சகனலவோ
துள்ளிக்குதித்துமற்று அவனண்டைக்குஓடுதல் - சுகஞ்சுக நீரறிவீர்.

9. கோபம்காமாதியைப் பத்தியாந் தீயினாற் - கொழுத்திச் சுட்டெரித் திடுவீர்

10. பாவலர்புகழ்தே வாலயந்தேடியே - பத்தியுடன்நடப்பீர்
ஆவலாய்ப்பரமன்றன் அடிமலர்தொழுவீர் - அவனியுள்ளோரே நீர்.

## 22. கிறிஸ்துவை ஆசித்தல் - Longing for Christ

### நேரிசை வெண்பா

கும்பிட்டேன்கைதொழுதேன் கோடிதெண்டன்தந்திட்டேன்
செம்பதும பாதஞ்சேர்த்தேன் - வம்பிட்டுக்
கோபித்தான் சாத்தானென் கோவேஅவன் செய்யும்
ஆபத்துத் தீர்த்தாண்டு அருள்.

### கீர்த்தனம்

இராகம், ... தோடி. தாளம், ஆதி.

### பல்லவி

ஆபத்துத் தீர்க்கமாட்டாயோ - என்னைநின்றன்
அடியாருட்சேர்க்கமாட்டாயோ.

### அநுபல்லவி

தாபத்துடனே வந்துன் - தாளிரண்டும் பிடித்தேன்
கோபித்துத் தள்ளாய் நின்னைக் கும்பிட்டேன் குருநாதா - ஆப

### சரணங்கள்

1. ஆசையாம்காட்டிலுற்றேனே - ஐந்துவேடர்
அடிக்கடி தாக்கலுற்றாரே
விசிவலையில்என்னை - வீழ்த்திச்சிக்கிப் பெரு
மோசம் செய்வதன்முன்னே - முந்தியென்குருநாதா - ஆபத்

2. எனாதியான்என்னுஞ் செருக்கில் - நாளும் வீழ்ந்து
என்னை மறந்து போயினேன்
உனாதருளுக்கு எனக்கோர் - உறவுமில்லையோ அந்தோ!
அநாதி சுதனேயேசு - ஐயாஎன்குருநாதா - ஆபத்.

3. பட்டியில்ஆடென்றுஉன்னியே - கோனானொரு
குட்டிக்கரடி தன்னையே
கட்டிப்பிடித்தான்என்ற - கதைபோலவேஉலகைக்
கெட்டியாய்ப் பிடித்தியான் - கெடமுனென்குருநாதா - ஆபத்.

4. அறிந்தும்அறியார் போலவே - ஆயிரங்குற்றம்
அன்றன்றுசெய்து நொந்தேனே
கறந்தபால் நெய்யேபோலக் - கரும்புறுசாறு போலச்
சிறந்தெங்கும் ஒன்றிநிற்குந் - தேவாவென் குருநாதா - ஆபத்.

5. விம்மிவிம்மி யழுகிறேன் - பாவச்சுமையால்
வீழ்ந்துதள்ளாடி மாய்கிறேன்
அம்மா! பெருஞ்சிலுவை - அதனைச்சுமந்துபோன
பெம்மானேஎன்சுமை - பெரிதோ என்குருநாதா - ஆபத்.

## 23. இரட்சாமூர்த்தியை வேண்டல் - Seeking for Christ

### *இன்னிசைவெண்பா*

ஆசின்மணியே அடியார்தம் கண்மணியே
ஓசன்னா என்றுதொழும் உத்தம விண்மணியே
பாசஇருளைப் பறக்கடிக்கும் ஓர்மணியே
மேசியா யேசையாவா மேல்.

### *கீர்த்தனம்*

இராகம், ... சயிந்தவி தாளம், ... ஆதி.

### *பல்லவி*

மேசியா யேசையர் வாராய் - வந்துன்
விதேயனை அடிமைகொண்டாளாய்.

### *அநுபல்லவி*

ஆசையங் கடலதில்ஆழ்ந்தேன் - அழி
அலையும் துரும்புபோலச் சோர்ந்தேன் - மேசி.

### *சரணங்கள்*

1. நின்ஆவியால்முழுக் காட்டாய் - எற்கு
நேயநல் வழியது காட்டாய்
துன்னும்துயர் விழுத்தி ஆட்டாய் - என்னைச்
சூழும்பேயைத்துரத்தி ஓட்டாய் - மேசி.

2. நின்சேவை நாடொறும் புரிவேன் - நின்றன்
நிசரூபங்கண்டால் யானும் மரியேன்
புன்பாவ வழிதன்னிற் திரியேன் - நீசெய்
புண்ணியந்தனக்கு நானரியேன் - மேசி.

3. மகனேயென்று எனையழையாயோ - அருள்
வாரியால் என்னைவளையாயோ
மிகுநேசத்தாற் குழையாயோ - பொல்லா
விழலன் என் றெனைக்களைவாயோ - மேசி.

4. பாவிமா பாவியனைப் பாராய் - நின்றன்
பதுமபதம் ஈந்தென்னை யாளாய்
கோபியென்றெனைத் தள்ளிப்போடாய் - ஈசாய்
குலந்தனைவிளக்கிடும் மேலாய் - மேசி.

## 24. கிருபை வேண்டல் - Asking for Christ's favors

### நேரிசை வெண்பா

சீனாமலையிற் றெசமொழிமோ சேக்களித்துக்
கானான்அவதரித்த கர்த்தனே - ஆனாதென்
சிந்தாகமலந் திருமனையாக் கொண்டுசுகித்து
எந்தாய் நிதமும் இரு.

### கீர்த்தனம்

இராகம், ... எதுகுலகாம்போதி. தாளம், ... ஆதி.

### பல்லவி

கருணைக்கடைக்கண்பாரையா - ஓகோ! இந்தத்
தருணத்துஉதவி தாவையா.

### அநுபல்லவி

அருமைச்சீயோன்துரையே ஆதரவேநனி போதரவாயினிக் - கரு

### சரணங்கள்

1. சஞ்சலம்தலைக் கொண்டுஏங்கியே - அனுதினம் பிர
பஞ்சமதினின்று தேங்கியே
வஞ்சகவலகையிட்ட விஞ்சியவலையுட்பட்டு
வாடிமாயாமுனம் - ஓடிவந்தேமனம்
வைத்திடுவாய்அருள் - உய்த்திடுவாய்திருக் - கருணைக்.

2. எத்தனை பவங்கள் புரிந்தேன் - தெய்வங்களென்று
சித்திர சுரூபம் பணிந்தேன்
பத்திமையில்லாதே பாவ - நித்திரைபயின்று சாலப்
பாதகனாகவிடாமல் இன்னேஅன்பு
பற்றிடுவாய்பரி வுற்றிடுவாய்திருக் - கருணைக்.

3. தேவாதிதேவாதீதனே - திரியேகமாகி
மூவுலகை ஆளுநீதனே
தாவரவிலங்குநர சீவசருவேசுவர
தாமதமாய்உறை யாமல்இதோகிர்பை
தந்திடுவாய்உடன் வந்திடுவாய் திருக் - கருணைக்.

## 25. எனக்காக மரித்தார் - Christ died for me!

### *நேரிசைச் சிந்தியல் வெண்பா*

வானமதை ஆசனமாய் வையகத்தைப் பொற்பாத
தானம்அதாய்க் கொண்ட தலைவனே - ஈனனுக்காய்
மாண்டீர் இதுவல்லோ மாண்பு.

### *கீர்த்தனம்*

இராகம், ... யமுனாகல்யாணி. தாளம், ... தீசுரம்.

### *பல்லவி*

ஆ! எனக்காகவே மரித்தீர் - தேகத்து
ஐங்காயம் புண்படப் பரித்தீர்.

### *அநுபல்லவி*

ஓ! இதென்னபழி பாபமொன்றில்லாத
உத்தமனே பரிசுத்தனே ஐயையோ! - ஆ! எனக்.

### *சரணங்கள்*

1. சத்தியவேதத்தைத் தந்தீர் - இந்தத்
தாரணியோர்க்காக வந்தீர்
முத்திக்கு வித்தாகி அப்பும்உப்பும்போல
மூவுலகெங்கும் வியாபித்திருக்குறீர் - ஆ! எனக்.

2. பாபவிலங்கது பூண்டேன் - நின்பொற்
பாதசேவையது வேண்டேன்.
கோபங்கொலைபகை ஆகுமிவையுருக்
கொண்டுசென்மித்த பெரும்பாவி சண்டாளன் - ஆ! எனக்.

3. வித்தாரலோகத்தைப் படைத்தீர் - வானம்
மேவுசிம்மாசனம் விடுத்தீர்
அத்தனேவத்திரம் இல்லாதநீசர்போல்
ஐயகோ! சோரர்தம் மத்தியிலே தொங்கி - ஆ! எனக்.

4. பஞ்சமா பாதகப்பாவி - தேவ
பத்தருக்குஉற்ற துரோகி
அஞ்சாது மேய்த்திட மாட்டாத கண்டகன்
அன்னோ! உள்ளத்தில் அநியாயங் கொண்டவன் - ஆ! எ.

## 26. இருதயக் கேடு - The iniquitous heart

### *நேரிசைச் சிந்தியல் வெண்பா*

பாடித்துதிக்கவராய் பத்தருடன் கூடியிராய்
தேடித் திரிந்து பொல்லார்ச் சேருவாய் - நாடியவென்
நெஞ்சே நீ கல்லாக்கல் நெஞ்சு.

### *கீர்த்தனம்*

இராகம், ... நாட்டை. தாளம், ... தீசுரம்.

### *பல்லவி*

என்னெஞ்சே - நல்லாக்
கன்னெஞ்சே.

### *அநுபல்லவி*

உன்னோடேஎன்னாலே வாழமுடியாது
ஓகோ! நீ மோசஞ்செய்து ஓவாதுஉலைகிறாய் - என்.

### *சரணங்கள்*

1. பாடித்துதிக்கவராய் - தேவஅன்பினைப் - பன்னிப்படிக்கவராய்
கூடிப்பொல்லாதவர் கூட்டமென்றாற்பழம்
நாடிப்பாலில் வீழ்ந்து கல்நெஞ்சு நண்ணல்போல் நத்துறாய் - என்.

2. சாட்டாங்கதெண்டனிடாய் - பாவீ! பாவீ! சன்மார்க்கரைத் தேடாத
நாட்டமெல்லாமுனக்கு அஞ்ஞானநாட்டந்தான்
நானினி யென்செய வென்கூற்று வேம்பாச்சே - என்.

3. தேவன் முனிவாரேற் - சாம்பராகிச் - சேணிற் பறப்பாயே
ஓ! விதென்னிற் பந்த னாய்க் கெடப் போகிறாய்
லோகாதிநாயகன் வாவென்றழைக்கிறார் - என்.

4. ஆவிவந்துன்கதவில் - இனின்றுவாவென்று - ஐயாயோ! தட்டுகிறார்
போவென்று சொல்லாதே போகப்பின்னில்லாதே
சாவைச் சயித்தவர் தாம்இங்கனுப்பினார் என்.

5. குத்திரம் பேசாதே - தீயோருடன் - கூடிப்பதுங்காதே
அத்திரம்சாத்தானின்று எய்கிறான் மற்றவன்
ஆகம்பிளப்பவன் வாவென்றழைக்கிறான் - என்.

6. தந்தையுனையழைத்தார் - அவர்சுதன் - தானழைத்தே இளைத்தார்
பந்தமுடன்பரி சுத்தஆவியானவர்
பந்திக்குவாவென முந்தியழைக்கிறார் - என்.

## 27. இரங்கல் வேண்டல் - Craving for Mercy

### *விருத்தம்*

நெஞ்சகங் கல்லினை நேர்ந்தும் நின்றனை
அஞ்சலி செய்தபேர்க்கு அதுகரைந்திடும்
எஞ்சிடா ஈனனேன் எண்ணித் தேவநின்
செஞ்சரண் அடைந்தனன் சிறுமைசொல்லியே.

### *கீர்த்தனம்*

இராகம், ... துசாவந்தி. தாளம், ... அடதாளம்.

### *பல்லவி*

சொல்லிவந்து உன்பாதம் புல்லினேன் - பரனேயெற்குத்
தூரமாகாது ஆளுவாய் இன்னே.

### *அநுபல்லவி*

எல்லியும் பகலும்நைந்து - ஏங்கிவிழுந்தே பணிந்தாற்
கல்லுமனமுங்கரைந்து - காதல்கொள்ளுமே யினைந்தெனச் -
சொல்.

### *சரணங்கள்*

1. இரும்புநெஞ்சுதான்குழையாதோ - ஏழைகூப்பிட்டால்
ஈரமில்மனம் வளையாதோ
அரும்பிவீழுங்கண்ணீர்ஆறாய் - ஆகம்வாருந்தன்மைதேறாய்
திரும்பியென்னை நீயும்பார்க்கச் - செப்புமென்றுன்பங்கடிர்க்க -
சொல்.

2. தந்தைமகன் தன்னைப்பாரானோ - துயரங்கண்டாற்
தஞ்சமாக முன்பு வாரானோ
இந்தஉலகின் வழக்கம் இப்படியேலென்றுளக்கம்
சிந்தவரவேண்டுமென்றும் தீர்க்கவென்குறைகளென்றும் - சொல்.

3. பூச்சுப்பொன்னரைக்கு நிற்குமோ - நின்தொண்டரோடு
பூரியேல் நிகர்க்கப்போகுமோ
பேச்சிதுமெய்யாயிருந்தும் பேதையேன்அகம்வருந்தும்
சாச்சமயம்கைவிடற்குத் தக்கதோஎன்றே நினக்குச் - சொல்.

## 28. இரங்கவேண்டல் - Craving for Mercy

### *கட்டளைக் கலித்துறை*

அன்புவையாதபுல் நீசனென்றாலும் அருள்வழங்கி
இன்புசெய்தாண்டிட நீயிரங்காவிடில் ஏழையனேன்
துன்புறும்போது துணைக்கரநீட்டித் துயர்தொடைக்கப்
பின்புளர்யார் சுவிசேடக இங்குண்மை பேசிடினே.

### *கீர்த்தனம்*

இராகம், ... பைரவி. தாளம், ... மீசுரம்.

### *பல்லவி*

சிங்காரமான சீயோன் - தங்குந்துரையே நாயேன்
சிறுமைக்குஇரங்க வேண்டினேன்.

### *அநுபல்லவி*

மங்களரஞ்சிததிவ்ய - சங்கீதன்தாவீது துய்ய
மரபிற்றிலதமான - வரத சைதன்னியராச - சிங்.

### *சரணங்கள்*

1. தேவரீரேயல்லாற் - பாவம்பொறுக்க வல்லார்
செகந்தனில் இல்லையென்று தேர்வேன்
ஆவலுடன் வந்தின்னே - ஓவாதுள்ளிருடன்னை
அழித்துக்காத்தாதரிப்பது - ஐயா நின்கடன் மெய்யா - சிங்.

2. துதியேன் நின்னையன்றி மதியேன் பிறரைஒன்றித்
தூயநின் நாமங்கூறித் திரிவேன்
இதயஅரவிந்தமுறை பதியாய்நீ வந்தாற்குறை
யாதெனக்குஉண்டையா ஒப்போத இங்கொன்றுமில்லா - சிங்.

3. கடலில்நடந்துசீட ருடனே திரிந்தீர்ஓடக்
காரருடனே துயின்று எழுந்தீர்
அடியேன் மனசு கல்லோ அதில்வந்துறைவ தல்லோ
அன்பார் சவுபாக்கியம் அதுதானென் சலாக்கியம் - சிங்.

## 29. கிறிஸ்து என்னடைக்கலம் - Christ is my refuge

### நேரிசைவெண்பா

நேர்வழியிற் செல்லாத நிட்டூரன் பேய்க்கடியேன்
ஓர்போதும் உன்னாமம் ஓதிடேன் - யார்யார்க்கும்
பண்ணாது ஒழுகேன் பரமனே நின்கருணை
எண்ணித் துணிந்துவந்தேன் ஏல்.

### கீர்த்தனம்

இராகம், ... மலையாமி. தாளம், ... ரூபகம்.

### பல்லவி

எண்ணித் துணிந்துவந்தேன் - யேசுபரா
நின்னைப் பணிந்துவந்தேன்.

### சரணங்கள்

1. நண்ணியலகையென்னைச் சின்னப்படுத்திமிக
நைந்திடவாட்டுகிறான் - இதைக்
கண்ணியலகையென்னைச் சின்னப்படுத்திமிக
காத்திரட்சிப்பாயென்றே - எண்ணி.

2. ஆதிமறைக்கெட்டா நாதனேஎன்பாவம்
அத்தனையும்தொலைத்தே - மிகு
சோதியாகிய மோட்ச வீடதை நீயெற்குச்
சொந்தம்தருவையென்றே - எண்.

3. குன்றுமுட்டுங் குருவிகுரீகி என்றேயாருஞ்சொலக்
கோபமுனைமுட்டினேன் - இப்போ
ஒன்றுக்கு மஞ்சாதே அபயந்தருவனென்று
உபசாரஞ் செய்வாயென்றே - எண்.

4. கெட்டகுமாரன்போல் வெட்கமுடன்வந்தேன்
கிட்டிக்கை நீட்டாயோ - தப்பா
திட்டகாமியத்துடன் இணங்கும்ஆனந்தசுகம்
சட்டமாய் ஈவையென்றே - எண்.

5. பேயும்உலகும்என்னைப் பிடிக்கஅடிக்க அப்பா
பித்துப்பிடித்தேனை -பெற்ற
தாய்போல நீ வந்து தமியனாம்எனையேற்றுத்
தாபரித்து ஆள்வையென்றே - எண்.

## 30. தேகஉபேட்சை - Contemptibility of the body

### *விருத்தம்*

உடுப்பனஉடுத்துப்பூசி உண்பன உண்டுண்டுஆசை
கொடுப்பன சுகித்துவேண்டும் கோளெலாம் கொண்டுவேதம்
தடுப்பனபுரிந்து நாளைச் சாவதின் ஓலைவந்தால்
விடுப்பைநீ இந்தக்காயம் ஆதலில் விரும்பேல்நெஞ்சே.

### *கீர்த்தனம்*

இராகம், ... பியாகடை. தாளம், ... அடதாளம்.

### *பல்லவி*

இந்தக்காயத்தைச் சதம் - எனவே சுமந்துநிதம்
ஏன்உலைகிறாய் நெஞ்சமே.

### *அநுபல்லவி*

சொந்தப் பொருளாய்உன்னை - முந்திப்படைத்தோன் மின்னார்
சந்தப் பதம்மறந்து நிந்தைக்குஈடாய்த் திரிந்து - இந்தக்

### *சரணங்கள்*

1. பொன்னும்மணியும் பூட்டிப் - பூம்பட்டாடைகள் கட்டிப்
பொதிந்து துலங்க வெண்ணெய் - பூசிமுடித்துக்கண்ணை
மின்னும்படியேசெய்து - மினுக்கும்மெலுக்கும்எய்தும்
இரணமும்சீழுமுற - மேலிட்டுஉடனேநாறும் - இந்தக்

2. ஒன்பதுவாசல் பூண்டுள் - உறைவோரை வரைக்கொண்டு
ஓயா மலமுஞ்சீயும் - ஊறி வெளியேசாயும்
என்புகளுள்ளேசார்ந்தும் - இலங்குதோல் மேலே சோர்ந்தும்
இயமானன் விட்டேயாற - இசைந்த சுடுகாடேறும் - இந்தக்.

3. கோழையிருக்குங் கூடு - கொள்ளை பெருக்கும் வீடு
குழுமிஇரத்தம்மேதை - மலியும் செறியும் வாதை
நாளைக்கு ஓலைவந்திட - நுமக்கும் திட
நட்புநாரேதுதேடும் - நலம்யாதென் றேநாம்போடும் - இந்தக்.

## 31. யேசுவே தஞ்சம் - Christ the only help

### *விருத்தம்*

ஒன்றும்உணராதவர்தம் உள்ளமலர்மீதே
சென்றுமறிவோரது செருக்கினைஅறுத்தும்
அன்றுமுதல்இன்றளவும் ஒன்றெனஅமர்ந்தும்
நின்றபர நின்சரண நெஞ்சின் மறவேனே.

### *கீர்த்தனம்*

இராகம், ... பந்துவராளி. தாளம், ... அடதாளம்.

### *பல்லவி*

சரண பங்கயம் சாருவேன் - தேவனே நாயேன்
சந்ததம் உனைச் சேருவேன்.

### *அநுபல்லவி*

1. ஏதுங்கதி இல்லாதேன் - இன்றுநின் பங்கிலானேன்
எண்ணித்துணிந்துதர்மம் - இயற்றல் நயமென்றோரேன்
வாதும் துயர்தரு சூதும் பலவித
தீதும்புரிவது போதும் போதும்உன்றன் - சரண.

2. நன்மைஇவைகளென்றும் - நவைகள்அவைகள்என்றும்
நல்லார் இவர்களென்றும் - அல்லார்அவர்களென்றும்
நாடிப்பரிவொடு தேடித்திரமுற
நன்றாமுணர்வறி வொன்றேயெனுமிலன் - சரண.

3. அரசர் பிடித்துஅடித்தும் - அயலாரிடித்து இழுத்தும்
ஆவலாதிகள் என்னை - ஆட்டியலைத்து ஒடித்தும்
அப்பாஉனைமறந்து இப்புவிடையிருந்து
உலையும்பாடிஏழைப் புலையனெனவிடாய் - சரண.

## 32. இரட்சிப்புத்தேடல் - Seeking after salvation

### *கட்டளைக் கலித்துறை*

சிந்தா குலங்கொண்டு நைந்துள்வருந்துஞ் சிறுமகன்மேற்
சந்தாபங் கொண்டருள் அந்தாதரிக்கு நல்தாதையொப்பாய்ப்
பந்தாதி பாசப் படுகுழிவீழ்ந்து பதைக்குமுனம்
ஏந்தாய் பராபர னே எனை ஆள எழுந்தருளே.

### *கீர்த்தனம்*

இராகம், ... அடானா. தாளம், ... அடதாளம்.

### *பல்லவி*

எனையாட்கொளவருவாய் - ஐயனே
மனம்
இரங்கிக் கருணைமழை பொழிந்து இரட்சண்யம்-தனைநீ பெரிதருள்வாய்

### *அநுபல்லவி*

தனிமுதலேயெரு - சலநகர்வாசா - தாவீது மரபினில் மேவியதேசா
கனவினும்அடியவர் - அகமகிழ்நேசர் - காவினிலேவரு பாவவிநாசா
- எனை.

### *சரணங்கள்*

1. சித்தமிரங்கல்நிற்குத் - தொல்லையோ
பிணிமிடிவறுமைகள் துயர்பயம்இவைகளில்
நித்தமழுங்கல் காணவில்லையோ
உத்தமனே ஞானதத்வ உபதேசா - ஓலமிட்டோர்க்கநுசார சர்வேசா
பெத்தனிமாநகரத்துஅமர்ஈசா - பீடறுமானிடர்சாபவிமோசா - எனை.

2. போதங்களோதித் - திரிந்தாய்
குணம்அடைகுதினை வளியுடன்ஒருதிமிர்
வாதுஅன்றன்மீது பரிந்தாய்
கோதில்பரன்குமரா கிர்பைகூராய் - கூறுநின்னாரருள் மாமழைதாராய்
பாதகனாயெனை நீவிடின்நேராய்ப் - பாதுசெய்வார் பிறராருளர்ஓராய்

3. காலங்கடந்த - சோதியே
கவின்இலகியமரி வயினயனமதெடு
பாலவானந்த வாதியே
சீலமுள்ளோர்க்கு உபசாரனேயோவா - தாவெனவே அழுவார்க்கருள் தேடவா
சாலமிலாது எனையாள்மறைநாவா - தாமதமாக நிலாதுஇன் னேவாவா.

## 33. ஞானமேய்ப்பன் - Christ the holy shepherd

### *இன்னிசைச் சிந்தியல் வெண்பா*

அடைவாக ஆடுகள் கொண்டு ஆநந்தமேய்ச்சல்
முடிவாகக்காட்டு முதல்வனே முந்திக்
கிடைதனைக் கண்பாருங் கிளர்ந்து.

### *கீர்த்தனம்*

இராகம், ... மோகனம். தாளம், ... அடதாளம்.

### *பல்லவி*

கிடைதனைப்பாருமையா - கோனாரே
கெட்டித்து நில்லுமையா.

### *அநுபல்லவி*

இடையிடைஅன்பென்னும் வேலியைநாட்டுதிர்
அடைவாகப் பட்டிவிட்டு அங்கிங்குச் செல்லாதீர் - கிடை.

### *சரணங்கள்*

1. கோநாய்கள்தாம்வருமே - கலங்கிடக் - கோமாயுதாம்புதுமே
ஆ! நாதாயேசையா ஆட்டைத்தனிவிடீர்
வீணாக நீருயிர் விட்டீரென்றுஆகாமல் - கிடை.

2. பையப்பபைய நடத்திப் - பாலாட்டினைப் - பக்குவமாய்க்கிடத்தி
ஐயையோ! குட்டிகள் யாண்டுஞ்சிதறாமற்
கொய்யோபாடி ஆயக் - கோலைக் கையிலாடிக் - கிடை.

3. நல்லசுனைக்கோட்ட - மேய்ச்சல்தனை - நன்றுநின்றுகாட்ட
வல்லமையில்லையோ வாடிநும்மாடுகள்
புல்லின்றிச் சாகிற் புகழ்உமக்காகுமோ - கிடை.

4. குட்டிகளைத்தூக்கித் - தோள்மீதினிற் - கொண்டுநடந்திடுவீர்
வெட்கம்ஈனாமலடு என்றுவிடுக்காதீர்
கக்கத்தில் தாங்குவீர் கண்டுஊக்கஞ்செய்யாதிர் - கிடை.

5. சத்தவேடன்உலைப்பான் - பரிசமாம் - தானவன் வந்துஅலைப்பான்
அந்திரிருபனு மாம்ரசன் மந்தனும்
நித்தம் செயம் செயம் என்று நெருங்குவர் - கிடை.

6. ஆசைக்காட்டிற் பெருக்கீர் - தெருத்தனில் - அந்தரிக்கவிடுக்கீர்
பாசக்கயிற்றினிற் பற்றலர்கட்டிப்போய்
மோசஞ் செய்யவிடீர் - முக்காலுநம்பினேன் - கிடை.

7. முத்திவெளிகாட்டீர் - ஐயாமுழு - கோசநெறிநீட்டீர்
தத்தமியென்று கோணங்கிக் கூத்தாடியே
தித்தித் திந்தீமென்று தீங்குழலூதியே - கிடை.

8. கொஞ்சந்தானாடெனவே - சலிப்பது - கொள்ளாதிர்கோனாரே
அஞ்சாறாடுகோடியாகாதோ புல்நீர்க்குப்
பஞ்சம்வாராமலே பத்திரம் பத்திரம் - கிடை.

## 34. மனதையருட்டல் - Awakening the soul

### தேவாரம்

வஞ்சகப் புலத்தர்சேர்ந்து வழிமறித்து ஆசாபாசம்
விஞ்சிடவெறிந்து சூழ வேதனை அகத்தேனாகித்
தஞ்சமில்லாது தீயேன் சஞ்சலந் தலைமேற்கொண்டேன்
அஞ்சலென்று எனையாளாக்கி ஆண்டருள் யேசுநாதா.

### கீர்த்தனம்

இராகம், ... கல்யாணி. தாளம், ... தீசுரம்.

### பல்லவி

தேடித்தேடித் திரிவாயே - மனப்பேயே
பரலோகஞ்சேர நீ
நாடிப்பாடிப் பரிவாயே.

### அநுபல்லவி

ஓடிப்பறந்துழன்று - ஆடாமலே நின்று
உச்சித யேசென் - இரட்சகனேஎன்று
நாடிக்கூடிஆத்ம - ஞானிப் பெயர் கொண்டு
நாட்டமுடன்மாய - ஆட்டந்தனைவிண்டு - தேடித்.

### சரணங்கள்

1. காயமிது நிலையாதே - உலையாதே - அலையாதே
தீயகன்மம் புரியாதே - தவறாதே இதுபோதே
நாயும் பேயும் போல - வீணாட்கழியாதே
நாசரையம்பதி - மேவிய செம்பத
தூயன்பரப்பிரம - ரூபன்அபிடேக
நாதன்சுவிசேட - போதன்பதாம்புயம் - தேடித்.

2. சேருந்திரிலோகநாதன் - திருவேதன் - குணாதீதன்
சாரும் அவர்க்கநுகூலன் - மனுகோலன் - பரபாலன்
காருங்கருங்கடல் - தானுஞ்சிறந்தமண்
சாருஞ்சராசரம் - யாவும் வழங்கிவிண்
ணோருந்தொழமரி - ஆண்மைந்தனாய்அவ
தாரம்புரிந்தஇம் - மானுவேலன் பதம் - தேடித்.

3. ஆங்காரங் கோபங்கொள்ளாதே - வெருளாதே - மருளாதே
தீங்கிலவாவுறல் பாழே - இந்தநாளே - போதங்கேளே
மூங்கையரானமட் - டாம்பிரத்தேவர்கள்
மோசக்காரர் பெரு - நாசக்காரரவர்
பாங்கிலுஞ் செல்லாதே - பாராதே நில்லாதே
பைசாச சங்காரி - செம்பாதபங்கயம் - தேடித்.

## 35. அபயமிடல் - Appeal to Jesus

### விருத்தம்

பூதங்கள்ஐந்தும் புலன்கள்ஐந்தும் புரண்டுகுலைந்து கலங்கிடினும்
சேதங்கள்முந்தி எழுந்திடினும் தீராமிடிநோய் கலந்திடினும்
நீதந்தவிர்ந்து மன்னவர்கள் நேரேவரினும் தேவேநின்
பாதஉபய அம்புயம்அல்லால் வேறே துணையென் பரிந்தாளே.

### கீர்த்தனம்

இராகம், ... அசாவேரி. தாளம், ... ஆதி.

### பல்லவி

அபயம் அபயம் யேசுநாதா - நீயென்னை
அடிமையாக்கொண்டருள்செய் நீதா.

### அநுபல்லவி

உபயவம் போருகநேர் - சரணத்திறைஞ்சி யென்பேர்
ஒப்பம் எழுதித்தந்தேன் - உனக்கடைக்கலம் வந்தேன் - அபயம்

### சரணங்கள்

1. நினைத்த வரங்களெல்லாம் - நீயே உதவவேணும்
நீசெய்ந்நன்றி மறந்தேன் - நினைக்கஎன்மன நாணும்
எனைத்தையும் செய்யும் பாவி - ஏழையேஎன்னைப்பேணும்
இரக்கமிருந்தாலல்லோ - எங்குநின் மேன்மைகாணும் - அப.

2. புலன்களைந்துங்கலக்கம் - பொருந்திஒன்றொன்றோடுஆக்கப்
புத்திசித்தங்களாதி - பூசலிட்டொன்றொன்றீர்க்க
நிலங்களம் பொன்பெண்ணாசை - நிமிர்ந்தொன்றையொன்று தூர்க்க
நெஞ்சம் மலங்குத் தன்மை - நினைத்தென் குறைநீர்க்க - அப.

3. சன்மக் கடலுள்ஆழ்ந்த - தாசனிவனோர் தொண்டோ
தக்கோன் அன்றுஎன்றோவேறு - தாழ்வுகள்என்னிற்கண்டோ
வன்மன் வஞ்சகன்பேயன் - வறிஞனெனவுட்கொண்டோ
வந்தாளவில்லை நீதான் - மறுத்தாற் பிறரிங்குண்டோ - அப.

## 36. யேசுவுக்கபயம் - An appeal to Jesus

### விருத்தம்

சமுசாரமெனும் பெருஞ் சாகரத்துள் வீழ்ந்து
தள்ளாடி மதிமயங்கிச் சாம்பித் தேம்பி
அமுதமொழி மனைவி பொன் மண் சிறார்கள்அந்த
ஆசைப்பேய் இழுத்தாட்டிஅலைக்கப் பாவச்
சுமைசுமந்திப் புவிமிசையால் நின்கண்காணச்
துஞ்சிடல்நீதியதோ என்துயர் காணாயோ
சமயமெலாங் கடந்து திருமறைக் கெட்டாத
தற்பரனே இச்சமயந்தான் வந்தாளே.

### கீர்த்தனம்

இராகம், ... பெலகிரி. தாளம், ... அடதாளம்.

### பல்லவி

ஆளவாராய் இச்சமயம் - ஐயனே இடேன்அபயம்

### அநுபல்லவி

மாளவிட்டிருந்தாலிந்த - வையகமென்சொல்லாதெந்தாய் - ஆள.

### சரணங்கள்

1. சஞ்சலம்படிந்து துக்க - சாகரத்தில் ஆழ்ந்துமிக்க
வஞ்சகர் வலையுட்சிக்க - வலியநான் ஓடாதிருக்க - ஆள.

2. சொல்லமுடியாத துன்பம் - சுமந்ததினிப் போதும்அன்பாம்
எல்லையில்லா மோட்சவின்பம் - ஏழையேனுக் கீந்துநண்பாய் - ஆள.

3. அன்னையுனீ தந்தையுநீ - ஆளில்லோர்க்குஆதாரமுநீ
சின்னஞ்சிறியேனைஉன்னி - தீமையாவும் போக்கமுன்னி - ஆள.

## 37. ஏன் என்னைத் தேடீர் - Why wilt thou not come?

### விருத்தம்

பன்னுமறைப் பழம் பொருளே பத்தர் வாழ்வே
பகரரிய இரட்சணியம் பழுத்த கொம்பே
மன்னவனாந் தவீது குலவிளக்கே மோட்ச
வாழ்வினுக்குத் திருக்கதவே மன்னுவேதம்
சொன்னபல தொண்டருக்குத் தொண்டாய் நின்றீர்
தொன்மையதாம் புவியினர்க்காய் உயிருந் தோற்றீர்
என்ன முகாந்தரம் என்னிற் கண்டீரையா
ஏனென்னை வேண்டுகிலீர் இதைச் சொல்வீரே.

### கீர்த்தனம்

இராகம், ... சுருட்டி. தாளம், ... தீசுரம்.

### பல்லவி

என்னமுகாந்தரங் கண்டுநீர் யேசையா - என்னை வேண்டுகிலீர்.

### அநுபல்லவி

சொன்ன புரிநிகர் - என்னுஞ் சியோனகர்
மன்னன் தவீதுநன் - மாமகனே என்னில் - என்ன.

### சரணங்கள்

1. சக்கேயுவீட்டினிற் சம்பிரமவிருந்து
சாப்பீட்டீர்என்றேனோ - மிக
அக்கிரமச் சிலுவைச் சுமை நற்கூலி
யாளர்என்றேனோ - ஈனக்
கைக்கௌியார் தமைத் தோழமை கொண்டிட்ட
காதையுடன் வேறே - எதையுஞ் - சொன்னேனோ - என்ன.

2. கள்ளர்தம் மத்தியிற் தூங்கியென்றும்மையான்
கண்டித்துச் சொன்னேனோ - ஊரிற்
பிள்ளைகள் தம்மைநீர் ஏந்தினீர் என்றுமைப்
பிழையாகப் பேசினேனோ - அல்லாற்
துள்ளிச் சவுக்கடி பல்லோரிற் போட்டிடு
துடுக்கன் என்றேனோ - கடு - மிடுக்கன் என்றேனோ - என்ன.

3. கள்வனாம் யூதாஸ் காரியோத் துக்குநற்
காதலன் என்றேனோ - கடல்
வள்ளங்களேறிப் பலருக்கும் போதித்த
வாயாடி யென்றேனோ - பண்டு
உள்ளநாடொவ்வொன்றாய் ஓடித்திரிந்தநாடு
ஓடிநீர் என்றேனோ - ஏதும் - மோடிநவின்றேனோ - என்.

4. பேதுருவாதி வலைஞரைச் சீஷராய்ப்
பிடித்தீர் என்றேனோ - அதி
காதலிற் போதகர்க் கண்டிதஞ் செய்வாதக்
காரனென்றேனோ - உலகு
ஓதுங்குலாசாரம் விட்டெளியாருடன்
உண்டிரென்றேனோ - துயில் - கொண்டி ரென்றேனோ - என்.

5. ஈனமனுஆட்டுக் குட்டிகள் மேய்த்திட்ட
இடையன் என்றேனோ - நீரைக்
கானாவிலே ரசமாக்கிய மாறாட்டக்
காரனென்றேனோ - மாந்தர்க்
கூனஞ்செய் பற்பல கூட்டமாம் பேய்களை
ஓட்டியென்றேனோ - உயிர் - மாட்டியென்றேனோ - என்ன.

6. முப்பதுவெள்ளிக் காசுக்கு விலைப்பட்ட
முற்காதை சொன்னேனோ - ஏழு
அப்பத்தால் நாலாயிரவரைப் போஷித்த
தா! தந்திரமென்றேனோ - அன்று
கப்பத்திற் தாய்மச்ச வாய்ப்பணங்காட்டிடல்
கசகர்ணம் என்றேனோ - ஆகா - வசையொன்றுவிண்டேனோ.

## 38. இரங்க வேண்டல் - Longing for mercy.

### நேரிசை வெண்பா

அடியார்க் கெளியவனா ஆபிரகாம் பித்தாய்ப்
படிமீ துதித்தபர பானு - கொடியனைநின்
கண்ணாலே நோக்கிக் கவலைதணித்து ஆண்டிடநின்று
எண்ணாதே வந்தெற்கு இரங்கு.

### கீர்த்தனம்

இராகம், ... சுருட்டி. தாளம், ... தீசுரம்.

### பல்லவி

என்மேலிரக்கம் இல்லையோ ஐயா
இரங்காதிருந்திட
ஏழையேன் பெரும்பாவிதான் துய்யா.

### அநுபல்லவி

சின்மயமாகிய சீயோன் மலைவாழும்
தேவனே சத்யமெய்ஞ் ஞானஅரூபனே
சீலனேசுவி சேஷனே போதுல
திருவொய்யார நிராமயனேஇன்னும் - என்.

### சரணங்கள்

1. பூவுலகீடேற்று நசரேயா - ஆசாபாசங்களைப்
போக்கமரி யம்மைபெற்ற ராசா
பாவவிநாச பராசயனேயெனப் - பத்தர்சங்க மருத்திகொடர்ச்சித்த
பண்ணவாஇடர்நண்ணிடாமுனம் - பட்சத்துடன் வந்திரட்சித்திடஇன்னும்
- என்.

2. வரங்கொடுக்குந் திரித்துவநற்கோலா - நிதம் வணங்கடியவர்
மாசறுக்குந் தேவதிருப்பாலா
தருந்திவ்ய மொழிதெளிந்த அச்சுத - சற்குணா சருவேஸ்வரபுத்திர
தஞ்சமாகவந் தஞ்சலென்று நின் - தாளுபயமளித் தாளுவதற்கினும்.

3. அண்டர்பணிந்திடுங்கமலபாதா - பரமண்டலம்சிம்
மாசனமாக் கொண்டரசாள் நீதா
தொண்டர்துதித்திடுஞ் சூரியப்பிரகாச - தோமறுயேசெனு நாமவுல்
துய்யனே கிர்பைக்கையனே வினைத் - தோஷமறுத் தாசீர்பாதஞ்செய்
வின்னும் - என்.

## 39. வந்தாள வேண்டல் - Oh! Jesus! Come & save

### நேரிசை வெண்பா

தேரும் புகழார் திருவெருசலேம்நகரில்
ஆரும் தவீதுகுலத் தண்ணலே - நேரில்லா
மன்னும் புவிப்பாரம் மாற்றவந்த ரட்சகனே
வன்மம் வையாதாள வா.

### கீர்த்தனம்

இராகம், ... பைரவி. தாளம், ... தீசுரம்.

### பல்லவி

என்னை ஆதரித்தாள வந்தருள் - யேசுநாயகா
திரிலோக நாயகா - திரி லோகநாயகா.

### சரணங்கள்

1. மன்னும்இப் புவிப் பாவப் பாரத்தை மாற்ற வந்தவா
ரட்சை மார்க்கந் தந்தவா - என்னை.

2. ஆருமற்ற பேய்ப் பாவியென்றெனை அசட்டை செய்யாதே
என்னை அலைய வையாதே - என்னை.

3. மக்களுட்பெரும் பதடியென்றெனை மறுத்துத் தள்ளாதே
மனம் மாறியெள்ளாதே - என்னை.

4. நாயினுங் கடை நாயன்னேற்கருள் நல்கலாகாதோ
என்னை நாடல்கூடாதோ - என்னை.

5. பாவத்திலுருக் கொண்டபாவியைப் பார்க்கவொண்ணாதே
பாவந்தீர்க்கவொண்ணாதோ - என்னை.

6. கும்பிட்டுன்பதம் வீழ்ந்துநின்புகழ் கூறிக்கூப்பிட்டேன்
என்னைக் கொடுக்கலும்பட்டேன் - என்னை.

7. மந்தைக்காகாத ஆடதென்றெனை - மறுத்துநீக்காதே
என்றன் மனம்புண்ணாக்காதே - என்னை.

## 40. யேசு மெய்யான ரட்சகர் - Christ the true Savior

### விருத்தம்

வேதத்தோனை விமலனை அற்புத
போதத்தோனைப் புனிதனை பான்புகல்
கீதத்தோனை அகமே கிளர்ந்த பொற்
பாதத்தோனைத் துதித்துப் பணிவையே.

### கீர்த்தனம்

இராகம், ... நாதநாமக்கிரியை. தாளம், ... ஆதி.

### பல்லவி

தற்பரனாமொரு மெய்ப்பரன் யேசென் சாற்றித் துதிமனமே.

### சரணங்கள்

1. பொற்பு நிறைந்த திரு - அற்புதகர்த்தனா
உற்பவமானயேசு - ரட்சகனானவேக - தற்.

2. அண்டம் படைத்துப் பேயின் - சண்டந்தவிர்த்துத் தீயர்
கொண்டபவத்துக்கேற்குந் - தண்டந்தனக்கேயாக்கும் - தற்.

3. குருடர்முடவரோடு - திருடர் செவிடர்தேடும்
புருடர் குறைவைப் போற்றும் - அருடனிறைவான் மாற்றும் - தற்.

4. வேதந்திறந்தஞ்ஞான - பேதந்தவிர்ந்துஞான
போதம்பகர்ந்துவாக்கு - வாதங்கள் வென்று நீக்கும் - தற்.

## 41. தற்காக்க வேண்டல் - Craving for help

### கலிப்பா

அதிசயமாய் மரிவயிற்றில் அவதரித்துச் சுவிசேஷம்
கதிபெறுவார் இதமுறவே கணமெனினும் ஒழியாது
பதிகள்தொறுந் திரிந்துரைத்த பரஞ்சுடரே பவக்கடலுள்
நிதமழுந்தி அழியாமல் நினதளிதந்து அருள்வாயே.

### கீர்த்தனம்

இராகம், ... ஆனந்தபைரவி. ... தாளம், ... அடதாளம்.

### பல்லவி

தற்பரனே சீயோன் அற்புதனே எனைத் தற்காத்து வைப்பாயே.

### அநுபல்லவி

புற்புத நிகரான - இத்தரை வாழ்வுதன்னிற்
புகுந்து வெம்பியுழன்று - வருந்தித் தியங்காதின்று - தற்.

### சரணங்கள்

1. தீர்த்தந் தலங்கள் முத்திக்கு - ஏற்றவெனவே கத்தித்
தெருத்தொறுந் திரிந்தேனே
கோத்ரம் மதாசாரம்வீண் - சாத்திரஞ் சரதமெனக்
கொண்டாடி மகிழ்ந்தேனே.
பார்த்தாலிவைகள் - யாவும் - பசாசின் கிர்த்தியந் தேவ
வார்த்தையலவோ மோட்ச - வழிக்கு நடத்துஞ் சத்தியம் - தற்.

2. முற்பிதாக்களுஞ் சின்ன - அப்பர் முதலானோரும்
முன்பு சாலோகஞ் சார்ந்தார்
செப்புஞ்சிலுவைவலப் - பக்கந்தூங்கியசோரத்
தப்பிலி பரதீசு சார்ந்தான்
அப்படிச்சேரப்பத்தி - அற்றேனெனினுஞ்சித்தி
எப்படியேனுந் தந்து - என்னையீடேற்றமுந்தித் - தற்ப.

3. அம்புவிபெண்பொன்னாசை - அடைந்துன்னருண்மேல்வாஞ்சை
அற்றலைந்தேனே ஐயையோ ரட்சை
சம்பூரணமாய்ப் பெறத் - தகுந்தேனல்லேனைநூறச்
சலஞ்சாதியாதுன்னேச சிட்சை
இம்பரளித் தென்றீய - வெம்பவம்போக்கிப் பேயேன்
யார்க்கும் நகைப்பாய் வாழ்ந்திங்கு - இடருள்அழுந்திமாயேன் - தற்.

## 42. அருள வேண்டல் - Oh! Pity me

### தேவாரம்

ஐயவிவ் வுலகவாழ்வின் ஆசைஎன் அகத்தால் நீங்கச்
செய்திடல் அரினொலுன் திருவருட் கடைக்கட்பார்வை
பெய்ததைப் போக்கி நின்பாற் பிரீதியாஞ் சேவைசெய்து
உய்தர இரட்சித்தாளா ஒருவனே யேசுநாதா.

### கீர்த்தனம்

இராகம், ... சங்கராபரணம். தாளம், ... ரூபகம்.

### பல்லவி

பதியேஎன்மேற் சற்றே பாரையா - அதிபதியே - நரபதியே - குண
பதியே - என்மேற் சற்றே பாரையா.

### அநுபல்லவி

துதிசேர் நிதியே மோட்ச - கதியே சீவநதியே - பதியே.

### சரணங்கள்

1. ஆசையம்போதிவீழ்ந்து - வேசாறி அமிழ்ந்தி
நாசமுறாமுன் அந்தோ! நேசமாய்ஓடிவந்து - பதியே.

2. சரச வசனமாடித் - தெரிவையரோடு கூடித்
தருமந் தவறிடாமல் - நரகின் முழுகிடாமல் - பதியே.

3. திசையோர் புகழுந்துங்க நசரா புரியதெங்கும்
இசைசேர் சுவிசேஷம் மெய் - நசையாய்ப் பகிரங்கஞ்செய் பதி.

4. கோடானு கோடிலோக - கூத்தரைக் காக்குஞ்சீல
பாடார் ஒருவனையோ - பார்த்துக்காத்தலரிது - பதியே.

## 43. நரகம் - Hell

### நேரிசை வெண்பா

வேகுமே யுள்ளம் மெலியுமே வாய்குளறும்
ஆகம் உதறும் அறிவொழியும் - சோ்கு
அரசாள் இடமாம் அவண்சென் றிடாதீர்
நரகமெனுஞ் சொல்லதனி னா.

### கீர்த்தனம்

இராகம், ... எதுகுலகாம்போதி. ... தாளம், ... அடதாளம்.

1. நரகமென்றவோர் மொழியிலேயென்றன்
நாப்பதறுகுதே
சொற் குளறுகுதே
உடல் உதறுகுதே - ஐயையோ!
அப்பனே! அப்பனே! அப்பனே!
அவண் சென்றிடாது இரந்தேன்.
சுவாலை கொண்டழல் சுற்றிவீசிடச்
சோர்ந்து வீழ்வாய்.

வீழ்ந்து தாழ்வாய்
தாழ்ந்து மாள்வாய் - ஐயையோ!
அன்னையே! அன்னையே! அன்னையே!
அவன் சென்றிடாதிரந்தேன்.

3. பசாசுடன்அவன் தூதரும் வந்து
பற்றுவர்இடிப்பர்
சுற்றிப்பிடிப்பர்
செயம் படிப்பர் - ஐயையோ!
அண்ணனே! அண்ணனே! அண்ணனே!
அவன் சென்றிடாதிரந்தேன்.

4. கந்தகப்புகை வந்து மொய்த்திடும்
காட்சி பயங்கரமே
தியங்குவையே
மயங்குவையே - ஐயையோ!
அனுசா! அனுசா! அனுசா!
அவன் சென்றிடாதிரந்தேன்.

5. அழுகைசெய்து பற்கடித்துநித்தமும்
ஆகமடிப்பார்
கைகணொடிப்பார்
நேசர்க்கிடிப்பார் - ஐயையோ!
மித்திரா! மித்திரா! மித்திரா!
அவன் சென்றிடாதிரந்தேன்.

6. சாவுறாப் புழுச் சார்ந்தரிக்குமே
தப்பவென் செய்வீர்
யாரைச்சார்வீர்
எங்கே போவீர் - ஐயையோ!
பாவிகாள்! பாவிகாள்! பாவிகாள்!
அவன் சென்றிடாதிரந்தேன்.

7. அக்கினிக்கடல் அழிவிலாக்கடல்
ஆகஞ்சுடுமே
தாகமெழுமே
சோகமிகுமே - ஐயையோ!
மக்களே! மக்களே! மக்களே!
அவன் சென்றிடாதிரந்தேன்.

## 44. மோட்ச மாட்சிகை - Heaven

### விருத்தம்

தேவன் வாழிடம் திருச்சுதன் வாழிடம் தேற்றும்
ஆவி வாழிடம் அவர்தொண்டர் வாழிடம் அழிவும்
சாவு மில்லிடம் சம்மன சுறைவிடம் சதமும்
தாவின் மோட்சமண்டலத்தில் நற்காட்சி யார் தருவார்.

### கீர்த்தனம்

இராகம், ... மோகனம். தாளம், ... ஆதி.

### பல்லவி

மோட்சமண்டலத்தினற் - காட்சியை மண்ணோர்தம்முள்
முற்ற மொழிவார் யாரே.

### அநுபல்லவி

ஆட்சிசெய்யும் பரிசுத்தரன்றி எவர்
தாட்சியின்றியதன் - மாட்சி சொல்லவலர் - மோட்ச.

### சரணங்கள்

1. சோதிகான் மரகதங்களோடு பவளங்கள் - வைடூரியங்கள்
ஆதியான பிற ரத்தினங்கள் தரளங்கள் - அங்கவிலங்கும்
கோதிலாதஒளி முன்பு தம்பிரபை குன்றும் - மதிலெட்டும்
வீதியோடிரவி அரியும் அங்கவைமுன் வெல்லும் - பெம்மான்அமரும்
நீதிஆசனமிலங்கலும் நரைகள்
யாதுமில்லவர் துலங்கலும்மனச
பேதியாதவர் வழங்கலுங்குரைசெய்
சீதநீரென முழங்கலும்
வேதவேதவெனவே தொழுமரவமும்
போதபோதவெனத் தொழுமரவமும்
ஆதியாதியெனும் ஓதையுடனெங்கள்
நாதனாதவெனும் ஓசையுமே பொங்கும் - மோட்ச.

2. வேதாபாரம் அடர்ந்து நீள்திசை செல்லும் - அதன்கனிகள்
தாவிலாதவகை தொன்றுநின்றினிமை கொள்ளும் - பளிங்குபோல
ஓவலின்றியுறு நதிகள்அங்குலவி ஓடம் - அண்டரண்டம்
தாவுசோதி ஒளிமண்டி ஒன்றுபகல்நிடும் தூதாதிதூதர்
மேவிவந்து பணிந்திடலுந் தூங்கக்
கோவேயென்று குனிந்திடலுமிங்கே
வாவாவென்று கரைந்திடலும்பர
சேவைசெய்து சிறந்திடலும்.

காவினன்கனி கொய்துடனாடலும்
வாவிசென்று திரு மஞ்சனமாடலும்
சாவைவென்றனம் என்றவர் பாடலும்
ஈவிலாநிதமே நிறைவாயுறும் - மோட்ச.

3. ஓசனாவெனவே பாடுகின்ற கம்பலையும் - அன்போடுவந்து
மேசியாவெனக் கொண்டாடுகின்ற கோள்தனையும் - எமையாளும்
ராசராசவெனவே தொழும்பர் பரவிசையும் - உலகிருந்து
பாசபந்த மொழித்தோர்கள் பேசுநற்றொனியும் - அமலவென்று

மாசிலாதவர் வணக்கமும் பழுதில்
தாசர்கொண்டிடு மிணக்கமும் நிகரில்
ஈசவென்பவர் இரக்கமும் மலகை
பூசல்வென்றவர் முழக்கமும்

ஆசைகொண்டு தொழுவார் பெரும்ஓலமும்
வாசல்வந்து புகுவார் தருநாதமும்
வீசிநற்செப வாழ்கொடு பகைவரைத்
தூசிநின்று விறல்கொண்டஅருந்திகழ் - மோட்ச.

4. வெள்ளையங்கிகள்தரித்த வாரியர்தங்குழுவும் - யேசுவைமுன்னம்
கள்ளமின்றியே அறிக்கைசெய்த பலர்தரமும் - சுவிசேஷம்
துள்ளுதெண்டிரை நிலத்தில் வித்தினர்தம்மினமும் - பாவிகளை
அள்ளலம்பவ ளக்கர் மீட்டவர் தம்குலமும் - சீயோனில் மேவும்

வள்ளள்தன் மொழிகொண்டவரும் அருட்
கொள்ளைகொண்டு பொலிந்தவரும் பா
வெள்ளம் வெள்ளமென வீண்டவரும் நேயம்
தள்ளிடாது தரித்தவரும்

எள்ளல்இன்றிய சீவிய புத்தகம்
கொள்ள வேதங்கள் நாமம் பதிந்தவர்
முள்ளு மாமுடி முன்னர் அணிந்திடு
பிள்ளை யேசுவினிற் பெட்புறு வார்திகழ் - மோட்ச.

## 45. நாயகரைக் காணாது சபை தவித்தல்
## Christ panting for its Head

### நேரிசை வெண்பா

பட்சங் குறையேன் பரிவு தவிர்கில்லேன்
நிச்சயம் யானின்னை நித நேசிப்பேன் - இச்சகத்தில்
எந்நாளும் உன்னோடு இருப்பலென்று வாக்கீந்த
மன்னவரைக் காணேனையோ மண்.

### கீர்த்தனம்

இராகம், ... முகாரி. தாளம், ... திசுரம்.

### பல்லவி

என்னுடை மன்னவர் என்னுடை நாயகர்
எங்கே போனாரோ - அவர்
இன்னமும் வந்திடக் காண்கிலன் யானினி
என்ன செய்வேனோ.

### சரணங்கள்

1. காணவில்லையென்றன் கண்மணிபோல்வாரைக் - கண்டீரோ
என்னிற் - சற்றும் - கருணையையாமலென் காதலராங்கேயோ
கானிற்போனாரோ - என்.
2. கல்வாரிமாமலைக் கேகினரோஇன்னும் - காண்கிலேனையோ - அந்த
கருணை பிதாவீட்டைத் தேடிப்போனோரோ நீர் கண்டாற்
சொல்லீரோ - என்.
3. பொழுதுபோகுமுன் வருவலென்றுகை - போட்டுப்போனாரே
இப்போ - அழுதுதேம்பினும் வந்திடக்காண்கிலேன் - ஆருங்
கண்டீரோ - என்.
4. நல்லவன் லாசரு இல்லந்தரிசிக்க - நாடிச் சென்றாரோ - அன்றிக்
கொல்கோதா நீண்மலைச் சாரற் சிலுவையைக் - கொண்டுசென்
றாரோ - என்.
5. பேதுருஆதியாஞ் சீஷரைக்கண்டிடப் - பின்னும் போனாரோ -
அன்போ - ஆதரவாய் மரி வாமகவென்றிட - அவள்பாற்சென்றாரோ
6. கானாஊர் தன்னிலே கல்யாணவீடதன் - காட்சிக்குற்றாரோ - இங்கே
தானாக மீண்டிடல் சங்கையதன்றெனத் - தரித்துநின்றாரோ - என்.
7. பிரியேனென்று கைதந்தபின் போனவென் - பெருமற் காணேனே
புள்ளி - வரிகொள்மானினங்காள் அவர்க்கண்டிரேல் - மறைத்திடீர்
சொல்லீர் - என்.

8. பேசுங்கிளிகாள் மயில்காள்என்னன்பரைப் - பேணிக்கண்டீரோ -
அவர் - நீசநில்லென்றெனைத் தள்ளிவிட்டோடிடல் நீதமாமோ -
சொல்லீர் - என்.

9. ஆலயத்தில் வேதபாரகர் வாதுக் - கழைக்கச் சென்றாரோ - ஐயோ
மாலைமுன்வந்த தெனைத்தனிவைத்திடல் - மகிமையாகுமோ -
என்.

10. மாமணக்கோலத்துடன் வந்தொருமுத்தம் - மகிழ்ந்துதாராதோ
அந்தத் - தேவன்தரிசனம் யான்பெற்றுய்யவெனைச் - சேர்த்தச்
சொல்லாரோ - என்.

## 46. விவாகம் - Marriage

### விருத்தம்

ஆதிமறை களிகொள்ள ஈன்றோருள்ளத்து
ஆனந்தவாரிதுள்ள அன்பார்வேத
வேதிய ஆசீர்பாதம் விள்ள வெள்ள
வேலையெனப் புடைபரந்தோர் விண்மண்ணுள்ளோர்
காதுசெவிடுறத் தாளமேளம் பேரி
காளஞ் சல்லரிஆதி கறங்க மின்போன்
மாதினைக் கைப்பிடித்திட்டான் மணாளன் செம்பொன்
மங்கலியம் கழுத்திட்டான் மகிழ்ந்திட்டானே.

### கீர்த்தனம்

இராகம், ... பியாகடை. தாளம், ... அடதாளம்.

### பல்லவி

ஆசீர்பதிக்கவாரும் ஈச பரஞ்சோதியும்
அருட் கடைக்கண்ணாற் பாரும்.

### அநுபல்லவி

ஆசின் மறைமுறைபோல் - அன்பார் வதுவைசெய்த
அழகார் மணாளனுடன் - எழில்சேர்மணவாளியை - ஆசீர்.

### சரணங்கள்

1. மங்களகீதம்பாடி - மறையோர்ஆசிகள் சொல்ல
துங்கக் குரவர்கூடிச் - சுபசோபனங்கள் - விள்ள
சங்கந்தொனிக்கத் தெய்தாத் - ததிங்கெனக் - கூத்தரெய்தாச்
சதி தவறாதே பாட

பொங்குங் கிளைஞர் - கண்கள் கொள்ளாதுவந்து
தங்கிஅருகிருந்து - சந்தோடத் தாங்கொண்டாட
அங்கங்குழைந்து மன்றல் - அன்புடன் செய்துநின்ற
அழகார்மணாளனுடன் - எழில்சேர் மணவாளியை - ஆசீர்.

2. வாழ்வுதான் வந்தாலென்ன - வறுமை மிகுந்தாலென்ன
தாழ்வுநோய் சார்ந்தாலென்ன - சஞ்சலமிஞ்சிலென்ன
அழித்திரைபோல்மோதும் - ஆகுலஞ் சூழ்ந்தபோதும்
ஆர்வம்குறையோமென்றும்
நாளினாழிகைபோல - நாறும்பூ மணம்நேர
வேழம் ரசமுமான - விழையுடல் உயிரென
ஆளுமன்புடன் வாழ்வோம் - அகலோமென மணஞ்செய்
அழகார் மணாளனுடன் - எழில்சேர் மணவாளியை - ஆசீர்.

3. தண்ணுமை மிருதங்கம் - தடாரி மத்தளம் கும்பம்
பண்ணும் பேரிகை பம்பும் - பணவம் முரசம் கொம்பும்
எண்ணுந் திசைகளண்ட - எவர்க்குஞ் செவிடுமண்ட
இம்மென்றதிர்ந்து இசைக்கவே
கண்ணை வழுக்குஞ்சோதிக் - கனகம்மணிகளாதி
உள்நின்று எழும்பும்காந்தி - ஓட்டிஇருளைமாந்த
அண்மி ஆழிகள் மாற்றி - ஆர்ந்த வதுவையாற்றும்
அழகார் மணாளனுடன் - எழில்சேர் மணவாளியை - ஆசீர்.

## 47. விவாகம் - Marriage

### *விருத்தம்*

சத்தமிடுங் கடலிதென மேளந்தாளந்
தம்புரு கின்னர நாகசுரம் எக்காளம்
எத்திசையுஞ் செவிடுமண்ட விரைப்பமாதர்
இருபுறமுஞ் சாமரங்கள்இரட்டச்சோதி
முத்துமணிச் சிவிகையினின்றிழிந்து வேத
முறைப்படி வேதியர் சடங்குமுடிக்க வர்ணத்
தத்தைமொழிக் குழலணங்கை மணாளன் செங்கைத்
தலந்தொட்டான் மங்கலியந் தரத்திட்டானே.

## கீர்த்தனம்

இராகம், ... கல்யாணி. தாளம், ... தீசுரம்.

### பல்லவி

மங்கலியம்அணிந்தாளே - சிறந்தாளே - மணவாளி செம்பொன்
மங்கலிய மணிந்தாளே.

### அநுபல்லவி

செங்கரம் பற்றிநல் வாழ்விலுந் தாழ்விலும்
சேருமின்பத்திலுந் துன்பத்திலுமுமை
இங்கொருக்காலும் மறக்கிலன் யானென
எல்லாருஞ் சாட்சியாய் நல்ல கண்காட்சியாய் - மங்.

### சரணங்கள்

1. நாரியர் சோபனம் பாட - விளையாடப் புட்பம்போட
ஆரியர் மாமறைகூற - அருளேற - அன்புமீற
சீரியர்ஆசீர்பாதங்கள் சொல்லிடத்
தெய்வந் துணையென்று சுற்றத்தார் முன்னிட
சூரியனார் கிரணங்கள் மழுங்கிடத்
தூவொளி ஆரத்தி னோடே துலங்கிட - மங்.

2. தண்டை சதங்கைகளொலிக்கப் - பாதம் வலிக்கப் - பிரபைசொல்ல
கொண்டை மாலைவாசம் வீச - வண்டுமுச - உள்ளங்கூசக்
கெண்டைத் தடங்கண்ணி நின்றநிலை கண்டு
கேதமிலாஅன்பு தானுமுளங்கொண்டு
செண்டுறையுந்தங்கச் செப்பிலெடுத்திரு
செங்கரமேந்தி மணாளன்தொடுத்திடு - மங்.

3. ஓருயிரீருடல் போந்தே - உடன் சேர்ந்தே - அன்புகூர்ந்தே
சார்தரல்போலிவர் கூடி - என்றும் நாடி - இதந்தேடி
ஏர்தரு புத்திரபாக்கியம் பெற்று நல்
இன்புறு மித்திரர் தங்களைச் சுற்றியுள்
ஆர்வமுடன் வாழ வேண்டுமென்றாசித்து
அன்னையுடன் தந்தை பூசித்து நேசிக்க - மங்.

## 48. விவாகம் - Marriage

### விருத்தம்

பூமகள் கண்டகமகிழ அருளார்வேத
புங்கவராசிகள் புகலப் பொலிந்தெந்நாளும்
நாமகள் நாவுறுங்கவிஞர் புகழ்ந்து போற்ற
நாகரிகர் கிராமியர்கள் நயந்து வாழ்த்த
வாமநின்றார் பல்லாண்டுபாடத் தாளம்
மத்தளவாச்சியமுழங்க மானேர் கண்ணார்
மாமண மங்கையை இதயமகிழ்மணாளன்
மணஞ்செய்தான் மங்கலநாண் களஞ்செய்தானே.

### கீர்த்தனம்

இராகம், ... உசேனி. தாளம், ... தீசுரம்.

### பல்லவி

வதுவைசெய்தோர் இவர்களிரு பேரும்வாழத் தேவே
மகிழ்ந்திங்காசீர்பாதஞ்செய்ய வாருமிதுபோதே.

### அநுபல்லவி

அதிசயஞ்சேர் மறைமொழியின் - விதிமுறையைக் காண
ஆரியர்கள் மனமகிழ - நாரியர்கள் புகழ - வது.

### சரணங்கள்

1. வண்தரள மாலைகளும் - கண்டிகையும் அலைய
மதாணியுடன் வாகுவல யங்கணின்று மலையத்
தண்டையுடன் சிலம்பொலிக்கச் சாமரங்களிரட்டத்
தாதியருந் தோழியருஞ் - சோபனங்கள் படிக்க - வது.

2. தண்ணுமை சல்லரி முழங்கத் - தம்புருகின்னரங்கள்
தளங்க மிருதங்கமது - கறங்க முழவமுழங்க
வல்லகி காகளந் தாரை - வங்கியங்கள் முழங்க
வதனமெனுஞ் சந்திரர்கள் - தகதகென்று விளங்க - வது.

3. இசையும் வாழ்வு தாழ்விலுமெம் - இன்ப துன்பந்தனிலும்
யாங்களொருவரையொருவர் - நீங்கிலமென்றிசைந்தே
நசைபெருக வாக்குத்தத்தம் - நவின்று கணையாழி
நல்கியொருவருக்கொருவர் - நயந்தமொழி - கூறி - வது.

4. ஆபிரகாமுஞ் சாராயும் - போல அன்புகூர்ந்தே
அங்கமிரண் டோருயிர்போற் - பங்கமறக் கலந்தே
கோபமுதலானபெரும் - பாவமவை தவிர்ந்தே
குலவு புத்திர பாக்கியம்பெற்று - உலவி மிக மகிழ்ந்தே - வது.

## 49. விவாகம் - Marriage

### *வாழி*

மாமறை ஆகமம் வாழி குருமார் வாழி
மதுரகவி பாடுகின்ற புலவர் வாழி
பூமகள் நாமகள் வாழி பெரியோர் வாழி
பொற்பிலகு மின்னனையார் கற்பு வாழி
கோமுடி மன்னவர் வாழி நல்லோர் வாழி
குழுமும் அன்னை தந்தையர் மித்திரர்கள் வாழி
ஏமமுறு மணவாளனொடு மணாளி
என்னும்இரு பேரு நீடூழி வாழி.

### *கீர்த்தனம்*

இராகம், ... நாதநாமக்கிரியை. தாளம், ... ஆதி.

### *பல்லவி*

வாழி வாழி இந்த மாப்பிள்ளை பெண்பிள்ளைகள்
வாழி வாழி நிதம் வாழி.

### *சரணங்கள்*

1. ஆழியுடனே யாழி - சூழ்புவி வானோர் மொழி
யாலே படைத்தருளும் - மேலாம் பரனருளால் - வாழி.

2. ஏக பரமன் வாழி - இலங்கு சுத்தாவி வாழி
ஆகம் வருந்தும்யேசு - ஆண்டவனாமம் வாழி - வாழி.

3. தந்தை தாயர் வாழி - தமர் சகோதரர் வாழி
அந்தமில் வேதம் வாழி - அருளாகமங்கள் - வாழி - வாழி.

4. குருமார் பன்னியர் வாழி - குழுமும் அயலார் வாழி
அருமைச் சிநேகர் வாழி - அரசர் பிரசை வாழி - வாழி.

5. சுத்த சத்தியம் வாழி - சுவிசேஷமொழி வாழி
பத்தர் சங்கங்கள் வாழி - பாலர் பெரியோர் வாழி - வாழி.

6. சபையார்கள் வாழி திருச் - சந்நிதி தொண்டர் வாழி
செபதபம் வாழி வாழி - செப்பு ஸ்ரீமிஷன்கள் வாழி - வாழி.

## 50. ஆலயப் பிரதிஷ்டை - Church Dedication

### தேவாரம்

அறந் தழைத்திடவு நல்லோர் அளிதழைத்திடவும் யாஞ்செய்
திறந் தழைத்திடவும் இந்தத் திருப்பணி திகழ்ந்திந்நாட்டின்
புறந் தழைத்திடவு நின்றன் பொன்னடி வணங்கிநின்றோம்
மறந் தழைத்தவர் முன் செல்லா மன்னவா யேசுநாதா.

### கீர்த்தனம்

இராகம், ... காம்போதி. ... தாளம், ... அடதாளம்.

### பல்லவி

இந்தத் தேவாலயத்தை நினக்கபிஷேகஞ் செய்தின்று
ஈந்தோம் வந்தாளுந் தேவே.

### அநுபல்லவி

சந்ததமு மன்பர் - சிந்தை மகிழ்ந்திடச்
சஞ்சலங்கள் வீண்டு - நெஞ்சம்உவந்திட
அந்த ணழிமழை - வழங்குங் கிருபைகொண்டு
அதிகபெருமித - முறநின்னடியர்செய் - இந்த.

### சரணங்கள்

தேடும் பொருள் வழங்கு நேசர் - ஒளிர்
தினகரன்போல் விளங்குந் தேசர்
பாடுஞ் செயலின் மிக்க பாசர் - சுற்றுப்
பக்கக் கிராமங்களில் வாசர்
கூடி வதிந்து கொண்டாடிச் சங்கீத
கோலாகலமொடு குழுமி நின்புகழ்
பாடித் தொழப் பணிவோடு சிறந்தஇப்
பதியிற் பரிவோடுன் அடியர் கூடிச்செய் - இந்த.

சும்மா விருந்தார் சிலர்கூடி - வீணாம்
தொடக்கந் தொடங்குகின்றார் நாடி
அம்மாவிவர்கள் பித்தம்மூடி - அலைந்து
அழுவரெனக் கைகொட்டி ஆடித்
தம்மிலிருந்து நையாண்டி பண்ணிய
சமயபேதிகள் தாமுமெண்ணியே
இம்மை மறுமையின் பயன் பெற்றுய்தர
ஏற்றஅபிமானத்தொடு நின்னடியர் செய் - இந்த.

3. சூழும் அஞ்ஞானம் பறந்தோட - என்றும்
துலங்கு மெய்ஞ்ஞானஞ் சொலித்தாட
பாழாம் பொய்மதமெல்லாம் வாட - தெய்வ
பத்தர் பரிந்து கீதம் பாட
வாழும் பெருந் துரைமாரும் அருங்கொடை
வள்ளலென வருவாருங் குரவரும்
நாளுஞ் சலியாது கொடுத்த பொருள்கொடு
நல்லதருக்கொடு இப்பதி நின்னடியர்செய் - இந்த

## 51. ஆலயப் பிரதிஷ்டை - Church Dedication

### *கலித்துறை*

வானநின்ஆசனம் வைய நின்பாத படி நிறைந்த
ஞானமொடுஎங்கும் வியாபிப்பைஆதலின் நண்ணியிராத்
தானமொன்றில்லையென்றாலு நின்தாசர் சமைத்தஇந்த
ஈனமில்லாத தெய்வாலயம் வாழ்ந்தருள் எம்பரனே.

### *கீர்த்தனம்*

இராகம், ... ஆனந்தபைரவி. ... தாளம், ... அடதாளம்.

### *பல்லவி*

காலமிதிலே வந்திவ் ஆலயந்தனை நின்றன்
கையேற்றுக்கொள்வை ஐயா.

### *அநுபல்லவி*

மேலாம் பரனே வேத - நூலோ ரறியா நீத
சீலா யெகோவா போதா - கோலா யாங் கூடுமிந்தக் - கால.

### *சரணங்கள்*

1. எங்கும் வியாபியாகி - இரந்தோர்இதயமேகி
யாவும் படைத்து அருட்கை போகிப்
பங்கமுறக் கரத்தாற் - பண்ணுஞ் சினகரத்திற்
பற்றுனக்கில்லை யேனுந் திரத்தாற்
பொங்கும் பவம்புரிந்து - தங்கு மண்ணோர்ப் பரிந்து
துங்கச் சுதனைத்தந்த - எங்கள் பிதாவே இந்தக் - கால.

2. சிருட்டி திதி சங்காரம் - செய்யும் பரன் சிங்காரம்
சேருமாசன அலங்காரம்
பொருட்டன்றெனவே விட்டுப் - பூமிதனிஉட்பட்டுப்
இருட்டுநிதர் அஞ்ஞானந் - தெருட்டி மயல்செய்யீனம்
உருட்டி மெய்ஞ்ஞானஸ்நானம் - அருட்டுஞ்சுதனேஇந்தக் - கால.

3. பொல்லாக் குணங்கள் போக்கிப் - புனிதம் உளத்தேஆக்கிப்
போதும் போது மெனவே தேக்கி
நல்லாரெனவே செய்து - நவமா அருள்நீர்பெய்து
நாநாவிதமாந் தீது கொய்து
கல்லார் மனமுருக்கி - அல்லற் பிணி கருக்கித்
தொல்லைப் பவமாந் தீமை தொலைக்கும்ஆவியே இந்தக் - கால.

## 52. ஆலயப் பிரதிஷ்டை - Church Dedication

### *தேவாரம்*

சருவமும் தாதையாகித் தந்தபின் சுதனாஇந்தத்
திருவளர் உலகம் போந்து தீதில் சுத்தஆவியாகிப்
பருவம்அங்கதிலே ஞானப் பவுத்திரம்உதவு மேலாம்
ஒருவனே இவ்வூர்க்கோவில் உவந்துவந்தருளுவாயே.

### *கீர்த்தனம்*

இராகம், ... பந்துவராளி. தாளம், ... ஆதி.

### *பல்லவி*

வாரும் வாருமிந்த ஆலயந் தன்னுட் சென்று
வதியும் ஆசீர் பதியும் தேவே.

### *அநுபல்லவி*

காரும் விசும்பும் நீரும் - பாரும் யாவும் படைத்த
கருணாகரனே கிர்பா - கரனே யெகோவா திவ்ய
கர்த்தா நிதபரி சுத்தா திரியேக
முத்தா அடியவர் - பத்தா மகிழ்வொடு - வாரும்.

### *சரணங்கள்*

1. சிங்காரமான இந்தத் - திருப்பணி என்றும் வாழ்க
சீடர் குரு மாணாக்கர் - சிறியோர் பெரியோர் வாழ்க.

மங்காத சத்யவேதம் - வாழ்க மெய்ஞ் ஞானம் வாழ்க
வந்து வணங்கும் பேர்தம் - வளமும் செயலும் வாழ்க
அங்கும் இங்கும் உள்ளோர்கள் - அனைவருமாகக் கூடி
அல்லும் பகலுங் கீதம் - ஆவலுடனே பாடி
ஆராதனை செய்து - பேராதரமொடு
நேரேதொழுதிட - ஓராதருள்செய - வாரும்.

2. இதில் வந்தனவரதம் இறங்கி வதிய வேண்டும்
இங்கிதமுற்று இதிற்கை இடுவார்க்குஇரங்க வேண்டும்
புதிய விக் கோவில்தன்னைப் - புனிதம் பண்ணவும் வேண்டும்
புலையோர்க்கு இதுவுமொரு புதுக்காட்சியாக வேண்டும்.
அதிக தைரியங்கொண்டு அடியாருங் குருமாரும்
அடுத்தார் பிறருமெம்மில் அனுதாபமுறும் பேரும்
அன்போடு இதில் அதி - இன்பாய்ப் பணிதர
நும்பேரளிமழை - எம்பாலருள்செய - வாரும்.

3. வட்டுநகர் உடுவை மானிப்பாய் - பண்டையொடு
வல்லி பட்டி வரணி வாழ் சாவச்சேரி உடுப்
பிட்டி நற்கோப்பாய் வண்ணை பேரார்சுண்டி மா நல்லை
பேசா தொழிந்த மற்றும் பிற ஸ்தானங்களின் எல்லை
கிட்டியிருப்பவரும் கெழுமுஞ்சேன்ஊர்உள்ளோரும்
கேட்டிதுபோலச் செய்துன் - கிருபைப் பயிராயுய்யக்
கிட்டாவருமறைக்கு - எட்டா அடியவர்
உள்தாமரையுரை - சிட்டா அருள் செய - வாரும்.

## 53. சுவிசேஷ சங்கம் - Evangelical Society

### தேவாரம்

அந்தகாரங்கள் போக்கும் அருணன்போல் அஞ்ஞானங்கள்
சிந்திட ஒளிகாலிந்தத் திருச்சுவிசேட சங்கம்
நந்திடா என்றும்ஓங்க நவிலுநின் அருளாம்மாரி
தந்திட வேண்டிநின்றேன் தற்பரா யேசுநாதா.

### கீர்த்தனம்

இராகம், ... அசாவேரி. தாளம், ... ரூபகம்.

### பல்லவி

தாரும் கிருபை தந்து பாரும் சாமி இந்தச்
சங்கம் வளர அருள் கூடும்.

### அநுபல்லவி

சேரும்பொருள்படைத்தெல் - லாருநின்சந்நிதானம்
செறிமகிழ்வோடுசேர்ந்தோம் - உறுதுதி பலவீந்தோம் - தாரும்.

### சரணங்கள்

1. கால் ஆதாமொ டேவை - கலங்கிப் புரிந்த பாவக்
கர்மமதனால்இந்தக் - காசினி வந்தசாபம்
யாவுந் தொலைக்குந்தேவன் - இட்ட பணிகொண்டிவண்
எய்தி வைதீகபோதம் - இயம்பும் யாருக்கும் நிதம் - தாரும்.

2. சேமஞ்செய்யாதுதானம் - தியாகம் வழங்குவோர்க்கும்
தேசங்கள்தோறுமுப - தேசம் விளம்பும்பேர்க்கும்
ஏமமுடனே தம்மால் - இயன்ற துணைசெய்வோர்க்கும்
இங்கிதமாகவாழும் - இறைவர்களாதியார்க்கும் - தாரும்.

3. தெல்லிபண்டை உடுவை - திகழ் வட்டு ழுளாய் மாவை
செறியுடுப்பிட்டி சாவகச் - சேரி சங்கானை காரை
சொல்லளவை நவாலி - துவீஏழாலை வேணி
துலங்குஞ்சபையார்சங்கம் - விளங்கியே மல்கியோங்கத் - தா.

4. அஞ்ஞான வேலைதன்னில் - ஆழ்ந்திடும் வேலையையும்
அதுபோல்இருட்படலத் - தமிழ்ந்து நாரந்தனையும்
மெய்ஞ்ஞானங்காணா நெடுந் - தீவும் புங்குடுதீவும்
விளங்கசத்தியவேத - வெய்யோன்ஒளி முன்மேவத் - தாரும்.

## 54. குரு அபிஷேகம் - Ordination

### விருத்தம்

அந்தமுறும் உடம்பதனுக் குயிரதென்ன
அழகிய சந்திரன் வானமதனுக்கென்ன
மந்தைகட்குக் கோனானே என்னச் சீரார்
மனைதனக்குத் தீபமென்ன மாதினுக்குச்
சிந்தைமகிழ் நாயகனே என்ன வீரச்
சேனைதனக் கதிபனெனச் சிறந்துநாளும்
இந்தவிருஞ் சபைக்குருவாய் வாழ்வை என்றென்று
ஏற்றினார் குருவர்சடங் கியற்றினாரே.

## கீர்த்தனம்

இராகம், ... அசாவேரி. தாளம், ... ரூபகம்.

### பல்லவி

அபிஷேகஞ் செய்துவைத்தாரே - குரவர் கூடி
அன்புகொண்டாடினாரே.

### அநுபல்லவி

செபதபசிந்தையார - அபசாரம் யாதுந்தீர
தேவதூதர்கள் பாடக் கோவிலிற் பலர்கூட - அபி.

### சரணங்கள்

1. திரள்திரளாகச் சேர்ந்த - செனங்கள் கண்டு மகிழத்
திவ்யஆரணமுறைச் - செயல்கள் பலநிகழ
அருளளியன்பமைந்தோர் - அருகினின்று புகழ
அஞ்ஞான திமிரம் போக்கு - அருணன்நீயாவை என்று - அபி.

2. ஆனமந்தையை மேய்க்கும் - அருளார்கோனானீயாவை
அகிலத்தாரேற்றிப் போற்றும் - அழகிய தீபம் போல்வை
வானம் இருந்துவரும் - ஆவிவதிய வாழ்வை
மாசுஅணுகாதவாசீர் - வாதம் பெறுவையென்று - அபி.

3. வலக்கரங்கொடுத்துநன் - மந்தையை ஒப்படைத்து
வகைவகைசெய்துகடமை - வகுத்துவகுத்துரைத்துக்
கலக்கமில்லாமல்அதைக் - காத்துப் புன்மேய்ச்சல் காட்டிக்
காலந்தொறுஞ்சுனை நீர் - காதலாஊட்டென்று - அபி.

4. அன்பார் நாயகியுடன் - அன்யோன்யமாக வாழும்
ஆசைநாயகன் போல - அங்கத்தாருடன் சேர்ந்து
துன்பம் நெருங்கியென்ன - துயரம் வளைந்துமென்ன
துன்னுசரடு ஊசிபோல் - துலங்க வாழ்தியென்று - அபி.

5. கரங்கள் சிரத்தில் வைத்துக் - கண்ணிலானந்தபாஷ்பம்
கசிந்து வழியநின்று - கர்த்தாஇப் பத்தற்கின்று
சுரந்துஆவிமழைபோலச் - சொரியும் சொரியுமென்று
சோபனஞ் சொல்லித்தேற்றித் - தொடர்பாய்ப் பிரார்த்தித்தேத்தி
- அபி.

## 55. மதுவிலக்கு - Temperance

### நேரிசை வெண்பா

கெட்டார் பலகோடி கேடுறுமென்று எண்ணாமற்
தொட்டுக்கெட்டார்தந் தொகைகோடி - திட்டம்
அதிவிரைவில் உன்னை அடுத்திருந்து கொல்லும்
மதுவைக் குடியாது வாழ்.

### கீர்த்தனம்

இராகம், ... நாதநாமக்கிரியை. ... தாளம், ... அடதாளம்.

### பல்லவி

மதுவைக் குடியாதே - சொன்னேன் - அதில்
மனம் வைத்தார் - சுகங்கெட்டார் - தனம் பட்டார் - சொன்னேன்

### சரணங்கள்

1. தொட்டாற் கடித்திடு பாம்பு - பல
சோலியுடன் தரும் கேலிகள் வம்பு
தட்டாதே என்சொல்லை நம்பு - தன்னைச்
சார்ந்தாரைக் கொன்றிடும் கூர்ந்ததீஅம்பு - மது.

2. அநியாயப் பேயுரைகாடு - காம
ஆசை கொடுங்கொலை நாசம் வாழ் காடு
தணியாச் சினம் முறைகேடு - என்றும்
தங்கிஉறைந்திடு சங்காரக்கூடு - மது.

3. ஈரலெரிக்கு நெருப்பு - நல்லோர்
எள்ளுவர்உள்ளத்திற் கொள்ளார் விருப்பு
சீரியர் யார்க்கும் வெறுப்பு - தேவன்
செப்பு மொழிப்படி நிற்றல் சிறப்பு - மது.

4. கீர்த்திக்கும் கனத்திற்கும் சேதம் - மெல்லக்
கிட்டியே தீண்டினால் தொட்டிடும் ஏதம்
பார்த்துப் படித்திடு வேதம் - குடி
பாவிகள் பாதாளம் போவது நீதம் - மது.

5. மயக்கம் தியக்கங்கள் சாரும் - தொட்டு
வாயில் வைத்தால் வெகு நோய் வந்து சேரும்
பயக்கும் பெரும் பழி நேரும் - நூறு
பாதகம் பேசுவர் ஞாதியர் யாரும் - மது.

6. பெண்டும் கவனியாள் பாராய் - பெற்ற
பிள்ளைகள் போவென்று தள்ளுவர் ஓராய்
கண்டவர் பேசுவர் ஆராய் - கடைக்
கண்ணாலும் பாரார்கள் புண்ணியர் தேராய் - மது.

7. பலத்தோடுன் ஆயுசு குன்றும் - சின்னப்
பாலரும் ஏசுவர் சாலவே என்றும்
நிலத்தோடு பணம் பண்டம் ஒன்றும் - நிலை
நில்லாமல் ஓர்கண நேரத்திற் பொன்றும் - மது.

8. குலத்திற்குக் கோடரிக் காம்பு - வெறி
கொண்டவர் தங்கட்குக் கண்டத்தில் தாம்பு
நலத்திற்கும் பெருமைக்கும் வேம்பு - விட்டால்
நல்லோர்கள் ஆனவர் எல்லார்க்கும் வீம்பு - மது.

## 56. மது விலக்கு - Choose Now

### *நேரிசை வெண்பா*

நல்லோர் நகைசெய்ய நங்கையர்கள்தாம் சிரிக்கப்
பல்லோரும் பார்த்துப் பழிதூற்றப் - பொல்லா
மதுபான மோதெளிந்த மாசறுபால் நீரோ
எதுவேண்டு மென்னேச னே.

### *கீர்த்தனம்*

இராகம், ... மலையாமி. தாளம், ... அடதாளம்.

### *பல்லவி*

எது வேண்டும் என் நேசனே - உனக்கு
எது வெண்டாம் சொல் நேசனே

### *சரணங்கள்*

1. மதி வாட மனம் வாட மயக்கம் கண்ணிறைந்தாட மதுபானம்
உணவேண்டுமோ - அன்றித் - துதிபேசி உலகோருன் புகழ்பாடி
மகிழ்ந்தாடச் சுத்தசலம் வேண்டுமோ - எதுவேண்டு.

2. அரக்குண்டு கள்ளுண்டு அபினுண்டு சின்னுண்டு அபிமானம் கெட
வேண்டுமோ - அன்றிச் - சுரக்குநன்னீருண்டு பாலுண்டு மோர்
உண்டு - சொகுசுபெற வேண்டுமோ - எதுவேண்டு.

3. வாதாடி நகையாடி வழிகளில் விழுந்தாடி மதுவுண்டு கெட வேண்டுமோ - எங்கள் - தாதாவே கனவானே தனவானே யெனச் சாற்றத் - தண்ணீர் - உண்ண வேண்டுமோ - எதுவேண்டு.

4. பகைதந்து பழிதந்து பரியாசந் தருமது பானம் மாந்தவேண் டுமோ - அன்றித் - தகைகொண்ட கதிபெற அருளொரு புகழேறச் சலமள்ளி உணவேண்டுமோ - எதுவேண்டு.

5. சண்டை காயம் கந்தை யமளி வேதனையாதி தருங் குடி வெறி வேண்டுமோ - அன்றிப் - பண்டைவேதஞ் சொன்ன படிமோட்சம் பெறச் சல - பானமுணவேண்டுமோ - எதுவேண்டு.

6. இரத்தக்கண் பெருந்துக்கம் இரக்கம் நடுக்கம் வெட்கம் இவைதருங் குடிவெண்டுமோ - நல்ல - திரத்துக்குஞ் சுகத்துக்கும் அறிவுக்கு இடமான - தெளிந்த தண் ணீர்வேண்டுமோ - எதுவேண்டு.

7. கஞ்சாலேகியம் வெட்டு மாறன் கள்ளாதியாற் கனஞ்சாய்ந்து கெடவேண்டுமோ - அன்றி - அஞ்சாமற் கலங்காமற் பெரியோர் சொல்வழிநின்று - ஆனந்தம் பெறவேண்டுமோ - எதுவேண்டு.

## 57. மது விலக்கு - I will not touch

### விருத்தம்

அநியாயத்து இருப்பிடநீ அகோரத்தீநீ
  அண்டினரைக் கொல்லியுநீ யறங்கொன்றோய் நீ
மனுவரம்பு கடந்தோய் நீ மாதரென்றும்
  மக்களென்றும் தந்தையர் மாபெரியரென்றும்
அனையரென்றும் முறையாராய் கோடாகோடி
  யானோரைக் குடி முடித்தா ஐயோ பாவீ
இனியொருபோதும் குடியேன் மதுவே நின்னை
  யான் பருகேன் இதுசபதம் சபதந்தானே.

### கீர்த்தனம்

இராகம், ... ஆரபி. தாளம், ... ஆதி.

### பல்லவி

இனியொருபோதும் தீண்டேன் பொல்லா மதுவே
உனை ஒருபோதும் வேண்டேன்.

### அநுபல்லவி

சனி! சனி! அப்பால்ஓடாய் - இனியெனைக் கிட்டநாடாய்
நினையான்அனுகேன்உண்ணேன் - தனியேன் பால்நீயேன்? சொன்னேன்
- இனி.

### சரணங்கள்

1. அண்ணே! உனக்குவேண்டாம் - தம்பீ இந்த
அலங்கோலம் விடு வேண்டாம்
பெண்ணே! உனக்கு வேண்டாம் - பெற்றுவளர்த்த
பெரியோர்உமக்கும் வேண்டாம்.
கண்ணின்இரு கண்மணிநேர் - காதற் புதல்வரே நீர்
உண்ணீர் உண்ணீர் தண்ணீர் - உத்தம பானம்எண்ணீர் - இனி.

2. அலைந்து திரிந்தார் கோடி - சாராயம்உண்டு
அலறிப் பிரிந்தார் கோடி
புலந்தளர்ந்தார்கள் கோடி - விழுந்துருண்டு
புலம்பிஅழிந்தார் கோடி
சலந்தாழ்ந்த கூபங்கரம் -தளங்குந் தீபங்களர
விழுந்தவர் போல்வார் கோடி - வீந்தாருங் கோடாகோடி - இனி.

3. சிங்காரம் சாராயக் கோலம் - வாயிலிட்டாற்
தேகம்உயிர்க்குஆலகாலம்
பொங்கமிகு சங்கை சீலம்
சிங்கக் குகை நல்வேங்கை - சேரும் வளைஇரும்பை
தங்கும் வன்மீகநேரும் - தவறணை மோசம் பாரும் - இனி.

4. சிலுவைப் பதாகை சேர்வீர் - நீலுநாடாச்
சேனாவீரரைச் சார்வீர்
அலகைக் கொடியை வெல்வீர் - இந்தஉலகை
ஆளும் மதுவைக் கொல்வீர்
விலையும் பணமுமின்றி - மேலாம் பொக்கிஷமுண்டு
அலைவானேன் உலைவானேன் - அந்தோ நீர் மலைவானேன்
- இனி.

## 58. கோட்டை பிடித்தல் - Up! Up! to arms

### விருத்தம்

தாட்டிகங்கொள் சாராயன் சுமாலி சின்னன்
சண்டமுறு மல்கோகன் பிராண்டிஆதி
வாட்டமுறும் பெருவீரஊருட்புக்கார்
வாலிபர் மங்கையர் புருடர் தமை வளைந்து

கூட்டியருஞ் சிறையிட்டார் நமையும் கொள்ளும்
கோலமுடன் அலங்கமிட்டுப் பெரிதாய்க் கட்டும்
கோட்டைதனைப் பிடித்தழிக்க வாரீர் மாற்றார்
குடையுடனே கொடி பரிப்பீர் கோவுள்ளோரே.

## *கீர்த்தனம்*

இராகம், ... துசாவந்தி. தாளம், ... அடதாளம்.

### *பல்லவி*

கோட்டையைப் பிடிக்கவாருங்கள் - சாராய ராசன்
கொடி குடை பறித்து வீசுங்கள்.

### *அநுபல்லவி*

ஓட்டமெடுத்து ஓடிவாரீர் - ஊரில்வந்த கேடு பாரீர்
தாட்டிகப் பட்டாளஞ் சேரீர் - சண்டை செய்ய முந்திநேரீர் - கோ.

### *சரணங்கள்*

1. வேதமாங் கொத்தள நாட்டுவீர் - அருளில்ஏசு
விசேஷமாம் பீரங்கி நாட்டுவீர்
போதமாம் மருந்து திணிப்பீர் - வைராக்கியமாம்
பொலியும் குண்டுபோட்டுத் தாணிப்பீர்
ஆதியை வழிபடுவீர் - ஆரவாரமாய்ச் சுடுவீர்
ஏதினித் தாமதம் தாண்டிர் - எதிரிபடைக்கு அஞ்ச வேண்டிர் - கோட்.

2. வேகமாய் நடந்து செல்லுங்கள் - பிராண்டி என்னும்
வீரனை முனிந்து கொல்லுங்கள்
நாகமெனச் சீறி நில்லுங்கள் அல்ககோல் என்னும்
நல்லரக்கன் தன்னை வெல்லுங்கள்
ஊகமுடன் சொல்விடம்பி - ஒன்னலன் மீதே கிளம்பி
ஆகுமுங்கள் ஆண்மைகாட்டி - அவனையோர்கணத்தில் வாட்டி -
கோட்.

3. சத்தியஎக்காளம் ஊதுங்கள் - அன்பென்றுரைக்கும்
தண்ணுமை அடித்து மோதுங்கள்
பத்தியாம் துவசம்ஏற்றுங்கள் - சின்னென்று சொல்லும்
பகைவனைத் தடிந்து தூற்றுங்கள்
நித்திய பிரார்த்தனையாம் - கத்தியை உறைகழியும்
எத்திறத் துன்மார்க்கர் சிரம் - வைத்திடும் பூமிக்குப் பரம் -கோட்.

## 59. குடியன் குடியுடன் சம்பாஷித்தல் - Drunkard's address to drink

### விருத்தம்

படியரசர் குடி முடித்தாய் சுற்றத்தாரைப்
பகைமுடித்தாய் கோண்முடித்தாய் குபேரரேனும்
அடியறவே அவர்திருவை முடித்தாய் ஈன்றோர்
அன்னையர் தந்தையருயிர் ஓர்கணந்தான் சென்று
முடியுமுன முடித்தாய் பெற்றெடுத்த மக்கள்
முத்தமிடும் பன்னியரை முடித்தாய் கோடி
குடிமுடித்தாய் குலமுடித்தா யைஐயோ தீக்
குடியே நின்னால்அடியேன் குடி கெட்டேனே.

### கீர்த்தனம்

இராகம், ... நாதநாமக்கிரியை. தாளம், ... அடதாளம்.

### பல்லவி

குடியே நின்னாற் கெட்டேன் குடியே.

### அநுபல்லவி

படிமீதில் ஒருகோடி பழிபாவ நாட்டுவாய்
பாவிகளானோரைப் பாம்பாட்டி மாட்டுவாய் - குடி.

### சரணங்கள்

1. நன்றிகொல்வாய் கெட்ட - நாமம் தரிப்பிப்பாய்
நாளுக்குநாளாசை - மேலிட்டு எழுப்புவாய்
ஒன்றுக்கும் கூடாமல் - மேலோரைப் பாராமல்
ஒட்டாண்டியாய்ச் செய்வை - காட்டாண்டியாக்குவை - குடி.

2. மரசாதியுள்ளோர் தம் - மானத்தைப் போக்குவாய்
மாசற்றார் கேண்மையை - நாசத்துளாக்குவாய்
அரசரைப் பரதேசர் - ஆக்கியே நீக்குவாய்
அன்புற்ற பெண்டிரைத் - துன்பத்தால் வீக்குவாய் - குடி.

3. கொலையொடு சோரநின் - தமயன் மாரல்லவோ
குருநிந்தை காமம்நின் - கொடும் தம்பிமாரல்லோ
அலையும் பெரும்பஞ்ச - பாதக நடுநின்றாய்
ஆயிரம் பேரையோர் - கணந்தனில் நீதின்றாய் - குடி.

4. அன்னையர் தந்தையர் - தம்மையும் நேசியாய்
அண்ணல் பெரியோரைத் - திண்ணமா யோசியாய்
உன்னைக் குடிகொண்டு - குட்டிச் சுவரானோர்
ஓ! கோடி! மாகோடி! உலகத்தில் பலகோடி - குடி.

5. தொட்டவரன்றி - அடுத்தவர் தெருத்திண்ணை
தூங்கச் செய்வாய் பிச்சை - வாங்கச் செய்வாய் மண்ணிற்
பட்டமரம் போல - உட்கொண்டாரைச் சுட்டுப்
பற்மீகரம் பண்ணிப் - பாதகஞ் செய்துட்டக் - குடி.

## 60. குடிகாரனின் அறிக்கை - Drunkard's Confession

### *நேரிசை வெண்பா*

உள்ள பொருளெல்லாம் விற்று ஊதாரியாய்உலகோர்
கள்ளனென்று பேசிக் கதைத்துஇகழ - வெள்ளம்போல்
மட்டு விட்டுக் கட்டி என்றன் மானமரியாதை அற்றுக்
கெட்ட கதை கேட்பீர் கிளர்ந்து.

### *கீர்த்தனம்*

இராகம், ... ஆனந்தபைரவி. ... தாளம், ... அடதாளம்.

### *பல்லவி*

பட்டபாடு சொல்வேன் சேரும் - ஓ! நேசரே யான்
கெட்டகேடு தன்னைக் கேளும்.

### *அநுபல்லவி*

துட்டரோடு கூடி நாடிச் - சோம்பிக் கேலி பாடி ஆடி
மட்டரக்குடன் பிராண்டி - மட்டில்லாமலே நான் மண்டிப் - பட்.

### *சரணங்கள்*

1. வீடுவாசல் தோட்டம் விற்றேனே - பூண்ட கடுக்கன்
வேட்டி உத்தரியம் அற்றேனே
நாடோடியாம் வேலைகற்றேனே - முன்னேசம்உற்ற
நல்லவர் பகைமை பெற்றேனே
பாடிப்பாடி வீதியெங்கும் - ஓடி நல்லறிவுமங்கத்
தேடித்தேடியே குடித்தேன் - ஓடுமொன்று கைப்பிடித்தேன் - பட்.

2. பிள்ளைகள் அலைந்துபோனோரே - நம்பித் தொடர்ந்த
பெண்கொடியுலைந்து போனாளே
கள்வனென்று கட்டுண்டேனே - சந்தி தெருவில்
கண்டவர் கைக்குட்டும்உண்டேனே
கொள்ளை கொள்ளையாய்க் குடித்தேன் - கும்பலாய்ச் சத்திஎடுத்தேன்.
அள்ளலிற்படுத்துருண்டேன் - ஆண்டி வேஷம் பூண்டுகொண்டேன்.

3. பஞ்சணையிற் துஞ்சிவந்தேனே - இப்போ கிழிந்த
பாய்க்கும் பழியற்று நொந்தேனே
கஞ்சிகாண் வகையிழந்தேனே - நண்பர்கள்தாமும்
கண்டு நகைசெய்ய நின்றேனே
கொஞ்சும்அன்னை தந்தையரென் - கோலங்கண்டு வாயைவிண்டு
விஞ்ச மார்பின் மீதுஅடித்து - வேதனைபடக் குடித்துப் பட்ட.

4. உள்ளதெல்லாம் போக்கடித்தேனே - என் கீர்த்திதன்னை
ஊர் சிரிக்கப் போட்டுடைத்தேனே
நள்ளிராத் துயிலைவிட்டேனே - தனியனாகி
நாடும் ஊடுரும் வீடும் கெட்டேனே
முள்ளுக்கொள்ளா வேலியில்லைக் கள்ளுக்கொள்ளா வயிறில்லை
சுள்ளினைச் சுட்டுக்கடித்து - வெள்ளம் வெள்ளமாய் மடுத்துப் - பட்.

5. போத்தலுக்குப் போத்தல் கூட்டுவேன் - சாராயமென்றாற்
போதும் போதுமென்ன மாட்டுவேன்
வார்த்து வார்த்துட்கொண்டு நீட்டுவேன் - தோழர்களுடன்
மதுக்கடையை நாடிக் கிட்டுவேன்
வேர்த்துவீழ்ந்திட்டாலும் மீண்டு விராண்டி சின்சம் பேனும்உண்டு
தூர்த்தவர்த்தகத்துஅமைந்தேன் - சுற்றுங்கந்தை யான் - சுமந்தேன்
- பட்.

6. காயம் எத்தனையோ காணீரோ - என் தேகம்மீது
கண்டிடு தழும்பை எண்ணீரோ
தோயும் மண்ணுஞ் சேறும் பாரீரோ - எனக்குவந்த
துயரம்பார்க்கத் துள்ளிவாரீரோ
பேயும் நாயும் போலவானேன் - பித்தந் தலைக்கேறிப் போனேன்
வாயிலிட ஏதுமில்லை - வந்ததே எனக்குத் தொல்லை - பட்ட.

7. என்றன் மெலுக்கெல்லாம் போயிற்றே - உள்ளேயிருந்த
என்புகள் எரியலாயிற்றே
அன்புமாறிக் கோபம் மீறிற்றே - ஐயையோ என்றன்
ஆண்மையொடு மேன்மைபோயிற்றே
துன்பமினி யோசித்தென்ன - தோணியேன்யானேதுபண்ண
அன்பீர்என்போல் வம்பிலாகாது - ஆயிரந்தரம் கும்பிட்டேன் - பட்.

## *கலி வெண்பா*

சீரார் பகலவனும் திங்களொடு தாரகையும்
காராழி சூழ்ந்த பெருங் காசினியும் - ஏராரும்

மாந்தருடன் விலங்கும் மற்றுமுள்ள பல்லுயிரும்
ஏய்ந்த திருவருளின் ஈட்டமதால் - ஆய்ந்தளித்து

இட்டமுடன் காத்தருளும் ஏகபரா எந்நாளும்
சிட்டர்தமை ஆதரிக்கும் செங்கோலா - துட்டருயிர்

நிக்கிரகம் செய்தொழிக்கும் நீதிபரா தொண்டருடை
அக்கிரமம் போக்கும் அளிரூபா - உக்கிரமாய்

அன்பினரைத் தண்டித்தும் ஆதரவாய் ஆங்கவர்தம்
துன்பமெலாம் பின்பு தொடைத்துஅருள்வாய் - என்புநெக

உள்ளங் கசிந்துருகி ஓலமிடுவார் களித்துத்
துள்ளும்படியாய்த் துயர்தவிர்ப்பாய் - எள்ளுரையும்

எண்ணெயென யாண்டும் இருப்பாய் இசைந்தவர்தம்
கண்ணெதிர்வந்தாங்குஅரைக்காத்திடுவாய் - உண்ணிறைவாய்

ஆதிமத்தியாந்த ரகிதவரும் பொருளாய்ச்
சோதியருட்பிழம்பாய்த் தோன்றுவாய் - ஓதுமறைக்

கெட்டாப் பொருளாகி யானெனதென்பார்த[illegible]க்
கிட்டாப் பொருளாய்க் கிளர்ந்தெழுவாய் - இட்டஅடி

யாக்குஅடிமையாகி அவர்க்கடிமைபூண்டவர்தம்
போக்கும்அடியானாவாய் பெம்மானே - கார்ப்புயல்சூழ்

வையகத்தினின் செயலை வாயெடுத்தி யாஞ்சொலுகில்
ஐயமில்லைப் பல்லாண்டு அகன்றிடுமாற் - பொய்யலநீள்

ஆழித்துரும்பதென ஆட்டமுறுவார்க்கேற்ற
வேளைச் சென்றாங்கவர்க்கு வீடளித்தாய் - கூளிசெறி

காட்டகத்துள்ளே பலரைக் காத்தவர் தம்மாவிசிறு
வாட்டமதுங் கொள்ளா வகை தடுத்தாய் - நாட்டமுடன்

அக்கினியுட் புக்கினர்தம் ஆடைகருகிச்சிறிது
விக்கினமும்வாரா விதம்புரந்தாய் - தொக்கவுனைச்

சிங்கேறுமுன்னடைந்த தீரருயிர்வாடாமல்
அங்கேஷம் சென்றவரை ஆதரித்தாய் - பொல்குசினம்

கொண்டன்றுநீயெரித்த கோரபுரத்தாரொடிறாத்
தொண்டரொருமூவர் துயர்தொடைத்தாய் - விண்டஉயிர்

வந்துடம்பைச் சாரும் வகையழைத்தாய் காந்தஎன்பு
உய்ந்திருக்கும் வண்ணம் உதவினாய் - அந்தமுறும்

காலால்நடந்தறியார் காலெறிந்து பாலசிங்கம்
போலேநடக்கப் புகன்றிட்டாய் - சாலவொன்றும்

கண்டுணராஅந்தகர்தம் கண்கள்திறந்தாய் ஒருசொல்
விண்டுரையார்பேச விதித்திட்டாய் - எண்டிசையோர்

போற்றவொன்றும் கேளாத புன் செவிடர் கேட்டிடநல்
ஆற்றலளித் தன்னோர்க்கு அருள் செய்தாய் - வேற்றுமையாய்

எண்ணாமல் யாரெனினும் எம்பரவென்றால் அவர்மேற்
கண்ணாயவர்க்குக் களைகண்ணாய் - விண்ணொடுமண்

தாண்டியவர் தஞ்சமுகம் சார்ந்தவர்க்கு நல்லபயம்
வேண்டியவாறு ஈந்து விருப்பமுடன் - கூண்டுள்உறை

குஞ்சுக்கு இரங்குபெடைக் கொள்கையென நின்கருணைச்
செஞ்சிறையுட்காத்த செயல்களெலாம் - எஞ்சலிலா

வேதாந்தமே முதலாய் மேவிய சித்தாந்தமெனும்
போதாந்த நூல்கள் புகன்றிடுமாற் - கோதார்ந்து

கெட்டாற்கு இரங்கு கிருபாகரா எவர்க்கும்
எட்டாப்பழம் பொருளாம் ஏந்தலே - விட்டகுறை

ஒன்றில்லா நாயன்னேன் உன்னடியேன்உன்பாதம்
அன்றிடைவீழ்ந்தாவி வசமழிந்தேன் - என்றனுடை

மாதாவயிற்றுதித்துஇவ் வையமதில்தோன்றியஅப்
போதாதியாய்இப்பொழுதளவும் - நாதாநின்

செஞ்சரணமாஞ்சரணிற் சென்றுகிடந்தேனை நிதம்
அஞ்சல்அஞ்சலென்றுதடுத் தாட்கொண்டாய் - பஞ்சரத்துட்

பால்பழங்கள்ஈந்து பசுங்கிளியைப் பாராட்டல்
போலஅன்ன பானமுடன் பூந்துகில்கள் - வேளைதொறும்

ஈந்தாய் பிணிக்கிடங்குள் யான் விழுந்து மாயாமற்
போந்தாய் பரிந்தாய் புரந்திட்டாய் - பாந்தளென

வந்தவந்த வல்வினைகள் வந்தவழியோடஅவைக்
கந்தகனாயென்னை விரைந்தாட் கொண்டாய் - சந்தமுறு

சீர்தந்தாய் கல்வித் திறந்தந்தாய் தேசுபுகழ்ப்
பேர்தந்தாய் செல்வப் பெருக்குஈந்தாய் - வார்தந்த
மாதருடன் தந்தையரும் மக்களுடன் ஈன்றெடுத்த
கோதையரும் ஓர்குடியிற் கொண்டோரும் - வீதிதொறும்
கண்டோருங் கட்டிக் கலந்தோரும் ஊரவரும்
பெண்டிருடன்கூடப் பிறந்தோரும் ஒண்தொடிதன்
கைப்பிடித்த காளையரும் காதன்மிக ஓர்கலத்திற்
செப்பமுடன்உண்ட சிநேகிதரும் - ஒப்பரிய
சிங்காசனம் வதிந்த செல்வருடன் ஆதுலரும்
மங்காத கீர்த்திசெறி மன்னவரும் - செங்கோபக்
கண்ணருடன் பண்ணவரும் கற்றவரும் மற்றவரும்
எண்ணுங் குரவருடன் ஈவோரும் - உண்ணாமல்
ஓம்புகின்ற லோபியரும் உத்தமரும் மத்திமரும்
ஆம்புகழில்லா அதமர் ஆனவரும் - காம்புநிகர்த்
தோளார்ந்த வாலிபருஞ் சுந்தரஞ்சேர் பாலியரும்
வாளோய்ந்த செங்கை வயோதிபரும் - கேளார்ந்த
மோதுபடை கொண்டுளக்கும் மோதுஅமரிற் சேனையது
ஆதிபனில்லாமல் அணிகொலைந்து - மாதரையில்
வெட்டுண்டுமேனியெலாம் வெவ்வேறாய்நாற்றிசையும்
கெட்டங்கு வீழ்ந்து கிடந்தனபோன் - மட்டின்றி
ஆக்கிரமித்தே எழுந்து ஆர்ந்தபெரும் பேதிமுதற்
தாக்கும்பிணிகளினாற் சாய்ந்திறந்தம் - மாக்கருணை
வைத்தேயெனைப்புரந்தென் வாணாள் சுகம்பெலங்கள்
அத்தனையும் ஈந்தாய் அவைக்கடியேன் - எத்துணையும்
கைம்மாறேது என்றறியேன் கர்த்தனே நின்னையன்றி
இம்மாநிலந்தனின் மற்றேவரையும் - செம்மாந்து
தேவென்று கையெடுக்கேன் தேடியவர்க்குஅஞ்சலிசெய்து
தாவென்று பூசனைகள் ஆற்றுகிலேன் - நாவொன்று
சங்கீதம் பாடியவர் தாள்பரவேன் நேயமுற்றுக்
கங்கைமுதல்தீர்த்தம் கலந்தாடேன் - இங்கிதமாய்
மிருத்திகைபொன்னாதியிற் செய் விக்கிரகம் தேடியவைக்
கருத்தியுடன் வந்தனை செய் தாளாகேன் - பொருத்தனைகள்

ஆங்கவைக்குச் செய்தலையேன் அன்னவை தம்மாலயத்தின்
பாங்கெனினுஞ் சென்றவற்றைப் பாராட்டேன் - வீங்குபுகழ்

புண்ணியத்தான் மோட்சம் புகுந்திடலாம் என்றுணர்ந்து
கண்ணியநின்கான் மலரென் கைவிடேன் - விண்ணவர்தம்

கோவேஎன் சற்குருவே கோடிமறை நாடவொணாத்
தேவே அடியேன்தன் செல்வமே - பாவலர்க்குத்

தித்திக்குந்தேனே தெளிவே மறைக்கொழுந்தே
பத்திக்கு வாய்த்த பழம்பொருளே - எத்திக்குச்

சென்றாலும் என்னொடுநீ சென்றிட நின்தாள்மலரை
என்றும்பணிந்தேன் இறையவனே - நன்றியிலேன்

வீட்டிலிருந்தாலும் வெளிமேல்நடந்தாலும்
காட்டிலிருந்தாலும்எனைக் கைவிடாய் - நீட்டுதிரைச்

சாகரத்திற் சென்றாலும் தப்பாமற் காத்துஇரட்சித்து
தாகரத்திற்சேர அழைத்திடுவாய் - வேகரமாய்

அந்தியுடன் சந்தியுச்சி அல்லிடைஎத்தீவினைகள்
வந்திடினும் காத்தெனைநீ வைத்திடுவாய் - சிந்துரத்தோடு

ஆளிமுதலானவிலங் கால்அடையும் தீவினைகள்
கூளியினான்மேவுங் கொடுவினையும் - பாழியுறை

பன்னகங்கள் ஆதியினாற் பாங்கடையுந்தீவினையும்
மன்னுமழையால் வருபவையும் - பின்னுமுறும்

பாடுகளும் கேடுகளும் பாவிஅடியேனைமிகச்
சாடிமுனியாமல் தவிர்த்திடுவாய் - கூடியதீப்

பொல்லார்தங்கையுட் புகுந்தாலும் என்றனைநீ
அல்லான்எனைவிட்டகலாதே - இல்லாத

சூது பெருவஞ்சகங்கள் சொல்லுமுளம் வைத்துவெளி
மீதில்அன்புகாட்டி விழுங்கவரும் - நீதியலாச்

சத்துருவின் வாய்க்கெனைநீ தப்புவித்தெல்லார் தமக்கும்
மித்துருவாயென்னை விழைவிப்பாய் - கைத்தபெரும்

பாதகங்கள் செய்யும் பதகனிவன் என்றெனைநீ
வேதனையால்வாட விடுக்காதே - கோதகன்ற

குன்றேயடி யேன்றன் கூட்டுறவாம் அஞ்ஞானம்
கொன்றே தடுத்தெனை ஆட்கொண்டிடுவாய் - உன்றனது

கைப்பொருளாய் வந்து கலந்துன் உறவானேன்
அப்பனேதூர அகலாதே - செப்பரிய

எண்சானுடம்பிற் கியைந்து பிரதானமதாம்
கண்சேர்சிரசினைநீ காத்திடுவாய் - பண்சார்ந்த

ஆனனமுங்காப்பாய்நல் அள்ளுடன் சந்தங்கலந்த
கானமதுபாடுங் களங்காப்பாய் - தானமிடும்

கையுடனே அம்புயத்தைக் காப்பாய் நன்முண்டமுடன்
செய்யவிடுப்பைத் தினங்காப்பாய் - ஐயமற

வன்தொடையைக் காப்பாய் - வழங்குமிருபாதமுதல்
நின்றபுறஉறுப்பும் நீகாப்பாய் - என்றனது

புத்திரர்கள் மித்திரர்கள் போந்தமனைவிவமி
சத்தவரைஎந்நாளுந் தாபரிப்பாய் - இத்தரையிற்

செங்கோல் செலுத்திவருஞ் சீரரசர்தங்களுடன்
தங்குகுரு மார்களையுந் தாங்கிடுவாய் - எங்களுடை

நாடுநகரங்களுடன் நாகரிகர் தங்களையும்
கூடிவருநாட்டார் குழாங்களையும் - மாடுறையும்

உற்றார்அயலாரிவ் ஊராரொடுஆரையுமுட்
பற்றுடனே சந்ததமும் பாலிப்பாய் - முற்றுமுனை

நம்பாத பாவியர்க்கும் நல்லருளீந் தன்னவர்தம்
வெம்புபவப்பிணியை வீட்டிடுவாய் - இம்பர்செறி

அஞ்ஞானம்போக்கியுன தாரருளையீந்துபர
மெய்ஞ்ஞானமெங்கும் விரித்திடுவாய் - எஞ்ஞான்றும்

ஆண்டாண்டுதோறும்எனை ஆதரித்துவைத்ததுபோல்
மீண்டுமென்றும்ஆதரிக்க வேண்டினேன் - தூண்டிவிடும்

ஓலையுடன் தூதுமுன்றன் உத்தரவால்என்றனக்கெவ்
வேளையதில் வந்தும் விரைந்தெழுந்து - சாலவதற்கு

ஏதுமெதிர்மாற்றம் இயம்பாதுன்னேர்கமலப்
பாதமதிற்சேர்தரயான் பக்குவனாய்ப் - போதமதென்

உள்ளநிறைந்துவழிந் தோடவருள்செய்திடுவாய்
வள்ளலேயென்றன் மரகதமே - தெள்ளுதமிழ்ப்

பாவால்உனைப் பணியும் பாவியேன் நின்னருளால்
ஆவியுடனீந்த அவனியதில் - மேவியுறை

காலம்எல்லாம் உண்டுஉடுக்கக் கைப்பொருளொன்றில்லாமல்
நாலுதெருவுந்திரிந்து நாய்போலச் - சாலவிளைத்

தேற்றுவயிறுவளர்த்துத் தேம்பித்திரியாமற்
போற்றியெனைப் புரந்திடுவாய் - மாற்றலர்கள்

கண்டு நகைத்தாகடியக் காரருடன் சன்னைசெய்து
மிண்டுபண்ணிப் பேச விடுக்காதே - கொண்டவரை

விட்டிழந்து வாடியெந்த வீடுதொறுமேநடந்து
தட்டழிந்துதன்னந் தனிதிரிந்து - கெட்டழிய

வையாதேயெற்குவந்து வாய்த்தசருவேஸ்பரா
ஐயாபரனே அகந்துணிந்து - மெய்யுணராத்

தீயேன்மொழிந்தவைநின் சித்தமதில்ஏறாவேல்
நாயேனலப்பு நயமேதோ - காயமுடன்

என்னுயிருமென்பொருளும் எல்லாநின்பாரமென
முன்னமிட்டேன்அப்பால் முதல்வனே - நின்னுடைய

சித்தம் போற் செய்வாய் திரியேகாயானுனது
பத்தனென எண்ணியெனைப் பார்.

# பஞ்சரத்தினம்.

இஃது

காலஞ்சென்ற "உதயதாரகை"ப் பத்திராதிபர்

**ஸ்ரீ மத். அ. சதாசிவம்பிள்ளை அவர்களால்**

மெய்யறிவுறுத்தல், முத்திநாட்டம் ஆதிய

ஐம்பொருண்மேலதாய்

இயற்றப்பட்டு

**அவர் குமாரர்களாற்**

பிரசுரிக்கப்பட்டது.

# PANCHA RATHNAM

A POEM BY THE LATE

**MR. J.R. ARNOLD,**

**Tamil Editor, "Morning Star".**

Published by his sons,

**S.T. & S.C. ARNOLD.**

**JAFFNA**

**Strong and Asbury, Printers.**

**1898.**

# பாயிரம்

சகதேகங்கள் அநிச்சயம், சாவே நிச்சயம், பரதேச யாத்திரை காரர் அதற்கேற்ற பிரயத்தனங்கள் செய்வர். பரலோக யாத்திரைகாரரும் அதற்கேற்ற எத்தனஞ்செய்தல் இன்றியமையா அவசியம். இற்றைக்குப் பலவருடங்களின்முன் நாம் நோய்வாய்ப்பட்டபோது இறந்துவிட்டோம் என்ற சத்தம் எங்கும் பரம்பிற்று. தேகத்தைச் சேமித்தற்பொருட்டு பிரேதப்பெட்டியும் வருவிக்கப்பட்டது.

ஆயினும் யாத்திரைப் பிரயத்தனம் எம்மிற் காணப்படாமை யாலோ, "கோதென்றுகொள்ளாதாங்கூற்று" என்றாற்போலவோ, தாயில் லாது சிறுவராயிருந்த புத்திரர் இருபேர்க்கு உயிர்ப்பிச்சையருளத் திருவுளங்கொண்டோ, காரணம் அறியோம், இன்னுஞ் சிலகாலம் சீவிக்கத் தேவன் உத்தரவு தந்தனர்.

யாம் சுகம் பெற்றெழும்பிய பின்னர், இனி வரும் யாத்திரைக்கு ஆயத்தமாயிருக்கவேண்டும் என்னும் நிர்ணயத்தோடு, அதற்கு உப யோகமாகப் பத்தியை வளர்த்தற்குரிய நான்கு பாடல்களை இயற்றி அவற்றைச் சாதனைபண்ணி வந்தோம். அவற்றால் நாம் பெற்ற அனுபவம் பண்ணும் சந்தோட ஆறுதல்களைப் பிறரும் அனுபவம் பண்ணினாலோ என்னும் ஆசை மேலிட்டதனாலே இப்பாடல்களைப் பகிரங்கத்தில் விடத்துணிந்தோம். அந்நான்கிற்குஞ் சிரமாக, வைதிக விஷயங்களில் நிர்க்கவலையராய்த் தூக்கம் பிடித்தவரைத் தட்டி யருட்டற்பொருட்டுப் பலவருடங்களின்முன் யாம் செய்து அச்சிடுவித்த மெய்யறிவுறுத்தலென்னும் ஆசிரியப்பாடலொன்றை முதல் நிறுத்தினம்.

ஐந்து விஷயப் பொருண்மான்மியத்தால் இவ் வைம்பாக்களுக் கும் பஞ்சரத்தினம் என்னும் நாமகரணம்பண்ணினோம். இப்பாக்கள் யார்க்கும் பிரயோசனம் பயக்கவும், எமது அபிப்பிராயம் அனுகூலமாக வும், இரட்சாமூர்த்தியின் அரவிந்தநேரும் திருப்பாதத்தண்டை அவற்றை நைவேத்தியமாய்ப் படைத்தனம். தேவன் எமது அன்பார்ந்த துணிவை மன்னித்து இவற்றையும் ஆசீர்வதிப்பாராக.

இங்ஙனம்,
ஆக்கியோன்.

மானிப்பாய். 1890 வருடம்.

# PREFACE

Ten years ago when we were laid up with a serious illness, report went abroad that we had succumbed to death and friends brought in a coffin.

But kind Providence spared us at the time; for what reason, we do not know. It may be that we were not ready to meet our Lord then, or that our Heavenly Father pitied our two motherless sons.

After our recovery, we employed some of our leisure hours for the preparation of a few poems, auxiliary to our postponed journey and serviceable for prayer and meditation.

Thinking it would be selfish to keep the poems ourselves, we determined to give them publicity with the addition of a poem of our earlier days entitled "an appeal to the unconverted" and christened the whole with the name of Pancharatnam, or the 'Five Gems,' on account of the preciousness of the subjects handled.

We now lay them at the holy feet of our Divine Savior with the sincere hope that they will not fail to do some good to the public.

The Author,
Manipay.
1890

# பஞ்சரத்தினம்.

காப்பு

திருவார்தரு பஞ்ச ரத்தினநூல் செப்ப
அருவாம் அமலன் அளித்தான் - குருவாகப்
பூதலத்தில் வந்துபெரும் புண்ணிய ரட்சண்ணியம்சம்
பாதித்தான் பாதந் துணை.

## 1 வது மெய்யறிவுறுத்தல்

*நிலைமண்டிலஆசிரியப்பா*

திருவருள் வடிவாம் - சிற்பராநந்தன்
அருவுருவாகிய ஆதியம்பரமன்

அண்டமுஞ்சோமனும் - ஆயிரங்கிரணனும்
சண்டமாருதமொடு - தரணியுந்தந்தோன்

கோலவார் மழைபொழி - கொண்டலுமுடுவும்
நீலவார்கலியொடு - நேமியும்அளித்தோன்

கூண்டுறைபுண்மீன் - குலவிலங்காதி
ஈண்டியசராசரம் - எவற்றையுமீந்தோன்

தந்தபல்லுயிர்க்குத் - தலைவராய் மாந்தரை
அந்தமில்அருளால் - அன்புடன் படைத்தோன்

பாவமதாம்பெரும் - பயோததிதாழ்ந்து
சாவுறுவாரைமீள் - தரும்புணையாகச்

சற்குருவீந்துடன் - தாபரித்தாண்ட
அற்பதன்பதாம்புயம் - ஆயிரந்தரமென்

---

சோமன் - சந்திரன், ஆயிரங்கிரணன் - சூரியன்,
மாருதம் - காற்று, ஆர்கலி - சமுத்திரம், நேமி - மலை,
பயோததி - கடல், புணை - தெப்பம்.

சிந்தையில்ஏந்தியும் - சிரந்தனில்உறுத்தியும்
சந்தமார்குரவர்தம் - தாள்மலர்பணிந்தும்

நாயினுங்கடையேன் - நல்லுணர்வில்லேன்
தூயனவிவையெனத் - துணிந்துடன்புரியேன்

ஓதுமாமறைப்பொருள் - உளமதில்நிறுத்தாப்
பாதகம்பலபுரி - பாவசிகாமணி

ஆனபுல்லறிவினேன் - அறைதருமொழிகளை
ஞானவாகரமாம் - நல்லவர்இகழார்

என்றுளந்தெளிந்தபின் என்பிறப்பினராய்
நின்றிடுநேசரே - நிகழ்த்திடுகின்மொழி

உண்டிவைதமக்குநீர் - ஓரெதிர்மாற்றமும்
விண்டிடாதன்பொடு - விரும்பியுட்கொண்டிட

உங்களை வேண்டினன் - உலகமோவ நித்தியம்
மங்குலார்மின்னென - மற்றது விரைவில்

மாய்ந்திடுந்தோன்றிய வளம்பொருள்சகலமும்
ஆய்ந்திடில் வந்தவாறு - அழிந்திடுமிதற்குச்

சான்றுவேதாகம - சாஸ்திரமன்றிமற்று
ஆன்றவர்வார்த்தையென்று - அனைவருமறிதிர்

ஆதலால் நித்தியம் - ஆகுமிப்புவியின்
மீதுறுவாழ்க்கையை - விழலெனஉணர்வீர்

இந்தவீண்வாழ்வைவிட்டு - இயமானன்றனைச்
சிந்தையாந்துலையிடைச் - சீர்பெறத்தூக்கிப்

பார்த்தவரதுநிழல் - பறந்திடல்போலவோர்
வார்த்தைபேசிடமுன் - மறைந்திடுமென்றும்

நீரின்மேற்குமிழியை - நிகர்த்திடுமென்றும்
ஆர்தருபுகைபோல் - அகன்றிடுமென்றும்

பற்பலஉவமையிற் - பரிவொடுபகர்ந்தனர்
அற்பமும் அவற்றிலோர் - அசத்தியமில்லை

மாயம்அதாம்புவி - வாழ்வுயிர் விட்டுநம்
காயமாபுரி நிலை - கழறிடக்கேண்மின்

---

ஆகரம் - உறைவிடம், மங்குல் - முகில்,
இயமானன் - ஆன்மா, காயம் - உடல்

9 ## க^வது^ மெய்யறிவுறுத்தல்

அம்மையும்அப்பனும் - அன்பினில்இசைந்து
செம்மையாய்இயற்றிய - திருஅமர்வீடுஇது

ஆங்கதில்வளை தூண் - ஆதியஎலும்புகள்
ஓங்குநூற்றைம்பதோடு - உற்றநூற்றிரண்டாம்

வன்னசைமுருந்து - மருவியபந்தனம்
பின்னுகங்காளமாம் - பெருங்குடிலிது நெடும்

தோல்அதினாலே - துலங்கிடவேய்ந்தது
சீலம்அதாம்பல - செழுந்தசைதிகழ்ந்தது

இப்பெரும்புரத்துள் - இரத்தாசயத்துடன்
செப்பிடுசுவாசம் - செறிதருமறைகளும்

மூளையுநரம்பும் - மொழிதருசலமலப்
பேழையும் பிறவும் - பிறங்கிடுநாடியும்

நாளமும்குழல்களும் - நவின்றிடுநிணமும்
கோளமும்பிறவும் - குழுமியஆங்கதை

ஐம்புலவேடர்வாழ் - அருஞ்சுரமென்றும்
செம்புனல்பொசிதரு - சிறுகுடிலென்றும்

சோறடைந்திடுபெரும் - துருத்தியதுஎன்றும்
கூறுசீழுடைமணக் - கொள்கலமென்றும்

ஆயபல்உவமையால் - அறைந்தனர்ஆங்கவை
பாயிரமாய்இவண் - பகரவோவேண்டாம்

எப்பொழுதாயினும் - இப்பெருங்கடமது
தப்பறஉடைந்திடும் - சத்தியமறிவீர்

எம்பகவான்எமக்கு - இட்டநல்வயதீர்
ஐம்பதென்றேசிலர் - அறைந்தனர் சிலர்தாம்

எழுபதென்றுரைத்தனர் - இதற்குஒருபத்தினை
வழுவறக்கூட்டி - வகுத்ததுமுண்டாம்

சொல்லுமிம்மூன்று - தொகைபெறுவயசின்
எல்லைதான் கண்டிங்கு - இறப்பவர்அரிதே

மோதுமாருதத்தால் - முதிர்பழம்இன்றிப்
போதரும்பொடுகாய் - பொள்ளெனவீழ்தல்போல்

---

அம்மை - தாய், பந்தனம் - கட்டு,
கங்காளம் - முழுவெலும்பு, கடம் - உடல்.

பாலியத்துஇறந்தனர் - பலரேகாளையிற்
கோலமற்றுஇறந்தனர் - கூறிடில்அநந்தம்

போற்றியவிடலையிற் - பொன்றினர்கோடி
சாற்றுமாடவத்திற் - சாய்ந்தவர் வெள்ளம்

மூப்புவந்துஇறந்திட - மொழியுமிவ்உலகில்
வாய்ப்பதோஅரிதிவ் - வையகத்துலவிய

நோயினும் விஷத்தினும் - நூறிடுபோரினும்
காயெரிஆதியாம் - கடும்பகை எவற்றினும்

ஆண்டினுக்காண்டு - அழிந்தவர்க்குளல்லை
காண்டிடமுடியினும் - கரணமும்பொறியும்

ஈரலுநெஞ்சமும் - இளைந்துநைந்துருகச்
சாரிகைபோலெதிர் - தாவிஎண்டிசையும்

மண்டிடுகொள்ளை நோய் - மடக்கிடமாய்ந்தவர்
எண்தொகைகாண்டிடில் - எளிதலநிந்தமும்

சாவுவந்திடும்அதைத் - தானெவர்தடுப்பவர்
பூவிடையார்க்கும் - பொதுவதாய்அஃதும்

வந்திடுஞ்சாவது - வலிசுகவிதியால்
அந்தநூற்றாண்டின்முன் - அணுகுறாதென்று

வைத்துநாம்பார்த்திடில் - வருடநூறதனில்
நித்திரைதன்னிலே - நெடுகிடும்ஐம்பது

நெடுகும்ஐம்பதைவிட - நின்றவைஐம்பதுதனில்
முடுகுமூன்றரைதாய் - முன்கையிலேந்தவும்

தொட்டிலில்ஆடவுந் - தொடர்ந்தடிவைக்கவும்
மட்டறுமழலைகள் - வழங்கவும்சிற்றில்

ஆக்கவும்சிறுபறை - அடிக்கவும்சிறுதேர்
ஊக்கமாய்உருட்டவும் - ஓடவும்ஆடவும்

பள்ளியிற்கல்வி - பயின்றிடமுயலவும்
தெள்ளியபாலியம் - தீர்ந்திடச் சேடம்

ஆகியநாற்பான் - ஆறரையதனுள்
ஏகமாய்இலக்கியம் - இலக்கணம்ஆய்ந்திட

---

நூறல் - கொல்லல், கரணம் - மனாதி,
சாரிகை - சுழல்காற்று.

நாலரைஆண்டவை - நடந்திடக்காலையில்
ஏலுறுநாற்பான் - இரண்டுமிஞ்சியவே

மிஞ்சியவாங்கதில் - விரும்புமேழாண்டு
பஞ்சலக்கணமுதற் - பல்கலைபார்க்கவும்

நாரியைநாடவும் - நல்வளந்தேடவும்
வீரியஞ்செறிதரு - விடலையிற் சென்றிட

ஐந்தொடுமுப்பான் - ஆண்டுமீந்தனஅதில்
செந்திருஅனையரைச் - சேர்ந்துநன்மகப்பேறு

அடையவாண்டொன்பான் - ஆடவத்தேகிட
இடையின் மீந்திருந்தன - இருபதோடாறே

எஞ்சியஇவற்றிடை - இன்னிசைக்குழலிற்
செஞ்சிறார்அறைதரு - சிறுமொழியினிதென

உச்சிமோந்தெடுக்கிநல் - உக்கலையேற்றவும்
கொச்சையங்குதலையிற் - குறுநகைகொள்ளவும்

தண்டைகிண்கிணியொடு - சதங்கைகளாதியாய்
மண்டுபல்பூண்கள் - மலிந்துடன்ஒலிக்கக்

கேட்டகமகிழவும் - கிளைத்திடு மக்களின்
ஆட்டமதாதியில் - அன்பறவாறாண்டு

ஆடவவிருத்தத்து - அகன்றிடநின்றுறு
சேடமொரிருபது - திகழ்ந்ததுதெரிவீர்

இந்தவோர்இருபதில் - இன்புடன்ஈன்றெடு
மைந்தர்தம் மணங்களில் - மனம்களிகொள்ளவும்

ஈழையும்இருமலும் - இசைந்துடன்எழும்பவும்
பீளைகண்சாறவும் - பேருடல்வாடவும்

வீட்டினுக்குஇனிநாய் - வேண்டியதின்றென
ஆட்டுறுசிறார்களும் - அவமதித்தேசவும்

அன்னமுமுறக்கமும் - ஆடையும்தவிர்ந்து
மன்னியவொருகோல் - வாங்கிமுன்னூன்றிக்

காலொருமூன்றாய்க் - கடுநடையொழியவும்
மாலுறுமயக்கம் - வரவரவளரவும்

---

நாரி - பெண், வளம் - செல்வம், சிறார் - பிள்ளைகள்.

உருளவுந்தவழவும் - உருண்டுடன்திரும்பிப்
புரளவும்பஞ்ச - பொறிகள் குன்றிடவும்

வெட்டியகட்டைபோல் - வீந்துடல்கிடக்கச்
சுட்டியமயானம் - சுமந்திடுமளவாய்

அடைந்திடும்இருபான் - ஆண்டுநல்விருத்தம்
கடந்திடமிச்சமாய்க் - கண்டிடுசேடம்

ஒன்றையும்காணோம் - ஓகோ! யாம்முன்னுரை
துன்றியபாலியம் - தொடங்கிமூவிரண்டு

பருவமும்இயற்றிடப் பகர்ந்திடுபணிவிடைக்
கருமையில்அருமையாம் - அரும்பணிஒன்றுண்டு

அதிசயமதிசயம் - அதனை நீர்கனவினும்
மதியுறநினையீர் - மற்றதுதிருவைத்

தேடிடத்திரைகடல் - தினந்தொறும் திரிவதும்
காடுநாடொடுநகர் - கடப்பதும்அன்றாம்

ஏனெனிற்செல்வமோர் - இமைப்பொழுதாயினும்
தான்நிலையாதது - சக்கரக்கால்போல்

மாறிடும்பின்னையிவ் - வையம்ஆண்டிடமுடி
ஏறிடுமரசனாய் - இருப்பதாமோவெனிற்

சத்தியம்ஆங்கது - தானுமன்றுஏதெனிற்
கொத்துநன்மணிபுனை - குடைநிழற்றிடஅரி

ஆசனத்திருந்தரசு - ஆண்டிடும்அரசரும்
போசனம்கிடையாப் - புறங்கடைபோந்து

ஐயமேற்றிடவரும் - அதான்றெனில்இல்லறம்
செய்துவாழ்துணைவியைச் - சிறுவரைத்துறந்து

கானகந்திரிந்து - கந்தமூலந்தினும்
வானப்பிரத்தனாய் - வாழ்ந்திடலோஎனின்

ஆங்கதுமன்றுமற்று - அவையெலாமன்றேற்
பாங்குடனஃதினைப் - பகர்ந்திடென்பீரேல்

அன்னைதன்கருக்குழி - அடைந்திருந்தொன்பது
மன்னியதிங்களால் - மகிதலந்தோன்றிய

---

வையம் - பூமி, கொத்து - கூட்டம், அரி - சிங்கம், திங்கள் - மாதம்.

நாளதுமுதலாய் - நவிலுபல்லிடையூறு
ஆளுறாதுஎங்களை - ஆதரித்தாண்டவன்

தந்தருளாகமம் - தலைமிசைச்சுமந்ததில்
முந்தியபோதகம் - முழுவதுந்தெளிந்து

சற்குருமொழியினால் - தலைவனைஉணர்ந்தவன்
அற்புதஅருளினால் - அகந்தனை மஞ்சனம்

ஆட்டியுள்ளசுத்தம் - அகற்றிமெய்யன்பொடு
காட்டியதிருப்பணி - கடந்திடாதுஅவன்அருட்

சார்பினால்அம்பரன் - சாலோகமடைதலே
ஆர்பொருள்எனத்துணிந்து - அமர்தலே அப்பணி

என்றுநீர்உணர்திர் - எனஉரையாட
நன்றுநீர்நவின்றது - நாமதைஇனிமேல்

ஆவலாய்த்தேடி - அடைகுவம்இந்நாள்
ஓ! அதற்கவசியம் - ஒன்றும்இங்கின்றெனில்

ஐயையோ! நீங்கள் - அனைவருமோசம்
பையவேபோனீர் - பரமனார்அனுப்பும்

ஓலையும்தூதுநீர் - உறுமெனஉன்னிடா
வேலையில்வந்திடும் - விழிக்கையில்வந்திடும்

உண்டகங்களிகொண்டு - உறுகையில் வந்திடும்
கண்டகண்மூடும் - கணத்தினில் வந்திடும்

இன்றோநாளையோ - இரவிலோ பகலிலோ
அன்றொருவாரமோ - அடுத்திடுதிங்களோ

இந்தவற்சரமோ - இனிவரும்ஆண்டோ
பிந்துமாயனமோ - பேரகக்களிப்புடன்

ஓடிடும்பொழுதோ - உறங்கிடும்பொழுதோ
நாடுடன்பலஊர் - நடந்திடும் பொழுதோ

வீட்டிலோவெளியிலோ - விருந்துகொண்டாடிஉண்டு
ஆட்டுறும் பொழுதோ - அவைவிரைந்தணுகும்

காலமுமிடனுநீர் - கனவினுமறியீர்
ஏலுறுபல்கலை - எவற்றினும்அறியீர்

---

மஞ்சனம் - முழுக்கு, சாலோகம் - மோட்சம்,
வற்சரம் - வருடம், அயனம் - ஆண்டிற்பாதி.

வருவதுமாத்திரம் - மறுக்கொணாஉண்மை
திருடனைப்போலவே - சேர்ந்திடிலெதிர்போய்

ஆர்தடுப்பார்உளர் - அன்னைதந்தையரோ
வாரணிந்திடுமனை - மக்களோஅன்றிக்

காணியோபணமோ - காவல்செய்யரசர் தம்
ஆனையோசேனையோ - அரியதண்டனையோ

கப்பமோபிணையோ - கருதுமிவ்வுலகக்
குப்பையாம்பலபொருட் - குவைகளோவந்தவை

போவெனிற்போகா - பொறுமெனிற்பொறுக்கா
ஆவெனிலசையா - அழுதிடிற்கலங்கா

எலிதனைப்பூசை - இரக்கமற்றெடுத்து
வலியுறவாங்கி - வாயிடைக்கவ்வல்போல்

மரணமாந்தூதன் - வந்துமையீர்த்துக்
கரணம்ஐம்புலனும் - கலங்கிடநடாத்திச்

சருவபூரணனாம் - தயாநிதியாகிய
அருவமாநீதி - அம்பரனாசனம்

முன்புமைநிறுத்த - மூலகாரணனும்
கொன்பயந்திடநீர் - குவலயத்துஉறைநாள்

ஈட்டியபுண்ணியம் - எவையெவையென்று
மூட்டியஎரிபோல் - முனிந்துமைவினவில்

என்னுரைமொழிவீர்? - ஏதினைப்பகர்வீர்?
அன்னஎம்பரனார் - அழன்றுமைச்சபித்து

மாநரகேகிநீர் - வாதனைபெறுமென
வானமுந்திசைகளும் - மண்ணொடுகிடுகிடென்று

அச்சமுற்றசைய - அறைந்திடுவானேல்
எச்செயல்புரிவீர் - எவ்விடம்ஒளிப்பீர்

பாதலத்தோடினாற் - பரமனும்ஆங்குளன்
மீதுறுபிறவிடம் - விரைந்து நீரோடில்

ஆங்கனும்உளனவன் - ஐயையோ! பின்னை நீர்
யாங்கனம் மறைவீர் - யாரிடம்ஓடுவீர்

---

கப்பம் - இறை, பூசை - பூனை, கொன் - பயம், குவலயம் - பூமி.

வானமேமலையே - வையமேபல்வகை
மீனமார்கடலே - மேவியெங்களைநீர்

காத்திடும்எனிலவை - காக்குமோஅன்றேல்
ஆத்தனார் பணிப்படி - அருநரகாழ்ந்திட

வந்திடாவகையிவ் - வையகந்தனினீர்
உய்ந்திடும்இதுபோது - உலகசோலிகளிற்

சிக்கிடீர்தேவன் - திருவுளம்இரங்கிநும்
பக்கம்உள்ளன்பாற் - பரிவினோடுதவிய

ஆகமந்தனைவிடாது - அல்லொடுபகலும்
வாகுடன் வாங்கி - வாசியும்கற்பனை

பத்தையுங்கடவீர் - பாங்குடன்நன்னெறிக்
கொத்தையும்மறவீர் - குவலயப்பெருங்கடல்

ஆழ்ந்திடீர்உலகம் - அழிந்திடும்அதுநிதம்
வாழ்ந்திடும்என்றுநும் - மனசிடைமதியீர்

முந்தைநாளிருந்தவர் - முடிந்தனர்நேற்று
விந்தையாய்நேற்றுளார் - வீந்தனர்இன்று

இன்றுளார்நாளை - இருப்பதுபொய்யென
நின்றிடுமுதுமொழி - நீங்களும்உணர்வீர்

ஆதலால்அறிவிலார்க்கு - அறைந்திடல்போல
ஈதெலாம்உங்களுக்கு - இசைப்பதென்இனிமேல்

உலகதன்பாசத் - தொட்டியேயிறுகி
விலகிடாதழிந்து - வினைவலியதனால்

மோசமாய்ப்போகீர் - முகிழ்செறிதாமரைப்
பாசிலைஇடைநீர் - பற்றிடல்போலவும்

புளியும்நற்பழத்திற் - பொருந்தும்ஒடொப்பவும்
இழிவுறுமுலகுடன் - இசைந்துநீருப்பீர்

ஆரியப்பாவை - ஆடினுமாங்குதம்
காரியமேகணாய்க் - கருத்துவைப்பவர்போல்

---

ஆத்தன் - கடவுள், அல் - இரா,
வாகு - ஒழுங்கு, பாசிலை - பச்சையிலை.

எவ்விடம்இருப்பினும் - எந்நிலைஅமரினும்
அவ்விடந்தேவனை - அன்புடன் வணங்கிப்

பாவவேர்அறுத்துப் - பரனுமக்குஅருள்செய்
மேவுசாலோகமாம் - வீடுசேர்குவிரே.

மெய்யறிவுறுத்தல்

முற்றிற்று.

## ௨ வது முத்திநாட்டம்

## எக்காலக்கண்ணி

*வெண்செந்துறை*

01. பூவான்புனலாதி பூதங்கடந்தளிக்கும்
தேவாவென்பாவினுக்குன் செவிகொடுப்பதெக்காலம்?

02. கண்ணேஎன்கண்மணியே காசினிக்குவிண்மணியே
பண்ணால்துதிக்கும்எனைப் பார்த்தருள்வதெக்காலம்?

03. ஈனப்பிறவியெடுத்து எல்லையிலாத்தீதுசெய்தேன்
வானவநீஅன்பால் மனித்திடுவதெக்காலம்?

04. எங்குமாயெல்லாமா யார்க்கும்அருள்ஏகபரா
கொங்கார்நின்பாதமலர் கூடிடுதல்எக்காலம்?

05. நின்னருளைஎள்ளிவிட்ட நீசனென்றுதள்ளாமல்
என்னரசேஎன்றன் இளைப்பகற்றல்எக்காலம்?

06. ஈனப்பவத்தொடக்கால் ஈடழிந்துநைந்தேனைக்
கோனேநின்பால்அழைத்துக் கொள்வதுதான்எக்காலம்?

07. அன்பருள்ளமாம்அரங்கில் ஆனந்தநாடகமாடு
என்பரமா நின்சநிதி ஏறிடுவதுஎக்காலம்?

08. நின்றன்இலச்சினையும் நின்னருளின் முத்திரையும்
என்தலைமேல்அப்பாவைத்து எனைப்பிரிப்பதுஎக்காலம்?

---

புனல் - சமுத்திரம், விண்மணி - சூரியன்,
கொங்கு - வாசனை, அரங்கு - சபை, இலச்சினை - குறி.

09. உன்னைத்துறந்துஉலகில் உய்வேனோஎன்பரமா
என்னைப்பவச்சிறைமீட்டு ஈடேற்றல்எக்காலம்?

10. வெள்ளக்கருணையனே வேதாந்தநாயகனே
கள்ளத்தாழ்நெஞ்சனெற்குக் கைதருதல்எக்காலம்?

11. பாடிநமஸ்கரியேன் பாவத்தொழிற்குஉரியேன்
வீடுபெறஅப்பாநீ விருப்பமுறல்எக்காலம்?

12. ஐயாநின்செங்கமல அந்தவடிஎன்தலைமேல்
வையாயோவைத்துலக மால்நீக்கல்எக்காலம்?

13. உள்ளந்தகழியதாய் உற்றபத்திநெய்யூற்றி
விள்ளொளிஏற்றேனைஅப்பா விண்ணேற்றல்எக்காலம்

14. உரோமஞ்சிலிர்க்க உரைகள்தடுமாறவத்தா
சிரோவணக்கஞ் செய்யேனைச் சீர்ப்படுத்தல்எக்காலம்?

15. சச்சிதானந்தத் தனிப்பொருளே பூலோக
இச்சையில் வீழ்ந்தேனைஇனி ஈர்த்தெடுத்தல்எக்காலம்?

16. புண்ணியத்துக்குஅந்நியனாய்ப் போனஎனைஎன்பர நின்
கண்ணருளால்மீட்டுக் கதியேற்றல்எக்காலம்?

17. நின்தொண்டைவிட்டுநிதம் நீள்பேயின்தொண்டுபுரி
வன்தொண்டனேனைஅப்பா வானழைப்பதுஎக்காலம்?

18. முத்தொழிலும்செய்தருளும் மூர்த்தியேபாவநிறை
எத்தொழிலுஞ்செய்தேன் இடரகல்வதுஎக்காலம்?

19. அநந்தகணக்கடலே அடியார்பவப்பகடே
சினந்தெனைஎள்ளாதுநின்பாற் சேர்த்தணைப்பதுஎக்காலம்?

20. எந்நாளிற்காண்பலென எல்லையற்றகாதல்கொண்ட
சின்னவனையாநினையான் தெரிசிப்பதுஎக்காலம்?

21. கருவூரில்வந்து கலக்கமுற்றேனப்பாநின்
பெருவூரைக் கண்டுமிகப் பிரமைபெறல்எக்காலம்?

22. விண்ணோர்கள் பாடி விருப்பமுடன்தொண்டுபுரி
அண்ணால்யான்அஞ்சலிதந்து அகமகிழ்வதுஎக்காலம்?

---

அந்தவடி - அழகானபாதம், மால் - மயக்கம், ஈர்த்தல் - இழுத்தல், பகடு - தெப்பம், கருவூர் - கர்ப்பம், பிரமை - மெய்யறிவு.

23. என்னைவிடாதுஎன்னரசே இன்பரசநின்சமுகம்
அண்ணுதற்குநல்வரம்ஈந்து அடிமைகொளல்எக்காலம்?

24. ஆனந்தபாஷ்பம் அருவிபோற்பாயாப்புல்
ஈனன்எனைத்தேவாகை ஏற்பதுதான்எக்காலம்?

25. மேகமதைஆசனங்கொள் விண்ணவனேநின்சமுக
தாகமுற்றேன்அத்தைத் தணித்துவிடல்எக்காலம்?

26. பேய்க்கணங்கள்தான்குழுமிப் பெரிதுலைத்தென்ஆருயிரைச்
சாய்க்காமுனத்தாயான் சயம்பெறுவதுஎக்காலம்?

27. கன்மந்தொலைக்கஇந்தக் காசினியில் வந்தபரா
என்பங்குநின்வீட்டில் ஏற்றுறைவதுஎக்காலம்?

28. பாவமெனும்சங்கிலியாற் பன்னாட்பிணிப்புண்டேன்
தீவாய்புகாமல்அப்பா சேர்த்தழைப்பதுஎக்காலம்?

29. அன்பருரைபண்பிலுரை ஆயினுமற்றாங்கவைகொள்
என்பரமாஎன்னுரைகொண்டின்புறுதல்எக்காலம்?

30. மானமொழிந்து மனசழிந்து சாவாமல்
ஞானவுணர்வொடுஅப்பா நான்வருவதுஎக்காலம்?

31. தன்னைஅறிவான் தலைவனைஐயாஅறிவான்
என்னுமுரை பொய்த்தென்முன் எழுந்தருள்வதுஎக்காலம்?

32. சூரியர்கள்கோடி சொலித்திடல்போற் சோதியொளிர்
ஆரியனேஎன்னை நின்வீடழைத்திடுவதுஎக்காலம்?

33. பேரருளின்குன்றே பெருஞானதீபிகையே
சோருமடியேற்குஉனது சுகம் பொழிவதுஎக்காலம்?

34. நன்மைப்பிரகாச நாதனேநின்நிதிக்கு
என்னைவரச் செய்துமுத்தி யிற்புகுத்தல்எக்காலம்?

35. அருண்மொழியால்தேற்றிஅடியார் தொகைப்படுத்திக்
கிருபாகராசிவத்தைக் கிட்டுவிப்பதுஎக்காலம்?

36. வாய்த்தபெருவாழ்வேயிவ் வையகத்தின் வாழ்வதெல்லாம்
பேய்த்தேராய்க் கண்டேன் பிறப்பறுவதெக்காலம்?

---

பாஷ்பம் - கண்ணீர், ஆரியன் - கடவுள்,
தீபிகை - தீபம், பேய்த்தேர் - கானல்,

37. தேகமுடன்தேகிதனைத் தேர்ந்துணரவல்லதொரு
யூகமற்றேன்அத்தாவுன் னோடுஉறைவதுஎக்காலம்?

38. யான்எனதென்றுஓதும் இருசெருக்கும் போக்கிஎங்கும்
தானானவாஉனையான் சந்திப்பதுஎக்காலம்?

39. பாவத்தின் தூருடனே பற்றறுத்துஆள்என்பரமா
கேவலத்தைத் தந்தென் கெலியகற்றல்எக்காலம்?

40. பொய்யானமாயை இடைப்புக்கழுந்தும் ஏழையெனைக்
கையாலொதுக்கிஐயா கரைப்படுத்தல்எக்காலம்?

41. சொர்க்கமுடன்றாழ்நரகம் சுத்தமாயில்லையென்று
தர்க்கமிட்டபாவியையா தயைபெறுவதுஎக்காலம்?

42. தேகத்துஇசைந்திருந்தும் தேம்புளியும்நல்ஓடும்
ஆகவிருந்தேன்அநகா அமுதமுறல்எக்காலம்?

43. சொப்பனத்திற் கண்டஎலாம் சூனியமைஆவதுபோல்
இப்புவியைக்கண்டேன்உன் இட்டமுறல்எக்காலம்?

44. வேற்றுருக்கொண்டோன்தனை விட்டிடல்போல்என்பாவத்
தோற்றவுருத்தள்ளிஐயா தூய்மைபெறல்எக்காலம்?

45. ஓடச்சிறையிருந்தால் உங்குவராதுஇங்கிருக்கேன்
தேடஅத்தாதூதரைநீ சேர்த்தனுப்பல்எக்காலம்?

46. மண்ணால்எடுத்தகடம் மண்ணில்உடையும்இனிக்
கண்ணுவதென்னப்பா கலந்தாள்வதுஎக்காலம்?

47. நீரில்விழும்சாயைஎன நீள்நிலத்தில் வைத்தபுன்மைச்
சார்பு தொடைத்துஐயாநின் சார்புபெறல்எக்காலம்?

48. ஆசையொருகோடி அலைச்சல்பலகோடியதாய்
வேசாறினேனைஅப்பா விண்புகுத்தல்எக்காலம்?

49. நின்னடியார்கூட்டமதில் நேயமுற்றேன்அப்பாயான்
உன்னடிமேல்இன்பாய் உவந்துறைதல்எக்காலம்?

---

தேகி - சீவாத்மா, தூர் - வேர், கேவலம் - மோட்சம்,
அநகன் - பாவமில்லாதவன், அமுதம் - முத்தி,
வேற்றுரு - வேஷம், கடம் - உடல், குடம்.
கண்ணுவது - நினைப்பது, வேசாறல் - துக்கமடைதல்.

50. களங்கமற்றசந்திரனைக் கண்டுருகுங் கன்னிகராய்
உளங்கசிந்தேன்அப்பாயான் உனைமருவல்எக்காலம்?

51. சங்கியாதிச்செகத்தின் சந்தோஷஞ் சத்தியமென்று
இங்கிருக்கேன்ஐயா எனைவிளிப்பதுஎக்காலம்?

52. கல்நாருரித்ததெனக் கல்லாக்கயவன்மனம்
பண்ணாக்கும்என்பரநின் பதவிதரல்எக்காலம்?

53. என்பணிகொண்டுஇன்படையும் என்பரமாநின்பால்வந்து
உன்பணிகொண்டுஉன்னுடன்யான் ஒன்றுபடல்எக்காலம்?

54. பத்தர்பரிசுத்தர் பரிந்திருபால்நின்றுதொழும்
கர்த்தாயான்நின் சமுகம் கண்டுதொழல்எக்காலம்?

55. நடுஊருள்ளேபழுத்த நன்மரம்போல் யார்யார்க்கும்
படுபயன்இல் பாவிஐயா பார்தவிர்தல்எக்காலம்?

56. அச்சுதனேஇச்செனன ஆழியதுள்புக்குலைந்தேன்
இச்சைகெடநின்பதவி எய்திடுதல்எக்காலம்?

57. தேவர்துதிமாரிபெயத் தேவாநின்னாய்அடியேன்
பூவைவிட்டுஉன்பாங்கர் புகவிளித்தல்எக்காலம்?

58. நின்மறை வீழாச்செவியும் நின்மொழிதங்காஉளமும்
என்னவெனினும்அப்பா எற்கருள்வதுஎக்காலம்?

59. சிறியேன்அடியேன்யான் செய்பிழையாவும்பொறுத்து
அறுகுணஅத்தாஎனக்குன் அன்புஇகுத்தல்எக்காலம்?

60. அம்போருகபதந்தந்து அப்பாபரகதிப்பேர்
இன்பபதமேற்றி இதம்பொழிதல்எக்காலம்?

61. மறந்துமுனைநினையா மாபாவியான்சனகா
சிறந்தமுத்திசேரும் திறம்பெறுவதுஎக்காலம்?

62. காய்ச்சியபால்நெய்போற் கலந்தண்டபிண்டமெலாம்
வாய்த்தபராநின்முன்எனை வரப்பணிப்பதுஎக்காலம்?

63. சமுசாரஇன்பமது சாசுவதம்என்றுசொலி
மமதைகொண்டேற்குஐயா நின்வாழ்வுஉதவல் எக்காலம்?

---

சங்கித்தல் - ஐயமுறல், கயவன் - கீழ்மகன்,
அச்சுதன் - அழிவற்றவன், இகுத்தல் - ஈதல்,
அம்போருகம் - தாமரை, சனகன் - பிதா,
சாசுவதம் - நித்தியம், மமதை - அகந்தை.

64. புத்திரர்வாழ்விற்களித்துப் பொய்யாம்உலகஇன்பப்
பித்துக்கொண்டேன்ஐயையா பேணுதல்தான்எக்காலம்?

65. பொன்செருக்குமண்செருக்காம் பொல்லாக்குழைசேற்றின்
கண்சரிந்தேன்ஐயாநீ கறைதொடைத்தல்எக்காலம்?

66. ஐம்புலன்கள் செல்வழியே ஆடியலைந்தேன்ஐயப்பா
கும்பியுட்செல்லாதடிமை கொள்வதினியெக்காலம்?

67. பேய்போல்நடித்துப் பிரபஞ்சக்காடுஅலைந்தேன்
தாய்போல்எடுக்கிஐயா தாபரிப்பதுஎக்காலம்?

68. காலமெலாம்வீணாய்க் கழித்துஅவத்திற்காய்ந்துஅலைந்தேன்
சாலஐயாதள்ளாமற் தயைகூட்டல்எக்காலம்?

69. கன்றைமறந்தோடும் கறவையுண்டோ காவலனே
என்றும்விடாதென்னை இரட்சிப்பதுஎக்காலம்?

70. அமுதேசருக்கரையே ஆரணத்தின் பூரணமே
சமதீதமாய்உனைநான் சார்ந்திடுவதுஎக்காலம்?

71. கருணாகரனேயான் கண்களித்துநோக்கஎன்முன்
அருணோதயம்எனவந்து ஆசொழிப்பதுஎக்காலம்?

72. கல்விப்பெருமைகொண்டு கர்த்தனே நின்னைமறந்து
அல்லற்படாதுதடுத்து ஆட்கொள்வதுஎக்காலம்?

73. அன்னைவயிற்றில் அவதரித்தநாள்முதலாய்
என்னைப்புரந்தபரா ஏற்கருள்வதுஎக்காலம்?

74. பாலியம்தொட்டுஐயா பதினாறதாகுமட்டும்
ஏலவளர்த்தஎனை ஏற்பதினிஎக்காலம்?

75. காளைப்பருவம்அத்தா கழியவிடலைப்பருவம்
ஆளவைத்தாய்என்னை அணைத்தெடுப்பதுஎக்காலம்?

76. விடலைப்பருவமுதல் மேலாடவத்திலெனை
அடைவாய்த்திதித்தபரா அடிமைகொள்வதுஎக்காலம்?

77. நல்லாடவவிருத்தம் நன்குபெறக்காத்துவைத்த
செல்வாஉன்னோடெனைநீ சேர்த்திடுதல்எக்காலம்?

---

கும்பி - நரகம், நடித்து - கூத்தாடி,
சமதீதம் - ஐக்கம், ஆசு - குற்றம்.

78. விருத்தாப்பியம்சேர விண்ணவனேஅந்தியத்தின்
வருத்தமெனைச்சாடாமுன் வரப்பணித்தல்எக்காலம்?

79. சோடிழந்தபட்சியெனத் துன்புழந்து நொந்து நைந்தேன்
நாடியினிஐயாவின் நாடிருத்தல்எக்காலம்?

80. குரங்காட்டம்ஆடிக் குணமுடையோர்தாம்நகைக்க
அரந்தையுற்றேற்குஐயாநின் அகநெகிழ்வதுஎக்காலம்?

81. ஆடுமட்டும்ஆடி அசைவொழிந்தபம்பரம்போல்
ஈடுகுலைந்தேன்ஐயா எடுத்தணைப்பதுஎக்காலம்?

82. பாக்கியவானென்று பலர்புகழ்ந்தும்ஐயாநிர்ப்
பாக்கியனாம்என்றனக்குன் பார்வைதரல்எக்காலம்?

83. உண்பதுகால்நாழிமன யோசனைபல்லாயிரமாய்ப்
புண்படுநெஞ்சேனைஐயா பொருட்படுத்தல்எக்காலம்?

84. தேகம்வரட்சிகொளத் தேகபலம்தேய்ந்துவர
ஆகநொந்தேற்குஐயாஉன் அருள்பூப்பதுஎக்காலம்?

85. சந்தோஷம் பொன்றிவிடத் தாதுபலங்குன்றிவர
வந்ததுநோய்ஐயாவின் வாழ்வுதவல்எக்காலம்?

86. வாயும்புலர்ந்து மனக்கவலை தான்மிகுந்து
சாயவையாதுஐயா சஞ்சலமறுத்தல்எக்காலம்?

87. நோய்க்குப்பின்நோய் நுழையநொந்துஅழியாதுஎந்தைபரா
தாய்க்குத்தாயாகித் தயைதருவதுஎக்காலம்?

88. ஈச்சிறகுத்தோலிறினும் எய்துகருங்காக்கைகடிந்து
ஓச்சுமுடம்புஐயா போட்டுஓய்ந்திடுவதுஎக்காலம்?

89. பிறப்புமிறப்பும்இலாப் பெம்மானேஇவ்வுடம்பை
அறச்சுமந்துநொந்தேனை ஆறவிடல்எக்காலம்?

90. செட்டைகழற்றும் சிறுபுயங்கம் போல்யான்என்
சட்டகம்போட்டுன் சநிதிசார்வதுஅப்பா எக்காலம்?

91. நரைதிரைமூப்பால்வருந்தும் நாயேற்குஎன்அம்மானே
விரைவிலூற்றுக்கை கொடுத்து வீடருள்வதுஎக்காலம்?

---

புயங்கம் - பாம்பு, சட்டகம் - உடம்பு, அம்மான் - பிதா.

92. பஞ்சடைந்துகண்கள் பதந்தளர்ந்துசோர்வேற்குன்
கஞ்சவடிதந்தென்ஐயா கடைத்தேற்றல்எக்காலம்?

93. கன்னமடைத்துக் கடைவாயின்நீரிழந்து
சின்னப்படாமல்அப்பா சிறப்புறுத்தல்எக்காலம்?

94. ஈழையிருக்க இருமல்முந்தஐயாகண்
பீளைவழியாமுன்இந்தப் பிறவிவிடல்எக்காலம்?

95. வாதமதுமீறி மலசலங்களுறியெந்தாய்
காதமதுசென்முனெற்குன் கதிகாட்டல்எக்காலம்?

96. கலப்பற்றுஅடித்தமரக் கலமெனவேநோயிலுடைந்து
அலக்கண்படாமல்ஐயா ஆதரிப்பதுஎக்காலம்?

97. செல்வப்பிணியொறுக்கச் செத்தார்பெயர்கேட்டு
வல்லபராவுட்கும்என்முன் வந்தாற்றல்எக்காலம்?

98. ஆடுகயிறுஅத்தா அறுந்து விழும்பாவையெனக்
கூடுயிர்ப்புக்குன்றுமுனம் கூப்பிடுவதுஎக்காலம்?

99. அன்பதுஅறியேன் அறமறியேனாய்உண்முதிர்ந்து
என்புலர்வேனப்பா இடர்தவிர்தல்எக்காலம்?

100. வறுமையுடன்நோய்கள் வழக்காடிச்சாடமுனம்
அறநிதிநீ என்முன்நடந்து அஞ்சல்என்பது எக்காலம்?

101. வீதிக்குவீதிசென்றுவெள்ளிடையிற்பள்ளிகொள்ளாது
ஆதிக்கநாதிஎன்மேல் அனுதபிப்பதுஎக்காலம்?

102. குழந்தையெனத்தவழ்ந்து கோலெடுத்துக்கீழ்ந்ன்றி
அலைந்து திரியாமல்அப்பா அரவணைத்தல்எக்காலம்?

103. பெண்கள்அருகிருந்துஎன் பிள்ளைகள்தாம்சூழ்ந்தழுதுஎன்
கண்டதியாதுஎந்தாய்நீ கடைக்கணித்தல்எக்காலம்?

104. பாயிற்புரண்டுருண்டு பல்லுரைகள் வாயில் விண்டு
ஈயில்இறக்காதுபரா இதம்பெறுவதுஎக்காலம்?

105. குரூரப்பிணியாற் கொடுவெயிலில் சாபுழுப்போல்
உருவழியாது என்னைஅத்தா ஓம்பிடுவதுஎக்காலம்?

106. ஆருமின்றிப் பேருமின்றி அப்பாயான்அந்தரித்துச்
சோராமல்நீயென் துயரறுப்பதுஎக்காலம்?

---

அலக்கண் - துன்பம், அரவணைத்தல் - ஆதரித்தல்.

107. உண்டிதின்றுஇல்லாமல் ஒட்டியுலர்வேளைஐயா
கண்டிலையோபின்னைக் கருணைதரல் எக்காலம்?

108. பக்கமதில்வந்தார் பயந்துகெடிமண்டவெகு
விக்கல்எடுக்காமல்ஐயா விண்ணிருத்தல்எக்காலம்?

109. பாடெல்லாம்பட்டுன் பதுமபதம் காணாமல்
வாடினேற்குஐயாவிண் வழிதிறத்தல்எக்காலம்?

110. உன்னருள்இல்லாதுஅமலா உலகஅடவிகடக்க
என்னான்முடியுமோநீ ஏண்உதவல்எக்காலம்?

111. தாகம்பெருகத் தனித்தாலுதான்வளரச்
சோகமுறாதுஐயாஎன் துன்பறுப்பதுஎக்காலம்?

112. கண்டமடைத்துக் கருவிகுலைந்தென்றுஏக
பண்டமுடையாமுன்அப்பா பண்படுத்தல்எக்காலம்?

113. மரணமதாம்பள்ளமதோ வந்துகிட்டிவிட்ட ஐயா
சரணமதுதந்தேனைநீ சாக்காட்டல்எக்காலம்?

114. பாயிடைப்பன்னாளாய்ப் படுத்துஉடலம் புண்ணெடுத்து
நாயிற்சாவாமல்ஐயா நன்கழைப்பதுஎக்காலம்?

115. ஊதுந்துருத்தியதன் உள்ளிருக்கும்காற்றெனமூச்சு
ஊதிவருத்தாமுன்அத்தா ஒப்படைப்பதுஎக்காலம்?

116. தூதர்இருபாலும் துணைவரநீகட்டளையிட்டு
ஆதிபராநின்சமுகம் ஆக்கிடுதல்எக்காலம்?

117. உன்சமுகமென்சமுகம் ஒருசமுகமாக அழைத்து
என்பரனே எற்குமுத்தி ஈந்திடுவதுஎக்காலம்?

118. சித்தங்கலங்கிவரச் சேற்பனந்தான் முந்தாமுன்
இத்தரையின் பந்தமறுத்து ஏற்பதுஐயாஎக்காலம்?

119. வீடுபோவென்ன வெறும் வெங்காடு வாவெனவே
நாடுகின்றதுஐயாநீ நாடிவரல் எக்காலம்?

120. வயித்தியரும் கைவிட்டார் மரணமதன் வீறதனைச்
சயித்தெழுந்துஎன் சாலோகம்தந்தருள் வைஇக்காலம்?

முத்திநாட்டம்
முற்றிற்று.

---

பதுமம் - தாமரை, அடவி - காடு, ஏண் - வலி.

## 25 3வது அடிமைகொள்ள வேண்டல்

### ஆசிரியவிருத்தம்

(இராகம்: ஆகரி)

1 வித்தகஞான மெய்ப்பரப் பொருளே
விமலனே வேண்டுநர் புனித
சித்தம்ஆசனமாய்த் திகழ வீற்றிருக்கும்
தெய்வமே சிறியனேன் தியங்கிப்
பித்தர்போற் பிதற்றிப் பேச்சது பிழைத்துப்
பிரக்கினை கெடாமுனம் பெட்பாய்
இத்தலம் வருவாய் அடிமைகொண்டு அருள்வாய்
ஏகனே யேசு நாயகனே.

2 ஐம்புலன் கலங்கக் கண்கள் பஞ்சடைய
ஆர்ந்திடு சிரவணம் அடைக்கப்
பம்பரநிகராய் மனம்பதை பதைப்பப்
பற்றெலாம் பரம்தனிற் பதித்து
நம்பனே நினையென் ஆதனாய்க் கொண்டேன்
நானிலத் தவர்நயந் தேத்த
இம்பர்வந்து என்னை அடிமைகொண்டு அருள்வை
இணையிலா யேசு நாயகனே.

3 தாமரைக் கண்ணுஞ் சந்திரோ தயம்போற்
தயங்கிடு வதன சுந்தரமும்
காமர்செங் கரமுங் கருதலர் உறுத்தும்
காயமோர் ஐரைந்தினாற் கவினும்
வாமமார் உருபய திருவடி வனப்பும்
மற்றுள மாமைசால் உறுப்பும்
நேமமாய்க் காட்டி நேயமுற்றாள்வை
நிருபனே யேசு நாயகனே.

---

சிரவணம் - காது, காமர் - அழகு,
கருதலர் - பகைவர், மாமை - அழகு.

4 அருந்தவத் தொண்டர் அகங்குது குலிக்க
அனைந்த நல்வரம் அவர்க்கு அளித்தும்
திருந்தலன் என்றுன் அகந்தனில் தெளிந்தோ
திரும்பியெற் பார்த்திலாய் தீயேன்
வருந்தினேன் அருண சந்நிதி வாய்ந்த
வனசநேர் மனமுகமலர்ந்து
பரிந்தெனை ஆட்கொள் பத்தருண் அமுதே
பகவனே யேசு நாயகனே.

5 பாடியுட் குழையாப் பவத்தருண் மகிழப்
பரிந்துபல் வரப்பிர சாதம்
தேடிமுன் கொடுத்த தியாகிநீ அலவோ
சிரமது விறைக்க ராத்தி வாவாய்
நேடினேன் எனினும் நின்முகம் தாராய்
நீதியோ நிமிடம் இங்கதனில்
ஓடிவந்தெனை ஆட்கொண்டிடாய் உலகுக்கு
ஒருவனே யேசு நாயகனே.

6. அந்தகன் ஒருவனை அவெற்கிரங்கென்று
அரற்றநின் றவற்கருள் சுரந்து
மைந்தநற் பார்வை வழங்கினன் என்றாய்
மாயமாம் இப்பிரபஞ்சம்
சிந்தியென் அறிவைத் திருக்கெழப் புரட்டித்
திரித்ததுன் ஞானமாம் திருட்டி
தந்தெனை ஆட்கொள் தருமபூ பதியே
சாமியே யேசு நாயகனே.

7. முப்புரம் எரித்தும் தொண்டரோர் மூவர்
முடிவுறாது அளித்தருள் முதிர்ந்த
அப்பனே எனையாள்? தொடல்அலகை
ஆவியை ஆன்றவர் ஆய்ந்து

---

திருந்தலன் - பகைவன், அருணன் - சூரியன்
நேடுதல் - தேடுதல், திருட்டி - கண்

செப்புமுப் புரங்கள் - தீயுறக் கொளுத்தித்
திமிதிமி எனத் தகித்து அடியேற்
தப்பவைத்து அடிமை கொண்டருள் தருவை
சாமியே யேசு நாயகனே.

8. மாற்றலர் ஒறுக்க வருந்துதொண் டரைநீள்
வாரிதி வறந்திடப் பணித்துச்
சேற்றிலா வெட்டாந் தரைசெலச் செய்த
தேவனீ யாரிது தெரியார்
காற்றெனச் சுவாசம் உள்வெளி கலக்கக்
கலங்கினேன் இறப்பெனக் கழறும்
ஆற்றிடை அலையத் தனிவிடாது ஆட்கொள்
ஐயனே யேசு நாயகனே.

9. அழுந்து எம்பாவப் பதகருக்கு அருளாம்
அவுடதம் அளித்தவர்ப் புரந்தாய்
உழுந்துருள் பொழுதும் உனைப்பிரிந்து உறைய
உளமிலா அடியனை உறுத்தும்
செழுந்துயர் அகற்றச் சித்தநிற் குறாதோ
தெய்வமே தேம்பிவா டாமுன்
எழுந்துநல் அமரர் ஏத்தவந்து ஆட்கொள்
இராசனே யேசு நாயகனே.

10. தொண்டர்தம் இதயம் தொண்டுகொண்டு அருளும்
தூய! விண் மண்டலம் துளைக்கும்
விண்டிலன் றொருநல் வித்தகன் வியக்க
மேவினாய் விழிக்கிலக்குஆனாய்
சண்டவெம் பவஞ்செய் சண்டியென்று எனக்கோ
சமுகம் ஈந்திலை இது சரியோ
அண்டினேன் அழுதேன் அனுமைவந்து ஆட்கொள்
ஆதியே யேசு நாயகனே.

11. பாதிராத்திரியிற் பத்திமைத்தீபம்
படைத்து உனைப்பாடு பத்தர்கள்தம்
வேதனைவிலக்க அவரைவிட்டுஅடைத்த
வெஞ்சிறைக்களமதால்மீட்டாய்
ஈதுபோல் அடியன் இடர்ப்படுலோக
இழிவதாம் சிறையெடுத்து ஆட்கொண்டு
ஆதியாம்பதவி தந்தருள்அளிப்பை
ஐயனே யேசு நாயகனே.

12. பத்தருள் வாஞ்சைப் படும் திரு மருந்தே
பாவலர் பாடு நன்மருந்தே
கத்துவார் கடல்சூழ் காசினி மருந்தே
கண்டகர் கண்டிடா மருந்தே
வித்தக மறையின் விழுப்பொருள் மருந்தே
விண்ணவர் வியந்திடு மருந்தே
அத்தனே இந்த வமயமென் மருந்தாய்
ஆண்டருள் யேசு நாயகனே.

13 நாளையே பொன்போல்நற் பழம்பழுக்கும்
நாளெனா நாடொறும் இலவை
ஏழைஅஞ் சுகங்கள் காத்தென விகமாம்
இலவுகாத்து உளமகிழ்ந்து இருந்தேன்
பூளையாய்அதுவும் பொம்மென வெடித்துப்
போதல்நிச்சயமதால் புகறந்
தாளதாய்என்னை அடிமை கொண்டருள்வை
அநகனே யேசு நாயகனே.

14 உம்பல் ஆதியதா உறவிகள் ஈறாம்
உயிர்த்தொகை ஒருங்குமுன் கருணைக்
கொம்பர்சேர் கொடியாய்க் குலவிடப் பாவி
கொடியனேன் மாத்திரம் குலைய

---

கண்டகர் - துட்டர், அஞ்சுகம் - கிளி, பூளை - பஞ்சு,
உம்பல் - யானை. உறவி - எறும்பு.

இம்பர் விட்டனையோ வேளையேன் உரைகள்
ஏறிடாவோ நின்அம் பலத்தில்
நம்பினேன் சபதி நடந்தெனை ஆட்கொள்
நாதனே யேசு நாயகனே.

15 அல்கலில் அருள்பெற்று ஆநந்த நிர்த்தம்
ஆடிடார் அருந்தவம் ஆற்றார்
எல்லையில் பவத்தர் ஆயினும் இரங்கி
இன்ப பஞ்சமகதி ஈந்தாய்
எள்ளிலும் சிறிதென்று இயம்பு பங்குரிமை
எனினும் நின்னிடம் எனக்கிலதோ
வள்ளலே விரைந்து வந்தெனை ஆட்கொள்
மகிபனே யேசு நாயகனே.

16 பிள்ளைமைத் தன்மை இன்னமும் பெயராப்
பேதையேன் அசேதனம் பிடித்த
உள்ளமீதுனை ஆவாகியேன் உறுத்தேன்
யோகமுற்று அருந்தவம் உயற்றேன்
அள்ளலுக்கு உரியன் ஆயினேன்எனினும்
அன்பொரு வடிவமாய் அமர்ந்தாய்
பள்ளநீர் போலப் பறந்துவந்து ஆட்கொள்
பகவனே யேசு நாயகனே.

17 முன் நினைப் பகைத்துன் தொண்டரை முனிந்து
முடிமனர் முன்னர் விட்டுலைத்து
வன்னிபோற் கொதித்து வருத்தினோன் வாழ்த்தி
வணங்கிடப் பிரசன்னம் ஆனாய்
சின்னவன் தீம்பன் இவனெனச் செறுத்தோ
திரும்பிநீள் கடைக்கனும் செலுத்தாய்
இன்னினயேனும் இரங்கி வந்துஆட்கொள்
இறைவனே யேசு நாயகனே.

---

சபதி - விரைவு, பஞ்சமகதி - மோக்கம்,
ஆவாகித்தல் - தாபித்தல்.

18 மைந்தன் அருயிர்வான் மறையமார்பு அறைந்து
மாழ்க அமங்கலி மனமகிழச்
சிந்தைநைந்து உருகிப் பாடையைத் தீண்டச்
சிறுவன் உய்ந்திட அருள்செய்தாய்
வந்தனை புரியும் பாவியேன் வாளா
மாய்ந்திட விடுவையோ வல்லே
இந்தநற்கணம் வந்திரங்கி ஆட்கொள்வை
ஈசனே யேசு நாயகனே.

19 ஏழையேன் தன்மேல் இரக்க நிற்கிலதோ
யானிடுமோலம் நின்னிரண்டு
கேள்விவாய் வீழ்ந்தது இல்லையோ கெட்டாற்
கிளையிலும் கேண்மை இன்றென்பர்
ஆள்வையோ ஐயா ழுதுரை ஈதை
அன்றெனில் அயர்ந்து வீழ்ந்த
வேளைவந்து அடிமை கொண்டு வீடு அருள்வை
வேதனே யேசு நாயகனே.

20 துதியது செயாநா என்றனாத் துதிக்குத்
தொழாதகை என்கை நிற்றொழற்குன்
பதிதனக்கே காப்பாதம் என்பாதம்
பத்திமை பழாத நெஞ்சு என்னெஞ்சு
இதுபெரும்புதினம் என்பையோ உலகில்
என்னிலும் எத்துணைத் தீயோர்
அதிசயத் தொண்டர் ஆயினார் எனையும்
அடிமைகொள் யேசு நாயகனே.

21 சொர்க்கம் ஏறிடுமோர் விருத்தை உள்துணிந்து
தூக்கியோர் இராட்டினச் சுமையைக்
கக்கமிட்டு இடுக்கிக் கடுகினாள் என்ற
காதைபோல் காசினி பயந்த

---

அமங்கலி - கைம்பெண், விருத்தை - கிழவி.

சிக்கெலாம் சிரமேற் சுமந்துநீள் சிவத்தைச்
சேர்வனோ இவையறத்து ஏய்த்து
இக்கணம் எழுந்தேன் என்னைவந்து ஆட்கொள்
ஈசுரா யேசு நாயகனே.

22 எங்கனும் வியாபித்து ஏழைபங்காளன்
எனும்அபிதானனாய் இலங்கித்
துங்க வேதாந்தத் தொகையதாய்ச் சருப்பம்
துடித்திடச் சுடிகையைத் துவைத்த
கொங்குசேர் வனசபா ஆதனே கூளிக்
குலவலி தடுத்தடுங் கொற்றச்
சிங்கமே அடிமை கொண்டெனைத் திதிப்பை
தேவனே யேசு நாயகனே.

23 கண்ணிணை காக்கும் இமையது கடுப்பக்
காலமெல்லாம் எனைக்காத்த
அண்ணல்நீ ஆபத்து அடைந்திடும் அமயம்
அகல நின்றிடுதல் அன்பாமோ
தெண்ணிலா உலவும் வானுலாந் தேவர்
திருக்கரம் குவித்துடன் சேர
அண்ணிவந்து அடிமைகொண்டருள் தருவை
அதுலனே யேசு நாயகனே.

24 புராதனா புனிதா பூரணா பொல்லாப்
பொத்தறாத்து இருக்கினர் உளத்தில்
இராதவா வீறில் சச்சிதா னந்தா
என்னகத்து இருப்பதி இதனைப்
பராதினப் படுத்தாது உன்வசம் படைத்துப்
பதமலர் பணிந்து வந்தித்தேன்
துராதனா என்னைத் துரத்திடாது ஆட்கொள்
தூயனே யேசு நாயகனே.

---

சிவம் - மோக்கம், சுடிகை - உச்சி.
கொங்கு - வாசம், ஆதன் - அறிவிலான்.

25 தேளது கொட்டத் திகைத்து வீண்சேட்டை
செயும் சிறு குரங்கெனச் செகத்தின்
வாழ்வது கொட்ட மமதையுள் வளர
வாலறிவு என்பது மழுங்கக்
கேளெனப் பெருமை கிளைக்க அஞ்ஞானக்
கிருத்திம உளையினுட் கிடந்து
கூளம்ஒத்தழுகிக் குணங்கெடாது ஆட்கொள்
கோமகா யேசு நாயகனே.

26 மறந்தவா மண்ணோர் வன்பவம் திரண்டு
மகிதலம் அதனில் என்வடிவம்
பிறந்ததோ அறியேன் பெரியரைத் துதியேன்
பீடதா நடையிலேன் அமுதம்
கறந்திடாக் கல்லா வறந்தவான் கயம்போற்
கயவன் யானாயினுங் கழித்து
மறந்திடாய் வருவாய் அடிமைகொண்டு அருள்வாய்
மாறிலாய் யேசு நாயகனே.

27 தரையதன் கன்ம பவமெலாம் தலைமேற்
தாங்கிய சாமியே சயம்பே
வரையிலே தாசர் மகிழ்ந்துஅதிசயிக்க
மாற்றுருக் கொண்டவா மறைகள்
உரைசெயும் சோதி வடிவமே உருகி
ஓலமிட்டவர் தமக்கு ஊற்றே
கரையிலாக் கடலாழ் பவர்க்குறு கலம்போற்
கடுகியாள் யேசு நாயகனே.

28 உரைமிகத் தளம்ப ரோமமெய் சிலிர்க்க
ஒண்கணீர் ததும்பிநின்று தீர்ந்து
வரையில்வீழ் அருவிபோல் உரம்வார
வாய்மறை மணந்தரத் திவ்ய

---

கிருத்திமம் - பொய், வஞ்சனை, அமுதம் - பால்,
கல்லா - கற்பசு, ஊற்று - ஊன்றுகோல்

சரிதமே படிக்கும் தாகமேற் படநின்
    தாள்தொழாப் பதக நின்சநிதிக்கு
உரியனன் எனினும் வட்டிடாது ஆட்கொள்
    ஒழிவிலா யேசு நாயகனே.

29 பேய்கள் வைத்தாண்ட குடியலேன் பெரியோர்
    பேசுநின் பெருமை வைத்தாண்ட
நாயடியேன் நின்நற்குடி யானேன்
    நரர்க்கு அடியான் அலேன் நட்பார்
தாய்தனுள் அன்பும் தயவு தண்ணளியும்
    சார்ந்துளோய் தயங்கியென்ஆன்மா
ஓயுமிச்சமயம் ஓடிவந்து ஆட்கொள்
    உத்தமா யேசு நாயகனே.

30 குருடன்முன் தீபம்கொளுத்திலென் தணித்தென்
    குளிறுவெண் சங்கமும் குமிறும்
முருடு மொத்திரைந்து முழங்கிநல் வெதிரன்
    முகமுனம் உரப்பில் என்னதுபோல்
அருள்தரு என்றன் அருமைவார்த்தைகளுக்கு
    அசைந்திடா அசடனென்று உருத்தார்த்து
இருள் தொகு பவர்க்கமெனை விடாது ஆட்கொள்
    ஏகனே யேசு நாயகனே.

31 கரும்பொனைச் செம்பொன் ஆக்கினும் கல்லாக்
    கயவரைச் செய்தவர்தம்
இரும்பு நெஞ்சத்தை இளக்கலோ அரிதால்
    எத்துணை இதோப தேசங்கள்
விரும்பிட வறைந்தும் விலங்கல் பட்டுஒழிந்து
    வீழ்மர ஆணிபோல் வீழ்ந்த
துரும்பன் என்றென்னைத் துறப்பையோ ஆட்கொள்
    தூயனே யேசு நாயகனே.

---

முருடு - ஒரு வாச்சியம், வாத்தியம், விலங்கல் - மலை.

32 ஆசைகள் அடங்கி அலரிமுன் கிமம்போல்
அருக உள்ளன்பது பெருகப்
பூசைசெய்து இதயமொரு வழிப்புகுத்திப்
புராதன மறைமொழி பொழிந்து
நேசமுற்று ஏத்தி நின்பதம் தாழா
நீசன்மற்று இவனென நினைந்து
சீசியென்று எள்ளிச் செறுத்திடாது ஆட்கொள்
செம்மலே யேசு நாயகனே.

33 உருமம்ஒண் காலை மாலையென்று உலகம்
ஓதுமுக் காலமும் உன்னை
அருமையும் அன்பும் பெருகவென் அகமாம்
ஆசனம் வதிந்திட அமைத்துக்
கிரமமாய்த் துதித்துத் தோத்திரம் கிளத்தாக்
கீழ்மையன் கேடன் என்று எள்ளாய்
உரிமையாம் உழுவல்தந்து எனைஆட்கொள்
ஒப்பிலா யேசு நாயகனே.

34 பத்தியைப் பூதிபோல் பொடிபடுத்திப்
படிவம் அதடங்கலும் பரவும்
உத்தியோகத்தை ஒழுக்கமாய்க் கொண்டுன்
ஓதரு நாமம் உச்சரித்து
அத்தியந் தம்மாய் அஞ்சலி செய்யா
அசடன் யானாயினும் படும்ஆ
பத்தில்அந்தரித்துப் பதைத்திடாதுஆட்கொள்
பரமனே யேசு நாயகனே.

35 கிஞ்சுகச் செவ்வாய்ச் செஞ்சொலார் கிளையும்
கிளைஞரு மக்களும் கேண்மை
விஞ்சுவார் பிறரும் துணையெனல் வியர்த்தம்
விழலென அகமதால் விடுத்தேன்

---

அலரி - சூரியன், உருமம் - மத்தியானம்,
இமம் - பனி, உழுவல் - தொடர்ந்த அன்பு.

குஞ்சரம் சுமக்கக் குடைநிழற் குலவும்
கொற்றவர் தஞ்சமுங் கோதே
அஞ்சலி அத்தனா உனையடைந்தேன்
ஆட்கொளென் யேசு நாயகனே.

36 பாழி னீரிறைத்த பாவியிற் பழுதாம்
பாவியேன் பழைமையாய் வழங்கும்
ஊழை மெய்யென்ன உன்னினபோல
உளமெலாம்உலகதுக்கு இறைத்தேன்
கேளையோ கெட்டேன் என்பிழை கண்டேன்
கெழுமு சந்தாபமும் கொண்டேன்
ஏழைபங்காளா என்னையாட் கொள்வை
ஈறிலா யேசு நாயகனே.

37 அம்பிகள் இரண்டிற் பங்கதாய் அடியிட்டு
ஆழிவாய் அமிழ்ந்த வஞ்ஞையைப் போல்
இம்பரோடும் பர்மிசை மனசு இருத்தி
ஈடழிந்து இறுவனோ என்றும்
நம்பினேன் நீயே கதியென நாடி
கொம்புலாங் கொடிபோற் குறுகினேன் எனையாட்
கொண்டருள் யேசு நாயகனே.

38 பிறவியாந் தரங்கப் பெருங்கடல் வீழ்ந்து
பீழையுற்று அயர்ந்தயான் பிழைக்க
அறமதாம் தெப்பம் ஏறினேன் அதன்றன்
அடியதில் இல்லிகண்டு அயர்ந்து
சுறவதாம் பிசாசம் துடுக்கதாய்த் தூக்கிச்
சுருட்டிவாய் மடுக்குமுன் தூய
அறிவுகொண்டு உன்பால் அடைந்துளேன் எனையாண்டு
அடிமைகொள் யேசு நாயகனே.

---

குஞ்சரம் - யானை, சந்தாபம் - மனக்கவலை,
அம்பி- தோணி, தரங்கம் - திரை.

39 தாசர்தம் இதயத் தாமரை நடந்த
தாளவிண் வாசர் கள்ததைந்து
ஈசமா ராச ராசஎன்று ஏத்தி
இறைஞ்சிடும் ஈறிலா இறையே
பூசனை புரிந்துன் துதியெலாம் புகன்று
பொற்பதம் சிரந்தனிற் புனைந்தேன்
ஆசையுற்று எனையாண்டு அடிமைகொண்டு அருள்வை
அத்தனே யேசு நாயகனே.

40 வறுத்த வித்ததுபோல் வளந்தராப் பாவி
மாந்தர் அஞ்சிடு வச்சநாபி
அறத்தெணங் குதிகொண்டு அம்பரம் தாவி
அமலனாம் என்னில் நல்லாவி
நிறுத்திடான் சித்த நிறையிலான் மெய்ம்மை
நெறிநிலான் இவன்என நெஞ்சிற்கு
அறுத்திடாய் கையாளாக்கி யெற்காப்பை
கர்த்தனே யேசு நாயகனே.

41 கன்னலை எறிந்து கற்கறித் தழுங்குங்
கற்றறி மூடனோர் கதிக்காம்
வன்ன போதகம் என்னுளத்தில் நீவைத்தும்
மயல்மொழி கொண்டவை மறந்தேன்
என்னவே பச்சாத் தாபமாய் எரிமுன்
இளகுசெம் மெழுகென வினைந்தேன்
அன்னைபோல் ஏந்தி அடிமைகொண்டு அருள்வை
ஆதியே யேசு நாயகனே.

42 புத்துருக்கிடுநெய் புனித பாளிதம் தேன்
பொருவில் ஞானோதயப் பொருளே
சித்துருக் கிடுமெய்ச் சீடருக்கு எளிய
தெய்வமே தேசிகர் சிரமே

---

தததைந்து - கூடி, பாளிதம் - பாற்சோறு,
சித்து - ஞானம்.

பத்தருள் சின்னஞ் சிறியவன் பதகர்ப்
பதரெனப் பராமுகம் பண்ணாய்
முத்தி தந்திடற்கு முந்திஆட் கொள்வை
முன்னவா யேசு நாயகனே.

43 புல்நுனிப் பனியைப் பொருவுபொன் உடம்பைப்
பொருளெனச் சந்ததம் புரந்தேன்
தன்னியன் அல்லேன் தயவிலே இந்தத்
தரணியில் என்னை யோசனித்தேன்
மன்னியாய் வகுத்திச் சுவப்பிரம் வழங்கி
வாதனை தருவையோ தன்னைத்
தன்வினை அல்லாற் சுடாதுஎனைத் தடுத்தாள்
சாமியே யேசு நாயகனே.

44 கைதவம் கலந்த பிரபஞ்ச மாயக்
கானெலாம் கழிபெரும் காலம்
பைதலுற்று ஐந்து கள்வர்சொற்படிக்குப்
பதம்வருந்திடப் படர்ந்து உலைந்தேன்
வைதிகன் அல்லேன் எனினும் நீ வைத்த
வான்குடியானலோ வானோர்
ஐதற நெருங்கி அயல்புடை வரவந்து
அடிமை கொள் யேசு நாயகனே.

45 ஊமையர் செவிடர் ஊனர்பல் பிணியர்
உளத்திடை வேட்டன கொடுத்த
சாமிநீ அலவோ தமியனேன் ஓலம்
சார்ந்தது இன்றோ கனந் தமக்கு
ஆமை ஐந்துறுப்பு அடங்கல்போல் யானும்
ஐம்புலன்ஒடுங்கிட அடங்கிச்
சாமிது தருணம் அடிமைகொண்டு அருள்வாய்
சகேந்திரா யேசு நாயகனே.

அடிமைகொள்ளவேண்டல்
முற்றிற்று.

---

சுவப்பிரம் - நரகம், கைதவம் - வஞ்சனை, பைதல் - துன்பம்.

## ஆசிரியவிருத்தம்

### (இசை தேவாரம்)

ஆதியாய் அந்தமாகி அருமறைக் கொழுந்தாய் ஆர்ந்த
சோதியாய்த் துலங்கி நின்றாய் தொல்லைதந்து அந்த்யகால
வாதைநாய் அடியன்வாட வருத்தல்காண் கிலையோ வான்
தூதர்தம் கணத்தையேவித் துணைசெய்வை யேசுநாதா. 1

பந்திக்கும் சமயபேதப் பாழ்ங்குழி வீழ்ந்தாழ்ந்தோரைச்
சொந்தமாய்த் தடுத்தாட் கொண்ட சுந்தரா அந்த்யகாலம்
வந்ததாற் பிராணன்வாடி மறிந்தங்கோ இங்கோ என்று
நொந்தியான் வருந்தமுன்ஓர் நொடியில்வா யேசுநாதா. 2

வந்திப்பார் தோஷம்போக்கி வாஞ்சைகொண்டு அவர்க்குமாறில்
எந்தநல் வரமும்ஈயும் எம்பரா அந்த்யகாலம்
முந்திற்றால் அதற்காயத்தம் முற்றுவித்து உன்னைமோட்சம்
சந்திக்க வரந்தந் தாளாய் தற்பரா யேசுநாதா. 3

விரிகடற் கொந்தளிப்பும் மேலிடு மருத்தின் ஆர்ப்பும்
ஒருமொழி உரைத்தடக்கும் உத்தமா அந்த்யகாலம்
தருமிடர்க்கு அயர்வேன்கொண்ட சஞ்சலம் அடக்கி மேலாய்
வருதனிப் பதவி தாராய் வள்ளலே யேசுநாதா. 4

சிலைகொண்டு செறுநர் மோதும் சீடன்ஆனந்தித்தாட
அலைவொன்றா மோட்சவாசல் அன்றுநீ திறந்தாயன்றோ
மலைவுற்றேன் அந்த்யகாலம் வந்ததெற்காக இன்னும்
நிலைபெறத் திறக்கவில்லை நீதியோ யேசுநாதா. 5

கல்லென இரங்குசுற்றங் களித்திடக் கழிந்தஆவி
வல்லையில் வரவழைத்தாய் வந்தெற்கு அந்த்யகாலம்
இல்லதோ உளதோவென்னா என்னுயிர் சோராதன்பார்
சொல்லொன்றால் உயிர்ப்பித்தாளாய் சோதியே யேசுநாதா 6

---

மருத்து - காற்று, சிலை - கல்,
செறுநர் - பகைவர், கல் - ஒலிக்குறிப்பு

அருஞ்சிறைக் கூடமேவும் அன்பரை மீட்டற்காகப்
பொருந்தளை முறித்துப் பூட்டும் புதவுகள் திறக்கச்செய்தாய்
தருந்துணை பிறரிற்காணேன் சார்ந்ததெற்கு அந்த்யகாலம்
வருந்துமுன் மீட்டு முத்தி வாசந்தா யேசுநாதா. 7

கோரமார் அங்கிழுட்டிக் கொடியர்முன் இழுத்து வீழ்த்தும்
ஆரியர் தமக்குக் காட்டும் அன்பதில் அரைகாலேனும்
வாரமாய்த் தருதல்தீதோ வந்தஇவ்அந்த்யகால
ஆரழல் போலும்வாதை அகற்றவா யேசுநாதா. 8

பாலறா வாயரான பற்பல சிறுவர் தம்மை
ஏலுநின் கரத்தில்ஏந்தி இயம்பினை முன்னாள் ஆசி
சாலயான் சிறுவனன்றோ தந்திடற்காசியின்றோ
மாலுறுமந்த்யகால வாதைதீர் யேசுநாதா. 9

கல்லைக் கந்தரத்திற் கட்டிக் கயத்தின் கண்ஈந்தி ஆழ்ந்த
புல்லறி வினன்போன் ஞாலப் பொருளதை உளத்திற் பூட்டி
அல்லற்பட்டு ஆழுமென்னை அந்தியகால வாதை
கொல்லுமுன் திருக்கைநீட்டிக் கொடுத்தருள் யேசுநாதா. 10

விளக்கை மென்மலர் என்றுள்ளி வீழ்ந்தொழி விட்டில்போல
அளக்கொணா அலந்தைக் கன்னை யானஇம் மாயலோகச்
சழக்கை நல்விருப்பமென்று சாதித்து மோச மார்க்கம்
வழுக்கினேற்கு அந்த்யகால வாதைதீர் யேசுநாதா. 11

தாயினுக்கு உதவா மைந்தன் தரையினர்க்கு உதவானென்று
பேயரும் உரைப்பர் நிற்குப் பிரீதி தாராத பேயேன்
ஆயநின் தொண்டர்தம்மால் அலட்சியப் பட்டேனேனும்
ஏயுமிவ் அந்த்யகாலத்து இரங்கிவா யேசுநாதா. 12

கன்று தாய்ப்பசுமேல்துள்ளிற் கண்டதீங் கொன்றும்இல்லை
ஒன்று தாய்கன்றில்துள்ளில் உறுந்துயர் உலகமோரும்

---

தளை - விலங்கு, புதவு - கதவு, கோரம் - கொடுமை,
ஆரியர் - அறிவுடையோர், ஆசி - ஆசீர்வாதம், மால் - மயக்கம்,
வாதை - வருத்தம் கந்தரம் - கழுத்து, கயம் - வாவி,
அலந்தை - துன்பம்.

இன்றுநீ எனைமுனிந்தால் ஏனெனக் கேட்பார் யாரோ
நின்றவிவ் அந்த்யகால நேர்ந்துவா யேசுநாதா. 13

ஊசிநீள் முனையின் மேனின்றோ அறத்தவஞ் செய்தாலும்
ஆசினின் கருணையின்றேல் ஆருய்வர் நினதுதஞ்சம்
நேசமுற்று அருளாயானால் நெருங்குமிவ் அந்த்யகாலப்
பூசலை வெல என்செய்வேன் பூரணா யேசுநாதா. 14

ஒருதலை நீர்பார்த்துஈர்க்க ஒருதலை நிலம்பார்த்து ஈர்க்கும்
இருதலைப் பிரவகம்போல் இகபரக் கவலை நெஞ்சம்
திரிதர அங்கிங்கீர்த்துச் சிறுமைசெய் அந்த்யகாலம்
ஒருதலை உள்ளம்வைத்தேன் ஓடிவா யேசுநாதா. 15

தேககூடாரம் போர்த்துச் சிக்கெனச் சிதைத்து விண்மேல்
ஓகையிற்குடி போதற்காய் ஒருவன்யான் பயணப் பட்டேன்
சோகுவந்து எதிர்த்தால் நின்றன் துணைகொடு அங்கதனை வெல்வன்
ஆகுமிவ் அந்த்யகாலத் தருகில்வா யேசுநாதா. 16

காரிருள் கலைய விண்ணிற் கடுகிநின் பணிசெய் தூதர்
நேரிரு பாலும் வந்து நெருங்கிநின் றிடநின் காந்தி
ஆர்தரு வதனக்காட்சி அருள்செய்திவ் அந்த்யகாலச்
சோர்புதீர்த் தென்னைஆள்வை தூயனே யேசுநாதா. 17

சாவஞ்சேன் பிணியுமஞ்சேன் சருப்பனைசெயும் பேயஞ்சேன்
ஆ! வஞ்சப் புலத்தர்க்கு அஞ்சேன் அவாவெனும் மாவுக்கஞ்சேன்
பூவஞ்சேன் பூவோர்க்கு அஞ்சேன் பொன்னடிக்கு அஞ்சம் வீழ்ந்தேன்
ஓ! அந்தியகாலப் போருக்கு ஓடிவா யேசுநாதா. 18

தேச சஞ்சாரஞ்செய்து செனனவூர் திரும்புவார்போல்
நாசலோ கத்தைவிட்டென் நண்பர்வாழ் மோட்சலோக
வாசமேல் வாஞ்சைவைத்தேன் வந்திடு அந்தியகாலத்திற்
தாசனேன் பூசல்தீரத் தருணம்வா யேசுநாதா. 19

---

பிரவகம் - தவளை, சோகு - பசாசு

மலைவெகுண்டு அனுவை மோதின் மற்றது தாங்குமோநற்
சலைகலா ஏழைமேல்நின் கர்த்தத்வம் காட்டுவாயேல்
நிலைதுணை எனக்காருண்டு நீறெழச் சினம்கொளாமற்
கொலைசெயும் அந்த்யகாலக் குறும்புதீர் யேசுநாதா. 20

தித்திக்குந் தேனும்பாகுஞ் செறிந்துந்தன் தீயகந்தம்
எத்திக்கும் பலாண்டுவீசும் என்பரால் சுருதிநூல்சொல்
தத்துவ போதநன்கு சாதித்தும் குணம்வரா உன்
மத்தனென்று எள்ளாய் அந்த்ய வாதைதீர் யேசுநாதா. 21

பிள்ளைதண் மழலைவாக்குப் பெற்றவர்க்கு அமுதமென்ப
உள்ளதென்று அறியாருண்டோ உனக்கியான் இடுபுன்ஓலம்
தெள்ளமுதாக உன்றன் திருக்கனம் சுவையா தோதீக்
கள்ளமார் அந்தியகாலக் கலக்கந்தீர் யேசுநாதா. 22

காயந்தீர் மருந்துசல்ய கரணியது என்றும் மூர்ச்சைக்கு
ஏயுநன் மருந்து சஞ்சீவினி என்றும் இசைத்தார் நூலோர்
நீயெனக்கு இவையாகாயோ நேருமிவ் அந்த்யகாலஞ்
சாயும்போர்த் துணையதாகச் சபதிவா யேசுநாதா. 23

அன்னைகாள் அமுதம் எங்கட்கு அளித்திரு என்றழு மகாருக்கு
இன்னினிப் பார்ப்பமென்னா இயம்பும் அன்னையர்உண்டாமோ
கன்னனேர் கருணையானே கருவமாம் அந்தியகாலம்
என்னைச் சாய்த்திடமுன் வந்தாள் இறைவனே யேசுநாதா. 24

உப்புடன் அப்புப்போல ஒன்றி நல்லுறவு கொள்ளாத்
தப்புளான் எனினும் நின்றன் தயைபெறத் தாகங்கொண்டு
அப்பனே ஓலமிட்டேன் அந்தியகால ஆர்ப்பில்
வெப்புற்று வீழுமுன் வந்தாள் வேதனே யேசுநாதா. 25

இறப்பெனுந் தரங்க உந்தி எழிற்கரை தாண்ட வாஞ்சித்து
இறப்பெரு மலக்கண் கொள்ளவிவ் அந்தியகாலப் போர்ற்
பிறப்பிலாய் மயங்கி நாயேன் பேதுற்று வீழா முன்னர்
உறப்பரிந்து ஓடி வந்தாள் உன்னதா யேசுநாதா. 26

---

குறும்பு - பொல்லாங்கு, பாகு - பால்,
பலாண்டு - உள்ளி, ஈரவெண்காயம், சுருதி - வேதம், மறை,
சபதி - சீக்கரம், ஆர்ப்பு - போர்,
உந்தி - கடல்.

என்னெஞ்சில் நின்னையென்றும் இருத்தினேன் கோவில்கோள்ளை
கன்னம்கால் கரத்தால் நின்றன் கைங்கரியங்கள் செய்தேன்
இன்னும் நிற்காக வேண்டும் எப்பணி விடையும் ஏற்றேன்
வன்னெஞ்சாய் இராயிவ் அந்த்ய மலைவில்வா யேசுநாதா. 27

பாடிலேன் தேவகானம் படித்திலேன் திவ்யகீதம்
ஓடினேன்உலகர் பின் அருளையொரு பொருளாய்ஓரேன்
வாடினேன் மோதி நீத்தம் வந்தபின் அணை கோல்வார்போற்
தேடினேன் அந்த்யகாலந் திருப்பிப்பார் யேசுநாதா. 28

தன்னை எண்ணாது விட்டுத் தசமருள் ஒருவற் காணேன்
என்னவுள் திகைத்தாற் கொப்பாய் இப்பிரபஞ்ச மாயை
தன்னுளே சிக்கி என்னைத் தானெணா நீசனிற்கோர்
அன்னியன் எனினும் அந்த்யத்து அருள்செய்வாய் யேசுநாதா. 29

அம்பரத்தவர் இப்பூவோர் அறியொணா அகண்டா சொந்தக்
கம்பம்விட்டு அகலுமத்த கரியென நினைக்கை விட்டுக்
கும்பிக்கு ஆளாகி உள்ளங் குலைகுலைந்து உருகுவேனோ
இம்பரிவ் அந்த்யகாலத்து என்னையாள் யேசுநாதா. 30

அள்ளிநின்று அருந்தத் தாராய் ஆயினும் ஒறுத்தோர் அற்ப
துள்ளியாங் கருணையேனுஞ் சுதந்தர மாக நாயேன்
கொள்ளுதற்கு அருளாய் கொல்லோ கொடியவிவ் அந்த்யகால
தள்ளுதற்கி யாதுசெய்வேன் தயைபுரி யேசுநாதா. 31

நடுக்கடல் நதிவாய்ச் சென்றும் நக்கியுண் ஞமலி நேர்நின்று
அடுக்கருங் கருணை வாரித்து அடங்கரை சார்ந்திருந்துங்
குடக்கையின் அளவதேனுங் கொண்டுணாது உணங்குவேனோ
விடுத்திடாது அந்த்யகால வேதைதீர் யேசுநாதா. 32

கடைதறி அன்பாற்பட்டுக் கலங்குவெண் தயிர்போல் நாயேன்
புடவிதன் ஆசைமத்தாற் புடைப்புற்றும் அலக்கங்கொண்டேன்
கடவுள் நீயிதை நின்கண்ணாற் காண்டிலையோ என்னெஞ்சம்
உடைபடாது அந்த்யயுத்தத் தோடிவா யேசுநாதா. 33

---

கைங்கரியம் - தொண்டு, கானம் - பாட்டு,
தசமர் - பத்துப் பேர், அம்பரத்தவர் - வானோர்
ஞமலி - நாய், வாரி - சமுத்திரம், உணங்கல் - வருந்தல்.

தத்திப்பாய் சடிலம்பூட்டும் தடம் கடிவாளம்தங்காது
எத்திக்கும் தாவல்போல்என் இதயமங்கு இங்குமேவிச்
சித்திக்குப் புறம்பாய்த் தீவாய்ச் சென்றிட விடுவையோ வா
பத்தைத் தீர்த்து அந்த்யகாலப் பகையுந்தீர் யேசுநாதா. 34

பஞ்சிவண் பொதியைத் தாங்கிப் படுகருட் படுத்த ருரி
சஞ்சலம் அடுத்தெழும்புந் தன்மையொத்து இயானிப்பூவின்
வஞ்சகப் பொருள் நற்பாரம் வருத்த உள்ளயர்ந்துன் திவ்ய
செஞ்சரண் அடைந்தேன் அந்த்யச் செருவிலாள் யேசுநாதா. 35

குற்றமும் குணனும் பாரான் கொடுத்தபுல் அசனமேற்று
உற்றதன் பசிக்காவுண்ணும் ஒருவன்போல்உள்ளபாவம்
இற்றுமற்று அற்றதென்னாது எவற்றையும் சுகித்தேனென்று
சற்றெனும் நினையாதுஅந்த்யச் சமரம்பார் யேசுநாதா. 36

காந்தபூதரத்தின் சத்திற் கவர்படும் எஃகுபோலப்
போந்திடு புவனபோகப் பொருட்கள் சேட்டிக்க நின்றேன்
பாய்ந்தவேல் புண்ணிலங்கி பட்டது நிகராம் வாதை
ஏய்ந்தவிவ் அந்த்யபூசற்கு என்முன்வா யேசுநாதா. 37

கனவிற்காண் கோட்டைபோலும் காசினிவாழ்வு செல்வம்
எனவிட்டு ஏனவைக்கும் எற்கும் இனியுறவேதும் உண்டோ
மனசுக்கே நினதுபாதம் வழிபடு வாஞ்சைமுற்றித்
தினமுற்றேன் அந்த்யகாலச் செருவிற்கா யேசுநாதா. 38

பேயிருந்து ஆடும்வீடென் பேதக மனசு என்றாலும்
நாயனே நினக்கென்றத்தை நல்கினேனை வேதித்தேன்
பாயலும் தனியுமன்றிப் பரிசனர் சமூகம் வேண்டேன்
சேயென நினைந்திவ் அந்த்யச் செல்லல் தீர் யேசுநாதா. 39

---

சடிலம் - குதிரை, சித்தி - மோட்சம், படுகர் - கிடங்கு,
ருரி - எருமை, அசனம் - போசனம்,
பூதரம் - மலை, எஃகு - உருக்கு, சேட்டிக்க - இயக்க
செரு - போர், கா - காத்துக் கொள்வாய்
பாயல் - படுக்கை, செல்லல் - துன்பம்.

வாடிய பயிர்மேற் பெய்த மழையில் நின்கருணை கண்டேன்
தேடிய பூடுகையிற் சிக்கினால் எனநிற் கொண்டேன்
சூடினேன் சிரத்தில் நின்றன் சுந்தர உபயபாதம்
ஈடினி எனக்காருண்டோர் இணையிலா யேசுநாதா. 40

அந்தியகாலப் போராட்டம்
முற்றிற்று.

## 5வது சாலோகப் பிரவேசம்.

### ஆசிரியவிருத்தம்

1 பூலோக வாழ்வொழிந்து போகக்கண்டேன்
பூவையர்தம் சௌந்தரியம் பூவாய்க் கண்டேன்
மாலார் மண்ணுரிமை குடிவாங்கக் கண்டேன்
மல்குசுற்றம் யாத்திரிகர் மடமாய்க் கண்டேன்
காலமது தூமம்போற் கழியக் கண்டேன்
கடைக்கணித்து ஆண்டிடக் கருணை கண்டேன்நின்பாத
சாலவினித் தாமதந்தான் தராது மேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

2 சூரியன்கீழ் உள்ளவெலாம் தொலையக் கண்டேன்
சுந்தரமாய்த் தோன்றியவை துகளாய்க் கண்டேன்
வாரியன்ன திரவியம் கைமாறக் கண்டேன்
மன்னவரும் முடியிழந்து மாயக் கண்டேன்
ஆரினியிங்கு அழியாமல் இருப்பார் ஆரால்
ஆதாரம் எனக்குளது ஈதறிந்திடாயோ
சாரிகை போலுயிர்சுழலச் சகியேன் மேலாம்
சாலோகந்தா யேசு சாமிநாதா.

---

தூமம் - புகை, சாரிகை - சுழல்காற்று.

3 கானலதைக் காண்டமென்று கருது மான்போற்
கள்ளமனப் பிராந்தியினாற் கலக்கங் கொண்டு
வானமதைக் கனவதினும் மனசுள்வையா
வையமதன் வாழ்வை நிதவாழ்வாய் வைத்து
ஈனமிகும் புவிப்பொறையால் ஏமாந்துற்றேன்
என்போலும் அறிவிலிகள் யார்உண்டிந்தத்
தானமதிற் சாம்போது சார்ந்துமேலாஞ்
சாலோகம் தா யேசு சாமிநாதா.

4 காகம் கடங்கிளைக்காய்க் காகாவென்று
கத்துவபோல் அன்பர்கள் தாம் கனமாய்ச்சூழ்ந்து
ஆகங்கண் மீதிலறைந்து அரற்றியென்ன
ஐயோவென்று அனுதாபித்து அலறியென்ன
சாகுமெனக்கு உறுதுணையாச் சாவார்உண்டோ
சந்தோஷ இன்பசுக தலமாமுத்தித்
தாகந்தீர்ப்பாருண்டோ தகவாய்மேலாஞ்
சாலோகந் தா யேசு சாமிநாதா.

5 உள்ளழிந்த கனியென யானுள்ளம் நொந்தேன்
ஒருபுடையும் உடன்வருதற்கு ஒருவர்க்காணேன்
கள்ளொழிந்த அன்புமலர் கனமாய்த்தூவிக்
கவனமுடன் மானதமா பூசைகண்டு
வெள்ளமென ஆனந்த பாஷ்பம் வீழ்த்தி
மெய்சிலிராப் பேயேனை மிருத்தாம் பள்ளம்
தள்ளிவிட்டுத் தனிநடத்தாய் சாலமேலாஞ்
சாலோகந் தாயேசு சாமிநாதா.

6 திசைபிசகு மீகாமன் திகைப்புத்தீரத்
திருட்டிமுனர்த் தீபதம்பம் ஒன்றுதென்பட்டு
அசைவிலதாய் நின்றதென வளியேன் கண்முன்
ஆகாயம்வீதிநிற்பது அமையும் கொல்லோ

---

காண்டம் - நீர், பிராந்தி - மயக்கம்,
பாஷ்பம் - கண்ணீர், மிருத்து - மரணம்.

இசைவுபெற நின்கணங்கள் என்முன் வந்திங்கு
    இருபுறமும் இருந்தாற்றி இதவுசெய்யத்
தசையுடலம் பிரித்துயிர்க்குத் தகைசால் மேலாஞ்
    சாலோகம் தாயேசு சாமிநாதா.

7 அத்தையென்றும் அப்பனென்றும் அரியானென்றும்
    அன்னையென்றும் பின்னையென்தம் அக்காளென்றும்
தத்தைமொழி ஆடமயன் தம்பியென்றும்
    சாற்றுஉறவர் தம்மாலோர் சகாயம் உண்டோ
இத்தரையின் பந்தமெலாம் இந்தரசாலம்
    எனத்தேர்ந்து உன் கமலபதம் இரண்டுமேத்திச்
சத்தமிட்டேன் சாந்தருணம் சார்ந்துமேலாஞ்
    சாலோகம் தாயேசு சாமிநாதா.

8 புவியமர்நின் தொண்டருக்குத் தொழும்புபூண்டு
    புகழ்வாங்கேன் ஆயினும் நின் போதமென்னும்
நவியமது வாங்கிவளர் பவமா நாற்றை
    நறுக்கியெறிந்து அருள்ஞான நானமாடிக்
குவிதரக்கை எடுத்துநினைக் கும்பிட்டேன் வீண்
    கோதிவனென்று எனைத்தள்ளாய் கூட்டிக்கொள்வாய்
தவிசதனில் தனிக்கவையாய் தயவாய்மேலாஞ்
    சாலோகம் தாயேசு சாமிநாதா.

9 வாம்பரியை அடக்காத வலவன்மான
    மனப்பரியை அடக்கவல்லேன் அல்லேன்மாயத்
தாம்பதனை உளத்திலிட்டுத் தியர்ச்சார்ந்து
    தக்கோர்பின் செலாதுபல தவற்றுட்பட்டு
ஆம்பரிசில் ஒழுகாதான் அந்தயனென்றே
    அலட்சியம் செய்யாது அன்பர்அருகு சேரச்
சாம்பொழுதாம் சமயமருள் தந்துமேலாம்
    சாலோகம் தாயேசு சாமிநாதா.

---

அத்தை - மாமி, பின்னை - தங்கை
தத்தை - கிளி, பந்தம் - கட்டு
நவியம் - கோடரி, வலவன் - தேர்ப்பாகன்

10 ஐம்புலங்கள் நிலைகுலைய அவதிநீட
அகங்காரம் ஆதியந்தக் கரணம்வாடச்
செம்புண்ணீர் அருகிவரத் திருக்கிரண்டும்
தெரியாது பஞ்சடையச் செவிடுமண்ட
இம்பர்அருகிருந்து நண்பருள்ளம் ஏங்க
இருமலுடன் மூச்செழும்ப ஈனத்தேகம்
தம்பமெனச் சாய்தருணம் சார்ந்துமேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

11 பாவியராம் அன்னைதந்தை உதரப் பாயல்
படுத்துறங்கு கொடுந்தோஷி பத்தர்தம்முட்
சாவிதனை நேர்ந்திடுவேன் சலத்தில் வீழ்ந்த
தனித்துரும்பு போலுலையும் தமியேன்வாடி
ஆவியுண்டோ இன்றொவென்று அயருமிந்த
அருஞ்சமய மண்டர்விரைந்து ஆடிப்பாடச்
சாவருமுன் நீ நடந்து தனியாய் மேலாஞ்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

12 அப்பனே என்னரசே அன்பேயின்பே
அகிலாண்டம் தந்துதித்து அழிக்கும்கோவே
செப்படி வித்தைக்கு இணையாய்ச் செப்புமிந்தச்
செகபோக தேகபந்தம் சீச்சீ ஈனக்
குப்பை எனத் தள்ளிவிட்டேன் குன்றிலக்காய்க்
கொண்டார்போல் நின்னையிலக்கு ஆகக்கொண்டேன்
தப்பாதிவ் அந்தியத்திற் சார்ந்து மேலாஞ்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

13 ஊதும்உலைத் துருத்தி வளியுள்உலாவி
ஓடிவெளி நாடிப்பின் உள்ளேபாய்ந்து
தாதெயென நடனமிடும் தன்மைபோலத்
தணியாது உச்சுவாச நிச்சுவாசம் தப்பா

---

புண்ணீர் - இரத்தம், குன்று - மலை, வளி - காற்று,
உச்சவாசம் - உட்கொள்ளும் சுவாசம்,
நிச்சுவாசம் - புறஞ்செல்லுஞ்சுவாசம்.

ஓதுகணந் தொறுமிழுக்க உறவிவாடி
    ஓயுமிந்தப் போதெனக்கார் உறுதிசொல்வர்
தாதையன்னை எனவருகிற் சார்ந்து மேலாம்
    சாலோகம் தாயேசு சாமிநாதா.

14 அஞ்ஞானக் கடலமிழ்ந்தி மோசமாவார்
    அநந்தவெள்ளம் ஆனாரோடு அடியார்வாழ
மெய்ஞ்ஞான மனுடாவதார மேனாள்
    மேதினியில் எடுத்தருளும் விமலா என்னைப்
பொய்ஞ்ஞானம் தமதனுட்புகாமல் நித்தம்
    புரந்துவைத்தாய் அந்தியத்திற் புறம்போகாமற்
தஞ்ஞனமாய் அணைத்தெடுத்துத் தடுத்துமேலாம்
    சாலோகம் தாயேசு சாமிநாதா.

15 மண்ணுகரும் மதலையுண்ணும் மருந்துகைத்தால்
    வாகாய்முன் இனிப்பளித்து அம்மருந்தருத்தும்
அன்னையெனப் பாவமண்ணை அள்ளியுண்ட
    ஆகாத சிறியேனின் ஆரணங்கள்
சொன்னவரும் போதகவூண்டு துய்க்கச் செய்து
    சொர்க்கமதின் வழிதிறந்தாய் சூழ்ந்தோர் என்னை
சன்னைபண்ணச் சாவவிடாய் தாழ்வின்மேலாஞ்
    சாலோகம் தாயேசு சாமிநாதா.

16 செந்நெருப்பில் தேசுங் காஞ்சிரத்தின் நஞ்சும்
    செறிந்தனபோல் தீங்குகுடி சேர்ந்தநெஞ்சிற்கு
என்னநல்ல உபதேசம் சொலினும்இன்பன்று
    என்றுதள்ளும் இயல்புடையேற்கு இரங்கித்துப்பாம்
கன்னல்ரசம் வெல்லுமன்பு காட்டிச்சாலக்
    கடைக்கணித்தா யான்சாமிக் கடைநாள்நின்றன்
தண்ணளிதான் குன்றாமல் தந்துமேலாம்
    சாலோகம்தாயேசு சாமிநாதா.

---

உறவி - உயிர், தஞ்ஞனம் - தன்னையறிந்தவன்,
துய்த்தல் - புசித்தல்

17 நிர்க்குண நிர்நாம நித்த நிகழ்வதோடு
நெறியான பூதமெதிர் நேருங்கால
வர்க்கமிவை தம்மிலொரு மாற்றமின்றி
வதிபவனே சதானந்த வடிவே ஞான
அர்க்கனே என்னையிந்த அந்த்யகாலம்
ஆருமிலா அநாதனென வழவையாதே
தர்க்கமிடு மறைக்குமெட்டாத் தந்தாய்மேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

18 இல்லறத்தைத் துறந்துவனம் ஏகிக்காய்ந்த
இலைகுழைகள் கந்தபலம் எடுத்துத் தின்று
சொல்லுதுற அறம்புரிந்தோர் பாய்கள் சுற்றித்
துன்றுமுறி மீதமர்ந்தோர் தொடர்ந்தபாவ
அல்லல்வழி கடக்க வறியாது தீய
அருநரகுக் குளராக வடியார் வாழத்
தள்ளரிய ரட்சணியம் தந்தாய் மேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

19 ஆதியதாம் காலமுதல் இந்நாளந்தம்
அகிலாண்ட வாசிகள்தாம் ஆய்ந்தலைந்தும்
பாதிகால் அணுவேனும் பரீட்சித் தோராப்
பழம்பொருளே யான்மிகவும் பதறிச் சோர்ந்து
வேதனையால் விழிபிதுங்கி யாருங்காண
வேர்த்தழுங்கி நிராதரனாய் விளியவையாய்
சாதனைசெய் பன்மதங்கள் சாற்றா மேலாஞ்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

20 சூத்திரத்தால் ஆடு சிறுப் பாவை துன்றுஞ்
சூத்திரந்தான் இளகிவிடிற் சும்மாநிற்கும்
மாத்தரையில் இதுணரா மாந்தருண்டோ
மற்றிதுபோல் நியாட்டஇந்நாண்மட்டும்

---

பூதம் - செல்காலம், அர்க்கன் - சூரியன், விளிய - சாவ.

தாத்திரியில் ஆடலுற்றேன் தனியே ஆடச்
சத்தியற்றேன் சடசீவ சம்பந்தம் போய்ச்
சாத்தருணம் நீயடைந்து சகாயிமேலாஞ்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

21 அபயமருள் செயுந்திருவாய் அழகுநீட்டும்
அங்கமலச் செங்கமரமும் அன்புபூத்த
உபயவிழி உடனொளிரும் சடையின் காடும்
உடல்வழியும் செங்குருதிப் பெருக்கு ஒன்னார்
இபமெனவுள் கொதித்துறுத்த எழும்ஐங்காயத்து
எழில்வடிவும் எனதுகண்கள் இன்பாய் நோக்கத்
தபசதிலேன் எனமறையாய் தந்துமேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

22 தப்புமனச் சோரனுக்குச் சணம் வீடுஈந்தாய்
சமயபரி பாலனஞ்செய் தாசன் சின்ன
அப்பருக்கும் இராயப்பர் தமக்கும் ஆத்தன்
அருளப்பர் தமக்குமுன்னாள் அன்னதுஈந்தாய்
இப்பரிசில் எனக்கொரு கூறு ஈதல்தீதோ
யான்உழன்று சாம்போதுஎன் விழியிலக்குத்
தப்பிநிற்றல் நீதியதோ சாலமேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

23 பீதக வாம்பரப் பொலிவும் பெரிதாம் பீடு
பிறங்குகரக் கோலமுகும் சிரசிற்பின்னும்
கோதுறு முள்முடியினது குழகும்ஆசி
கூறுதிருவானனவாய்க் கோலத்தோடு
பாதாந்த கேசாதி படிவமெல்லாம்
பண்புடன்யான் சாகும்இந்த நிமிடம் பார்க்கத்
தாதாநீ அருள்புரிந்து சாலமேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

---

தாத்திரி - பூமி, ஒன்னார் - பகைவர்,
இபம்- யானை, பீதகம் - பொன்,
அம்பரம் - சிலை, குழகு - அழகு.

24 பத்தர் குழாம் விழைந்திருபாற் பவனிபோகப்
பரவுகண நாதருடன் தூதர் பாங்கர்
வித்தகமாம் சங்கீதம் பாடவிண்ணும்
மேதினியும் விள்ளவிம்மும் காளமண்டப்
பித்திமட்டும் கடகடென்று முழங்கப் பெட்பார்
பிரீதியுடன் வருவை மைந்தா என்றுபேணிச்
சத்தமுடன் எனையழைத்துச் சமமில்மேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

25 தாயைநினைந்து அழுசேங்கு அன்றென்னத் தாவித்
தவித்துநின்றன் சந்நிதிமேல் தாகங்கொண்டேன்
சேயைஉன்னி அமுதுகுத்துச் செங்கை நீட்டித்
திகழ்மார்போடு அணைத்தேந்து திருத்தாய்என்ன
ஓயாநற் கருணையதாம் கீரமூட்டி
உள்ளளியாம்உதகமதில் முழுக்கும் ஆட்டிச்
சாயுமிந்தச் சமயமெனைத் தாங்கிமேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

26 காந்தமீர்த்திடும் இரும்பைக் கடுப்பநின்மேற்
காதலெனைக் கைப்பிடியாய் இழுத்துன் பாங்கர்
போந்ததிந்தப் பிரபஞ்ச வாழ்வு பூளை
போலுமென்றும் அகத்துணரேன் புவிகைவிட்டேன்
தோம் தவிர்ந்து பரிசனவின் சேணைசூழ்ந்து
தூநிழல்போல் தொடர்ந்துவரத் தூரத்துஅல்லச்
சாந்தருணம் இதிலருட்கை தந்துமேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

27 நெய்யொழிந்தால் தீபமுண்டோ நெடியவிண்ணாள்
நீண்முகில்கள்தாம் அறந்தான்நிலத்திற் பச்சென்று
உய்தருபுல் மரவளர்ச்சியுண்டோ சோதி
உதயன்இன் றேற்செங்கமலவிகசம்உண்டோ

---

கீரம் - பால், பூளை - பஞ்சு, தோம் - குற்றம்,
உதயன் - சூரியன், கேசம் - மயிர், விகசம் - மலர்ச்சி.

மெய்யைவிட்டு விலகில்உயிர் நரன் வேறுண்டோ
விளம்புமுன்றன் உணையின்றேல் விதேயன்உண்டோ
சையெனவே பிறர் நகைக்கத் தள்ளாய் மேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

28 தக்கபடி சவதரித்த செல்வந்தானும்
தந்திடெற்கோர் முத்தமெனச் சலாஞ்செய்தாலும்
பக்கமதில் வந்துகடைக் கண்ணாற் பார்த்துப்
பரிந்ததுஇலைப் பந்துசனமென் வாள்நாளுக்கு
இக்கணமோ மறுகணமோ விறுதியென்னா
இடிகேட்ட சருப்பமென ஏங்கிநின்றார்
சக்கரைப் பந்தரிற் செந்தேன் சமமாய் மேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

29 அம்பரசிங் ஆசனனே அழகார்வெள்ளை
அங்கிதரித்த அமலநித்த அநாதியென்றார்த்து
உம்பர்தொழும் அம்பரனே உலகவாழ்வை
ஒருதமியேன் துரிதமதாய் ஒழிப்பேன் தேகம்
இம்பர்மெலச் சரியமுன என்பிராணன்
இன்பமுற நின்கணத்தை இனிதாயேவிச்சு
அசம்பிரமத்துடன் அழைத்துச் சமமில்மேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

30 கைம்மாறு செயஅறியேன் வறியேன் கார்சூழ்
காசினியிற் செனனமுற்ற காலம்தொட்டு
அம்மம்ம! நீயெனக்கின் அருளால் நேர்ந்த
அரியநன்மை ஒவ்வொன்றாய்அறையப்போமோ
பெம்மானே பிழைபொறுக்கும் பெருமையானே
பேயேனைப் புறக்கணித்துப் பிலம்போக்காதே
நம்மாலே தாம்கெட்டார் அநந்தமேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

---

சவதரித்தல் - சம்பாதித்தல், அம்பரம் - விண்,
பிலம் - பாதலம்.

31 அறம்பாற மறம்பாய்ந்தார் அழற்குவித்தாய்
அந்தரங்க கடமையடைவாய்த் தினமும்ஆற்றித்
துறந்தோர்போல் நிதநடித்த பாவதோஷம்
தொலையாத கொடும்பாவி துட்டப்பாவி
பிறந்தபோழ்து உறுமுடம்போல் பெற்றார்தந்த
பெருஞ்சென்மப் பிறந்தைப்பேய்ப் பாவிதீமைத்
தறும்புடைக்காப் பாவியெனத் தள்ளாய் மேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

32 நின்தூய மறைமொழியை நிகழ்த்தேன்நாவால்
நிதங்காதாற் கேளேன் கேட்டவற்றை நித்தம்
என்தீயமனமுறுத்தேன் உறுத்திஎண்ணி
இன்பமுடன் தேருகில்லேன் எனினும்நின்னை
மண்கூட்டில் வாழ்புழு முன் குளவிமாள
மறுருபம் ஆக்கியருள் மகிமையால்உன்
தன்கூட வாழ்ந்துறையச் சமமில் மேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

33 பத்தியினாற் பாவஇருள் பாறச்செய்து
பறக்கடித்துப் புறந்தூற்றாப் பதடியேற்குச்
சித்திவெளி காட்டுவழி காட்டித் தீயேன்
திருக்கறுத்துச் சுருதியின்பம் தெவிட்டச்செய்து
புத்திரன்போல்அரவணைத்த புனிதா வஞ்சப்
பூலோக பந்தமதைப் போக்கி விட்டேன்
தத்திமிதா எனக்கணங்கள் ததையமேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

34 கண்ணடிக்குள் வதனமதைக் கண்டான்போலக்
களங்கமறும் ஆகமமாம் கண்ணாடிக்குள்
எண்ணடங்காப் புன்மைநிறை என்அகத்தின்
இழிந்திடுதீச் சுபாபம்எலாம் எண்ணிக் கண்டேன்

---

மறம் - பாவம், அழல் - நரகம், அந்தரம் - தீமை,
பிறந்தை - பாவம், தறும்பு - வரம்பு, சித்தி - மோட்சம்,
சுருதி - வேதம், ததைய - நெருங்க.

விண்ணாடு வீடுகொள்ள விசிட்டன்அல்லேன்
வெந்துபுடமாம்பொன்போல் விளங்க என்னைத்
தண்ணாரும் அருட்புடத்திற் சார்த்திமேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

35 வாய்திறந்தால் வீணுரைகள் அன்றி வாய்மை
மருந்தினுக்கும் வழங்குகில்லேன் வலிதாம்வஞ்சப்
பேயையல்லால் நினைப்பணியப் பெரிதாம் கைகள்
பிரியமுடன் கூம்பிடவும் பெயர்க்கேன் ஊத்தைக்
காயமிது நினைப்பணியக் கனவில்தானும்
கருத்துடனே ஏவுகிலேன் எனினும் கண்ணார்
சாயையென நிற்றொடர்ந்தேன் தப்பா மேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

36 கர்மவினைக் காடதனைச் சமூலம் கல்லிக்
கண்டவிடத்து எறிந்தடியார் கணத்தைச் சேர்ந்து
மர்மமாம் பொருள்நீயென்று அகத்துள் வைத்து
மானதமா வந்தனையால் வழிபாடாற்றித்
தர்மநெறி ஒழுகாதேன் தவறாய் வாள்நாள்
சாய்த்திட்டேன் அந்தியத்தில் தனுவாம் ஊத்தைச்
சர்மமதைக் கிழித்துநின்முன் சார்ந்தேன் மேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

37 தீபமிலா இருட்டறையில் சிறுபொற்காசைத்
தேடியலை அற்பமதிச் சிதடன் போலச்
சாபத்தீ பரவுலகில் ஞானந்தன்னைத்
தாவிமதிக்கரஞ்சலித்தேன் தயவாய்என்றன்
ஆபத்துத் தீராயோ அந்தோஇந்த
அந்தியத்தில் என்பவத்திற்கு ஆகமிக்க
தாபமுற்றேன் பிழைகளெலாம் சமித்துமேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

---

மர்மம் - இரகசியம், தனு - உடல், சர்மம் - தோல்.

38 ஆ! ஐயா மிகவலுத்தேன் அடியான் பூவார்க்கு
அடிமையலேன் நினக்கடிமை ஆகிமுன்னாள்
காவையா எனஅடிமைமுறி நின்கையிற்
கையொப்பம் இட்டுஈந்தேன் கரத்தில் ஏற்றுப்
போஐயா போவையெனப் போக்கில் ஏங்கண்
போகுவேன் என்குறையார் போக்கவல்லார்
தாஐயா தரிசனந்தான் தந்துமேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

39 உடம்பெங்கும் கண்ணாயுன் உருவநோக்க
ஓர்தவசும் புரியாதேன் உன்னினேன்மண்
அங்கலுந் தந்தாலும் அந்த ஆசைபோமோ
அல்லுடன் நெல்லாக நின்னோடு ஐக்கமாகிப்
படம்பொரு தந்தென மருவப்பற்றுட் கொண்டேன்
பரிச்சேதம் வினன்எனப் படித்துத் தள்ளாய்
தடம்புவி தந்தருள்செய் குருசாமி மேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

40 வேறார்க்கும் யானென்னை விற்றேன் அல்லேன்
வெறிமயலுக்கு உரிமையென்னில் மெய்யாயில்லைக்
கூறுசெய்து பார்க்கில்உடற் கூட்டுள்உன்னைக்
குடிவைத்தேன் கரசரணம் கூறும்சென்னி
மாறாமல் நின்தொழும்பைப் புரியும் வண்ணம்
வகைவகையாய்ப் பணித்திட்டேன் புலனாம் அந்தத்
தாறேறாக் கரியடங்கிச் சாயமேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

41 அடியவனுக்கு அடியவன் நீயென்றார் ஆன்றோர்
அஃதடியேன் தனிற்பிழையது ஆகக்கண்டேன்
விடவிடென அழுதுகத்தி விழித்திட்டாலும்
மெய்புளகம் அரும்ப நின்னை விழிமுன் காணேன்

---

படம் - சீலை, தந்து - பஞ்சிநூல், பரிச்சேதம் - முற்றும்,
பயல் - பிசாசு, மத்தம் - மதம், தாறு - முட்கோல்,
கரி - யானை, விடவிடெனல் - நடுக்கக்குறிப்பு.

கொடியவன்யான் ஆயினும்நீ அடிமை கொண்ட
குடிமை அலவோ மரணம் குறுகச் சாய்ந்தேன்
தடையது இன்றித் தரிசனம்தந்துஅருளி மேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

42 பெருவெள்ள இரைச்சலெனப் பெரிதா மேகம்
பேரிடியின் முழக்கமென விண்மேற் பெட்போடு
ஒருவெள்ளம் பண்ணவர்நின்று உவப்பாய்ப்பாட
உலகமெலாம் அக்கினியுற்று உருகியோட
வருராச செயபதி நின் வலதுபாகம்
மாட்சியதைப் பெறவரமில் வறியேன்என்று
சருகாக ஊதிவிட்டுத் தள்ளாய் மேலாம்
சாலோகம்தாயேசு சாமிநாதா.

43 பன்னிரண்டு பருவாசல் வடகிழ் தென்மேல்
பக்கமொன்றை மும்மூன்றாய்ப் பகுத்தார் பத்தர்
நன்னிலத்தின் தளம்ரத்னம் நான்மூன்றாகும்
நகர்ச்சிறப்பை ஆயிரநா நவில மாட்டா
இன்னதுநின் தனிப்பதவிச் சிறப்பது என்றார்
யானதனைப் பெறமனதில் இச்சை கொள்வேன்
தன்னிகரில் சதானந்தா சயம்பே மேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

44 நிவரத நிலைத் தீபம்என மனசை நின்பால்
நிறுத்திவைத்துப் பிரபஞ்ச நேசம் விஞ்சிக்
கவாதுதனைக் காத்து வைத்தேன் கனவிலும் யான்
காண்பது நின்தோற்றம் அன்றிப்பிறிதுகாணேன்
சவாது புழுகணிந்து முடைதரு மெய்ச்சும்மை
தாங்கியலுத்தேன் விரைவில் தவிர்ப்பேன் தாழ்ககேன்
தவாதஅருள் காட்டியன்பு தழைக்க மேலாம்
சாலோம் தாயேசு சாமிநாதா.

---

நிவரத - காற்றில்லா, கவாது - கவ்வாது,
தவாத - நீங்காத.

45 உண்டுஉடுத்துத் துயின்றிடு பேறல்லால் உண்மைக்கு
ஒருபேறும் பெற்றறியேன் உனையென் கண்கள்
கண்டுகொளப் படும்பாட்டின் கரையோ காணேன்
காவலனே தூரநிற்றல் கருணை யாமோ
சுண்டுவிரல் போல்வேன்யான் தொடர்ந்து நின்னைத்
துரிதமதிற் கூடிடவே துணிந்து கொண்டேன்
தண்டுமிண்டேன் தேகமின்று தணந்தேன் மேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

46 பொறிப்பறக்கக் கோபித்தென் முனிந்தென் போற்று
பொதுவர் தமைப்பிழைத்த சிறு புருவைப்போல
அறப்பிழைத்த அடியேனை நீதேடாயேல்
ஐயையோ! தேடுதற்கு இங்கு ஆர்தானுண்டு
குறிப்பறிந்து மீட்பதன்றோ சிறப்பாம்குன்றாக்
குணநிதியே கூண்டைவிட்டுக் குடிஞையோடத்
தறிப்பதொரு மரம்போலச் சாய்ந்தேன் மேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

47 இருந்தகொம்பு ஏதென்று உணராது ஊசலாடி
எய்த்தசிறு பட்சியென இந்நாள் மட்டும்
வருந்தியும் நிற்காணாது என்மலர்க் கண்பூத்தேன்
மறைந்தனையோ அன்றியெனை மறந்திட்டாயோ
தெரிந்தமறைக் கெட்டாத தேவதேவே
தேகமிதை இன்றொடுபோட்டு உடைத்தேன்சீவன்
சரிந்ததுபார் விரைந்ததனைத் தாங்கிமேலாம்
சாலோகம்தாயேசு சாமிநாதா.

48 அன்பு கயிறாய்த் திரித்தோர் ஏணியாக்கி
அதில்இவர்ந்து நினக்கனுமை யாகிச் சேர்ந்து
பொன்பொருவுன் பாதாரவிந்தப் போதிற்
புரஸ்காரஞ் செயாதிடுகீழ்ப் புலையன்என்றோ

---

பொதுவர் - இடையர், புருவை - ஆடு, கூண்டு - கூடு,
குடிஞை - பறவை, முடை - தீயமணம்,
புரஸ்காரம் - வணக்கம்.

என்புருக நின்புகழை ஏத்திப்பாடா
ஈனனென்றோ புரம்போந்தாய் இணையில்ஏகன்
தன்புதல்வா தனுவிதனைத் தணந்தேன் மேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

49 தூரெறிந்து கிளைபரப்பித்து உணர்த்துக்காயாத்
துர்விருட்சம் போல்வானித் தோஷியென்றோ
கார்செறிந்த விண்ணிலினுங் காட்சிதாராய்
கண்மணியே அன்பையிரு சிறகாய்க்கட்டி
ஆரிருந்து தடுத்தாலும் பறப்பேனாகா
ஆசூச உடற்சுமையை அகற்றிப் போட்டேன்
சார்புவந்து என்னாவி அதைத் தாங்கி மேலாம்
சாலோகம் தாயேசு சாமிநாதா.

50 ஆற்றுஇடையோர் வடவிருக்கத் தால்வீழ்ந்து ஆழ்ந்த
அரிஅவதி கண்டுபிற அரிகள்அச்சம்
ஊற்றெடுத்து முள்காத்தல் போலவுட்கி
ஒருதமியென் வாதனைகண்டு உற்றார் மற்றார்
வீற்றுவீற்றிருந்து அழுதுமெலிந்தார் எய்த்தார்
வேதியரும் வைத்தியரும் விட்டுப் போனார்
சாற்றுமெற்குத் தஞ்சம்இனி நீவா மேலாம்
சாலோகம் தாயேசு சாமீ வாழி.

சாலோகப் பிரவேசம்

*முற்றிற்று.*

---

அரி - குரங்கு, முள் காத்தல் - மௌனமாயிருத்தல்.

## வாழி.

வாழிபரன் யேசு குரு நாதன் வாழி மகத்துவமார் சத்திய
சுத்தாவி வாழி
வாழி மிஷன் சங்கங்கள் குருமார் வாழி வைதிக மார்க்கஞ்
சிறந்து மலிந்து வாழி
வாழிமுகினாடு கலைமங்கை வாழி மன்னவர்கள் வாழிவிதா
லயங்கள் வாழி
வாழி தர்ம விக்றோறியா ராணி வாழி வகுத்தபஞ்ச ரத்தினமும்
வாழி வாழி.

பஞ்சரத்தினம்

முற்றிற்று.

# சுகமரணாபீஷ்டம்

இஃது

காலஞ்சென்ற உதயதாரகைப் பத்திராதிபர்
ஸ்ரீமத். அ. ச. சதாசிவம்பிள்ளை அவர்களால்
இயற்றப்பட்டு

அவர் குமாரர்களாற்
பிரசுரிக்கப்பட்டது.

# SUKAMARANAPEESHDAM,

A POEM BY THE LATE

## MR. J.R. ARNOLD

Tamil Editor, Morning Star.

**Published by his sons,**

S.T. & S.C. ARNOLD

**JAFFNA**
**Strong and Asbury, Printers.**
**1898.**

# நூன்முகம்

சாவாது தப்புந் திறலுடையார் உலகிலில்லை. மண்மேல் முளைத்த பூண்டுகள் மண்மேல் மடிதல் இயற்கையானாற்போலப் "பிறந்தவர் இறத்தறிண்ணம்". சாவை விலக்கல் கூடாதாயினும் அதனோடு சாரும் வருத்தத்தால் விலக யாரும் ஆசிப்பர். வெயிலால் வருந்துவோர் நிழல் தேடிப்போதல் இயல்பானாற்போல நோயால் வருந்துவோர் சுகத்தை ஆசித்தல் இயல்புக்கு மாறல்ல.

பலதரமும் பலர்க்கு நேரிட்ட வருத்தங்களைக் கண்ணாரக் கண்டுங் காதாரக் கேட்டுமிருக்கும் நாம், நமக்கும் அவை வராதிருக்க வேண்டுமென்னும் பேராசை கொண்டோமாய் இச்சிறுபாடலைச் செய்ய முயன்றோம் என்பதால், இப்பாடல் சுகமரணந்தருமென்றும் வாதையைத் தணிக்குமென்றும் துணியோம். ஆயின் அப்பெயர்ப்பட்ட சமயங்களில் இதனைப் பாடினாற் பிறர் பாடக் கேட்டாற் சற்றே ஆறுதலுஞ் சுகமுமாகு மென்று நம்புகிறோம். அந்நோக்கங்கொண்டே நோய்வாய்ப்படுவார் எவர்க்கும் உபயோகமாமென்ற நம்பிக்கையால் இதை அரங்கத்தில் விடுக்கின்றோம்.

நோயினால் வருந்தும் ஒரேழையின் நிலைமையைப் பாவனை பண்ணியும் எம்மிற் சார்த்தியும் சுகசீவியாயிருக்கும்போதே இதனைப் பாடினம். இதிற் சுட்டப்பெற்ற குறிப்புகள் பல கைமெய்யாய் நடந்தேறியவைகள். சில யார்க்கும் நடந்தேறக்கூடியவைகள். ஓர்போது நம்மிலும் முற்றாய் நடந்தேறுமோ யாரறிவார்?

எப்படியும் இப்பாடல் எம்மனோர்க்குப் பிரயோசனமும் எம்மை ஆட்கொண்டார்க்குப் புகழுமாய் முடிகவென்று இரட்சாமூர்த்தியின் பாதாரவிந்தத்தில் இதனை நிவேதித்தோம்.

**இங்ஙனம்,**
**ஆக்கியோன்.**

Manippay,
Nov. 1.1892.

# சுகமரணாபீஷ்டம்

## காப்பு

சீரார் சுகமரணா பீஷ்டமதிற் சிந்தனைகொண்டு
ஏரார் விருத்தங்கள் ஈரறுபான் - ஆராய்வாய்ச்
சொல்ல இரட்சாமூர்த்தி தூய என் யேசுபரா
வல்லமைதா நல்லருள்செய் வா.

## நூல்.

திருமறைக்குத் தாரக[1]மாய்ச் சித்தாய்த் தீயோர்
தெரிசனத்துக்கு அரியானாய்ச் செகேசனாகி
அருவுருவாய் அண்டபகி ரண்டங்கொள்ளா
ஆனந்தப்பொருளாகி யன்பருள்ளப்
பெருவெளியில் அமர்ந்தவனே பிறந்ததாதி
பேசுமிது பரியந்தம் பிறங்குநின்றன்
அருள் துணையாய் இனிதமர்ந்தேன் இனிநோயாட்டி
அலைக்கமுன்தா சுகமரணமமுதம்[2]யேசே. க

அகிலமதிற் பத்தருடன் பத்தராதி
யான பலபேத நரர்அரிதாம் பன்னோய்
மிகவருத்தத் தாங்கு பலம் இலாது வெம்பி
விதம்விதமாய் இறந்தகதை கன்னம்வீழ
அகம் அயர்ந்தேன் அங்கமெலாம் உதறியாட
அருள்வை சுக மரணமென அலறிக்கேட்டேன்
தகுநினது திருவுளம்போல் அதைமுன்தந்து
தப்பாநன் மோக்கந்தா தந்தாய் யேசே. உ

---

1. ஆதாரம். 2. மோக்கம்.

கப்பல் அதன் கம்பமுற்ற காக்கைபோலக்
கரைகாணாது அலைந்து கத்திக் கத்தி
இப்புவியின் பொருள் எதிலும் மனம்போய் எய்த்த
ஏழையென்றன் எஞ்சியவாள் நாளை ஈர்த்துத்
தப்பாநோய் அடிமை கொளச் சாபியாமற்
தகுந்த சுக மரணமது தந்துபின்னர்
ஒப்பதிலாப் பரகதியும் உதவாய் தொண்டர்
உளமலர் ஆசனம் பிரியாது உறையும் யேசே. ங

பரியங்கம்[1] விட்டிறங்கிப் பாரிற்சாய்ந்து
பக்குவமாய் உடன்முடிந்த பத்தன் உண்டு
அரி[2]யுடன்காய் கறிவாங்கி ஆக்கச்சொல்லி
அசனம் உணா முன்இறந்த அயலானுண்டு
எரிபிரம புத்திரத்தைக் காத்திலேற்றாங்கு
இருந்திசைவாய்ச் சுருட்டுமுனம் இறந்தானுண்டு
உரிமைபெறச் சுகமரணம் உவர்போலெற்கும்
உதவுக முத்தியைஅருள்க வொப்பில் யேசே. ச

தோலிருக்கச் சுளையிழந்த பழம்போல்துன்னும்
துவக்கு[3]டன் என்புகள் ஒழியத் துன்றுமேதை[4]
பாலதுஒக்கும் நிணங்குருதியாம் பல்பண்டம்
பதனழியப் பற்றழியப் பாழேயாக்கிச்
சாலவெனது உடம்பை இந்தர சாலக்காரர்
சாலஞ்செய்வதுபோல் நோய் தாக்காவண்ணம்
ஏலவுறும் சுகமரணம் ஈந்தே இன்ப
விடமாங் கைவல்லியத்தில் இருத்தாய் யேசே. ரு

தொண்டொண் டொடென்றுபறை காதைத் தூர்க்கத்
துஞ்சினார் யாவரெனத் துருவும்போது
மண்டுபிணி ஒன்றுமின்றி வழக்கம்போல
வாகாய் நேற்று இருந்தவர்தாம் இன்றுமாய்ந்தார்

1. கட்டில். 2. அரிசி. 3. தோல். 4. இறைச்சி.

கண்டறிதிர் என்றார் மற்றெனையோ கன்றிக்
கடும்வாதை கடிதனிற்குக் கருத்தோ பார்த்தோர்
உண்டுயிர் என்றிருக்க ஒரு ரோகமின்றி
உலவு சுக மரணபரம் உதவென் யேசே. கூ

துன்பமென்ற சொன்னசொற்கள் உலையா முன்னர்த்
துஞ்சினார் எனவுடனே பிறந்தது உய்தாம்
இன்பமொழி என்றனக்கும் இசைதல் தீதோ
யான்நெடுநாள் பிணிவருத்த இருந்திறந்தால்
உன்றனக்குஎன் பெருமையையா உரைத்திசொல்லும்
ஒருதினம்போற் பஃறினங்கள் உழலவேண்டேன்
வன்திறலார் சுகமரணம் வழங்கி மோட்ச
வாழ்வதுதா அமலாஎன் மகிபா யேசே. எ

அண்ட[1]மதை உடைத்தெழுப்பி அகல்குஞ்சேபோல்
அநியாய உடம்பிதனை அகலத்தள்ளிக்
கொண்டு பறந்திட நிமிடந்தோறும் குன்றாக்
குணமான ஆயத்தம் குறித்திருக்க
மண்டலத்தில் இனுஞ்சின்னாள் வதிவையென்று
வைத்தருநோய் பலவையுடன் வருவித்திட்டாற்
தொண்டனேன் குறைநின்மேற் சொலேனோ வாய்ப்பச்
சுகமரண சுவர்க்கந்தா சுரேசா யேசே. அ

எக்கலையின் கரைகண்டும் தெளிவொன்று இன்றி,
யானைஉருப் பார்த்திடு பேய்க் குருடர் ஏய்ப்பத்
தக்கபடி நினையுணரார் சாலச்சாலந்[2]
தனில்வீழ்ந்து சிக்கியதிற் சலனப்பட்டு
விக்கலெடுத்து உள்ளழிந்து வீவேனோநின்
மின்னாரும் உபயாரவிந்த மேவாச்
சக்கிரி[3]சக்கரமென உள்தளம்புவேனோ
தருககசுக மரணசிவஞ் சயம்பே யேசே. கூ

1. முட்டை. 2. கண்ணி. 3. குயவன்.

இடங்கர்[1]ஒன்று நீராடும் ஏழைதன்னை
இழுத்துப்போய் என்பைமுறித்து இரக்கமின்றிக்
கொடுங்கொலைக்குத் துணிந்ததெனக் குரூரரோகன்
கூசாதுன் அருள்துறையிற் குளிக்கும் என்னை
அடும்படி உத்தரவுகொடுக்காமல் அன்னோன்
அகங்காரம் அதனைஒறுத்து அடக்கி அன்பின்
தடங்கரையிற் சேர்ப்பை சுகமரணம்சாரத்
தயைபுரிவை மோக்கதலந் தருவை யேசே. க0

அரசனிலா நகரார்போல் ஐந்துவேடர்
அடக்கம் என்பதின்றி மிக்க கலக்கம் ஆற்றிப்
பரபரென்று தம்பாட்டில் அரசுபண்ணப்
பரநோக்காப் பாவிஇவன் பார்மேற் பட்சம்
இரவுபகல் வைத்தலைந்தான் உலைந்தான் என்னை
எண்ணாதான் எனமுனியாய் விண்ணோர் ஏத்தப்
பரவுசுக மரணமொடு உன் பதவிதந்து
பண்பாய் என்தனை அளிப்பை பரனே யேசே. கக

காத்திர[2]த்தை மிகவருத்திக் கான்மேலோச்சிக்
கருதரிய நிட்டைசெய்து காலாகாலத்
தோத்திரங்கள் வழுத்திநின்று கரத்தைத் தூக்கித்
தொழும்அவர்க்கும் அரியானாய்த் தூயவுள்ளப்
பாத்திரத்துள் அன்புநிறைந்து அவர்கள்பார்க்கும்
படிஎளிதாய்த் தரிசனம்ஈ பகவானே நோய்
வேத்திர[3]த்தால் எனைத்தடியாய் விரைவில் தாராய்
விழைந்தசுக மரண முத்தி விமலா யேசே. கஉ

நினைத்துதிக்கு நாவதிலே நின்னை நெஞ்சம்
நிறுத்துகிலேன் ஆயினும் உள்மூர்ச்சைநீளத்
தினைத்துணையும் அன்னமயம் உடலுட் செல்லாத்
தேய்ந்து பலக்கேடுவரச் செயாதே தேவென்று

---

1. முதலை. 2. உடல். 3. பிரம்பு.

உனைத்தொழுங்கை மடங்கவிடா உற்றார் மற்றார்க்கு
ஒரு பிரியா விடையேனும் ஓதவைப்பாய்
எனைத்தனிக்க விடாதுசுக மரணம் ஈவை
ஏற்றிடு கேவலந்[1]தருவை யேந்தால் யேசே. கரு

சக்கிரி[2]செய் பலநாள்மண் கலங்கள் தம்மைத்
தண்டதரன் கணமொன்றில் தகர்ப்பானென்று
இக்கூ[3]வார் இசைத்திடுவார் பல்லாண்டு எண்ணி
இன்பமுறப் பூசிமுடித்து இலங்கவைத்த
விக்கிரகந்[4]தனையுடைக்க இவ்விதரோகம்
மிகநெருங்கிச் சண்டைசெயில் விழைவாய் நீநின்
சக்[5]கினுக்குக் குளிர்ச்சியதாய்த் தரிசிப்பாயோ
தக்கசுக மரணசித்தி தாதா யேசே. கசி

ஆறலைக்கும் கள்வரொப்பார் ஐந்துகள்வர்
அடுத்திருக்கும் சடத்துருக்கம்[6] அதனுட்புக்குச்
சேறெழுநீள் குளங்கலக்கும் சேக்[7]கள் போலத்
திண்மைசெறி நோயொருத்தல்[8]குடியாய்ச்சேர்ந்து
மாறெழுந்து கலக்கிடில் யான்மற்றென் செய்வேன்
மனவொடுக்கத்து உடனினக்கு வகுத்தேன் ஓலம்
ஆறுதல்தா சுகமரணம் அதுதா தந்துன்
அரியசிவந்[9]தாமுதல்வா அப்பா யேசே. கரு

குறும்பர்[10]எனக் கொடுநோய்நின் குடியானுக்குக்
கோட்டாலை[11]உடனுறுத்தும் கொடுமையாவும்
உறும்பரிசில் அறஞ்சிறக்கச் செங்கோல் ஓச்சும்
ஒருகுடையாய் பார்த்திருத்தல் எண்மையாமோ
பெறும்பயன் கடந்திடுமோ பிணக்கர் துட்டர்
பேதகர் நிக்கிர நிற்குப் பெருமையன்றோ
நறும் கமலத்தாள்மருவ நாயேன் வேட்டேன்
நல்லசுக மரண பரம் நல்கென் யேசே. ககூ

---

1. மோட்சம். 2. குயவன். 3. பூமி. 4. உடம்பு. 5. கண்.
6. கோட்டை. 7. எருது. 8. எருமைக்கடா. 9. முத்தி.
10. குறுநிலமன்னர். 11. துன்பம்.

மார்த்தாண்டன்[1]வருடமெனும் நாழிவைத்து
வரி[2]யெனும் என்ஆயுளை நல்வரிசையாகச்
சேர்த்தளந்து சுமையாக்கச் சிறிதுகாலம்
செலவிருக்கும் திறமறிந்து சிரமம்செய்து
ஆர்த்து இதுதான் தருணமென வந்துபோலும்
அரும்பலநோய் புகுந்துஅரித்துக் கோதேயாக்கப்
பார்த்திருத்தல் நினக்கழகோ பண்பார்முத்தி
பகுத்திடமுன் சுகமரணம் பகுந்துஈ யேசே. கஎ

பாடுறுவார் பரிப்பர் பட்டம் என்றுபாரோர்
பகர்ந்த முதுமொழி சிறிதும் பழுதுறாமல்
கேடுஅனுகாக் கேவல[3]மாங் கிரீடஞ்சூடக்
கிருதார்த்தன்[4]அலேன் எனினும் கெழுமுபல்நோய்
ஆடுபெரும் பம்பரம்போல் என்னையாட்டி
அடிப்படுத்தா முனம்அருட்கை கொடுத்து ஆன்றோரும்
தேடரிய பரமபத தியாகம் செய்யச்
சிந்தைகொண்டு சுகமரணத் திருவீ யேசே. கஅ

கோதண்ட[5]கரக் குறவர் கோனைக்கண்டு
குலைகுலைந்து குருவி கலைந்து ஓடினாற்போல்
தீதண்டு ரோகம் உறத் திகில்கொண்டுள்ளம்
திடுக்கிட ஐம்புலம்கலையத் திகையா முன்னர்க்
காதண்ட என்னோலம் படாதோ கண்ணின்
கடையெனினும் எனையொருகாற் கண்டிடாதே
மூதண்ட நாயகனே முத்திசேர்க்க
முன்புசுக மரணந்தா முதல்வா யேசே. கச

வழித்துணைஎன்று உடன்சென்றார் வனவிலங்கு
வந்ததுகண்டு அவரவரே மார்க்கந்தப்பி
ஒளித்திடல்போல் உடன்அமர்ந்த உற்றார் மற்றார்
ஓரமுக்காய்ப் பிணிப்புலிகள் உடற்றக்கண்டால்

---

1. சூரியன். 2. நெல். 3. மோட்சம்.
4. பேறுபெற்றோன். 5. வில்.

களைத்தோடிப் பறப்பாரே களைக[1]ணாவார்
கையடையீவார் எவர் நோய் கலக்காமுன்னர்
விழிக்கிலக்காய் விரைந்து சுக மரணந்தந்து
விண்ணாடும் தாநீயென் விமலா யேசே. உ0

வாட்டமுற்றேன் உலகிலினி வதியேன்முற்றி
வடிவாகப் பழுத்தவெற்கு வசுதை[2]வாழ்வில்
நாட்டமென்ன தடாகஞ்சேர் நளின[3]மேவு
நல்இலைமேல் நீர்அதென நடித்துவாழ்ந்தேன்
ஆட்டமெலாம் ஆடியெய்த்தேன் அணிந்தவேஷம்
அனைத்தையும் ஒவ்வொன்றாக அவிழ்த்தேன்கால
நீட்டமதில் விட்டுவிடாய் நின்மேல்வீட்டில்
நேயமுற்றேன் சுகமரண நேர்வை யேசே. உக

தண்டிகை தேர் பல்லாக்குச் சமைக்கவேண்டேன்
சம்பிரமத்தோடு கொட்டும் சத்தம்வேண்டேன்
ஒண்தொடியார் மார்பைஅடித்து ஒடிக்கவேண்டேன்
உற்றார்கள் புலம்பியழும் ஓலம்வேண்டேன்
கண்டவர் கண்ணீர்ததும்பிக் கரையவேண்டேன்
கசிந்துருகி நேசர்கள்தாங் கலங்கவேண்டேன்
தொண்டனேன் பலநாளாய் பாயல்சோராச்
சுகமரணந் தந்தபின்தா சுவர்க்கம் யேசே. உஉ

பன்னாளாய்ப் பாயலதிற் படுத்துத்தொய்ந்து
பார்த்தவர்கள் பரிந்திடநோய் படுத்தும்வாதை
என்னால்ஓர் நாழிகையும் தாங்கஏலாது
ஈன்றவனே யெனத் துரிதத் தெழுந்துவந்து
பொன்னாரும் திருவருளாம் போர்வை போர்த்துப்
புனிதசுக மரணசிவம் பொருத்தித் தாராய்
மின்னார் சிங்காதனமாய் விண்கொண்டாளும்
வேதாந்த உட்பொருளாம் விமலா யேசே. உஙு

---

1. ஆதரவு. 2. பூமி. 3. தாமரை.

மரணமெனும் வாயில்வழிப் புகாமல்மேக
மண்டலத்தில் வந்த ரதம் வதியச் செய்து
அரணி[1]உறுந் தீயெனநின்னோடே யாற
வன்றொர் பத்தன்றனை அழைத்தாய் அல்லால் ஏற்ற
தருணமதில் அடியர்பலர் தம்மை வாதை
சருவாது வான் அழைத்தாய் தமியேன் தன்னைக்
கரணம் ஒடுக்கிடு நோயாற் கலக்குவாயோ
கருதுசுக மரணந்தா கதிதா யேசே. உச

அகரமுதல் ஔகாரம் அந்தமாகி
ஆறிரண்டாம் அச்[2]செனும் அட்சரங்கள் மற்றைக்
ககரமுதல் மெய்களுடன் கலந்தால் என்னக்
காசினி எங்கும் கலந்தால் அதனைக்காக்கும்
பகவானே பத்தர்கள் வற்சல[3]னே பாழாம்
படிவமிதைச் சுமந்த பரிபவம்[4]போதாதென்று
இகலும் பன்னோய்ப் பாரந் தராய் பேரின்பம்
எனக்குத்தா சுகமரணம் ஈந்தென் யேசே. உரு

வாயுவின் சத்தியில் எழுந்து மாக[5]மேறும்
வானரதம் போல் உலகம் உடலமாயப்
பேயெனும் இம்மூன்றும் எனைப் பிரபஞ்சம்மாம்
பெருந்தேரில் ஏற்றி எரிப்பிலம்[6]வீழ்த்தாது
தாயென முன் தடுத்திட்டாய் பிணிகள் சாடச்
சலிப்பின்றிப் பார்ப்பாயோ தாசனேற்குத்
தூயசுக மரணமது தந்துசொற்கம்
சுரர்பரவத் தருவாயென்று உய்யாய் யேசே. உசா

இருந்தவண்ணம் ரோகமொன்றும் இன்றித்துஞ்சும்
இன்பமதாம் சலாக்கியத்திற்கு இப்பூ மீது
அரும்தவந்தான் யான்புரிந்தேன் அல்லேன் ஏனும்
ஆற்றொணாப் பெருந்துயரம் அதன்வாய்ப்பட்டு

---

1. தீக்கடைகோல். 2. உயிரெழுத்து. 3. தயை.
4. வியாகுலம். 5. விண். 6. பாதாளம்.

வருந்த எனை வையாதே மனசு புண்ணாய்
மறுக்கமுறாப் பாயன்மிசை வளர்த்திடாதே
திருந்துசுக மரணமதால் நின்பாற் சேர்ப்பை
தேவர்பணி நித்தசுத்த தேவா யேசே. உஎ

மலசலத்தில் நடுக்கிடந்து நாணம் மானம்
மருவாமல் உதவிசெய மனுவிலாமல்
அலமலந்து ஐயோவென் னேயன்னோ வென்னா
அகதிகளாய் இறந்தோர்தாம் அநேகர்க்கண்டேன்
சலநிதிநேர் கருணையுள்ளாய் தமியேன் அன்னோர்
தமதுநிலை பரமடையத் தனிவைக்காதே
உலகர் இரங்கிட நோயாலும் பாதிக்காதே
உற்றசுக மரணமுத்தி உதவென் யேசே. உஅ

கஞ்சி கடைவாய் வழியக் கரங்கால் ஓயக்
காய்ந்த பசித் தீபனம்போய்க் கசம்மேலாட
விஞ்சிமலம் பொசியவுடன் இருந்தார்வேண்டா
வெறுப்படைந்து புறம் அகல மேனிநாறக்
கஞ்சமலர் முகம்வேறாய்க் கருகிவாடக்
கனநாளாய் வருந்தி இறந்தாரைக் கண்டேன்
குஞ்சைஅணைத்திடும் ககம்போல் அன்புகூர்ந்து
கொடுப்பைசுக மரணசிவம் குரவா யேசே. உக

நடந்தகால் முடங்கவந்த நண்பர்க்கு ஓர்சொல்
நவிற்றாது நாக்குவிழ நவைதீர் சைகை
கிடந்தபடி காண்பிக்கச் சிறுநீர் கெம்பிக்
கிளராடை தனைநனைத்துக் கெடுக்கப் பாங்கர்
அடைந்தவர்கள் அவமதிக்க ஆவிசோர்ந்தார்
அயிரத்தாயிரவர் உளர் அவர்போல் என்னை
உடைந்த கலமெனப் பழிப்புக்கு உறவாக்காதே
உவந்துசுக மரணமுத்தி உதவென் யேசே. ௩0

அருள்நயனத் தீக்கொழுத்தி அடியார்பாசம்
அனைத்தையும்சுட் டெரித்துஒழித்தங்கு அவர்தம்நெஞ்சை
எரியதனில் புடமிடு பொன்போல் மாற்றேற்றும்
ஈசுரனே சென்மகன்ம பவத்தால் எய்த்துப்
பரிபவம்[1]உற்றிருக்கும்எனைக் கடைக்கண்பார்வை
பாய்ச்சிஅருள் கடலாட்டிப் பாதுகாத்து
வருமொருநீ அந்தியத்தின் ஓய்வாய் வையாய்
வழங்குசுக மரணசித்தி மகிபா யேசே. ௩௧

சுருதியுக்தி அனுபவங்கள் சொற்பமேனும்
தோயாத சுமடர்தம்முள் சுமடனேனின்
பருதிமுக தரிசனத்தைப் பெறுதற்பாலாம்
பக்குவமற்றேன் எனினும் பரிந்து பண்டு
குருதிசொரிந்துஇரட்சணியம் கூவோர்க்கென்று
கொடுத்திட்டாய் அக்கொடையில் எனக்கோர்கூறு
தருதியென்றேன் அதற்கிசைந்தாய் கொடுநோய்ச் சாலம்
தவிர்ந்தசுக மரணபரம் தந்தாள் யேசே. ௩௨

வாதமொரு பாடுலைக்கச் சேற்பம்வந்து
வலிதாயோர் புறமிழுக்க வல்லபித்தம்
மீதெழுந்து மெய்யறிவைக் காய்ந்துவீறி
வீணுரைகள் கிளப்பஅன்ன விருப்பநீங்க
ஏதிதென்ன மோசமென்று கிளைஞர்ஏங்க
இறந்தவர்தாம் பலகோடி யேழையேற்குச்
சாதக[2]மாம் சுகமரணந் தந்துன்திவ்ய
சந்நிதியிற் சாரவைப்பாய் சகேசா யேசே. ௩௩

உடலம்தன் அதைக்கரணம் உருத்துண்டாக
ஓயாமல் செல்விழஈ உவற்றையோச்சும்
படியொருவர் ஈயோட்டி கரத்திற் பற்றிப்
பார்க்கும் உற்றார் நயனமழை பாரில்வீழ்ந்த

---

1. வியாகுலம். 2. பயிற்சி.

அடியீறாய்ச் சிரமுதலாய்த் தாங்கலாகா
    அகோரமதாம் கொடுநோயால் ஆயுள் எல்லை
முடிவுகொண்டார் பலர்கண்டேன் மோட்சலோகம்
    முந்துமன்தா சுகமரண முதல்வா யேசே. ௩௪

பவம்பிடித்தால் பண்டிதன்என் செய்வான் என்று
    பாரிலுளோர் உரைப்பார் அப்பான்மை நேராய்
அவம்பிடித்தேன் தனைப்பிடித்துப் பல்நோயாட்டி
    ஆரிருந்தார் பரிகரிக்க நீயல்லாமல்
நிவந்[1]தமறைப் பெம்மானே நின்னைத் தாழ்ந்தேன்
    நிமிடம்அரை காலேனும் நிலத்தில் தங்க
உவந்திலேன் சுகமரணம் உதவிமோட்ச
    உரிமையதும் தருவாயெற் குரியாய் யேசே. ௩௫

வாரி[2]யில் ஆழ்ந்திறந்தார் நோய்வருத்த மாண்டோர்
    வன்கொலையினால் மரித்தோர் நஞ்சால் மாய்ந்தோர்
ஆர் எவரென்று எடுத்தறைய முடியுமாமோ
    அவர்தொகையுள் அடியனும் ஓராளதாகச்
சேரவிடாய் எவ்வருத்தம் எனினுஞ்சிறித்
    தீண்டவிடாய் சுவாத்தியமாய்ச் சீவித்தாலும்
நேரம்பார் சுகமரணம் தரப்பார்நேய
    நித்தியவீடு அது தரப்பார் நிமலா யேசே. ௩௬

கக்கமதுட் கன்றைவைத்துக் கால்போலோடிக்
    கண்டவர் நின்றவர் கடமைக்கண்டென்கன்று
புக்கதுவோ உங்களது புனம்[3]என்றுள்ளம்
    புழுங்கியழும் மதியிலிபோற் பொன்னேர் என்னுள்
எக்கணமும் நீவதிய எங்குற்றாய் என்று
    இரக்கமுடன் திரிந்தலைந்தேன் நின்னேகண்டேன்
துக்கமொடுன் துணைப்பதத்தில் விழுந்தேன் துன்பில்
    சுகமரணம் தாவீடுஈ சுயம்பே யேசே. ௩௭

---

1. உயர்ந்த. 2. கடல். 3. வயல்.

## 16 சுகமரணாபீஷ்டம்

ஆதித்தன் தன்னை ஆயமாகக் கொண்டும்
அதன்திண்மைக் கவர்ச்சியினால் அணியாய் நின்றும்
சோதிபெற்றும் கிரகம் கடுவமாய் நாளுஞ்
சுழல்வதுபோல் நின்னை மத்தியாகச் சுற்றி
ஆதரவும் அருளொளியும் அடைந்தேன் என்பது
அறிந்திருந்தும் மகன்மறந்தவனை நேர்என்னை
ஏதிலனாய் இகழ்ந்துபிணிச் சிறைவீடு ஏற்றாய்
இன்பசுக மரணமுத்தி ஈயென் யேசே. ஙஅ

துன்பம் என்ற மாற்றமது சுருதி[1]விழிற்
துணுக்கமுறும் உளமுடையேன் றுனி[2]சூழ்ந்துற்றாற்
கண்பனிப்னே் நெடுநாளாய்க் கட்டில்சாயிற்
காலந்தான் தள்ளுவனோ கருதாய் கொல்லோ
ஒன்பதெனும் வாசல் அவை ஒடுங்கிக் கட்டைக்கு
ஒப்பாக யான்கிடக்க உனக்குச் சித்தம்
என்பதுதான் வந்திடுமோ சௌக்கியம் என்றே
இருக்குங்கால் சுகமரண பரம்ஈ யேசே. ஙக

மதகரியின் முழக்குஅஞ்சேன் வயமா[3]அஞ்சேன்
மாசுணம்[4]அஞ்சேன் கொடுமா மருத்[5]துக்கு
உதகம் அஞ்சேன் பிறபூதம் உருத்தும் அஞ்சேன்
ஒன்னலருக்கு அஞ்சேன்மற்று உலகர்க்கு அஞ்சேன்
கத[6]முறு பேய்தனக்கு அஞ்சேன் கடுநோயென்றாற்
கையுடன்கால் பதற அஞ்சிக் கரைவேன் சித்தம்
இதமுடனே ரோகமிலாது இருக்கும்போதே
ஈகசுக மரணம்வீடு இறைவா யேசே. ச0

தூர்போக்கிக் கவடெறிந்து தூரத்தோங்கிச்
சூழ்ந்த அகல்இடந்தாவிச் சொர்ணம் காய்த்து
ஆரார்க்கும் அருமருந்தாய் முதுமை யாகி
அருமை கெட்டுச் சாய்விருக்க மஃதே நேராய்ப்

---

1. காது. 2. நோய். 3. புலி. 4. பாம்பு. 5. காற்று. 6. உக்கிரம்

பேரழிந்து பெலங்குறைந்து பெருமை குன்றிப்
பிதற்கு வெறுந்தடி எனநோய் பிளக்கவையாய்
நேரமினிச் செல்லாது நின்மேல் வீட்டில்
நேயமுற்றேன் சுகமரண நீதா யேசே. ௪௧

குறைவதிலாது உறவர் அன்பர் குழாமா ஆர்ந்தும்
குணஞ்சிறந்த பரிசனர்தாம் குழுமிச் சூழ்ந்தும்
அறைவசெய ஆயத்தம் ஆன ஆட்கள்
அயல்புடையிற் சமுதாயம்[1] ஆகநின்றும்
பெறுபயனென்று இன்றி அன்னாய் பிதாவே என்று
பெருங்குரலிட்டு இறந்த பலபேரைக் கண்டேன்
குறுவெயர்வு கொளப் பிறர்க்குக் கொடிதாம் தொல்லை
கொடாதசுக மரணபரம் கொடுப்பாய் யேசே ௪௨

கோல் எடுத்த மகனதுகண் குருடாம் என்றுஇக்
குவலயத்தார் மொழிவர் அந்தக் கூற்றுப் பொய்யோ
மால்[2]அடுத்த உலகமதை மனக்கை கொண்டு
மமதை[3]உற்று மதிநயனம் மயங்கிப் போனேன்
பால் எடுக்கிக் கொடுத்திடு தாய் பகைத்த பாலன்
பதைத்தாற்போற் பதைக்க விடாய் பசும்புண் மேலே
வேல் உறுத்து எனநோயால் விருத்தனேற்கு
வேதைதராய் சுகமரண வீடுஈ யேசே. ௪௩

நீரதனுள் பாசியந்த நீருள் தூரை
நீட்டாமல் அந்தரத்தில் நின்றாற்போல
ஆர்தர நின்மேலே நல் அன்பாம் வேர்வைத்து
அசையாமல் நில்லாமல் அலைந்து உலைந்து
பார்தரு பல்லாசையை முன்மூட்டையாப் பண்ணிப்
பரம் பொருளைப் பின்மூட்டை ஆகப்பந்தித்து
ஏரழிந்தான் இவனென விட்டிடாதே வாஞ்சைக்கு
ஏற்றசுக மரணபர மீயென் யேசே. ௪௪

---

1. கூட்டம். 2. மயக்கம். 3. அகந்தை.

# 18 சுகமரணாபீஷ்டம்

மலசலங்கள் கழிக்க எழும் பலந்தான் மாற
வயிறதுஒட்டி அமுத அன்ன வாஞ்சைபோக
அலமலந்த பார்வையுடன் கண்பஞ்சாடி
அருங்கிடையில் ஆனியங்கள்[1]அநேகம் செல்ல
வலமிடம் வந்திருந்த அவர்தம் மனசும் கையும்
வரவரவே சலிப்படைய மாய்ந்த பேரைப்
பலதரமும் கண்டுமிகப் பயந்தேன் என்மேற்
பரிந்துசுக மரணந்தா பரந்தா யேசே. சரு

நித்திரை செய்திடும் அமய நேயச் சீவன்
நீத்தவர்உண்டு அசனமுனு நிமிடம் தன்னிற்
சுத்தமாய் வருத்தமொடு தொல்லையின்றிச்
சுகவாளராய் மரித்த சுகுணர் உண்டு
சித்திரமாம் ஓவியம்போற் செயல்பேச்சு அற்றுச்
சேடமின்றிக் கணமதனிற் செத்தாருண்டு
இத்தொகையுட் சேர வதி யிரதி[2]கொண்டேன்
ஈகசுக மரணம்வீடு இறைவா யேசே. சசு

மாதாவின் உதரமதால் மண்மேல் வீழ்ந்து
மடியில்வளர்ந்து இருந்து தவழ்ந்து எழுந்துமன்னும்
ஆதாரம்உடன் நடந்து பால்யம் ஆதி
அருமையதாம் பருவங்கள் அடைவாய்த் தாண்டிப்
போதாது போதாதென்று உலகம் போற்றும்
போகங்கள் அனுபவித்து வயசும் போந்தேன்
தாதார்நின் செங்கமல பாதச் சார்பைத்
தாகித்தேன் சுகமரணந் தாதா யேசே. சஎ

சித்தமிகப் பிரபை[3]கொளச் சயனம் தீர்ந்து
திடுதிடென எழுந்துதெரு வீதி சென்று
மத்தரெனத் திசைமயங்கி மாறியோடி
மாறாட்டத் துடன் சிலபேர் மாயக்கண்டேன்

---

1. நாள். 2. ஆசை. 3. மயக்கம்.

இத்தொகையுள் வைக்காதே எல்லாம் சேமம்
என்றிருக்கும் செவ்வி சுக மரணம் ஈந்து
நித்தியவீடு அதிற்சேர்ப்பை நீயென் நாதன்
நிச்சயம் யான்நின்னடியன் நிமலா யேசே. சஅ

கம்பியிடை மின்புகட்டிக் காதங்கோடி
கலைவி கலைக் காலமதிற் காடுமேடு
அம்பி[1]யுலாங் கடலாதி இடம்ஆராய்ந்துஅங்கு
அடுத்த வர்த்தமானம் அனுப்பறிஞர் என்ன
இம்பர்நின்று உன்அம்பரத்துக்கு என்விண்ணப்பம்
என்றகம்பியேற்றி நின்னோடு இசைவாய்ப்பேசா
வம்பனென்று பிணிதாராய் முத்திவாசம்
வழங்கமுன்தா சுகமரணம் வள்ளால் யேசே. சகூ

அம்புலி[2]யாம் வன்புலியை அரமிய[3]த்தில்
அடுக்கிவைத்த படிமக்கல[4]த்து உள்ளாக்கிக்
கொம்படுத்த கூடமதைக் கொண்டு கொல்லர்க்
கூவியெற்று விப்பிர்என்ற கூற்றுப் போல
வம்புசெய்து என்னுடல் புகுந்த வலிதாம் ரோகம்
வந்தவழி ஓட நின்றன் வாரத்[5]தண்டாற்
தும்புதும்பாய்ப் பறக்கடித்துத் துயரம் தாராச்
சுகமரணந் தாபரந்தா தூயா யேசே. ரு0

தூக்குவது நிமிர்த்துவதும் கஷ்டம் தூக்கித்
தூவமுதம் ஊட்டுவதும் சோலிதூங்கக்
காக்குவதும் பிரயாசை கணங்கொண்டு ஈகள்
கடியாமல் இராப்பகலாய்க் கருத்துள் வைத்து
நோக்குவதும் அருமையிவை நொய்திற் செய்து
நுவல்வருத்தம் அகன்றிடுமோ நோயாற் பன்னாட்
சேக்கைமிசைக் கிடந்தழுந்தத் திரா தெற்குத்
திகழ்ந்த சுகமரணந்தா சிவந்தா யேசே. ருக

---

1. நாவாய். 2. சந்திரன். 3. நிலாமுற்றம்.
4. கண்ணாடி. 5. அன்பு.

காட்டம்[1]அதிலேற்றிவைத்துக் கருக்கில் என்ன
கால்கழுத்திற் கயிறுகட்டி இழுக்கில் என்ன
போட்டவிட நாய்நரிகள் புசிக்கில் என்ன
பூலோக இந்திரன்போல் ரதத்திற் போக்கி
நாட்டமது ஆயாசந்தி[2]தன்னை நாடி
நார்நூற்றுக் கணக்கில் நின்று நடித்தால் என்ன
ஆட்டமன்றி ஆன்மபயன் ஆமோ மோட்ச
அரும்பதிதா சுகமரணம் அதன்பின் யேசே. ருஉ

பொருள் இருந்தென் கிளையிருந்துஎன் புலவர் கூடிப்
பூபாலன் குபேரன் என்று போற்றினால்என்
வருபுகழ்ஏது உனைமறந்துஇம் மாயவாழ்வில்
மகிழ்வேனோ பன்நோயால் மாழ்கவையாய்
குருபரனே தொழுபவர்தம் பவநோய் கோறும்[3]
கொற்றவனே நினதுபதாம் புயமும் கோலத்
திருவுருவும் உளம்பதித்தேன் செகேசா தாதா
சிறந்தசுக மரணசிவச் செல்வம் யேசே. ருக

நெடுங்காலம் வாழநெஞ்சில் நினையாதேனை
நீள்நிலத்தில் நிறுத்திவைத்து உள்நேசம் போக்கி
அடும்படி பன்நோய்களையும் அனுப்பிவிட்டு
அன்பதனைக் கொல்லுவையோ அகாதன்[4]என்றும்
கொடும்பதகன் கோடணையன்[5]குரூரன் என்றும்
கூசாமற் பேய்பணிந்த கதலை[6]என்றும்
படும்பாட்டின் மகிழுவையோ பருவம் பார்த்துப்
பணித்தி சுகமரணசிவம் பரனே யேசே. ருச

அருகிலிருந்து அரவணைக்க அனையில்லாமல்
ஆசூசம் தவிர்க்க மனையாள் இல்லாமல்
உருகியுளம் பரிய உடன்உதித்தார் உற்றார்
ஒருவருமில்லாமல் உயிர்ஒழிந்த பேர்கள்

---

1. விறகு. 2. பாடை. 3. கொல்லும். 4. வஞ்சகன். 5. கொடியன். 6. அறிவிலி.

தரையதன்கண் அனந்தமுண்டால் அடியேன்தன்னந்
　　தனியனென மலங்குவனோ நினது தஞ்சம்
அரைநிமிடம் ஏனும்எனை அகலாதாக்கி
　　அருள்வைக்க மரணமுத்தி ஐயா யேசே. ருரு

ஐயாநின் அடியாருக்கு அடியான் யானே
　　அகதிகளுக்கு ஆகாயம் துணையென்று ஆய்ந்து
வையகம் சொல்லிடுமே என் அளவில்மானும்
　　வகையதுதான் யாதுன் அகம் அசையாக் கல்லோ
கைபாமல் என்கிளைஞர் கல்லென்று ஏங்கிக்
　　கலங்காமல் இதுதகும் சா எனக்கதைக்க
மெய்யாய் நற்சுகமரணம் அருளி மேலாம்
　　மீளாநற் கதியதுதா விமலா யேசே. ருகூ

ஆகாயக் கோட்டைகட்டும் ஆதன்[1] தீமைக்கு
　　அடியான் மெய்யற்றவர்தம்அன்பன் வஞ்சன்
மீகாமன் இலாதமரக் கலம்போல் நெஞ்சன்
　　நீதிநெறி வழிகுறுக்காய் நிற்கும் நீசன்
ஆகார்க்கும் மித்திரன் அன்பற்றார்க்கு இன்பன்
　　அருளில்லார்மேல் மருள்வான் அறங்கொல்வான்என்று
ஈகாக்கும் என்னுடம்பை நோய்வாய்க்கு ஈயாது
　　இன்பசுக மரணபரம் எனக்கீ யேசே. ருஎ

கன்மவினைப் பாழ்ங்கிடங்கின் கரையைக் காணாக்
　　கவன்[2] உழன்ற மாந்தருக்காய்க் கவன்று[3] அன்னார்தம்
சென்மம் எடுத்தவனே நீ எனக்காய்ச் சீவன்
　　தியாகம் செய்திலையோ மெய்ச் சிநேகமற்ற
அன்னியன்போல் இருந்தென்முனம் அனுகாய் அண்டாய்
　　அரும்பிணிகள் வாட்டவிடுத்து அயல்நிற்பாயோ
தொன்மறையும் அடிமுடிகாணாதோய் தூய
　　சுகமரணசொற்கம்தா துவந்தா யேசே. ருஅ

---

1. அறிவிலி. 2. வருந்தி. 3. கவலைகொள்ளல்.

## 22 சுகமரணாபீஷ்டம்

கங்காள[1]மாய்ப் படிவம் மெலிந்து காயக்
கால்முடங்கக் கரம் அடங்கக் கதித்துப் புண்போல்
அங்கமுற்றாய் நோவநல்ல அனந்தல்தீர
அடிக்கடி விக்குளது[2]எழும்ப வகடும்[3]ஊத
மங்காத நயன ஒளி மங்கி மாற
வாகான சுரோத்திரங்[4]கள் மந்தமாகிப்
பங்குபங்காய் மரித்தவரைப் பார்த்தேன் தாதா
பக்குவமார் சுகமரண பரம் என் யேசே. ருக.

பாயலுடன் ஒட்டி உறவாகிப் பண்பாய்ப்
பறையவென்று வாயெடுத்தும் பலன்தான் தேயக்
காயெரிமுன் பச்சிலைபோல் நோயிற்காய்ந்து
கவனம் அதாய்ப் பன்முறையும் கண்டநேசர்
சாயல் அறியார் மயங்க உயிர்போய்ச் சாய்ந்த
சச்சன[5]ரைத் தாமறிவேன் சனங்கள் தோறும்
வாயினில் அறநாமம் அன்றி மற்றொன்று உண்டோ
வழங்கு சுக மரணபரம் மகிபா யேசே. சு0

உச்சிமுதல் அடிவரைக்கும் உன்நாமத்தை
ஒழுங்கொழுங்காய் இடைதவறாது ஒருங்கு சேர்த்து
அச்சடித்து வைத்ததென அங்கத்துள்ளே
அமர்ந்திடச்செய்து அனந்தலிலும் அவற்றைப்பல்கால்
உச்சரிப்பது அலலால் வேறொருவர் பேரை
உரைத்ததுண்டோ நியுரைத்தி ஒருவர் இல்லாப்
பிச்சனென மரிக்கவிடாய் பீடார் மோட்ச
பேறுடன்தா சுகமரணம் பெம்மான் யேசே. சுக

நான் எனதென்று அகமமதைத் துவசம் நாட்டி
நாயகனாம் நினதருளை நகைத்துத் தள்ளி
வானமுகம் நோக்காது வைய வாழ்வில்
மயங்கினவன் பேயனென மனசுள் வைத்து

---

1. உடல். 2. விக்கல். 3. வயிறு. 4. காது. 5. சற்சனர்.

# சுகமரணாபீஷ்டம் 23

ஊனைஉடனும் நோயனுப்ப உள்காய்[1]அப்பா
ஒருமுறைபோற் பன்முறை நிற்கோலந் தந்தேன்
தேனமுதம் கலந்தவின்ப சிவந்தா புந்தி
தெளிந்த சுக மரணந்தா தேசார் யேசே. கூஉ

துன்பம் உறில் துணைப்பாதம் காட்டும்கால
தூததுஎன்று உளங்களிப்பேன் சுகம்வந்தால் என்
அன்பனை நேர்காண் தருணம் அகன்றதுஎன்றென்று
அகங்குலைவேன் நெடுநோய்வாய் அதனுட்பட்டால்
என்புதனித் தனிகழல ஈரல்தீய
இருந்துஅரங்க வரும் வந்தால் இயாதுசெய்வேன்
பின்பதென்று போடாதே பிரானே மீளாப்
பெருங்கதிதா சுகமரண பெலந்தா யேசே. கூகூ

விப்புருதி எனில் அதனை விறலாய்த் தாங்கும்
வீரசக்தி என்னிடத்தில் விளங்கவில்லை
செப்புசல ரோகமொழி செவியில் வீழ்ந்தால்
திடுக்கிடுவேன் நடுக்கமுற்றுத் தேகஞ் சோர்வேன்
இப்பெயர்த்தாம் பிணிநெருங்கில் இயாதுசெய்வேன்
எற்கிறங்கி யாரவற்றை என்னால் ஏற்பார்
அப்படி வாராது சுகமரணம் தந்துன்
அடிக்கமலத் தருகிருத்தாய் ஐயா யேசே. கூகூ

உரோகம் உறாதிருக்க உளம் உள்கினாலும்
உள்ளபடி ஆகுமலாது உளம்போலாமோ
வரோதைய[2]னாய் நினைந்துஅகத்தின் மமதை கொள்ளேன்
மாநிலத்திற் சாட்டின்றி மரணம் உண்டோ
சரோருகநீர் போலுலகில் தங்கினோர்க்கும்
சாவதற்கோர் அற்பபிணி தான்வேண்டாமோ
உரோதனம்[3]செய்து அழுங்கவிடாய் உனதுவீடோ
உவகைதரும் சுகமரணம் உதவென் யேசே. கூரு

---

1. நினையாய். 2. வரத்தாற்பிறந்தவன். 3. அழுதல்.

## 24 சுகமரணாபீஷ்டம்

ஒன்றேயாய் உயிர்க்குயிராய் ஊமர்போல
ஒழுங்கிமனசு அடங்கிடுவார் உளப்போதுஏறி
நன்றேவீற் றிருந்துஅரசு புரிஎன் நாதா
நானிலத்தில் எனைமறந்தால் நாய்போல்நீசன்
என்றேநின் அருட்கை முடக்காதே ஈன்றாட்கு
எடுக்கி வளர்த்திடுதல் கடன்இது மெய்யன்றோ
கன்றேயான் நீகறவை நோய்க் கெற்காட்டாக்
கருதுசுக மரணமுத்தி கற்பி யேசே. ௬௨௬

சிற்றூசி[1]சகத்திரம் ஒன்றாகச் சேர்த்து
திடுதிடென உள்நாடி நாளம் தேடி
உற்றூர்ந்து மயிர்க்கால்கள் தோறும் ஓடி
ஓர்மமுடன் படைவகுத்து உள்ளொலியாய் நின்று
குற்றுவபோல் துன்னீர்கள் குமிறிக் குற்றக்
கூர்ந்து உனை எழுந்தயர்தி கொள்ள வாட்டச்
சற்றுமெனைத் தனிக்கவிடாய் சலச நேர்நின்
தாள் தரமுன் சுகமரணந் தருவாய் யேசே. ௬௩

உப்பது இட்ட மட்பாண்டம் ஒப்பாம்இந்த
உடம்புடைந்து மண்ணாகாது உளநாளெல்லாம்
செப்பமதாய்ச் சீராட்டி வைத்தென்தேய்ந்து
சிறிதிளைக்கச் சிரங்குகுட்டஞ் சேற்பம் ஆதி
அப்பியெனை விழுங்குமென அச்சமுற்றேன்
அதற்குமுன் என்ஆன்மாவை அதினின்று ஓட்டித்
தப்புவித்துன் சாலோகம் சார்ந்து வாழும்
சலாக்கியந்தா சுகமரணந் தாதா யேசே. ௬௧

எப்படிஎன் ஆயுள்அந்தம் ஆமோ என்னா
இரவுபகல் எண்ணியெண்ணி யினைவேன் அல்லால்
அற்பமும் யானிறந்திடுதற்கு அஞ்சேன் மஞ்சம்
அதிற்பன்னாட் கிடந்துபடும் அவதியோடு

1. ஆயிரம்.

சொற்பமலப் பெருங்கவலை உற்றுச் சூழ்ந்தார்
தொல்லையை வன்சுமையாகச் சுட்டிஅன்றோ
அப்பனே எனைநின்வீடு அழைஎன்று ஓலம்
அனுப்பினேன் சுகமரணம் அருள்வை யேசே. சுகூ

பேறிளமை இன்பமுடன் பிணிநீள் மூப்பு
பிறங்கிடு சாவென்று உலகர் பிரித்துப் பேசும்
ஆறிவைதாம் கருவில்உள அமைப்பானால் என்
அல்லவெனில் என்னஐயா எனக்கென்னாமோ
நாறுடலம் இதுட்புகுந்து நடித்து நோய்கள்
நலிவுசெயாது என்பேரில் நயந்து மேலாம்
ஆறுதல்தா சுகமரணம் அதுதா தந்துன்
அபவருக்கம் தாஅருள்தா ஐயா யேசே. எ0

அநித்தமதாம் சகத்தைமெய்யென்று ஆனந்தித்தோர்
அணுவளவும் மறுமைதனை அகத்துள்ளாமற்
பனித்தரையில் ஏர்ப்பூட்டும் பதரற்கு ஒப்பாய்ப்
பாழான பிரபஞ்சப் பற்று விஞ்சித்
திணைத்துணையும் உனைத்துதியாத் தீயநாயன்
சீடர்தம்உட் சினஞ்சிறியன் என்றுதீர
எனைத்தனியன் ஆக்காது உன்பதவி ஈவை
இன்பசுக மரணமுடன் ஏந்தால் யேசே. எக

தக்கார்மற்று அறவர் இவர்தாம் நம்தகாதார் என்று
தரம்பார்த்து முகம்பாக்கும் தன்மை நின்னில்
எக்காலம் இலதுஅறிவேன் யானோர் அஞ்ஞை[1]
என்றனைநீ அலட்சியமாய் இன்றும்எண்ணாய்
அக்காரம்[2]எனில்நாவில் சுவைக்குமாமோ
அடிமையென்றால் அருந்துயரம் அறுமோ சின்னக்
கைக்குழந்தை போல்அணைத்தென் காதல் தீர்க்கும்
கதியுடன்தா சுகமரணம் கருத்தா யேசே. எஉ

---

1. அறிவிலி. 2. சர்க்கரை.

# 26 சுகமரணாபீஷ்டம்

ஆய்ச்சியர்[1]தம் கையுறும் மத்துஅவைபோல் தாங்கற்கு
அருமையதாம் ரோகமத்திவ் அங்கத்தாழி
போய்க் குடிகொண்டு இருந்து உழக்கிப் புடைத்துத் தாக்கிப்
பொருதவிடாய் மனஉறுகண்[3]போதவையாய்
சீச்சியெனப் பார்த்தவர்கள் சிரிக்கச் செய்யாய்
சிந்தைதெளி சுகமரண செல்வம்தந்து
காய்ச்சிய பால்நெய்போல்நிற் கலந்துவாழுங்
கருதரு நிர்வாண[4]மும்தா கருத்தா யேசே. ௭௩

செக்கினடி அகம்வீழ்ந்த சிறிதா நூவு[5]
சிறுமுசல[6]த் தாக்கினுக்குச் சிதைவுறாதோ
சுக்கினது கஷாயமயந் துய்த்த போர்க்குத்
தூவவும்தம் ஆகிடுமோ துன்று நோயின்
கைக்குளகப் பட்டவர்க்குக் கதிவேறுண்டோ
காத்தருகில் இருப்பவர்தாங் கரைசேர்ப்பாரோ
நெக்கி என்பு குலைந்துலைந்து நிதம் நையாமல்
நேயசுக மரணகதி நீதா யேசே. ௭௪

தாய்வருத்தம் அடைந்திட்டாற் சனிக்கும் கர்ப்பம்
சௌக்கியம் பெற்றிடுமாமோ தருமமின்றி
நோய்புகுந்து பிடித்தொருவர்த் தாக்கி நூறில்
நூதனமோ மனசினுக்கு நொய்திலேனும்
வாய்மையதாம் ஆனந்தம் உறுமோ மாறா
மம்மர்[7]வர ஆறுதலும் மடிந்துபோமே
சேய்மையுறாய் தேகபசு பந்தம் தீர்த்துச்
சிவந்தருமுன் சுகமரணத் திருத்தா யேசே. ௭௫

ஓசையிலாது உடைந்தவெண் சங்கொளிர் நீறல்லால்
உலகருக்கு வேறுபயன் உதவுமோ மண்
ஆசைதனை விதைத்தது அலைச்சல் அறுத்துச்சாவுக்கு
அனுமையனாம் அளியேனால் ஆருக் கேனும்

---

1. இடைச்சியர். 2. குடம். 3. துன்பம். 4. மோட்சம்.
5. எள்ளு. 6. உலக்கை. 7. மயக்கம்.

# சுகமரணாபீஷ்டம் 27

பேசுமொரு சபலமுண்டோ பிணத்தால் ஆர்க்கும்
　　பெறும்பயன் உண்டோபிணியாற் பேய்போல் ஆகிக்
காசடைய வையாதே கருணை வைத்துன்
　　கதிக்குமுன்தா சுகமரணம் கண்ணே யேசே. எகூ

தறிபட்ட தருப்போ[1]நீள் சயனம் சாய்ந்து
　　தலைநிமிர்த்தி எழும்புதற்குச் சக்தியற்று
முறிபட்டதென வத்தி[2]முழுதுநோவ
　　மூர்ச்சையுறச் செந்நீர் தண்ணீராய் மோதக்
கொறிபட்ட செந்நெலெனக் கோதே யாகிக்
　　கோலமது மாறாகிக் குணம் வேறாகி
வெறிபட்ட பித்தனென்று விடாதே நாயேன்
　　வேட்டசுக மரணமொடுன் வீடுஈ யேசே. எஎ

கொட்டியெனும் சிறுபூண்டு குளநீர் வற்றக்
　　கொண்ட உறவால் உலரும் கொள்கைபோல்
ஒட்டியவென் கிளைஞர் உலர்ந்து உளஞ்சலிக்க
　　உரோக இராக்கதன் சிறையில் என்னையுய்த்தால்
வெட்டியதால் மீட்டெடுத்து விடுவாருண்டோ
　　விருதாவின் நரர்பாதம் வீழ்ந்திறுக்கிக்
கட்டியதிற் பயனென்ன கதிதா என்ன
　　களிக்கத்தா சுகமரணம் கதிதா யேசே. எஅ

கண்டஇளம் சிறுவர்கள் தாம் பரிந்து கண்ணாற்
　　களகளென்று நீருற்றக் களவம் பூசும்
பெண்டீர்கள் மனமிரங்கிப் பிரலாபித்துப்
　　பெருமூச்சு விட்டலற உற்றார் பித்தம்
கொண்டவர்போல அந்தோ என்றுஅலறிக் கூவக்
　　கொடும் பிணிசெய் வருத்தம்அதைக் கொஞ்சமேனும்
விண்டுசொலார் மிகக்கலங்கி வியக்கண்டேன்
　　வெருவினேன் சுகமரணம் வீடுஈ யேசே. எகூ

---

1. மரம். 2. எலும்பு.

# 28 சுகமரணாபீஷ்டம்

ககனமதிற் பறக்கவிட்ட பட்டம்[1]கட்டும்
கயிறுதரைக்கு இழுக்கவுந்திக் காற்றுத் தள்ள
மிகஅலைவுற்று இடைநடுவே மிதந்தவண்ணம்
விண்ணாசை மேல்வாங்க விபுலை[2]யாசை
தகவுடன் கீழ்வாங்கவுளச் சலனம் கொண்ட
தமியனை இச்சாங்காலம் உரோகம்சாடி
அகம் உலைய வாட்டியடர்த்து அமுக்க வையாய்
அளிப்பைசுக மரணமுத்தி அத்தா யேசே. அ0

உன்உபய பதசேவை புரியஉள்ளத்து
ஓவாமல் ஆசைகொளாது உலகஆசை
தன்னைவைத்துப் பூசைசெய்து சந்தோஷித்த
சண்டாளப் பாவியென்று தமியேற் தள்ளாய்
இன்னேயென் தரிசனத்துக்கு எதிராய் வாராய்
இன்பசுக ஆனந்த நிருவாணம் ஈவாய்
பொன்னே கண்மணியே புத்தேளிர்[3]போற்றப்
பொருவில்சுக மரணந்தா புனித யேசே. அக

விம்மலுடன் பொருமலுற்று விதனம் கொண்டு
மேவினரும் மித்திரரும் எய்தான் சோர்ந்து
அம்மாவென்று அரற்றி அழப் பிணிகாள் ஆண்மை
அடியேனிற் காட்டல்உமக்கு அழகதாமோ
சும்மாவோர் வீணனெனத் துணியீர் தேவ
தொண்டருக்குத் தொண்டனியான் தூரநிற்பீர்
பெம்மானே சுகமரணப் பேறு தந்து
பின்தாதா பெருமோட்சப் பேறென் யேசே. அஉ

வேதாள விக்கிரகத் தொழும்பு வேட்டு
வீணருடன் வீணனெனத் திரியும் வேலை
தீதெனவே நீக்கிவிட்டுன் பாத சேவை
செய்தவெனைப் பிணிச்சிறையில் திணித்துப் பூட்டி

---

1. கடதாசிக்கொடி. 2. பூமி. 3. வானோர்.

ஆதரவு செய்யாமல் அளிகாட்டாமல்
ஆனபடி ஆகட்டுஎன்று அகல நில்லாய்
நீதியொரு கரமென்றுஉன் அருட்கை நீக்காய்
நேயசுக மரணபர நிதிதா யேசே. அங

ஒன்றுபல தொண்டமைத்துக் குருவாய் உன்னை
உளநிறுத்திப் பூசனைதான் ஒழுங்காய்ச் செய்தேன்
கொன்றன தீங்காற்றிடினும் கொண்டான் தன்னைக்
குவலயத்திற் புறக்கணிக்கும் குணவான் உண்டோ
குன்று1தலைக் கொண்டசிறுக் குரீஇ2யேபோலக்
குறுகுறென்று நோய்நசிக்க குறிப்பாய்ப் பார்த்து
என்றும்போல் தூரநிலாய் இன்பமுத்தி
ஈயமுனம் சுகமரணம் ஈஎன் யேசே. அச

இருட்டறையில் தடவியத்தம் இளைத்தான் ஒப்பாய்
இகத்திலெனது உளத்திடை நீ இருந்தபோதும்
மருள்துறையிற் படிந்து பரவாசன் எங்கே
மாண்புதரும் கைவல்ய வாழ்வெங்கு என்று
பொருள்தெரியான் தடவி மதிபோனான் என்று
பொருது அடர்க்கப் பணிகள் குடிபுகுத விட்டு
அருள்துறை காட்டாது அகல நில்லாய் மோட்ச
ஆனந்தந்தா சுகமரணம் அதுதா யேசே. அரு

நானறியத் தினங்கள் பல நல்ல ஆகாரம்
நாவதில்லை யாது மிகநலிந்துகான் வாழ்
மானிகர் கண் மடவரல்கள் உடன் நன்மைந்தன்
மகள் மருகி மருங்கதினில் மாழ்கிநிற்கத்
தேனுறழு நேசர் அழத் தீரர்ஏங்கச்
செத்த பத்தரிலரோ நோய்செயித்தார் உண்டோ
பேனையொக்கும் சிறுகாலப் பிரிவும் பிந்தாய்
பிரியசுக மரணமுத்திப் பேறுஈ யேசே. அசு

1. மலை. 2. குருவி.

ஆலையிட்டுச் சிறுகரும்பை ஆட்டல் போல
அல்லி[1]யுடன் நிவர[2]ப்பலவாய் அடர்பல்நோய்கள்
வேலைபிறிதி ஒன்றுமின்றி என்னை வீட்டும்
வேலையதே வேலையதாய் விழைவு கொண்டால்
ஓலமிடாது இருப்பேனோ உனைக் கெஞ்சேனோ
ஒருநாட்போல் பல்நாளாய் ஊண்உறக்கம்
சாலவிலாது இருக்கவையாய் முத்தி சாரத்
தயைபுரிவாய் சுகமரணம் தருவாய் யேசே. எ

ஒருதலைக்கோர் தண்டமென்றால் ஒல்லும் தாங்க
ஒன்றின்மேல் பலவென்றால் ஒல்குவாரோ
தெரிசனஞ்செய் நயனமங்கச் செவிடு மண்டத்
திரமான நடையழிந்து செயல்தான் குன்ற
வரவரக் கால்கரம் முடங்க மனந்தான் மாற
மால்[3]கதிக்க ரோகமது வந்து கூடித்
தருமம்அறச் சாடிலெற்குத் தஞ்சம் வேறார்
தாவில்சுக மரணபரம் தாதா யேசே. அஅ

கொதுகினுக்கு நீரழிவுக் கொடுமை யோடே
குரூரமுறும் பிளவைவரிற் கொதுகென் செய்யும்
முதுவயசால் மெலிந்தவரைப் பிணிமேல் மூடி
முனியுமெனிற் செய்வதெவன் முதியேன் சாலச்
சதுரன்அலேன் ஆயினும் நின் தாசனன்றோ
தாசரைநோய் சயிக்கவிடல் தருமம் ஆமோ
விதிவலிதுஎன்று உளறேல் நின்அருளை வேட்டேன்
விருப்பொடுநற் சுகமரண வீடுஈ யேசே. அக

கிருமி குடிபுகுந்து பல்கிக் கிளைக்கும் பாண்டங்கு
ஏதமுறா ஒருதினம்போற் கிளர்த்தும் பல்லாண்டு
அருமைபெற வளர்த்துக்காத்து அழகாய் வைத்தேன்
அவ்வருமை எள்ளளவும் அகங்கொளாமல்

---

1. இரா. 2. பகல். 3. மயக்கம்.

இருபதத்த இராக்கதனே என்னச்சீறி
இதரபிணி கூட்டங்கள் ஏய்ந்தொன்றாகித்
திரிகையின் மாவென அரைத்துச் செயிக்கமுன்னர்ச்
சிறந்தசுக மரணமுத்தித் திருத்தா யேசே. க0

மாயாவி ஒருவன்செய் மகேந்த்ர சாலம்
மாந்தர்கள்தம் மனசுகளை மயக்கல் போலப்
பேயாம்இப் பிரபஞ்சம் பிடித்து எனுள்ளம்
பிரமைகொளச் செய்ததனாற் பேய்போல் ஆகி
ஓயாமல் இந்நாட்காறு உலைந்தேன் உன்றன்
ஒப்பறு ஞானப் படையால் உளம்வெளித்தேன்
தூயாவிக் கடைக்காலந் துனிசூழா முன்
சுகமரண சொர்க்கந்தா தோன்றால் யேசே. கூக

குப்புறவே சிரசுகுத்திக் குதித்தால் என்ன
கொடிபூட்டிப் பிடித்துநின்று குழறில் என்ன
அப்பாவென்று ஆர்ப்புடனே ஆற்றில் என்ன
ஆ வூ வோ எனப் புலம்பி அழுதால் என்ன
தப்பாமற் பூஞையின்வாய்அத் தத்தை[1]ஒப்பத்
தமியேனைப் பிடித்தபிணி தான்தீரும்மோ
ஒப்புவமை இல்லாய்உன் பதவியுள்கி[2]
ஓலமிட்டேன் சுகமரணம் உதவாய் யேசே. கூஉ

வீக்கங்கொண்டு உடல்எங்கும் மினுமினுத்து
வெடித்தழுக நீர்பாய்ந்து விரவினார்தம்
மூக்கையறப் பழுதாக்கி முன்னே சென்று
மொய்த்தவரை அகல்விக்கும் உடைசேர் ஊத்தை
ஆக்கையிதால் அதிற்பல்நோய் புகுமேல் அந்தோ
அவைபுரியும் அநியாயம் மறையப்போமோ
காக்கும்உள்ளம் நினக்குளதேற் கண்ணாய்க் காத்துக்
கருதுசுக மரணமுடன் கதிதா யேசே. கூகூ

---

1. கிளிப்பிள்ளை. 2. நினைந்து.

# 32 சுகமரணாபீஷ்டம்

காக்கை குத்தி அலைத்திழுத்துக் கவ்வி உண்ணும்
    களேபர[1]த்தை அல்லுடனெற்கழுவிச் சுத்தம்
ஆக்கிவைத்துப் பூசித்து நீயேற்றுஆளும்
    ஆலயமாய்ப் பேணிவைத்தேன் அத்தைப் பல்நோய்
ஊக்கித்தம் உறைவிடமாய் உவந்து புற்றுள்
    ஒடுங்கிடு பன்னாகம்போல் உரற்றிச் சீறித்
தாக்கலுற்றால் தாங்குவன்மை தமியேற்கு உண்டோ
    தருகசுக மரணமுத்தி தாதா யேசே. கூச

தங்கபற்பம் வங்கபற்பம் தரளப் பற்பம்
    தாம்பிரத்தின் பற்பம் அரிதாரப் பற்பம்
இங்கிவையோடு ஏலாதி கடுகம் என்னும்
    எம்மருந்தில் எனும்பவநோய் இரிந்துபோமோ
அங்குமிங்கும் வியாபகமாய் நிறைவோ ஆற்றா
    அரும்கொடும் நோய்க்காளாகி அழப்பண்ணாதே
சங்கையுறாய் அரசன்னான் ஈசன் நீயே
    தருதிசுக மரணமுத்தி தந்தாய் யேசே. கூரு

நோய்கொண்டார் பேய்கொண்டார் என்று நூலோர்
    நுவன்றனர் பற்பலபிணிகள் நுழைந்து தத்தம்
வாய்அங்காந்துஉள் சென்றால் அமனம்[2]செய்யும்
    மருந்துண்டோ கண்டாபி ஷேகம்வாங்கி
நீயுண்டால் நீங்கிடும் சூர்என்றார் நம்பேன்
    நினதன்பாம் தங்கமதை நீற்றித் தந்துஇப்
பேய்கொண்ட வாள்நாளைப் பிரித்து முத்திப்
    பெருமிதந்தா சுகமரண பெலந்தா யேசே. கக

வஞ்சனைக்குப் பிறப்பிடமாய் மாயம் விஞ்சும்
    வையகவாழ் பெனும் மடுவில் மயங்கி வீழ்ந்து
சஞ்சலத்தைத் தலைக்கொண்டான் சானுக்கேறிச்
    சட்டெனவே முழுஞ்சறுக்குந் தாசன்என்றே

---

1. உடல். 2. சத்தி.

கொஞ்சமும் தண்ணளிகாட்டாய் பிடார[1]ங்கூறும்
கொள்ளைகொள்ளையா நோய்கள் கூடி ஒன்றாய்
எஞ்சலின்றி முனியமுன்வா ஐயாஎன்நாவில்
இனிதழைத்தேன் சுகமரண பரம்ஈ யேசே. கஎ

தேகிதனை உணராது தேகம் தானே
தேகியென்று நினைந்து அதற்குத் தினமும் பூசை
வாகுடனே செய்து உலைந்தேன் மகத்தா நின்றன்
மறைமொழியால் விகற்பமதை வகுத்துக் கண்டேன்
பாக[2]ன நின்னுபதேச வாக்காற் பண்பார்
பரிபக்வன் ஆகநினைப் பணிந்தேன் பாத
கோகனகா[3]கொடும்பிணியால் என்னைக் கொல்லாய்
குலவுசுக மரணமுத்தி கொடுத்தாள் யேசே. கஅ

பழுத்தபழங் கொம்பினிடைப் படியாதென்று
பண்டிதரும் மன்னவரும் பத்தர் தாமும்
அழுத்தமதாய்ச் சாட்சியிட்டார் அளியேன் முற்றி
அறப்பழுத்துக் கனிந்தேன் இவ்அகிலம் என்னும்
கொழுத்தகொம்பில் தங்கிநிற்கும் கோலங்காணேன்
கொம்மெனவே ரோகமது கொடிதாய்த் தள்ளி
விழுத்தி உடைக்காது சுக மரணம் வேட்டேன்
விருப்பமுடன் தந்துனது வீடுஈ யேசே. கூகூ

கும்பிட்டேன் பதம்பணிந்தேன் குருவாய் உன்னைக்
கொண்டாடிப் பின்தொடர்ந்தேன் குவலயத்தில்
நம்பித் தேவென வேறே ஒருவர்நாமம்
நானறிய வென்னாவு நவின்றது இல்லைக்
கும்பிக்கு விறகாக்காய் குரூர நோயின்
கூர்ந்த அந்த இரையாக்காய் கொடியன் கொண்ட
நம்பிக்கைக்கு இரண்டு செயாய் நாயேன் நச்சும்
நல்லசுக மரணசித்தி நல்கென் யேசே. க00

---

1. வைத்தியநூல். 2. பால். 3. தாமரை.

# சுகமரணாபீஷ்டம்

புன்மையதாம் தருக்கள் நன்குபூத்துக் காய்த்துப்
பொன்போலும் பழம்பழுத்துப் புவியோர்க்கு ஈய
நன்னயமாய்க் கோமளங்[1]கள் பால்நெய் நல்கி
நரர்க்கு உபகாரம்புரிய நானோ மேலாம்
சென்மம் எடுத்திருந்தும் அபகாரம் செய்துன்
சேவடிக்கும் சேவைதராத் தீம்பன் ஆனேன்
என்னவெனைத் தளாதுசுக மரணம் ஈந்துன்
இன்ப சுகானந்ததல மீயென் யேசே. க0க

வீட்டைநிதம் காத்தவர்கள் தளர வீறி
மிகுபலமாய் அரைத்தவர்கள் கழன்று வீடக்
காட்டு இரு பலகணிகள் கம்ம வீதிக்
கதவடைக்க வாதுமைகள் கவினாய்ப் பூக்கப்
பூட்டுவிட்டுச் சாலுடைய மண்மண் போலப்
போகுமிது தருணம்அதிற் புகைந்து பாய்ந்து
மூட்டுவிட ரோகசிங்கம் பீறாமுன் தா
முதன்மையதாம் சுகமரண மோக்கம் யேசே. க0உ

என்னைநினைத்து அருள்வையெனும் ஈனச் சோரன்
இதயமலர் அலர இன்றைக்கு என்னோடேகி
நன்னருறும் பரகதிசேர் எனநவின்ற
நாதன் நீயலவோ நோய் நலிக்கர் முன்னம்
உன்னொடு எனைச் சேர்த்தியென ஓலமிட்டேன்
ஒன்றேனும் கேளார்போல் ஒழுகுவாயோ
சின்னவர்க்குக் காலமின்றோ தெய்வம் இன்றோ
தீர்க்கசுக மரணசிவத் திருத்தா யேசே. க0௩

காய்ந்தபெரும் புற்காட்டிற் பசித்த காலி[2]
கண்டபடி வீழ்ந்ததெனக் கறுமிச் சீறிப்
பாய்ந்துளக்கி நோய்க்காலி பரிவற்று என்னைப்
பட்சணம் செய்திடத் துணிந்தாற் பரிதாபத்தோடு

---

1. பசு. 2. பசுக்கூட்டம்.

ஆய்ந்தளியாம் கோலதுகொண்டு அதட்டி ஓட்டாது
அயர்ந்துவெறுங் கையுடனே அமைவாய் நின்று
வாய்ந்ததுநற் காட்சியென மகிழ்கொள் வாயோ
வழங்குசுக மரணமுத்தி மகத்வ யேசே. க0ச

மனக்கவலை பெலக்குறைவென்று உரைக்கு மாற்றம்
மற்றெனக்கும் அமையாதோ, மாறா நோய்கள்
உனக்குறவு யாமென்றார்த்து உரைத்தேன் உள்ளம்
உடைக்கவந்தாற் கவலேனோ உதுகாணாயோ
சினக்காதே குறைபகர்ந்தான் சிறியனென்று
சீறாதே கண்மலரைத் தீண்டாதோ கை
நினைக்கானும் காதலது நித்தம் கொண்டேன்
நேர்கசுக மரணபர நேச யேசே. க0ரு

அடிக்கடிக்கக் கந்துகமேல் அதைத்தால் என்ன
ஆகமதாம் தரையதைத் தம் ஆட்சி ஆக்கி
நொடிக்குநொடி கிளம்பிப்பின் தணியும் நூறு
நோயால் என்றனைப் பிணித்து நோய்போல் ஆக்காய்
கொடிக்குக்காய் கனத்திடுமோ கொடியேன் நெஞ்சம்
கோவில்கொள்வாய் தாங்கல் எனைக்கூடா தாமோ
மடிக்கவெண்ணாய் சுகமரணம் வழங்கி நின்விண்
மண்டலவீடு அழைப்பாய் என் மன்னா யேசே. க0சு

கபங்கக்கி வாந்தியுடன் செந்நீர் கக்கிக்
களம் அடைக்கக் கால்கரங்கள் கனக்கத் தேகம்
சுபஞ்சற்றும் இல்லாது விறைத்துச் சோர்ந்து
துரும்பதுபோல் கிடந்து பின்னர்த் துஞ்சினாரை
நிபம்[1]சற்றும் இல்லாதும் நிமலா கண்டேன்
நெடுகவிடாய் நின்கணங்கள் துணையாய் நிற்கச்
செபம்செய்தேன் சுகமரணம் தந்து சித்தி
சேர்த்தருள்வை தேவர்தொழும் தேவ யேசே. க0எ

---

1. உவமை.

## 36 சுகமரணாபீஷ்டம்

வச்சிரமாம் யாக்கைபெற்றார் வையத்து இல்லை
மண்ணில் எழுந்தன எல்லாம் மடிதல்என்னும்
நிச்சயமாம் அஃதறிவேன் அருஞ் சாவை
நினைப்பதனால் எள்ளளவும் நெஞ்சில் அஞ்சேன்
அச்சோ[1]என்அபிமானம் ஆற்றா நோயால்
அறப்பறக்கும் எனக்கலங்கி அதன்வாய்க்கு என்னைப்
பட்சணமாய் ஒப்புவியாய் என்றுவாடிப்
பரவினேன் சுகமரண பரந்தா யேசே. க0அ

ஆழ்கடலைத் தாண்டினருக்கு ஆறுதாண்டல்
அருமையன்று என்றார் உலகர் அழுகி நாறி
வீழ்பிணம் கால்ஊன்றிடச்செய் விமலா நிற்கு
விவிதபிணி நீக்கல் ஒரு வேலையாமோ
கேள் கிளைஞர் அருகிலுறப் பிடகர்கிட்டிக்
கிரமமுடன் பரீட்சித்துக் கீழே தாது
தாழ்வதுற்றது எனாது சுகமரணம் தந்து
சால்புமிகு சித்தியுந்தா தலைவா யேசே. க0கூ

வலிவந்துங் கிறுகிறுத்தும் மயக்கம் கண்டும்
வாகாக அன்னமுண்டும் மகிழ்ந்தும் சோர்ந்தும்
சலம்விக்கி நெஞ்சடைத்தும் மணஞ்செய் சாலை
தனிலடைந்தும் பெருமிதமாய்ச் சம்பாஷித்தும்
உலம்பாது மௌனமாய் உறங்கியும் நோய்
ஒன்றுமின்றி ஒவ்வோர் சிறுச்சாட்டில் ஓய்ந்தார்
பலர்கண்டேன் என்னையேந்த நோயும் பாடு
படுத்தாது சுகமரண பரந்தா யேசே. கக0

சுரம்தோஷம் உதிரசன்னி சொறிவும் வேண்டாம்
சோர்வுதரும் அதிசாரம் தொய்வும் வேண்டாம்
அரம்போலும் அரிசிரங்கும் ரணமும் வேண்டாம்
அவதிதரும் வாயுவுடன் ஐயும் வேண்டாம்

---

1. இரக்கச்சொல்.

கரம் சந்து வாதமுடன் கால் நோய் வேண்டாம்
கக்கல் பெருவிக்கலொடு கயமும் வேண்டாம்
சிரம்பற்றும் பித்தமொடு சேற்பம் வேண்டாம்
தெளிந்தசுக மரணந்தா சிவந்தா யேசே. கககக

கிராணி குட்டம் வலிமாந்தம் கிளத்துகாசம்
கேடுதரும் வாதவகை கிருமி குன்மம்
பராவுவிஷ பேதியத்தி சுரம் இப்பாரோர்
பயந்து கெடிமண்டிடு நீரிழிவு பாண்டு
விராவுகின்ற மகோதரம் வெம்பிளவை மேகம்
விவிதமதாம் சூலை கண்ணோய் எரிவுவீக்கம்
அராவுகடி ஆதிகளுக்கு அடிமை ஆக்காய்
அருள்வை சுகமரணமுடன் அமுதம் யேசே. ககஉ

சருகரிக்க நேரமலால் சாத வேதா[1]ச்
சந்நிதியிற் சென்று குளிர்சாய்த்தற் கேற்ற
பருவமுறான் நிதமிளைக்கும் பாவி நேராய்ப்
பாரொடு அன்னியொன்னியமாய்ப் பரம் பாராது
நிரயமதற்கு இலக்கான நீசன் பேயன்
நிச்சயம் என்றுன்னி எனை நீக்கி நோயாம்
அரவம்உண விடாதுசுக மரணமும்பேர்
அபவருக்க[2]முந் தருவாய் அப்பா யேசே. ககங

உட்கனன்று வெளிகுளிரும் உதகம்போல
உளத்திடை இவ்வுலகினை உய்த்து உறவுபூண்டு
கட்குமுனே பாசாங்காய் உன்னைக் காட்டும்
கள்வனிவன் என்றெனைநீ கழித்துக் கட்டாய்
புட்பிடிக்கும் அலவன்[3]எனப் பிணிகள் பூட்டிப்
போட்டெனுயிர் மாட்டிடுகிற் புறம்போய் நின்று
பெட்பதுற்று வேடிக்கை பாராய் பீடு
பிறங்கு சுக மரணசித்திப் பேறுஈ யேசே. ககச

1. தீ. 2. மோக்கம். 3. பூனை.

பொருவில் இருதய புனிதம் பொன்னின் பூச்சுப்
போலேனும் அமையாத புன்மை யேனைக்
கருவில்இருந்த அதுமுதலா இந்நாட் காறுங்
கருகுதன் குஞ்சினைச் சிறையுட் காத்தால் என்னச்
செருவிளைக்கும் அலகையுடன் பூசல் செய்து
தினம்புரந்தாய் நோய் புகுந்து தீரத் தோடு
சருவிவரில் சேய்மைநிற்றல் சரியோ முத்தித்
தலந்தரமுன் சுகமரணம் தருக யேசே. கககரு

தந்தமொடு கண்கறுக்கத் தாகம் மீறத்
தாலு[1]விழு நரம்பெழுந்து சடமேல் தோற்றப்
புந்திகலைந்து அறிவொளிக்கப் பொல்லாச் சேற்பம்
பொருக்கென முந்துற வியர்வை போதப் பித்தம்
விந்தைதரும் பேச்செழுப்ப மூர்ச்சை விஞ்ச
மேதினிவாழ்வு ஒழிந்தவரை மேன்மேற் கண்டேன்
இந்தநிலை என்றனக்குத் தராய்நோய் இல்லா
இன்பசுக மரணமுத்தி ஈயென் யேசே. கககசு

விடப்பழங்கள் வழங்கிடினும் விருக்க நாட்டி
விழைவுகொண்டு வளர்த்தவர்கள் வெறுப்பாய் உள்ளக்
கடுப்படைந்து தங்கதையுடனே களையார் என்றார்
காசினியோர் நினது சித்தம் கறுக்கக் கைப்புக்
கொடுப்பனவாம் கோடிபவம் புரிந்த போதும்
குடாரம்போல் நோய்குடையும் கொடுமை பார்த்துத்
தடுப்பதுதான் செயாது அகன்று தனிநிற் பாயோ
தருகசுக மரணமுத்தி தந்தாய் யேசே. கககஎ

அத்தி[2]யதால் உத்திரம் தூண் வளைகளாக்கி
அணியணியாய் நாடிநரம்பா நாரார்த்துப்
பத்தியதாய்ப் பேசி கடோல பரவி வேய்ந்து
பராமரிக்க வியமானன் தனைப் பணித்த

---

1. நா. 2. எலும்பு.

சித்திரவீடு அதுள்சோரப் பிணிகள் சேர்ந்து
திரவியநேர் சௌக்கியத்தைத் திருடிக் கொள்ள
உத்தரவு கொடுக்காதே உன்னைத் தாழ்ந்தேன்
உதவுசுக மரணம்வீடு ஒருங்கென் யேசே. ககஅ

விக்கிர[1]மாயன் முதலாய் விளம்பும் ஆண்டு
மேவுமறு பானுமொன்றின் மேலொன் றாகிச்
சக்கரமாய்ச் சமாப்திபெறப் பின்னர்ச் சார்வற்
சரங்கள்பல செல்லமுத்தித் தாகங் கொண்டேன்
நிக்கிரகா அனுக்கிரகா நீதா நாதா
நேமியில்யான் இனுஞ்சின்னாள் நிலைக்கச் செய்யாய்
உக்கிரம் கொள்வாய் கருணை உதகமாட்டி
உபகரிப்பை சுகமரணம் ஒளிர்வீடுஈ யேசே. ககசு

இன்றேஎன் சீவாந்த நாளென்இல்லார்
இன்றே என்றனை முடிவாயினைந்து காண்நாள்
இன்றேயான் வீடதைவிட்டு இடுகாட்டிற்கு
ஏறிடுநாள் இன்றேயென் இனத்தார்கூடி
இன்றேநீர் எமைக்கைவிட்டு ஏகின்றீரோ
என்றுசொல்லி மார்பில் அடித்து இரங்கும் ஓர்நாள்
இன்றேஎன் றனையழைத்தி எனயான் ஓலம்
இடுங்கடைநாள் இன்றெனுயிர் ஏற்பை யேசே. க௨0

## வாழி.

யேசு சுதன் வாழி எந்தன் யெகோவா வாழி
இதய பரிசுத்தம் அருள் இறைவன் வாழி
பேசு திருமறை வாழி பெரியோர் வாழி
பிரபலமா சுவிசேஷம் பிறங்கி வாழி
தேசிகர்தாம் வாழி செங்கோல் மன்னர் வாழி
திருச்சபைகள் வாழி கலைச் செல்வி வாழி
ஆசில் சௌபாக்கிய எம்மரசி வாழி
அனவரதம் சுகமரண வபீஷ்டம் வாழி.

---

1. நூலாசிரியர் பிறந்த வருடம்.

# ஞான வெண்பா.

இது
காலஞ் சென்ற
உதயதாரகைத் தமிழ்ப்பத்திராதிபர்

**ஸ்ரீமத். அ. சதாசிவம்பிள்ளை**

அவர்களால்

எம்மதத்தவர்க்கும் சம்மதமாக

இயற்றப்பட்டு

அவர் குமாரர்களாற் பிரசுரிக்கப்பட்டது.

# GNANA VENBA.

A POEM BY THE LATE

## MR. J. R. ARNOLD,

TAMIL EDITOR, MORNING STAR.

PUBLISHED BY HIS SONS,

S. T. & S. C. ARNOLD.

PRINTED AT THE JAFFNA VIVEKANADA PRESS.

**1898.**

# நூல் வரலாறு

சாம்பரிட்டுப் புளிதடவி அடிக்கடி விளக்கிப் புனிதம் பண்ணியும் மேலும்மேலுங் களிம்பேறல் செம்பிற்குச் சுபாவீகமானாற்போலச், சற்போதகம் புகட்டி, எத்தனைமுறை அருட்டி, நன்னிலைக்குக் கொண்டு வரினும் பின்னும் அத்துணைப் பிரபஞ்ச மயக்கம் பிடித்து மேனிலை நோக்காமை ஆன்ம சுபாவீகமாகும்.

ஆதலின், எத்தனை சன்மார்க்கக் கிரந்தங்களைச் சான்றோர் தந்தும் அவற்றாற் பூரண பிரயோசனமாகாமை கண்டே "அடிக்கு மேலடி" என்றாற்போல இச்சிறுநூலை எம்மதத்தார்க்குஞ் சம்மதமும் உபயோக மும் ஆகும்படி இயற்றி, இதனால் ஆன்மாக்களை அருட்டவும் தெருட்ட வுங் கையிட்டோம். இது உருவத்தாற் சிறியதாயினும் புராதனமும் நூதனமுமான அரும்போதகங்கள் பல திணிக்கப்பெற்றிருப்பதாற் பெரிதெனலாம்.

**"பழத்தொடு நெய்பால்கண்டு பகர்ந்ததோர் அடிசில்தன்னைக்**
**கழிப்பரோ நல்லோர்தாமும் கலந்ததில் கற்கிடந்தால்"**

என்றது ஆன்றோர் கூற்றாதலில் இதிலே சொல்லலங்காரம், சந்தவின் பம் ஆதிய பல குறைந்திருப்பினும் நல்லோர் அச்சொற்பகுறைவால் உள்ள நிறைவுகளைத் தள்ளார் என்று நம்பி இதனை அரங்கத்தில் விட்டனம். நாம் முன் வெளிவிட்ட நூல்களை அன்போடேற்றுப் பாராட்டின நல்லோரும் நேசரும் இதனையும் அவ்வாறு செய்வார் என்று நம்பி, அவர்க்கே கையடையாக்கினம். எம் விருப்புங் கருத்தும் நிறைவேற எம்பெருமான் இதனை ஆசீர்வதிப்பாராக.

**ஆக்கியோன்.**
**கஅகூ0 ம் வரு.**

# ஞானவெண்பா

## காப்பு

உலகம் அறம்பாவம் உடலோங்கு தெய்வநீதி
இலகு கிளைரட்சணிய மின்ன - பலதுறைமேல்
ஞானவெண்பா ஓதநிதம் நாதாந்த சோதிமயம்
ஆனபரா நீதுணைதந்து ஆள்.

## அவையடக்கம்

பாலன் மழலைதனைப் பண்பார் இருகுரவர்
சாலச் சிரித்து எள்ளித் தள்ளுவரோ - மேலும்
மகிழ்வரே கல்லாளன் வாய்மொழியைச் சான்றோர்
இகழ்வரோ கொள்வார் இசைந்து.

## நூல்

வேதப் பொருளை விளங்குவாய் மெய்ஞ்ஞான
ஆதிக்க மாம்பொருளை ஆராய்வாய் - சோதிப்
பரனைப் பணிவாய் பவந்தவிர்ப்பாய் பண்பார்
* உரனைப் பெறுமனமே ஓர். 1

செம்பதங்கள் தேய்ந்துறவெத் தேசந்தொறும் திரிந்து
அம்பரனைத் தேடியலையாதே - இம்பருனைக்
கிட்டியிருந்தான் கிலேச மியாதென் மனமே
விட்டுவிடாய் கண்ணை விழிமேல். 2

ஆசைப்புலியை வளைத்தார்த் துரப்பி மெய்ஞ்ஞான
பாசத்தாற் கட்டிப் படுத்தொழித்து - நேசத்தால்
ஆத்தன் பரன்பணியை அன்பொடுள்ளங் காத்தளியார்
தோத்திரத்தை நீமனமே சொல். 3

கொன்னுலவும் வான்வில்லின் கோலநேர் யாக்கையிதை
நின்னிலெனக் கும்பிடினும் நிற்குமோ- அன்னதற்குப்
பூசனையேன் வாசனையேன் பொன்மனமே ஆங்கதில்வாழ்
ஈசனைப்பார் எம்பரனைப் பார். 4

---

* உரன் - அறிவு

அவாவை யொறுப்பாய்எம் அன்பார் பரனீ
†தவாநன் மறைமொழியைச் சார்வாய் - உவாவெனவே
தீமை பெருக்காய் சிறுபிழையைப் போற்குறைப்பாய்
நீமனமே என்மொழியில் நில். 5

செல்வம் கனாப்போலும் சீவனொளிர் மின்போலும்
சொல்லும் தினம்போல்வர் சுற்றத்தார் - வல்ல
மனமே அநித்தியத்தை நித்தியமாய் மாறாய்
நினைவாய்ப் பரன்பணியில் நில். 6

விற்பனமா லோகமதை விண்ணுடனே சேர்த்திணைக்கப்
பற்றா சுண்டோநீ பகர்மனமே - சற்றும்
உலகத்தோடு ஒன்றாய் உஎம்பரன்மேல் வைப்பாய்
பலகத்தாய் நீப்பாய் பவம். 7

ஆவ தறியாய் அறத்தினெறி ஆராயாய்
பாவ நெறிஎன்றாற் பறந்திடுவாய் - வீவதுதான்
நாளைவருமென்று உணராய் நன்மனமே நீ பரனுக்(கு)
ஆளடிமை யாயறமன் பாள். 8

தேகப்பிணி கடங்க சிந்துரமேல் ஆதிமுதல்
ஆகும் மருந்தால் அகன்றிடுமால் - சோக
மனமே பவநோய்க் குமாபரனீ ரட்சை
*கனக அவுடதமாங் காண். 9

தாகமது கொண்டார் சமநிலையைத் தான்சார்வர்
சோகமது கொண்டார்தண் சோலைசெல்வர் - ஆகாப்
பவத்தர் உலகைப் படைத்த பரன்ரட்சை
உவப்பரிதை நீமனமே ஓர். 10

புட் ‡சிமிழ்க்கும் வேடரெனப் போந்துபுல வைவேடர்
கட்சிமிட்டி வாவெனக் கைகாட்டுவார் - பட்சமுடன்
ஆங்கவர் கைப்புக்கி அவலமுறாய் அம்பரன்றன்
பூங்கமலக் கான்மனமே போற்று. 11

என்னைப் பிரசவித்தாள் ஈனா மலடியெனத்
தன்னைக் குறித்தொருவன் சாற்றுதல்போல் - நன்மனமே
ஒவ்வாக் கதைகள் உரைக்காய் பரன்பணித்த
அவ்வனுக்குப் போன்மெய் அறை. 12

---

†தவா - தவறாத. *கனகம் - பொன், ‡சிமிழ்த்தல் - பிடித்தல்.
அவுடதம் - மருந்து.

பாவக் கடல்கடக்கப் பக்குவமாம் கற்புணைதான்
ஆவெனக்கு இங்கேதென்று அலறாதே - சாவின்
வலிகடந்த எம்பரன்றாள் வாழ்மனமே பாவச்
சமநிதிக்குச் சீர்ப்புணையாந் தான். 13.

விண்ணாடர் கண்டறியா வேதாந்தன் ஆனபரன்
கண்ணார நின்னுட் கலந்திலனோ - பண்ணார்
மனமே பதைபதைத்தேன் வாடுகிறாய் அன்னான்
*வனசமலர்ப் பொற்பதத்தை வாழ்த்து. 14.

தொண்டருளப் பஞ்சணைமேல் தூங்குபரன் நின்னையொரு
கண்டகனாய்க் கண்டு களிப்பானோ - விண்டுபெரு
வாய்விட் டலறி மயங்காய்நீ என்மனமே
பெயைவென்று நல்வழியைப் பேண். 15

†அண்டசம் †உற் பிசமுடன் ஆகுஞ் 0 சுவேதசமும்
கொண்ட £ சராயுசமும் கூரருளாற் - பண்டுபரன்
தந்தான் அழித்தான் நினையும் தனிக்கவிடான்
அந்தரியாய் என்மனமே ஆறு. 16

கட்டுத் தறியதனைக் காய்களிறு போன்மனமே
நட்டாரைக் காய்ந்தேன் நழுவுகிறாய் - திட்டம்
பரன்பணியைப் பற்றிடுநின் பாவவயந் தேய்க்கும்
அரமவன்தன் அன்பிதைநீ ஆய். 17

உண்டாட்டொடு உண்டலன்றி யோதுமுத்தி வேறுளதோ
கண்டதியார் என்று உலகன் கத்துவான் - பண்டவன்செய்
தீமதத்தில் நீமனமே செல்லாதே எம்பரனி
மாமறையை வாசிநிதம் வாழ். 18

b காட்டம் செனிதீ காட்டமதைக் காய்ந்திடல்போற்
தேட்டமதாம் கன்மம்உனைச் சேதிக்கும் - கேட்டதன்முன்
எந்தை பரனருளை வாங்குதியே என்மனமே
தந்திடுவான் காக்குமது தான். 19

---

* வனசம் - தாமரை. † அண்டசம் - முட்டையிற்பிறப்பன.
† உற்பிசம் - நிலத்திற் பிறப்பன. 0 சுவேதசம் - வேர்வையிற் பிறப்பன.
£ சராயுசம் - கருப்பையிற்பிறப்பன. b காட்டம் - விறகு

பாம்பைப் பழுதைஎனப் பற்றிப் பிடித்தான்போல்
ஏம்பலித்துப் பூலோக வில்பொருளை - ஆம்பொருளாய்க்
கட்டிப் பிடியாய் கடிக்கும்உனை என்மனமே
கிட்டிப் பரனருளைக் கேள். 20

மானைப் படுக்க வலைபரப்பித் தான்மறையும்
கானக் குறவன் எனக்கண்ணெதிரே - ஆனவுலகு
ஆசை வலையேற்றி அகன்றான் மனமேபை
சாசன் படாய்பரனிற் சார். 21

பதரைக் கிளறிப் பரபரக்குங் கோழி
விதனத் தொடுவிரைவில் வெள்கும் - அதைநிகராய்
நீயும் உலகை நிதங்கிளறி எள்குவையோ
ஏயும்மன மேபரனை யேத்து. 22

பாலிருக்க மோரிருக்கப் †பானீயந் தானிருக்க
‡ஆலம் பருகவெவர் ஆசிப்பார் - மேலான
எம் பரன்றன் வேதமிருக்க மனமே பிறநூல்
நம்பிப் படித்தலென்னோ நாண். 23

எங்கும் பரனிக்க இங்கிலனென்று எண்ணினர்போல்
அங்கவனை ஊர்தொறும்பார்த்து அந்தரித்துஉன் - அங்கம்
அலைவதென்ன கண்டம் அரிகண்டம் போட்டு
உலைவதென்ன என்மனமே ஓது. 24

வாசாலம் பேசிவெகு மாயவித்தை காட்டுவெளி
ஆசாரப் பெச்சிலென்ன ஆனதுகாண் - நீசாலம்
காட்டாய் பரன்தொழும்பைக் காதலி கற்கண்டுஅதென
நீட்டிமனமே சுவைக்கும் நின்று. 25

வையகத்தின் ஆசையெனும் வன்பிணியை மாற்றுதற்கு
ஐயமறு மேலாம் அவுஷதந்தான் - மையதிலாப்
பாத கமலப் பரன்போத பற்பம்அது
மாதகைமைத் தாமனமே வாங்கு. 26.

சாந்த உடைதரித்துத் தர்மகுண ஆபரணம்
சேர்ந்திலங்க நின்னைச் சிறப்பித்து - நேர்ந்துபரன்
சன்னிதியில் நல்வணக்கத் தண்டிற் பிரார்த்தனையாம்
* வன்னியுறா நெய்விளக்கை வை. 27.

---

†பானீயம் - தண்ணீர். ‡ஆலம் - நஞ்சு *வன்னி - தீ

தண்ணளியால் இவ்வுலகந் தந்தபரன் நின்றனக்கு
வண்ணமுத்திப் பொன்மகுடம் வாக்கிட்டான் - அன்னதனை
வாங்காயோ வாங்கிமன மேஅவன் மலர்க்கால்
பாங்கதனிற் சாரவழி பார். 28

கொலையுங் களவுங் குடிபுலையும் பொய்யும்
அலையெறியுந் தீநரகுக் காளாக்கும் - நிலைபெறவே
நீயிதையோர்ந்தும் மனமே நெஞ்சையவைக்கு ஈகுவையோ
நேயபரன் மாமறைக்கு நேர். 29

அன்னை † நிசாதனமாய் அப்பன்மெய்ஞ் ஞானமதாய்ப்
†பின்னை அறமாய்ப் பிரியைதான் - நன்மனமே
சாந்தமாய்த் தம்பி தமையன் அருளளியாய்
வாய்ந்தபரன் சார்பதனில் வாழ். 30

தலைகீழாய்க் கானில் தவம்புரிந்துங் காயோடு
இலை 0அயின்றுந் தீக்குழிபாய்ந் திட்டும் - வலிதாய்ச்
செடில்குத்தி யாடிடினுஞ் செய்வினைகள் தீர
திடமனமே நீபரன்முன் தேர். 31

நேர்நன் னெறிநடவார் நீளுடைவேன் முள்நெரிஞ்சில்
ஆகுந்தீப் பாதையை யார்ஆசிப்பார் - ஏர்பரன்றான்
தந்தமுத்தி மார்க்கந் தனியிருக்க வேறாயும்
சந்தமென்ன என்மனமே சாற்று. 32

தங்குலத்தைக் கூவி வருவித்துத் தம்முணவிற்
பங்குசெயல் *காரிகடம் பண்பென்ப - அங்கவைபோல்
என்மனமே நீநுமரை ஏகபரன் தன்தொழும்புக்(கு)
அன்புடனே கூடஅழை யாய். 33

பாரார்க்கு அரியான் விண்பாதலத்தார் கட்குஅரியான்
ஏராருந் தொண்டற்கு எளியானாம் - ஓராமல்
ஓடி வருந்தி உலைவதென்ன என்மனமே
பாடிப் பரன்பாதம் பற்று. 34

---

† நிசாதனம் - மெய். † பின்னை - தங்கை.
0 அயின்று - தின்று. * காரி - காகம்.

ஆரணமுங் காணா அரும்பொருளாம் மெய்பரன்றன்
பூரணமாம் நற்கருணை போதாதோ - †வாரியிடை
வீழ்ந்த துரும்பதுபோல் வீண்அலைச்சல் ஏன்மனமே
சூழ்ந்தவன்கால் நின்சிரமேற் சூடு. 35

†சேலடுத்த வேற்கண்ணார் தெய்வமென மற்றவர்மேல்
மாலெடுத்து மோசவழி போகேல் - நூல்வகுத்துச்
சொன்ன பரன்தன் துணைக்கமலம் தாழ்ந்துபணிந்து
என்மனமே இன்பம் சுகி. 36

இரட்சணிய சிந்தூரம் என்பதொன்றைத் தொன்னாள்
அரைத்துவைத் தான்நின்பரன் தானத்தை - உரைத்துவழித்து
உட்கொண்டாற் சென்மவினை யோடுமனமே அதற்குப்
பத்தியமாய்ப் பாவந் தவிர். 37

சிருட்டிப்பான் இல்லைநரர் செய்பவம் ஆராய்ந்து
அருட்டிப் பலனளிப்பது ஆரென்று - உருட்டிமிகச்
சத்தித் துரப்பித் தருக்கிப்பர் என்மனமே
பித்தரன்றோ நீபரன்முன் பேசு. 38

வாணிகஞ் செய்யார்க்கு வருமோ பணந்திருத்திக்
காணிசெயார் தானியத்தைக் காண்பரோ - பேணிப்
பரனருளை வாங்கார் பவநாச மாமோ
இருமனமே நீயாய்ந்து இசை. 39

முத்திபெற வேண்டுநர்தம் *மூர்த்தம் மெலித்திடுதல்
புத்தியென்றார் சற்றும் பொறியில்லார் - 0அத்தி
தெரியமெலிந் தும்மனமே சித்தம் மெலியார்
பரனுறை வீடேறார்நீ பார். 40

தாவடங்கள் கண்டமதில் தாங்கிடுவர் தேவாரம்
ஆவலுடன் பாடி யழுதிடுவர் - ?தேவகுலம்
கண்டால் இடிப்பார் இக்கள்வரையோ எம்பரன்தான்
தொண்டுகொள்வான் நீமனமே சொல். 41

வன்னப் பசுச் £சருமம் வாங்கிப்போர் bவல்லியநேர்
நன்னருரை நாவால்ந வின்றுஅடியில் - மன்னுவிடம்
வைத்தாரை இத்தரையில் மாபரன்தான் என்மனமே
சித்திரமாய்க் காத்தலென்னோ செப்பு. 42.

---

†வாரி - சமுத்திரம். † சேல் - மச்சம். * மூர்த்தம் - உடல்
0 அத்தி - எலும்பு. ? தேவகுலம் - ஆலயம்.
£ சருமம் - தோல். b வல்லியம் - புலி.

ஊன்றுகோல் இன்றேல் உலாப்போவரோ முடவர்
ஏன்ற பரனருட்கோல் இல்லாமல் - வான்தருநன்
முத்தி அடைவாரோ பவமுடவர் நீமனமே
அத்தனருட் கோல்கைபிடித்து ஆறு. 43

†நேத்திரத்தைக் கையால் இமையால் மறைத்தொருவன்
? தாத்திரியில் ஆதித்தன் தானின்றுஎன்று - ஆர்த்திடல்போல்
*அச்சுதன் இன்றுஎன் நாயறிவை மறைத்தொழிக்காய்
‡ நச்சுமனமே பரன்சொல் நன்கு. 44

நூலிற் 0படமும் உவன்மண்ணினில் L கடமும்
ஏலுதல்போல் ஆதிபரனின் மொழியில் - சாலச்
சகமுஞ் சராசரமுந் தாமுதிக்க மாறாய்ப்
பகர்வதென்னோ நீமனமே பார். 45

செம்பிற் களிம்பு செறிந்திடல்ஒத்து ஆன்மாவை
வம்புபண்ணிப் பாவ மருவுதல்பார் - நம்பரன்தன்
நல்லளிய தாம்புளியால் நாடோறுந் தேய்க்கஅது
a செல்லொளிர்நே ராமனமே தேர். 46

ஆடழுத தென்றுபுலி ஆவிகரைந்து அப்பாநீ
மாடகல்வை யென்று வழிவிடுமோ - தேடுபரன்
தூதன்தான் வந்தனுகில் சும்மாமீ ளான்மனமே
ஆதலில்நீ ஆயத்தம் ஆற்று. 47

கொம்படிக் கும்பட்டிக் காடாப்போற் குவலயத்தில்
வம்படித்தேன் வீணாய் மலைகின்றாய் - கொம்புபடி
செந்தேன் எனவெவருஞ் சேரநடந்துன் பரன்வாழ்
அந்தவிடஞ் சென்மனமே ஆய்ந்து. 48

கண்ணில்லான் காண்பதற்குக் கையில்லான் காட்டவொக்கும்
நுண்ணறிவு இல்லார் நுவர்போதம் - எண்ணம்
பரம இரகசியம் பார்க்கிற் பரனீ
திருமறையை நீமனமே தேர். 49

---

†நேத்திரம் - கண். ? தாத்திரி - பூமி. *அச்சுதன் - கடவுள்.
‡ நச்சு - விரும்பு. 0 படம் - சீலை. L கடம் - குடம்.
a செல் - முகில். bகுவலயம் - பூமி

cசித்திநெறி செல்லில் திசைகாட்டும் நல்லபடப்
புத்தகமில்லாக் கலத்திற் போகாதே - dநத்தும்
மனமே பிரயாணம் வாய்ச்சுழி பார்
கனமாம் பரனொதுக்கிற் பட்டு. 50

ஆட்டுவார் தாம் இலரேல் பொம்மைகள் நின்றாடாவாம்
ஊட்டுவார்இன் றேலுயான் பாலன் - வேட்டும்
பரனுனைக்கா வானேல்பகர் மனமே மண்மேல்
அரண்உனக்கார் வையவன்மீது அன்பு. 51

நோய்வரமுன் தற்காக்கும் நுண்மதிவல்லோன் நிகராய்ப்
பேய்பழி பாவங்கள்உனைப் பீடித்து - வாயிடமுன்
கத்தன் பரன்துணையைக் காப்பாய்நீ கட்டுவையேல்
சித்துமன மேதவிர்வாய் eசெந்து. 52

அன்னையிலாது ஒன்சிசு உண்டாமோ * அவனியது
பன்னுபரனின்றேல் †பவம்பெறுமே - மன்னும்
மனமே விபரீத மாறாட்டக் காரர்
உனையேய்ப்பர் அன்னரைவிட்டு ஓடு. 53

அறிவில்லார் ‡மூங்கயர் ஒப்பார் என்றார் சான்றோர்
உறுதிபெறும் இவ்வுவமை உண்மை - பொறுமையுடன்
அற்பார் மனமேநீ ஆதிபரன் வேதமுடன்
கற்பை பெரும்பன்னூற் கடல். 54

இந்திரியம் ?காயம் இவையான்மா என்றதட்டி
முந்திக் குதிப்பர் முழுமூடர் - புந்தியிலா
அப்பேயர் வாக்கைநம்பி ஆருயிரைத் தீக்கனுப்பாய்
தப்புமனமே பரன்சொற் சார். 55

பன்றி அழுக்குண்டு சுகித்துப் பசிதணிந்து
என்றும் மகிழும் இயற்கைபோற் - றுன்றுலகச்
சிற்றின்பம் உண்டு மனமே செருக்கடையேல்
பற்றுபலன் பாதமலர்ப் பற்று. 56

கரும்பைப் பொருள்பண்ணார் கைக்கு !நிம்பந்தன்னை
விரும்புதல்போல் நீமனமே விண்ணை - அரும்பொருளாய்க்
கொள்ளாது உவகைக் குடியிருந்தாய் நின்னகத்தில்
அள்ளிக்குவி பரன்றன் அன்பு. 57.

---

cசித்தி - மோட்சம். dநத்தும் - விரும்பும். eசெந்து - நரகம்.
*அவனி - பூமி. †பவம் - பிறப்பு. ‡மூங்கையர் - ஊமையர்.
?காயம் - உடல். ! நிம்பம் - வேம்பு.

அழுக்குறும்இப் பூதவுடம் பார்குருதி மேதை
வழுக்குநிணம் என்பாதிவைத்து - அழுத்தமதாய்ச்
செய்து நிலையாது சீமனமே நேசமதில்
கைபற்க எம்பரன்மேல் வை. 58

அந்தரத்தில் நின்றுசுழன்று அடுகறங் காய்மனமே
சந்ததம் ஏனாடித் தவிக்கின்றாய் - எந்தைபரன்
அன்புண்டு அருளுண்டு அனுக்கிரகம் தஞ்சமுண்டு
துன்புகொளாய் நிற்பாய் †துவம். 59

நங்கூரம் விற்றலையும் ஞாலமிலாக் கப்பலென
அங்கோடி இங்கோடி அலைகின்றாய் - தூங்கம்
பரன்பாதங்கட்டி அன்பாம் பாணியினாற் பற்றி
†அரங்காய் மனமே அமர். 60

கோபமெனும் கூர்வாளை அன்பாம் உறைகொளுவிப்
பாவ விலங்கைப் பறக்கடித்துச் - சாபமது
பேசா திருந்து எம்பெருமான் பரன்பாதம்
கூசாய் மனமே குழை. 61

முடவன் முதுகிவர்ந்தோர் அந்தகன்தான் முந்திப்
புடவியுல வத்துணிதல் போலாம் - நடுமனமே
பத்திபரன்மேல் பதியாப்பா தகர்பொய்ப் போதநம்பிச்
சித்திநெறி தேடுந் திறம். 62

காட்டுக்கொன்று ஈர்க்கக் கடுத்தான்று தான்வளர்ந்த
வீட்டுக்குஎன்று ஈர்க்கும் விடபம்போல் - ஆட்டியுனைத்
தேகம் புவிக்கீர்க்கச் சிந்தைபரற் கீர்க்கமன
மேகவலேற் பிந்தினதை ஏல். 63

கொல்லா மறையுணர்வர் கொங்கணர் நூல்வாசிப்பர்
வல்ல பரன்வாக்கை மனங்கொள்ளார் - b அள்ளனெறி
போக நரருலகிற் பூத்ததனால் யாதுபயன்
ஆகு மனமே அறை. 64

கழுவித் தொடைத்த கருங் கேருமா மீண்டும்
உளையிற் புரளுதலுக் கொப்ப - அளிபரனீ
போதஞ் சுவைத்தும் பொருளின் மறைபடித்தும்
தீதிற்சார் பேன்மனமே செப்பு. 65

---

†துவம் - அசையாநிலை. †அரங்காய் - அழுந்தாய்.
bஅள்ளல் - நரகம். கேருமா - பன்றி.

அருவுந் திருவுருவும் ஆதிமத்தி யாந்த
d இரகிதம் ஆயஇறையெம் - பரனெனநீ
கண்டறிந்தும் என்மனமே போற்றாய் கழல்வீழாய்
கொண்டவிது தான்பெரும்பேய்க் கூத்து. 66

ஒன்றியான் சொல்லவுடன்று சினந்து ஆட்சேபம்
என்றுபல நூற்றை இயம்புதென் - கொன்றவன்சொல்
வாயடங்கக் கற்பாய் மனமே பரனினது
தாயவனில் நீயொடுங்கிச் சாய். 67

கொண்டுவந்தது இல்லைக் கொடுபோவது இல்லைநின்கண்
கண்டவெலாம் காதலிக்கும் காரணமென் - அண்டுபரன்
பாவமதன் சேவைக்குப் பக்குவமாய் நின்மனமே
பூதிபோற் செல்வமெலாம் போம். 68

முத்தந் தவிர்த்து முழுக்nகிளிஞ்சில் கொள்வார்போற்
சித்திவிட்டுச் செல்வமதைத் தேடுவையோ - பத்திநெறி
நிற்பாய் நிலைப்பாய் நினைப்பாய் பரன்பாதம்
அற்பாய்த் தொழுமனமே ஆறு. 69

யூதநான்கு என்றுறுத்தும் hபூரியர்தம் புன்மனத்தைச்
சாதித்து வீறித் தருக்கியேல் - ஆதிபரன்
தந்ததிரு மாமறையின் தத்துவத்தை நன்குபடித்து
உய்ந்துகதி சேர்மனமே ஓர். 70

தாதா எனவாங்கித் தன்உதரத் தீபனத்தைப்
போதரவாய்ப் போக்குந்தீ போனாளும் - வேதா
எனக்குன் அருள் தாவென்று பரற்கெஞ்சித்
தினக்கவலை நீமனமே தீர். 71

பாபமதாம் நாகமதைப் பத்தியெனும் Sவல்லையத்தாற்
கோபித் தெழுந்து கொலைபுரிந்து - சாபந்தீர்
நாதன் பரனருளால் நன்மஞ் சனம்ஆடி
ஆதரவாய் என்மனமே ஆறு. 72

கொக்குப்போல் நாளுங் குறாவியிருந்து உன்னையிரு
கைக்குட்படுத்த நிதங் காக்கின்றான் - *விக்கிரம
வேதாளன் ஆங்கவனை வென்றுமனமேபரன்வாழ்
சோதியுலக கேறத் துணி. 73

---

dஇரகிதம்-நீங்கிவிடுதல். nகிளிஞ்சில்-ஓடு. hபூரியர்-கீழ்மக்கள்.
Sவல்லையம்-எறியீட்டி. *வீக்கிரமம்-பராக்கிரமம்.

மெய்யரும்பிப் பண்பூத்து வேதோப தேசமெனும்
தூய்யபழ நீசொரிந்தால் தூமனமே - வையம்
பரோபகாரி யென்றுன்மேற் பாமாலை சூட்டும்
†வரோதயனாய் நின்பரன்முன் வாழ். 74

இந்திரனாய் வாழ நினையாது இரும்பொருளைத்
தந்தெவர்க்கும் நல்ல தருமனாய் - நொந்தும்
அபகாரம் யாருக்கும் ஆற்றாய் பரன்சொல்
உபதேசம் என்மனமே ஓர். 75

ஆதிபரன் அன்றிநினக்கு ஆர்வேறு தேவருளர்
ஈதுணர்ந்தும் கண்டவெலாம் என்தேவென்று - ஓதி
அலையி தியோ என்மனமே ஐயையோ ஈதென்
தலைவிதிதான் என்பாயோ சாற்று. 76

சிங்கமது oபங்கமதுள் வீழிற் சிறுநரியும்
‡கங்கும் கழுகும் கலந்தடாக்கும் - அங்கதுபோல்
நீயும் மனமே பவவுளையினோர் ஓவிழிற்
பேயும் அடும்பரனைப் பேண். 77

திரைகடலிற் சென்றும் திரவியந்தேடு என்னும்
உரைசிரமேற் கொண்டேன் உலைவை - பரனருளை
நாடுவாய் செல்வமது நட்டாற்றின் நின்னைவிட்டு
ஓடிவிடும் நீமனமே உள். 78

?நூறைபோல் நீமனமே நூதனமாய் வால்தலைகள்
வேறுவேறாய்ப் புவிக்கும் விண்ணுக்கும் - மாறிநிதம்
காட்டி அபிநயித்துக் காலம்விடாய் மனமே
வீட்டின்மேல் வைப்பை விருப்பு. 79

வெள்ளக் கருணைக்கு ஒருவனாம் மெய்ப்பரனை
உள்ளத்து அறியில் உறுத்தியே - கள்ளமெலாம்
பத்திபத்தி யாய்த்தறித்துப் பாவத்தின்று ஊரறுத்துத்
துத்தியத்தை நீமனமே சொல். 80

காலங் கடந்துநின்ற காரணனாம் எம்பரன்றான்
நூலுக்கு அடங்கான் என்னுள்மனமே - சாலவவன்
உன்னைக் கடவான் உனக்குள் ஒடுங்கிடுவான்
பின்னைக் கவலையென்ன பேசு. 81

---

†வரோதயன் - வரத்தாற்பிறந்தவன். oபங்கம் - சேறு.
‡கங்கு - பருந்து. ?நூறை - மலங்குமீன்.

பிரார்த்தனையாம் மந்திரத்தாற் பேயினையார்த்து ஈர்த்துத்
0தராத்தலத்திற் போட்டதனைத் தாக்கி - அராத்திமிகத்
தேய்ப்பாய் பரன்பாதம் சிந்திப்பாய் என்மனமே
வாய்ப்பாய்ப் பின்சந்ததிநீ வாழ். 82

தோற்றும் பொருள்யாவும் வந்தவகை சூனியமாய்க்
காற்றின்முற் பஞ்சாய்க் கழிந்தொழியும் - ஆற்றிறங்க
மண்பரியை நம்பாய் மனமே அவற்றை
விண்வாழ் பரன்கழற்கால் வீழ். 83

இல்லான் இருந்தென் இறந்தென்என்பர் இவ்வுலகர்
சொல்லிதனில் நீதளர்ந்தேன் சோர்கின்றாய் - வல்லபரன்
உன்பால் இருந்தால் உலகசெல்வம் எல்லாநின்
தன்பால் வரும்மனமே தாழ். 84

பெற்றாரொடு உற்றாரைப் பேதிப்பர் பேருலகிற்
கற்றாரை ஒன்றாய்க் கவனியார் - மற்றோரைத்
துடிப்பர் வைவர் மனமே துணைப்பரன்றாழ்
நாடிடார் மேல்உனக்கேன் நட்பு. 85

கொட்டி முழக்கிச் சுடுகாடு கொண்டுசெலும்
கட்டையுடம்பு இதைநீ காணாயோ - ஒட்டிமறைந்து
உள்ளிருந்தான் *கூத்தன் உதையேன் நீபூசிப்பை
வெள்ளைமன மேபரன்றாழ் வேண்டு. 86

தினையளவு நுண்பொருளும் செல்லிடத்துச் சேராது
எனின்மனமே ஏன்வீண் எடுப்பு - நனியார்
தனத்தான் பரனுலகம் சார்ந்திடலிற் சாந்த
மனத்தான் உறலெளிது மன். 87

ஆற்றளவு நீச்சறியார் இக்கரைநின்று அக்கரைக்கு
ஏற்றவழிப் போக்கரைக் கையேற்றல்போற் - போற்றும்
மனமே நன்முத்திவழி உணரா எத்தர்
நினைஏய்ப்பர் நீபரன்சார் நில். 88

தண்ணீர்க் குடத்தைத் தலையிலிட்டுக் கைவீசி
மண்மேல் நடித்து மறவாளாய் - எண்ணியெண்ணிப்
போவாளைப் போன்மனமே பொல்லாவுலகு இதன்கண்
நீவாழ்ந்தும் எம்பரன்சார் நில். 89

---

0தராத்தலம் - தராதலம். *கூத்தன் - சீவன்.

சந்திரனைத் ¹தாரணியும் ²சண்டனையத் தண்மதியும்
முந்திக் கிரகணித்து மூடுதல்போற் - புந்திதனைப்
பூவுலரும் பேயுமொன்றிப் போர்த்தொளித்தும் தற்பரனை
மேவுதற்குப் பார்மனமே வேட்டு. 90

சித்தாந்த நூல்குடிப்பர் தேசிகரைப் போல்நடிப்பர்
மெத்து பிரசங்கம் மிகப்படிப்பர் - பத்தி
மருந்துக்கு மில்லார் மனமே அவர்நேர்
இருந்திறவாய் நீபரனை யேத்து. 91

பித்தேறி மீறிப் பிரானெங்கே ஆன்மாவாம்
வத்தெங்கே தொன்மை மறையெங்கே - முத்தியெனும்
வீடெங்கே என்பவர்போல் வீணிற் பிதற்றுவையோ
நாடுமனமே பரனை நன்கு. 92

செங்கரத்திற் பாற்குடமும் தீக்கடைக் கோலும்இருக்க
எங்குநெய் தீ வாங்கலாம் என்பார்போல் - தங்கியுன்றன்
உள்ளம்அதை வீடுகொண்டான் உன்பரன்தான் என்மனமே
துள்ளியெங்கும் தேடுவதென் சொல். 93

சூரியன்தண்ணீர்க் குடங்கள்தோறும் உறல்போற் பிரமம்
தாரணியான் மாக்களிடைச் சார்ந்ததெனா - ஆரணத்தை
மாற்றிவல்ல பேய்மாயா வாதிமறுப் பான்மனமே
தோற்றிழியாய் நம்புபரன் சொல். 94

தேடுபணம் தானம் தியாகஞ்செய் யாய்மனமே
கூடு வணிகர் கொளக்கொடுத்து - நாடுமுறி
ஒன்றெழுதி வாங்கியுடன் கொண்டுபோ வாயோ
இன்றே பரற்கதனை ஈ. 95

உரியும் சடைமுடியும் ஓங்குகரத் தண்டும்
பெரிய கமண்டலமும் பெற்றுக் - கரைகாணாக்
கானகத்தில் என்மனமே காய்ந்துதவம் செய்தாலும்
வானம் பரன்வழங்கான் மன். 96

பொடிப்படுத்திப் பாவமதைப் போக்கடித்துப் பேயை
அடித்தடித்துப் போவென்றகற்றிப் - பிடிக்கொருகால்
நெய்வார்த்தல் போல்மனமே நேயமுடன் எம்பரனீ
மெய்ம்மறையை வாருளத்தின் மேல். 97

---

¹தாரணி - பூமி. ²சண்டன் - சூரியன்.
தீக்கடைக்கோல் - நெருப்பை உண்டாக்கப் பயன்படுத்தப்பட்ட கோல். ஈ - கொடு, அறம் செய்.

ஈகள்தேன் மொய்த்தாற்போல் ஈனக்குணங்க ளெலாம்
0மோகரமாய் நின்னில் வந்து மொய்த்தனகாண் - வேகமுடன்
ஓட்டுதற்கு மந்திரமொன்று உண்டதுதான் நின்பரன்முன்
காட்டும்அருள் என்மனமே காண். 98

நன்மரத்திற் புல்லுருவி போன்மனமே நண்ணிநினைக்
கன்மவினை வந்து கலக்கவிடாய் - சென்ம
வினையறுக்க உண்டுபரன் வீணாயேன் வீவை
அனையிலான் தன்னடியான் ஆகு. 99

! பத்திரங்கொள் வேடன் தழையணிந்து பட்சியெயும்
சித்திரம்போல் வாக்கிடைச்செந் தேனொழுகக் - குத்திரநஞ்
சம்பாற் பிறரைக் குளிர்ந்து கொலாயம் பரன்முன்
செம்பாகமாய் மனமே செப்பு. 100

அங்கையிடைக் கொண்டை முடிப்பார்போல் ‡ அசங்கதங்கள்
பங்கமுறப் பேசிப் பகையெடேல் - சங்கையிலாத்
துற்பெயரேன் என்மனமே தொல்பரன்தன் நூலருளால்
அற்புடனே நற்பெயர்பெற்று ஆள். 101

சாந்தம் பொறையுடைமை தண்ணளி மெய்ப்பத்தியருள்
ஏந்தியுனைச் சிங்காரித்து என்மனமே - Sபாந்தளெனச்
சீறா தடங்கிற் செகநாத னாம்பரனல்
ஆறுதல்தந் தாண்டளிப்பா னால். 102

பக்கமெங்கும் பாய்ந்து பரிமளிக்கும் பூந்தேனும்
*இக்கின் சுவையும்போல் எவ்வவர்க்கும் - கைக்காமல்
இன்ப மொழிபகர்வாய் என்மனமே எம்பரன்தாள்
அன்பாய்ப் பணிந்தருளை ஆள். 103

வெள்ளம் ?நனந்தலைக்கு மேலிட்டாற் சாண்முழமென்(று)
உள்ளகணக்கு ஒன்றுள தாமோ - கொள்ளைப்
பவம்புரிந்த வெற்குப் பரிகாரிப் பேதென்னாய்
†தவன்மனமே நீபரன்றாள் ஆழ். 104

முன்னோர் புதைத்துவைத்த முத்துப் பொதியதனைப்
பின்னோர் ஆராய்ந்தெடுத்த பெற்றிபோல் - நன்மனமே
ஆதிபரன் தந்ததிரு ஆரணத்தைக் கல்லியெடுத்து
ஓதியதன் பாகைபல ஓர். 105

---

0மோகரம் - உக்கிரம். ! பத்திரம் - அம்பு. ‡ அசங்கதம் - பொய்.
Sபாந்தள் - பாம்பு. *இக்கு - கரும்பு. ?நனந்தலை - உச்சி.
†தவல் - குறைவு.

நாயும் நரியும் நவில் †கொடியும் நற்கழுகும்
ஏயும் விருந்தாய் இசைந் தருந்தச் - சாயுமிந்த
*ஆக்கைதனை யோவதையாள் ஆதனையோ பூசிப்பை
தூக்கிமன மேபரன்முன் சொல். 106

கண்டாரைக் கொல்லுநஞ்சு காணக்கிடையாதுட்
கொண்டார் தமையன்றோ கொல்லுமது - விண்டு
மனமே திகிலடையேன் மாபரன்றான் நீகற்
பனைமீறில் அன்றோ பயம். 107

பெய்யுமழைக்குப் பிடிப்பார் குடை மேகம்
செய்யுமிடிக்கு அதுதான் செல்லுமோ - எய்துபரன்
கோபித்தால் நீபொறுத்துக் கொள்வையோ என்மனமே
சாபிக்கமுன் அவனைச் சார். 108

காமம் குரோதம் கடுலோப மோகம் மதம்
ஆ‡மாற்சரிய வறுபகையைத் -தாமதமொன்று
இல்லா துடன்விடுவை ஏகபரன் ஈந்தபணி
நில்லாய் மனமே நெறி. 109

அண்டரண்டம் தாண்டியதற்கு அப்பாலுக்கு அப்பாலாய்த்
தொண்டுதொட்டோர் பேதமது தோன்றாமற் - கண்டார்
இவனாம் அநாதிபரன் ஈங்கிருந்தான் நின்னுள்
அலைதியோ நீமனமே ஆய். 110

0நிட்சேபம் காத்திருந்து நெஞ்சழிந்து தானொழியும்
உட்?சேதனமில் ஒருவன்போற் - பட்சமெலாம்
பூவிலுய்த்து நீள்நரகம் போவையோ என்மனமே
சாவைநினை தற்பரன்தாள் தாழ். 111

கத்தன் ஒருவன் இலன் நிமித்த காரணமற்று
இத்தரைதான் தன்னில் எழுந்ததென - வித்தகமாய்க்
கூறுகின்ற பித்தன் குசமசக்கை நம்பாதே
தேறுமனமே பரன்தாள் சேர். 112

வாதமொடு பித்தம் வலிதாஞ் சிலேற்பனங்கள்
மோதியொவ் வொன்றாகஉனை முட்டிடமுன் - சோதிப்
பரலோக யாத்திரைக்கென்று ஆயத்தம்பண்ணி
இருமனமே நின்பரன்சொல் இது. 113

---

†கொடி - காக்ஸை. *ஆக்கை - உடல்.
‡மாற்சரியம் - பொறாமை. 0நிட்சேம் - புதையல்.
?சேதனம் -அறிவு.

தீபந்தனிற் 0சலபம் தீய்ந்திறத்தல் போல்மனமே
ஆபத்துட் பட்டேன் அழிகின்றாய் - மாபத்து
உரையைப் படிப்பாய் உயர்மோக்கம் ஏறப்
பரனருள் நல்வேணியதிற் பாய். 114

†பாவகனும் சோரப் பதகருடன் நீர்ப்பெருக்கும்
ஆவுலக செல்வவ மித்திரராம் - ஓ அதனில்
என்மனமே நீயேன் †இராகமது கொள்வைபரன்
தன்பதமே நின்வெறுக்கை சார். 115

நரிக்கோடு கண்டேன்பாய் நானுக நற்கொம்போடு
எரிக்குப் பூக்கண்டேன் யாளென்னா - உரைப்பவெலாம்
பொய்பொய்யாய்ச் சாற்றி நரகம் புகாய்மனமே
மெய்சொல் பரன்வீட்டை வேண்டு. 116

தன்னை அறிவான் தலைவன் தனைஅறிவான்
என்ன உரைத்தார் எழுத்துணர்ந்தார் - முன்னம்
அறிந்துன் றனைப்பரன் நல்லார்அருள்பின் போர்ந்து
சிறந்தமனமே அவன்கால் சேர். 117

தன்னை *அசைத்திடற்குத் தன்கரத்தினால் dநிகளம்
பேண்ணுவர் கைநீட்டும் பேகடுபோல் - நின்னையுந்திப்
பேய்நரகுக்கு ஈர்க்கப் பிரீதியுடன் கொடுக்காய்
ஆய்மனமே வைபரன்மேல் அன்பு. 118

நோயாளி முன்னர் அழநோயைப் பரிகரிக்கும்
தாய்நேர்வான் பின்னர்அழுந் தன்மைபோல் - நீயும்யான்
கண்டு கலங்குதற்குக் காரணங்கள் காட்டாமல்
அண்டுபரன் றாழ்மனமே ஆறு. 119

வாழி

வல்லபரன் வாழிகலை மாதுநலோர் வாழிபுவி
அல்லல்தவிர் வானமது வாழி - தொல்லுலகாள்
மானமுடிவித் தரியாவாழி செங்கோல் வாழியிந்த
ஞானவெண்பா வாழிநித நன்கு. 120

---

0சலபம் - விட்†டில். †பாவகன் - தீத்தெய்வம்.
†இராகம் - இசை. *அசைத்தல் - கட்டல். dநிகளம் - சங்கிலி.
பேண்ணுவர் - யானைப்பாகர். பேகடு - ஆண்யானை.

எம்மதத்தர் தாமுமெமக்கு இஞ்ஞான வெண்பாநூல்
சம்மதந்தான் என்றுரைக்கத் தந்திட்டான் - நன்மாவை
ஊரான் அருணா சலவேள் உவந்தளித்த
சீரார் சதாசிவமாம் சேய். 121

ஆயிரத் தெண்ணூறோடு அடுத்ததொண் ணூறாம்ஆண்டு
ஏயமிந்த ஞானவெண்பா வீறுபான் - தூயநகர்
மாவையரு ணாசல வேண்மைந்தன் சதாசிவப்பேர்
நாவலன் செய்தான்உண் நயந்து. 122

*A.C.M. Press, No. 464, Hospital Road, Jaffna.*